# வைகுண்டத்துக்கும் அப்பால்

ஸ்ரீ ஸ்ரீமத் பக்தி வேதாந்த
நாராயண கோஸ்வாமி மகாராஜா

# Copyrights & Acknowledgements

இந்தப் புத்தகத்தைத் தமிழில் வெளியிட கீழ்க்காணும் பக்தர்களும் பக்தைகளும் மிகவும் துணை செய்துள்ளனர். அவர்களுடைய உதவியே இந்நூல் சிறப்புடன் வெளிவர முக்கியக் காரணமாகும். அவர்களுக்கு எங்கள் அன்பான நன்றி.

**Cover Design:** Srimati Krishna Devi Dasi, Penang, Malaysia

**Proof Reading:** Srimati Elango Rajammal, Tamil Professor, Madurai, India

**Paintings & Photos:** Devotees from North Carolina, USA

**Printing & Publishing in Malaysia:**
Sri Laxman Das
Sri Raman Bihari Das
Srimati Krishna Devi Dasi

**Distribution in Malaysia:**
Sri Nidhi Das
Sri Kanth Das
Srimati Premalatha Devi Dasi

**Publishers (USA):** Center for Bhakti Studies, Virginia, USA
Sripad Acyuta Krishna Dasa

**Typing:** Srimati Nirmala Krishnamurthy, Switzerland

**Contact info:**
igvt.hbg@gmail.com
sbvnm.laxmandas@gmail.com
bkdasa@gmail.com

**Web Sites:**
www.bhaktistudies.ning.com
www.purebhakti.com
www.purebhakti.tv
www.gokulbhajan.com
www.backtobhakti.com

**Translation to Tamil:** Bhagavati Kanta Dasa, North Carolina (USA)
Syamali Devi Dasi, North Carolina (USA)

© Published with the permission from Gaudiya Vedanta Publications (GVP) for text and images used in this book.

# பொருளடக்கம்

முன்னுரை.....................................................................4
அத்தியாயம் - 1.............................................................5
.......................................................................................23
அத்தியாயம் - 2...........................................................23
அத்தியாயம் - 3...........................................................40
அத்தியாயம் - 4...........................................................49
அத்தியாயம் - 5...........................................................65
அத்தியாயம் - 6...........................................................80
அத்தியாயம் - 7...........................................................97
அத்தியாயம் - 8.........................................................114
அத்தியாயம் - 9.........................................................129
அத்தியாயம் - 10.......................................................139
அத்தியாயம் - 11.......................................................155
அத்தியாயம் - 12.......................................................171

# முன்னுரை

ஸ்ரீல நாராயண மகாராஜா அவ்வப்போது அளித்த சொற்பொழிவுகளில் "வைகுண்டத்துக்கும் அப்பால்" என்ற பொருளில் அவர் ஸ்ரீல சனாதன கோஸ்வாமியின் ஸ்ரீ ப்ருகத் பாகவதாம்ருதாவை விவரித்தவைகள் மிகவும் சிறந்த பொக்கிஷங்களாகும். இந்தத் தமிழாக்கம் ஆங்கிலத்தில் "Going Beyond Vaikuntha" என்ற நூலைத் தழுவியது.

எவ்வளவோ கோடிக்கணக்கான மகா ஜீவாத்மாக்களால் கூட அடைய முடியாத வைகுந்த லோகத்தை அடைந்த கோபகுமார் அங்கே திருப்திப் பட வில்லை. அதற்குக் காரணம் என்ன என்பதைக் கோப குமாரால் கூடக் கண்டு பிடிக்க முடியவில்லை. அப்போது, எல்லாம் அறிந்த மகா பக்தரான நாரத முனிவர், கோபகுமாரைச் சந்தித்து அவரது உள் சொரூபத்தை அறிந்தார். கோபகுமார், நாரதரைத் தன் சிக்ஷ குருவாகக் கொண்டு உயர்ந்த பக்தி தத்துவங்களைக் கேட்டுப், பின்னர் தன் ஆன்மீகப் பயணத்தின் உச்ச நிலையை அடைந்து பரம திருப்தியை அடைந்தார். இதிலிருந்து, எந்த ஒரு சாதகனுக்கு வைகுந்தத்தையும் கூடத் தாண்டி ஸ்ரீ கிருஷ்ணரின் உத்தம லோகமான கோலோக பிருந்தாவனத்தை அடைய அளவில்லாத பேராவல் உள்ளதோ, அவனால் ஸ்ரீ ஸ்ரீ ராதா கோவிந்தா சுயமான பகவான் ரூபத்தில் தன் உத்தம பக்தர்களுடன் வசிக்கும் கோலோகத்தை அடைய சாத்தியமுள்ளது என்று அறியலாம். அவர்கள் தங்கள் ஆத்ம சொரூபத்தை ஒரு தகுந்த உத்தமமான குரு வழியாக அறிந்து கொள்வார்கள்.

இந்த நூலில் வரும் விவரங்கள் 1991- ஆம் ஆண்டு ஸ்ரீல நாராயண மகாராஜா தன் இஷ்ட மடமான ஸ்ரீ கேசவாஜி கௌடிய மதா (மதுரா) வில் இருந்த போது பதிவு செய்யப் பட்டவை. இப்போது அவை புத்தகமாக உங்கள் கைகளில் கிடைக்கப் பட்டுள்ளது. ஸ்ரீல நாராயண மகாராஜாவின் இந்த விலை மதிக்க முடியாத பொக்கிஷம் உங்கள் பக்தி சாதனத்திற்கு மிகவும் பயன் படும் என்று உறுதியாக நம்புகிறோம்.

இப்படிக்கு,

September 1, 2010 — பகவதி காந்த தாஸா
Sri Krishna Janmashtami — சியாமலி தேவி தாஸி

# அத்தியாயம் - 1

ஸ்ரீ பிருகத் பாகவதாம்ருதாவில் பக்தியைப் பற்றி மிகவும் ஆழ்ந்த உண்மைகள் நிறைந்துள்ளன. அவற்றை நாம் மிகவும் கருத்து டனும் ஆவலுடனும் கேட்கும் போது, நம் இதயத்தில் ஒரு சுகந்தமான பேராசை கிளம்பி அது நம்மைப் பிரஜாவை நோக்கி இழுத்துச் செல்லும். எந்த ஒரு சாதகனுக்கு ராகானுக பக்தியில் ஆசை வருகிறதோ அவனுக்கு ஸ்ரீ பிருகத் பாகவதாம்ருதா மிக மிக உபயோகமாயிருக்கும். யாரால் பாகவத பக்தியினுள் நுழைய முடியும்? பாகவத பக்தியின் இயற்கைக் குணங்கள் என்ன? இவை இரண்டைப் பற்றியும் இந்த நூல் முழுவதுமாக விவரிக்கிறது.

ஸ்ரீமத் பாகவதம் பரீக் ஷித் மகாராஜாவுக்கு ஏழு நாட்களாக உபதேசிக்கப் பட்ட பின், அவரது தாயாரான உத்தரா தன் மகனிடம், "ஸ்ரீ சுகதேவ கோஸ்வாமி ஸ்ரீமத் பாகவதத்தை முழுச் சித்தாந்தங் களுடன் உபதேசித்ததாலும், நான் ஒரு பெண்ணானதாலும், அவற்றை என் இதயம் குளிரக் கேட்டு அனுபவிக்க இயலவில்லை. எனவே நீ எனக்கு அதை மிகவும் எளிதான முறையில் அதன் சாரத்தை சுருக்கமாகக் கூறி எனக்குப் புரிய வைக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டாள்.

அதைக் கேட்ட பரீக் ஷித் மகாராஜா, முன்பு ஒரு சமயம் நாரதர் தன் சொந்த அனுபவத்தில் பகவானின் மகிமைகளை, அவரது ஆன்மீக உலகங்களையும் அங்கே அவருடன் நித்தியமாக வாழும் பக்தர்களின் மகிமைகளையும் காட்டி விளக்கியதைக் கூற ஆரம்பித்தார். பகவானின் மிக நெருங்கிய பக்தரான நாரதர், விதம் விதமான உலகங்களுக்கும் பற்பல புண்ணியத் தலங்களுக்கும் சென்று, பாகவத தத்துவத்தையும், மேலும் ஒரே பகவான் எவ்வாறு எண்ணற்ற விதங்களில் தோன்றுகிறார் என்பதையும் உணர்ந்தார்.

அவரது நிரந்தரமான உலகமும் ஒன்றே ஒன்று தான். அது ஸ்ரீ பிருந்தாவனம். ஆனால் அந்த பிருந்தாவனமே பற்பல ஆன்மீக உலகங்களாகப் பரிணமிக்கிறது. அதே போல் பகவானுடைய நிரந்தரமான சகாக்கள் அனைவரும் பிருந்தாவனத்தில் உள்ளவர்களே. ஆனால் அதே சமயம் அவர்கள் மற்ற ஆன்மீக உலகங்களிலும் வியாபித்துள்ளனர். ஒன்றே தான் பற்பல ரூபங்களிலும் தோன்றியுள்ளது என்பது சித்தாந்தம். பகவான் இரண்டோ, மூன்றோ, பத்தோ, இருபதோ அல்ல. இந்தத் தத்துவத்தை மிகவும் நன்றாக உணர்ந்தவர்களில் நாரதர் மணிமகுடம் போன்றவர் மட்டுமல்ல, அவர் ஒரு பக்தி ரசிகரும் கூட. ஆனால் அவர் எதுவுமே தெரியாதவர் போல் பாசாங்கு செய்து கொண்டு தன் யாத்திரையைத் துவங்கினார்.

முதன் முதலில் அவர் ஒரு சாலிகிராம சிலையை வணங்கும் ஒரு பிராமணரைச் சந்தித்தார். அந்தப் பிராமணரிடம் அவர், "இந்த உலகத்தில் நீ மிகவும் அதிர்ஷ்டசாலி" என்று கூறினார். அங்கேயிருந்து தொடங்கி கடைசியாக அவர் துவாரகையை அடைந்தார். அங்கே அவர் கோபியர்கள் தான் உத்தமமான பக்தைகள் என்பதை உணர்ந்தார். பிருந்தாவனத்துக் கோபியர்களே அத்தனை மகா ஜீவன்களிலும் மேலான உயர்ந்த ஸ்தானத்தில் உள்ளவர்கள். அவர்கள் எல்லா ரஸ பாவங்களிலும் மேலான பாவங்களைக் கொண்டு, துவாரகையிலுள்ள ராணியர்கள் அனைவர்களையும் விட மிகவும் உயர்ந்தவர்கள். ஆனால் அனைத்துக் கோபியர்களிலும் ஸ்ரீமதி ராதிகாவே மிகவும் உயர்ந்த கோபியாகும்.

*ஆராதனானாம் சர்வேஸாம்*
*விஷ்ணோர் ஆராதனம் பரம்*
*தஸ்மாத் பரதரம் தேவி*
*தடியானாம் சமர்ச்சனம் -- (பத்ம புராணம்)*

ஸ்ரீ துர்கா தேவிக்கு மகாதேவா கூறினார்: "எல்லா விதமான வழிபாடுகளிலும் விஷ்ணு வழிபாடே உத்தமம். ஆனால் அதை விடவும் உத்தமமான வழிபாடோ அவரது பக்தர்களை வழிபடுவதே."

இந்த சுலோகத்தில் "தடியானாம்" என்ற வார்த்தைக்கு பகவானிடம் தொடர்பு கொண்டுள்ளவர்கள் என்று பொருள். அவரிடம் எத்தனையோ பேர் தொடர்பு கொண்டுள்ளனர். ஆனால் அவை அனைவர்களிலும் ஸ்ரீமதி ராதிகாவே மிகவும் உத்தமம். இதைக் கேட்டதும் நாரதர் பிரேம பக்தியில் மூழ்கினார். குறிப்பாக துவாரகையில் எழுப்பப்பட்ட நவ பிருந்தாவனத்தில் கோபிகளின் மகிமைகள் நாரதருக்கு தெளிவாகக் காட்டப்பட்டன. அங்கே ஸ்ரீ கிருஷ்ணர் எவ்வாறு கோபியர்களிடமிருந்து பிரிந்து துடிக்கிறார் என்பதை அறிந்த சத்தியபாமா, ருக்மிணி, ஜாம்பவதி மற்றும் அனைத்து ராணியர்களும் ஆச்சரியத்தில் அசந்து போயினர். நாரதர் இதைக் கண்டு ஆனந்த

மடைந்தாலும், "நான் இன்று இங்கே வந்து கிருஷ்ணரை கோபியரைப் பற்றி நினைக்க வைத்ததால், ஒருவகையில் அவருக்கு மன வேதனையை அல்லவோ கொடுத்து அவரை மயங்கியும் விழ வைத்திருக்கிறேன்" என்று எண்ணி வெட்கமடைந்தார்.

ஆனால் கிருஷ்ணர் நாரதரிடம், "நாரதா, நீர் ஏதாவது வரம் கேளும். கொடுக்கிறேன்" என்று கேட்டார்.

அதைக் கேட்ட நாரதரோ ஆச்சரியத்துடன், " நான் வரம் கேட்க வேண்டுமா? நான் உம் பாதத்தில் மிகப் பெரும் அபராதத்தை அல்லவா விளைத்துள்ளேன். நான் உமக்குப் பெரிய வேதனைகளைக் கொடுத்து அதனால் மயங்கி விழக் கூட காரணமாக அல்லவோ ஆகி விட்டேன்!" என்று பதிலளித்தார்.

அதற்குக் கிருஷ்ணர் பதிலாக, " நாரதரே, நீர் இப்படிச் செய்யவில்லையென்றால் என் பிரஜாவின் நித்திய பக்தைகளான கோபியர்களின் மகிமைகள் எவ்வாறு அனைவருக்கும் தெரியப் படுத்தப் பட்டிருக்கும்? எனவே நீர் என்னிடம் வரம் கேட்கும் தகுதியை அடைந்து விட்டீர். உமக்கு என்ன வரம் வேண்டுமானாலும் கேளும்" என்று கேட்டார்.

பதிலாக நாரதர், "பிரபோ! நீவிர் கோபியர்களுடன் பிருந்தாவனத்தில் நிகழ்த்தும் லீலைகள் அனைத்தும் என் சிந்தனையில் எப்போதும் இருக்க வேண்டும். இந்த லீலைகள் எங்கெல்லாம் நடை பெறுகிறதோ அங்கெல்லாம் நான் சென்று அந்த இடங்களின் தூசியை என் தலையில் இட்டுக் கொள்ள வேண்டும். அந்த லீலைகள் அனைத்தையும் நான் கீர்த்தனைகளாகப் பாட வேண்டும். நீர் என் மேல் கருணை காட்டுவதாயிருந்தால் எனக்குத் தயவு செய்து 'கோபி பிரேமை' யைக் கொடுப்பீராக" என்று கேட்டார்.

இதைக் கேட்ட கிருஷ்ணர், "சரி, அப்படியே ஆகட்டும். நீர் பிரஜாவின் புண்ணியத் தலங்கள் - குறிப்பாக நந்த கிராமம், பர்ஸானா, கோவர்த்தனா, யாவத், தேர் கடம்பா, உத்தவக்யாரி, வம்ஸிவத், ராதா குண்டம் - இவை அனைத்துக்கும் மிகவும் ஆழ்ந்த பக்தியுடன் வணக்கம் செலுத்தி, அவற்றின் கருணையை யாசிக்க வேண்டும். அவ்வாறு நீர் செய்தால் பிரம்மாவால் கூடக் கிடைக்கப் பெறாத அபூர்வமான பிரேம பக்தியை நீர் அடைவீர்" என்று பதிலளித்தார்.

பகவானின் பக்தர்களின் நிலைகளைப் பொறுத்தே, பகவானின் நிலையும் அமைகிறது. பகவானுக்கு எத்தனையோ விதம் விதமான பக்தர்களும், அவர்களுடன் விதம் விதமான லீலைகளும் விதம் விதமான ரச பாவங்களுடன் அமைந்துள்ளன. அவர் நான்கு குமாரர் களுக்குப் பிரம்மாவாகத் தோன்றுகிறார். அதே கிருஷ்ணர் ஹனுமா னுக்கோ ராமச்சந்திர பிரபுவாகத் தோன்றுகிறார். விஷ்வக்சேனா மற்றும் வைகுந்த வாசிகளான பக்தர்களுக்கு அவர் நாராயணராக

இருக்கிறார். சத்தியபாமா, ருக்மிணி மற்றும் உத்தவா போன்றவர்களுக்கு அவர் துவரகாதீஷாவாக இருக்கிறார். கோபியர்களுக்கோ அவர் சக நண்பன். வத்ஸல்ய பாவத்தில் உள்ளவர்களுக்கு அவர் மகனாக ஆகிறார். கோபியர்களுக்கு அவர் உயிருக்கு உயிரான நாயகனாகிறார். ஒரே கிருஷ்ணர் இவ்வாறு பற்பல விதங்களில் தோன்றுகிறார். நாம் இவற்றையெல்லாம் எவ்வாறு புரிந்து கொள்வது ? பகவானின் கருணையினாலும் அவரது பக்தர்களின் கருணையினாலும் மட்டுமே நாம் இவற்றைப் புரிந்து கொள்ள முடியும். அவர்களுடைய கருணையின்றி நாம் ஒரு போதும் இதை அறிந்து கொள்ளவே இயலாது.

பரீக்ஷித் மகாராஜா, கோப குமாரரின் கதையைத் தன் தாயாருக்குக் கூறி, எவ்வாறு நாம் பிரேம பக்தியை அடையலாம் என்பதைத் தெள்ளத் தெளிவாகவும் அழகுடனும் விவரித்தார். ஒருவன் பிரேம பக்தியில் ஆசை கொண்டு, ஆனால் சிரவணம், கீர்த்தனம் போன்ற எதையுமே செய்யாமல் இருந்தாலோ, அல்லது தன் சொந்த முயற்சிகளால் மட்டுமே பிரேம பக்தியைப் பெறலாம் என்று நினைத்தாலோ அவன் ஒருபோதும் அதைப் பெற மாட்டான். குருவுக்கும் வைஷ்ணவர்களுக்கும் சேவை செய்யாமல், ஒருவன் ஆயிரக்கணக்கான பிறவிகள் எடுத்தோ, ஆயிரக் கணக்கான சாஸ்திரங்களைப் படித்தோ கூட, பிரேம பக்தியை அவன் பெறவே மாட்டான். முறையான பக்தி சாதனங்களைப் பின் பற்றினால் மட்டுமே அவனால் அதைப் பெற முடியும். நாம் ஸ்ருதி ஸ்மிருதி மற்றும் நாரத பஞ்சராத்ரா போன்ற தகுந்த சாஸ்திரங்களைப் படிக்காமல் போனால், நமக்கு முழு பக்தி கிடைக்காமல் போவது மட்டுமின்றி நாம் குழம்பியும் போவோம். எனவே நாம் சரியான விதிகளையும் ஒழுங்கு முறைகளையும் பின்பற்ற வேண்டும்.

அந்த விதி முறைகள் என்ன? நாம் முதலில் ஒரு குருவிடம் திக்ஷை எடுக்க வேண்டும். அவருக்கு நெருங்கிச் சேவைகள் புரிய வேண்டும். குருவிடம் உபதேசங்களைக் கேட்டு அவற்றைப் பின்பற்ற வேண்டும். குருவுக்கும் வைஷ்ணவர்களுக்கும் சேவை செய்து ஆணவத்தை மிகவும் தூரத்தில் எறிந்து விட்டு அடக்கமான பழக்கங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும். நாம் நம்மை உயர்வாக ஒரு போதும் கருதக் கூடாது.

*த்ருநாத் அபி ஸீனீசேனா தரோர் அபி சஹிஷ்ணுனா*
*அமானினா மானதேன கீர்த்தனீயஹ சதா ஹரிஹி*
*-- (ஸ்ரீ சிக் ஷாஷ்டகம் # 3)*

"ஒரு சாதகன் தன்னை ஒரு துரும்பை விடவும் கீழானவன் என்ற நிலையுடன் ஹரி நாமத்தை ஜெபிக்க வேண்டும். அவன் ஒரு மரத்தை

விடவும் பொறுமை கொண்டு, தற்பெருமை எதுவுமே இன்றி மற்ற அனைவருக்கும் எல்லா மதிப்புக்களையும் அளிக்க வேண்டும். "

இதை நாம் எவ்வளவு தூரம் கடைப் பிடிக்கிறோமோ அதற்குத் தகுந்தவாறு பகவான் மற்றும் வைஷ்ணவர்களின் கருணை நமக்குக் கிடைக்கும். பகவானின் கருணைக்கு மூல காரணமே அவரது பக்தர் களின் கருணையே தான். அவர்களால் நம் இதயத்தில் பக்தியை சீக்கிரமாகவேத் தோன்ற வைக்க முடியும்.

பகவான், ஒருவனின் மேல் தனது கருணையைப் பொழிந்தால், அவன் நிச்சயமாகப் பக்தியைப் பெறுவான். அவருக்கு அப்படிப்பட்ட சக்தி. ஆனால் அவர் ஏன் அதை சிலருக்குக் கொடுத்தும், பலருக்குக் கொடுக்காமலும் இருக்கிறார்? இந்த உலகத்தில் பெரும்பாலானவர் களுக்குப் பாகவத பஜனையில் ஈடுபடுவதில் விருப்பம் கிடையாது. அவர்களுக்கு அவர் பக்தியை ஒருபோதும் அளிக்க மாட்டார். எனவே அவர் சிலருக்கு மட்டுமே தன் கருணையை வளங்குகிறார். ஏன் அப்படி? காரணம் அவர் எல்லோரையும் சமமாகக் கருதுவதில்லை! இப்படி அவர் "ஓர பட்சம்" காட்டுதல் சரியில்லையே என்று நமக்குத் தோன்ற லாம். ஒருவனிடம் நிறைய அன்பு செலுத்தி, மற்றொருவனிடம் குறைவாக அன்பு செலுத்துவதும், ஒருவனுக்கு நிறைய உபதேசங் களைக் கொடுத்துக் கொண்டு அதே சமயம் மற்றொரு வனுக்குக் குறைவாக உபதேசம் வழங்குவதும், ஒருவனுக்கு ஆழ்ந்த ஞானங் களைக் கொடுத்துக் கொண்டு அதே சமயம் மற்றொருவனுக்கு மேல் வாரியான பொது அர்த்தங்களைக் கூறுவதும், நமக்கு ஒருதலை பட்சமாகத் தோன்றலாம். இதில் பாரபட்ச குறை இருப்பதாக நமக்குத் தெரிகிறது.

ஆனால் உண்மையில் மூன்று விதமான வைஷ்ணவர்கள் இருக்கிறார்கள்: உத்தமா, மத்தியமா, கனிஷ்தா என்று மூன்று விதங்களில் அவர்கள் உள்ளனர். ஒரு உத்தம வைஷ்ணவர்களுக்கு ஏகதேசம் பகவானைப் போன்ற குணங்களே இருக்கும். அவர்கள் சாதாரண மக்களைப் போல் ஒருபோதும் வேதனைப் பட மாட்டார்கள். அவர்களை ஆத்மராம (முழுவதும் திருப்தியுள்ளவர்கள்) என்றும் ஆப்தகாம (உலக ஆசைகளைத் துறந்தவர்கள்) என்றும் அழைப் பார்கள். அவர்கள் தங்களுக்கு எந்த விதமான கஷ்டங்கள் நேர்ந்தாலும் கொஞ்சம் கூட அசங்காமல் எப்போதும் உள்புறத்தில் வழிபாடுகளில் முழுவதுமாக ஈடுபட்டேயிருப்பார்கள். அதே சமயம் அவர்கள் எவரிடமும் ஈவிரக்கம் காட்டவும் மாட்டார்கள். ஒருவர் இறந்தால் கூட எந்த விதமான உணர்ச்சிகளும் இன்றி அவற்றை விட்டு விலகியே இருப்பார்கள். அவர்கள் பூத உடல் சம்பந்தங்களை விட்டு விட்டு முழுவதுமாக ஆத்ம ஞானத்தில் மூழ்கியிருப்பார்கள்.

கனிஷ்த வைஷ்ணவரோ தேவையான தத்துவ ஞானங்கள்

இல்லாததால் மற்ற எவருக்கும் கருணையை வழங்க முடியாத நிலையில் இருப்பவர். மத்தியம வைஷ்ணவருக்கோ நான்கு விதமான குணங்கள் உண்டு.

*ஈஸ்வரே தத் அதீனேஷு பாலிஸேஷு த்விஷத்ஸு ச*
*பிரேம மைத்ரீ க்ருபோ பேக் ஷா யஹ் க ரோத்தி ஸ மத்யமஹ*
*- (ஸ்ரீமத் பாகவதம் 11.2.46)*

மத்தியம வைஷ்ணவருக்குப் பகவானிடம் பிரேமை உண்டு. மற்ற வைஷ்ணவர்களிடம் அவர் மூன்று விதமான நட்புகளை வைத்திருப்பார். உத்தம வைஷ்ணவரிடம் சேவை செய்யும் மனப் பான்மையையும், தன் சம நிலையிலுள்ள மற்ற மத்தியம வைஷ்ணவர் களிடம் நெருங்கிய நட்பையும், கனிஷ்த வைஷ்ணவர்களிடம் கருணையையும் காட்டுவார். அதே சமயம் தன் மேல் பொறாமை கொள்பவர்களிடமிருந்து அவர் விலகியேயிருப்பார். ஆனால் ஒருவன் அறிவிலியாக இருந்து ஆனால் சிறிதளவாவது இறை நம்பிக்கையிருப்பவரிடம் அவர் கருணை காட்டுவார்.

எனவே, மத்திய அதிகாரிக்கு நான்கு விதமான பாரபட்சங்கள் உள்ளன. ஆனால் உத்தம அதிகாரிக்கோ அப்படி எந்த விதமான பாரபட்சமும் கிடையாது. அவருக்கு எல்லோருடனும் ஒரே விதமான பாவமே இருக்கும். அவர் மாயையில் சிக்கிய ஜீவனுக்கும் முக்தி பெற்ற ஜீவனுக்கும் வித்தியாசம் பார்க்க மாட்டார். எல்லோரையுமே அவர் முக்தி பெற்றவர்களாகவே தான் எண்ணுவார். எனவே அவருக்கு எந்த விதமான வேலையும் கிடையாது. ஆனால் மத்திய வைஷ்ணவருக்கோ இந்தப் பார பட்சங்களைக் கொள்ள வேண்டிய வேலை உள்ளது!

எனவே பக்தியை வளர வைக்கத் தேவையான கருணையை யார் கொடுப்பார்? மத்தியம வைஷ்ணவரே! குறிப்பாக உயர்ந்த நிலையிலுள்ள மத்தியம அதிகாரிகள் அந்தக் கருணையை வழங்கு வார்கள். இன்னமும் குறிப்பாக, மத்தியம நிலையின் உச்சத்திலிருந்து அதைத் தாண்டி மேலான உத்தம நிலைக்குச் செல்வதற்கு சற்று முன்னால் உள்ள நிலையில் இருக்கும் வைஷ்ணவர் கருணை வழங்குவதில் மிகச் சிறந்தவர். அவர், தன் இதயத்தில் சேர்த்து வைத்திருக்கும் பொக்கிஷங்களை மற்ற அனைவருக்கும் வாரி வாரி வழங்க ஆசைப்படுவார். ஆனால் அவர் அவ்வாறு வழங்கும் போது ஏற்படும் பாரபட்சத்தைப் பற்றி அவரைக் குறை கூற முடியாது. ஏனென்றால் ஸ்ரீமத் பாகவதத்தில் கூட இந்த நிலையில் பார பட்சங்கள் உண்டு என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது. அப்படிப்பட்ட ஒரு சிறந்த வைஷ்ணவரிடம் நமக்குத் தொடர்பு ஏற்பட்டு விட்டால் அவருக்கு நாம் நம் உயிரையே சமர்ப்பித்துச் சேவை புரிய வேண்டும்.

*ஸ ஸ்ருஷயா பஜன விஞ்ஞம் அனன்யம் அன்ய*
*நிந்தாதி ஸுன்ய ஹ்ருதம் ஈப்சித ஸங்க லப்த்யா*
*(உபதேசாம்ருதா # 5)*

"மற்றவர்களைக் கிண்டல் செய்ய வேண்டும் என்ற எண்ணமே வராத சுத்தமான இதயம் கொண்ட உத்தமமான வைஷ்ணவருக்கு நாம் சேவை செய்ய வேண்டும்."

அப்படிப்பட்ட ஒரு உத்தம வைஷ்ணவரின் தொடர்பு நமக்குக் கிடைத்து விட்டால் நாம் அவருக்கு நம் சிரங்களைத் தாழ்த்து சரணாகதி அடைந்து விட வேண்டும். நம் சேவைகளில் ஏமாற்றுதலோ கபடமோ சிறிதும் இருந்தால் அவர் உடனடியாகவேக் கண்டு பிடித்தும் விடுவார். அவர் பகவானைப் போல் நம்மை உள்ளும் புறமும் நன்றாகத் தெரியு மாதலால் ஜனங்களின் கபடங்களை அவர் நன்றாகவே அறிவார். அதற்குத் தண்டனையைக் கூட அவர் அளித்தும் விடுவார். ஆனால் அவ்வாறு அவர் தண்டனை அளித்தால் அது பெரும் கருணையே யாகும். இல்லாவிடில் அவர் நம்மிடம் அன்யோன்யமாகி விடுவார். எனவே நாம் அவருக்குக் கபடமெதுவுமின்றித் தூய்மையான இதயத்துடன் சேவை புரிய வேண்டும்.

வைஷ்ணவர்களிடமிருந்து இரண்டு விதமான கருணைகள் கிடைக்கின்றன. ஒன்று அவர்களிடமிருந்து நம் முந்தைய ஜென்மங் களில் கிடைத்தது. இன்னொன்று அவர்களிடமிருந்து இந்த ஜென்மத்தில் கிடைப்பது. ஒருவன் தன் லட்சக்கணக்கான ஜென்மங் களில் புரிந்த புண்ணியங்களால் இந்தப் பிறவியில் ஒரு பக்தி ரசிக பாவமுள்ள வைஷ்ணவரின் கருணையைப் பெறுகிறான். அந்த வைஷ்ணவர், தத்துவங்களை நன்றாக அறிந்திருப்பதால் அது படிப்படியாக ஒரு குருவிடம் தீக் ஷை எடுக்கும் நிலையை அளித்து பகவானுக்குப் பஜனை புரிந்து பக்தியில் முன்னேற உதவுகிறது. இதையே "ப்ராக்தன் - ஸம்ஸ்கார்" என்று அழைப்பார்கள். அதாவது ஒருவன் முந்தைய ஜென்மங்களில் சேர்த்த புண்ணியங்கள் என்று அர்த்தம். மேலும், அபூர்வமாக சிலர் மிகுந்த அளவில் புண்ணியங் களைச் சேர்த்து வைத்தால் இந்த ஜென்மத்தில் முறையான குரு கூடத் தேவையில்லாமலேயே போகலாம். ஆனால் இது மிக மிக அபூர்வம். உதாரணமாக ஹரி தாஸ் தாக்கூரா மற்றும் ஸ்ரீ சைதன்ய மகாபிரபுவின் அநேகமான பக்தர்களும் ஏற்கெனவே பக்தியின் சிகரத்தை அடைந்தவர்கள். இருந்தும் கூட அவர்கள் மற்றவர்களுக்கு எடுத்துக் காட்டாக விளங்குவதற்காக முறையாகக் குருவை ஏற்றுக் கொண்டனர்.

பரத் மகாராஜா இன்னொரு உதாரணமாகும். அவர் தன் முதல் பிறப்பில் முறையான குருவைப் பெற்றிருந்தார். ஆனால் தன் இரண்டாவது, மூன்றாவது பிறவிகளில் அவர் முறையான குருவை

அடையவில்லை. ஆனாலும் எந்த விதமான சாதகமும் இன்றி அவருக்குப் பாவ பக்தி வந்தது. தன் பக்தியிலிருந்து திருப்ப முயன்ற தன் தந்தை மற்றும் எவர் கூறியதையும் அவர் கேட்கவில்லை. இதுவே "ப்ராக்தன் - ஸம்ஸ்கார்" என்பது. இது ஒருவனுக்கு இருந்தால் அவன் மிகவும் எளிதாக இன்னமும் மேலான நிலையிலுள்ள குருவை அடைந்து மேலான சத்சங்கம் கிடைக்கப் பெறுவான். அவனுக்கு வெகு சீக்கிரத்திலேயே தன்னுள் பக்தி எழும்பி வெளிவரும்.

அப்படிப்பட்டவனுக்கு சாஸ்திரத்திலிருந்து ஒரே ஒரு சுலோகத்தை உபதேசித்தாலே போதும். அதிலிருந்தே அவன் எல்லாவற்றையும் உணர்ந்து விடுவான். இப்படி ஒருவனுக்கு முந்திய பிறப்புக்களிலுள்ள புண்ணியங்கள் இருந்தால் தானாகவே பக்தி வாழ்க்கையில் ருசி வந்து விடும். அதன் பின் ஒரு சிறந்த ரசிக வைஷ்ணவரிடம் தீக் ஷையும் எடுத்து விடுவான். பின்னர் அவனுக்குப் பக்தியில் ஆழ்ந்த பேராசை எழும்பி பகவானுக்குப் பஜனை செய்வதில் சீக்கிரமே வேகமான முன்னேற்றம் ஏற்படும்.

அவ்வாறு முந்தைய ஜென்ம புண்ணியங்கள் இல்லாதவர்கள், ஸ்ரீமத் பாகவதத்தில் வரும் ஸ்ரீ கிருஷ்ணரின் லீலைகளைக் கேட்டும் வைஷ்ணவர்களுடன் தொடர்பு கொண்டும் கிருஷ்ண பக்தியைப் படிப்படியாக வளர்க்கலாம். அதன் பின் அவர்கள் ஒரு தகுந்த குருவை ஏற்பார்கள். ஆனால் சில சமயங்களில் அந்தக் குருவுடைய சிந்தனைகள் சரியான பரம்பரையில் இல்லாததாகவும் இருக்கலாம். அப்படிப்பட்ட சூழ் நிலைகளில் அவர்கள் அந்தக் குருவை விட்டு விட்டு, சரியான சித்தாந்தத்தைக் கொண்ட வேறு குருவை நாடுவார்கள். மற்றும் சில சமயங்களில், தன் முதல் குருவே உத்தம குருவாகவும் இருக்கலாம். ஆனால் அவர் இந்த உலகை விட்டுச் சென்று விட்டால் அந்த சாதகன் என்ன செய்ய வேண்டும்? முழுக்கவும் பக்தி ரஸத்தில் திளைத்திருக்கும் இன்னொரு ரஸிக வைஷ்ணவரைச் சிக் ஷ குருவாக ஏற்றுக் கொள்ள வேண்டும். இவைதான் வைஷ்ணவர்களிடமிருந்து கிடைக்கும் இரண்டு விதமான கருணைகளாகும்.

ஸ்ரீ ப்ருகத் பாகவதாம்ருதாவில் தன்னுடைய சொந்த வாழ்க்கையில் நடந்த அனைத்து அனுபவங்களையும் கோபகுமார் ஒரு பிராமணருக்குக் கூறுகிறார். இந்தப் பிராமணர் முன்னர் கோவர்த்தனா வில் வாழ்ந்தவர். பின்னர் அவர் அஸ்ஸாமிலுள்ள பிராக்ஜியோதிஷபுரா என்ற இடத்துக்குக் குடியேறினார். இன்றும் நாம் குஜராத்தில் நிறையப் பிராமணர்கள் சாஸ்திரங்களைப் படித்து விட்டு ஊர் ஊராகச் சென்று அவற்றைப் பற்றி பேசி, செல்வம் சேர்ப்பதைப் பார்க்கலாம். இந்தப் பிராமணரின் நோக்கமும் இதுவே தான். அவர், அஸ்ஸாமில் நிறைய செல்வம் உள்ளது, அங்கே சென்றால் நன்றாக வாழ முடியும் என்று எண்ணினார். ஆனால் அங்கு அவரால் செல்வம் சேர்க்க இயலாததால் காமாக்யாதேவி (பார்வதி தேவி) யை வழி

பட்டார். காமாக்யா தேவி அந்தப் பிராமணின் வழிபாட்டைக் கண்டு மிகவும் திருப்தியடைந்து, அவரது உயரிய மனப்பாங்கை உணர்ந்து, "இவனுக்கு முந்தைய ஜென்மப் புண்ணியங்கள் உள்ளன என்று தெரிகிறது. நான் கொஞ்சம் உதவி செய்தால் அவனால் நன்கு முன்னேற முடியும். ஆனால் முதலில் அவனது பண ஆசையை ஒழிக்க வேண்டும். அப்படியானால் தான் முன்னேற இயலும் " என்று எண்ணினாள். அந்தப் பிராமணனின் முன்னால் தோன்றி, "உனக்குச் செல்வமா வேண்டும்? நான் உனக்கு அதை விட மிகவும் மேலானதைக் கொடுக்கிறேன்" என்று அருள் புரிந்தாள்.

அப்படி எல்லாவற்றிலும் சிறந்த செல்வம் என்ன? பக்தி. ஒரு சிஷ்யனோ சிஷ்யையோ ஒன்றுமே தெரியாத முட்டாளாக இருந்து சிந்தாந்தங்களை அவ்வளவாகப் புரிய முடியாமல் இருந்தாலும் கூட, அந்தக் குரு உண்மையான குருவாக இருந்தால் அவர் பாகவத பிரேம பக்தியை மட்டுமே போதிப்பார். ஆனால் ஒரு சுத்தமல்லாத குரு என்ன சொல்வார்? "நீ தேவியை வழிபடு. கணேசரை வழிபடு. சங்கரை வழிபடு. அவர்கள் உன்னிடம் மகிழ்ந்து நீ விரும்பியது அனைத்தையும் கொடுப்பார்கள்" என்று தான் கூறுவார்.

காமாக்யா தேவி ஒருவனின் இயற்கை சுபாவத்தைப் பார்த்து அதற்குத் தகுந்தவாறே அருள் வழங்குவாள். அந்தப் பிராமணர் கோவர்த்தனாவில் வாழ்ந்தவர் என்பதை அறிந்ததால், செல்வத்தை அளித்து அவரை ஏமாற்ற காமாக்யா தேவிக்கு விருப்பமில்லை. அவரது எளிய சுபாவத்தைக் கண்டு அவருக்கு கோபால மந்திரத்தை உபதேசித்தாள்.

ஒருவன் மதுரிய பாவ ரஸத்தில் நுழைய வேண்டுமானால் கோபால மந்திரம் கண்டிப்பாகத் தேவை. ஸ்ரீ சனாதன கோஸ்வாமி மற்றும் மிகவும் உயர்ந்த வைஷ்ணவர்களின் கருணையினால் நம் பரம்பரையில் கோபால மந்திரம் முக்கியமாக உள்ளது. ஸ்ரீ சைதன்ய மகாபிரபு தோன்றுவதற்கு முன்னால் இந்த மந்திரம் சாதாரணமாக எல்லோருக்கும் கொடுக்கப் பட மாட்டாது. உண்மையிலேயே தகுதி பெற்ற மற்றும் கடந்த ஜென்மங்களில் புண்ணியங்களை நிரம்பவும் சேர்த்த ஜீவன்களுக்கு மட்டுமே அவை கொடுக்கப் பட்டன.

தேவி பிராம்மணருக்குத் தன் தரிசனத்தையும் கோபால மந்திரத்தையும் வழங்கினாள். அந்த மந்திரத்தை ஜெபித்து அவரது பக்தி மேலும் திடமானது. அதை தொடர்ந்து ஜெபித்ததால் அவருக்கு செல்வத்தின் மீதான ஆசை அறவே ஒழிந்தது. எல்லா செல்வங்களிலும் வேரான மகத்தான செல்வத்தை தான் பெற்றிருப்பதை உணர்ந்தார். அவர் அஸ்ஸாமை விட்டு விட்டு கங்காசாகர் வந்து தீர்த்தமாடினார். பின்னர் அந்த இடம் ஒத்து வராததால் அங்கிருந்து கயா என்ற இடத்துக்குச் சென்றார். அங்கேயும் சரியாகப் பிடிக்காததால்

அங்கிருந்து வாரனாசிக்குச் சென்றார். ஆனால் அங்கு அவர் முக்தி சம்பந்தமான கோட்பாடுகளில் ஈர்க்கப் பட்டார். இதைக் கண்ட பார்வதி தேவி தனது கணவர் சங்கருடன் சேர்ந்து காட்சி கொடுத்து, "நீ கவனமாயிரு! இங்கே நீ தங்காதே! உடனடியாக இந்த இடத்தை விட்டு ஓடிப் போய் விடு" என்று உத்தரவிட்டாள்.

மகாதேவரும் பார்வதியும் ஒருவரிடம் உண்மையிலேயே கருணை கொண்டால் இப்படித் தான் செய்வார்கள். இல்லாவிட்டால் ஒருவன் அங்கேயே தங்கிக் கொண்டு, தலையையும் மொட்டையடித்துக் கொண்டு "அஹம் பிரம்மாஸ்மி " , "தத்வம் அஸி" மற்றும் "சர்வம் கல்விதம் பிரம்மா " என்று ஜெபித்துக் கொண்டு பிரம்மத்தில் ஒன்றாகும் முக்தியைப் பெற விரும்புவான். ஆனால் இந்தப் பிராமணரின் மேல் கருணை கொண்ட மகாதேவரும் பார்வதியும், "நீ இங்கேயிருந்து உடனடியாக ஓடி விடு. இங்கே தங்கவே தங்காதே. முக்தி என்பது ஒரு பெண் புலி. அது உன்னை விழுங்கி விடும். அது விழுங்கி விட்டால் பின்னர் அதன் வாயிலிருந்துத் தப்பி வெளியில் வரவே முடியாது. எனவே நீ இங்கிருந்து இப்போதே உடனடியாக ஓடி விடு. திரும்பிக் கூட பார்க்காதே. நீ நேரடியாக மதுராவுக்குச் செல். அங்கே விஸ்ரம காட்டில் தீர்த்தம் ஆடிவிட்டு பின் நேராகப் பிருந்தாவனத்துக்குச் செல்" என்று அறிவுரை கூறி அவரை அங்கிருந்து ஓட வைத்தனர்.

அந்தப் பிராமணன் பிருந்தாவனத்தை நோக்கி வரும் போது வழியில் பிரயாக் என்ற இடத்தில் ஆயிரக் கணக்கானவர்கள் கொண்ட ஒரு பெரும் கூட்டத்தைக் கண்டார். அவர்களில் பற்பல யோகிகள், தங்கள் தலைகளில் மிகவும் உயரமான அளவுக்கு ஜடைகளைக் கட்டிக் கொண்டு பெரும் அளவில் சாம்பல்களை மேனியில் முழுக்கவும் பூசிக் கொண்டு ஒரு அக்கினிக் குண்டத்தைச் சுற்றி உட்கார்ந்து கொண்டு யாகம் நடத்திக் கொண்டிருந்தனர். மற்றவர்கள் உரத்த குரலில் பிரச்சாரம் செய்து கொண்டிருந்தனர். "ஜெய ஸ்ரீ ராமா! ஜெய ஸ்ரீ ராமா" என்று உரக்கக் கூவினர். மாக மாதத்தில் விதம் விதமான சாதுக்கள் அங்கே தீர்த்தமாட வருவார்கள். அங்கே தான் வால்மீகி முனிவர் கொஞ்ச நாட்கள் தங்கியிருந்த, பரத்வாஜ ரிஷியின் ஆசிரமமும் உள்ளது. ஸ்ரீ ராமச் சந்திரர் கூட இங்கே தான் கங்கை நதியைக் கடந்தார். அது மிகவும் பரிசுத்தமானப் புண்ணியத் தலம். மேலும், இங்கே தான் ஸ்ரீ சைதன்ய மகாபிரபு ஸ்ரீல ரூப கோஸ்வாமிக்கு உபதேசம் அளித்தார் என்பது மிகவும் குறிப்பிடத்தக்கது.

இவற்றையெல்லாம் கண்ட அந்தப் பிராமணர், "நானும் இப்படி இவர்களைப் போல் ஆனால் அது எவ்வளவு நன்றாகயிருக்கும்!" என்று எண்ணினார். அங்கே வாழ்ந்த ஜனங்கள் இப்படிப் பட்ட சாதுக்களுக்கு மிகவும் மரியாதை அளித்தார்கள். அந்தப் பிராமணர் அங்கேயிருந்த பிந்து மாதவா என்ற விக்கிரகத்தை வழிபட்டு, ஆரத்திகளையும் எடுத்துக் கொண்டு அவர்கள் பேசியவற்றையெல்லாம் கேட்டார்.

மேலும், சில பக்தர்கள் கீர்த்தனம் பாட ஆரம்பித்த போது, " நீங்கள் என்ன கத்துகிறீர்கள்? உங்கள் பிரச்சாரத்தில் எதைப் பற்றிப் பேசுகிறீர்கள்? " என்று அவர்களைக் கேட்கவும் செய்தார்.

அதற்கு அவர்கள், "அண்ணா! இப்படி கடுமையான வார்த்தைகளால் பேசாதீர். அது அபராதமாகும். இங்கே பெரிய மகாத்மாக்கள் அனைவரும் பகவான் ஸ்ரீ விஷ்ணுவின் மஹிமைகளைப் பற்றிப் பேசுகிறார்கள்" என்று பதிலளித்தனர்.

பின்னர் அங்கேயும் அந்தப் பிராமணர் அன்யோன்யமாக உணர்ந்ததால், அங்கேயிருந்து கிளம்பி விட்டார். சங்கரர் அவருக்கு உபதேசம் கொடுத்தது போல் நேராக மதுராவுக்கு வந்து "விஸ்ரம காட்" டில் தீர்த்தம் ஆடினார். வாரனாஸியில் சங்கரர், " நீ உன் மந்திர ஜெபத்தைத் தொடர்ந்து செய்தால் உன்னுடைய இஷ்ட தெய்வம் உனக்குக் கண்டிப்பாகத் தரிசனம் கொடுக்கும்" என்று கூறியிருந்தார்.

கோபால மந்திரத்தின் தெய்வம் யார்? கோபால கிருஷ்ணர். எந்தக் கோபால கிருஷ்ணர்? அது ஒவ்வொருவரின் பாவ பக்தியைப் பொறுத்தது. சிலருக்கு அவர் மாடுகளைக் கூட்டிக் கொண்டு அவற்றை மேய்க்கச் செல்லும் கோபால். மற்றும் சிலருக்கு அவர் யசோதாவின் மடியில் உட்கார்ந்திருக்கும் பால கோபால். ஆனால் மதுரிய ரஸத்தில் இருக்கும் பக்தர்களுக்கோ அவர் கிஷோர கோபால். இந்தப் பிராமணருக்கு அவர் புல்லாங்குழலை ஊதிக் கொண்டு பசுக்களை மேய்ப்பதற்காக அவற்றைக் கூட்டிக் கொண்டு பிருந்தாவனக் காடுகளில் தன் சகாக்களுடன் திரியும் கிருஷ்ணர்!

நாம் நம் மந்திர ஜெபத்தைத் தவறாமல் செய்தும் நமக்கு ஸ்ரீ கிருஷ்ணரின் தரிசனம் கிடைக்கவில்லையென்றால் அது ஒரு வகையில் பிரயோஜனமற்றதே! "எனக்கு ஸ்ரீ கிருஷ்ணர் எப்போது தரிசனம் கொடுப்பார்? எப்போது? எப்போது?" என்று பெரும் ஆசை எழ வேண்டும். நாம் மந்திர ஜெபத்தை முழு இதயத்துடன் செய்தால் மட்டுமே அந்த மந்திரம் ஸ்ரீ கிருஷ்ணரின் நேரடித் தரிசனத்தை அளிக்கும். இல்லாவிடில் நாம் எத்தனைப் பிறவிகள் எடுத்தாலும் அவை பிரயோஜனப் படுவதில்லை. நாம் முழுக் கவனத்தையும் கொடுக் காமலோ, கவலையுடனோ, தூக்கத்துடனோ இல்லை சில சமயங்களில் அக்கரையில்லாமலோ மந்திரத்தை ஜெபித்தால், அது தன் முழுப் பலனை ஒருபோதும் அளிக்காது. எப்போது நாம் நம் மந்திரத்தின் முழுப் பலனையும் அடைவோம்? நமக்கு நம் குருதேவர் அதை எவ்வாறு ஜெபிக்க வேண்டும் என்று உபதேசித்தாரோ, ஸ்ரீ பார்வதி தேவி அந்த பிராமணரிடம் அதை எவ்வாறு ஜெபிக்க வேண்டும் என்று உபதேசித்தாளோ, அவ்வாறு ஜெபிக்க வேண்டும். நம் முழுக் கவனத்தையும் கொடுத்து, புலன்களின் ஆசைகளை முழுவதுமாக விட்டுவிட்டு, அடக்கத்துடன், கிருஷ்ணரை நினைத்துக் கண்ணீர் வருமாறு ஜெபித்தால் கண்டிப்பாக அது கோபாலைக் கொண்டு வந்து

விடும்! ஆனால் நாம் அமைதியுடன் உட்கார்ந்து மந்திரத்தை ஜெபிக்கும் போது, சாப்பாட்டுக்கு மணியடித்தவுடன் இரண்டு மூன்று முறைகள் மேலே ஜெபித்து விட்டு சாப்பிடும் ஆசையுடன் சாப்பிடச் சென்றால் அது எதற்கும் உதவாது. மாறாக நாம் திடமான மனதுடன், முழு பாவத்தையும் அதற்குக் கொடுத்து ஜெபிக்கும் போது அந்த மந்திரம் நமக்கு ஸ்ரீ கிருஷ்ணரின் நேரடித் தரிசனத்தைக் கண்டிப்பாக வழங்கும்.

*குரௌ கோஸ்தே கோஸ்தாலயிஷு ஸஜனே*
*பூ ஸர கனேஸ்வ மந்த்ரே -- ( ஸ்ரீ மன சிக் ஷா # 1)*

"நாம் அமைதியான மனத்துடனும், பக்தியுடனும், ஆழ்ந்த நம்பிக்கையுடனும் மந்திரத்தை ஜெபிக்கும் போது அது கண்டிப்பாக நம் தெய்வத்தையும் நம் குருவையும் தரிசனம் அளிக்கும்."

மதுராவில் "விஸ்ரம காட்" டில் தீர்த்தமாடிய பின் அந்தப் பிராமணர் பிருந்தாவனத்துக்குள் நுழைந்து யமுனை தீரத்தில் வந்து சேர்ந்தார். அப்போது அங்கு எந்த விதமான ஊரோ நகரமோ இல்லை. வெறும் காடுகளாக இருந்தன. அவர் நுழையும் போது அந்தக் காட்டுக்குள்ளிருந்து யாரோ ஒருவர் புலம்பி அழும் சத்தத்தை அந்தப் பிராமணர் கேட்டார். ஆனால் அது கேட்பதற்கு மிகவும் இனிமை யாகவும் இருந்தது. அவருக்கு அங்கே யாராவது அழுகிறார்களா, அல்லது கீர்த்தனை பாடுகிறார்களா, மேலும் அது ஆணா பெண்ணா என்று எதுவுமே புரியவில்லை. ஆனால் அந்த இனிமையான குரல் அவரை மிகவும் ஈர்த்தது. அந்தக் குரல் வரும் திசையை நோக்கி மெதுவாக நடக்க ஆரம்பித்தார். நடந்து அந்தக் காட்டின் அடர்ந்த பகுதியில் யமுனை நதியின் ஓரமுள்ள "கேசி காட்" டின் பக்கத்திலுள்ள ஒரு பூங்காவனத் தோட்டத்திற்கு வந்தார். அந்தக் காட்டினுள் நுழையும் போது அவர் அங்கே ஒரு பிராமணர் மிகவும் பிரகாசமான தேஜஸுடன் இருப்பதைக் கண்டார். அது கோபகுமார்! அவர் ஒரு கீர்த்தனையை மிகவும் இனிமையான ராகத்தில் ஜெபித்துக் கொண்டிருந்தார்.

*ஸ்ரீ கிருஷ்ண கோபால் ஹரே முகுந்தா*
*கோவிந்த ஹே நந்த கிஷோர கிருஷ்ணா*
*ஹா ஸ்ரீ-யசோதா-தனய பிரஸீதா*
*ஸ்ரீ பல்லவீ ஜீவன ராதி கேஷா*
*.... (பிருகத் பாகவதாம்ருதம் 2.4.7)*

அந்தக் கீர்த்தனையில் அவர் "ஹா ஸ்ரீ யசோதா-தனய பிரஸீதா" என்ற வரியை மிகுந்த அழுத்தத்துடன் பாடினார். அவரது கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாகப் பாய்ந்து கொண்டி ருந்தது. வாயிலிருந்து எச்சில் கீழே வழிந்து கொண்டிருந்தது. அவர் உண்மையிலேயே சுய நினைவுடன் தான் இருக்கிறாரா என்பதைக் கூட அந்தப் பிராமணரால் சொல்ல முடியவில்லை. அவர் உடனே

யமுனையிலிருந்து நீரைக் கொண்டு வந்து கோபகுமாரரின் வாயைத் துடைத்து விசிறியால் காற்று வீசினார். மெதுவாகக் கோபகுமார் தன் சுய நினைவுக்கு வந்து பின்னர் சிறிது நேரம் கழித்து எழுந்து கொண்டு, " ஓ! நீர் அஸ்ஸாமிலுள்ள பிராக் ஜியோதிஷ புரத்திலிருந்து வருகிறீரா? அங்கே தேவி உமக்கு ஏதாவது மந்திரத்தைக் கொடுத்தாளா?" என்று அந்த பிராமணரை நோக்கிக் கேட்டார். அந்தப் பிராமணரோ எந்த விதமான பதிலையும் சொல்ல முடியால் அப்படியே ஸ்தம்பித்து நின்றார்.

"தேவி உமக்குக் கோபால மந்திரத்தை உபதேசித்தாளா? நீர் பின் அங்கிருந்து கங்காசாகர் வழியாக கயாவுக்கும் சென்றீரா? பின்னர் நீர் வாரணாசிக்குச் சென்று அங்கே சங்கரரும் பார்வதியும் உமக்கு மேலும் அறிவுரைகள் கொடுத்தார்களா? பின் அங்கிருந்து பிரயாக் வழியாக இங்கு வந்தீரா? " என்று கோபகுமார் மேலும் கேட்டார்.

இவ்வாறு கோபகுமார் மேன்மேலும் பேசப் பேச, அந்தப் பிராமணருக்கு ஆச்சரியமும் மேன்மேலும் அதிகரித்தது. கோப குமாரிடம் அவருக்கு ஆழ்ந்த நம்பிக்கை ஏற்பட்டது. "இவர் எப்படி இவையனைத்தையும் அறிந்தார்?" என்று எண்ணிக் கொண்டே அந்தப் பிராமணர் எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டு ஆழமாக உந்தப் பட்டு அசையாமல் ஸ்தம்பித்து நின்றிருந்தார். நமக்கு இப்படி ஒரு அனுபவம் நேரும் போது அதில் உண்டாகும் நம்பிக்கை நம் வாழ் நாட்கள் வரையிலும் அப்படியே நிலைத்து நிற்கும். நாம் இப்படிப்பட்ட ஒரு குருவை அடையும் அதிர்ஷ்டம் கிடைக்கும் போது அதன் விளைவுகள் நிரந்தரமாக நிலைத்து நிற்கும். ஆனால் நாம் ஒரு போலியான குருவைச் சந்திக்கும் போது அது ஒரு வித்தியாசமான உணர்வை நமக்குக் கொடுக்கும். அப்படிப் பட்ட போலி குரு, "தம்பி, தயவு செய்து நீ ஹரி நாம திக் ஷையை என்னிடமிருந்து எடு" என்று கூறுவார்.

அதற்கு அவன், "இல்லை, இப்போது வேண்டாம். நான் நாளையோ மறுநாளோ எடுத்துக் கொள்வேன்" என்று பதிலளிக்கலாம்.

ஆனால் அந்தப் போலிக் குரு அதைப் பார்த்து, "இந்த மனிதன் மிகவும் பெரிய செல்வந்தன். இவனுக்கு அழகான வீடும் நிறைய செல்வங்களும் உள்ளன. இவன் வழியாக நாம் சில காரியங்களைச் சாதிக்கலாம். நம் மேல் சில வழக்குகள் உள்ளன. இவனுக்கு அரசாங்கத்தில் நல்ல வேலையிருப்பதால் நம் வழக்கை இலகுவாகத் தள்ளி விடுவான்" என்று எண்ணிக் கொண்டு, "இல்லையில்லை. நீ அது வரை காலம் தாழ்த்தத் தேவையில்லை. இப்போதே திக் ஷையை எடுத்துக் கொள். இல்லாவிட்டால் உன் மனம் குழம்பிவிடும். ஒரு மாலையை மட்டும் கொண்டு வா. போதும்," என்று பதிலளிப்பார்.

அதற்கு அவன் மாலையையும் கூட கொண்டு வர விருப்பமில்லையென்றால் அந்தக் குருவோ, "சரி பரவாயில்லை.

அதுவும் தேவையில்லை. உனக்கு விஷேஷ சலுகை அளிக்கிறேன். நீ சாப்பிடுவதிலோ குடிப்பதிலோ எந்த விதமான விதியுமே கிடையாது. நீ மாமிசம், மது இப்படி என்ன வேண்டுமானாலும் உண்ணலாம்! சரி, உனக்கு எந்த மந்திரம் வேண்டும்? கணேச மந்திரத்தைக் கொடுக்க வா?" என்று கூறுவார்.

ஒரு சுத்தமான குரு, மந்திரங்கள் விஷயத்தில் இப்படிப்பட்டக் கேவலமான வியாபாரம் பண்ண மாட்டார். அவர் சிஷ்யனாக ஆக விரும்பும் ஒருவனின் உள் பாவங்களைக் கவனத்துடன் அறிந்து அதன் பின் அவனுக்குக் கிருஷ்ண பக்தியில் உண்மையான ஆர்வம் இருந்தால் மட்டுமே மந்திரத்தை அளிப்பார். இல்லாவிடில் அவர் ஏதாவது சாக்குப் போக்குக்களைக் கூறி, தள்ளி வைத்து அந்த நபரை வெளியேயும் அனுப்பி விடுவார். மேலும் குறிப்பாக ஒரு குரு மத்தியம அதிகாரியாக இருந்து, ஆன்மீகத்தில் சிறிது பலவீனமாக இருந்தால் அவர் தன் வருங்கால சிஷ்யர்களைத் தன் பாதுகாப்பில் கொஞ்ச நாட்களாவது வைத்துக் கொண்டு, பின்னர் அவர்களது பரிசுத்தத் தன்மைகளை அறிந்த பின்னர் மட்டுமே மந்திரத்தை வழங்குவார். ஒரு மத்தியம அதிகாரி வைஷ்ணவர், அநேகமாக குருவாக விளங்குபவர். உத்தம அதிகாரி அப்படியல்ல. ஒரு உத்தம அதிகாரி, தன் உயர்ந்த நிலையிலிருந்து சிறிது கீழே மத்தியம அதிகாரி நிலைக்கு இறங்கி வந்து தான் குருவாக முடியும். பெரும்பாலும் உத்தம அதிகாரிகள் சிஷ்யர்களுக்குத் தீக் ஷையளிக்க மாட்டார்கள். நாரதர் எத்தனையோ பேர்களுக்கு குருவாக ஆனார். ஆனால் அவர் உண்மையிலேயே எந்த விதமான தீக் ஷைச் சடங்குகளையும் முறையாக விதிப்படிச் செய்ததில்லை. அவர் மிகவும் இலகுவாக ஒருவனின் இதயத்தில் பக்தியை பாய வைத்து, சிறிது உபதேசங்களையுமே அளிப்பார். வேறு எதையுமே அவர் செய்வதில்லை.

முன் காலத்தில் கபீர் என்று ஒருவர் ஸ்ரீ இராமானுஜ வைஷ்ணவ சம்பிரதாயத்திலுள்ள ஸ்ரீ ராமானந்த ஆச்சாரியாரிடம் தீக் ஷை பெற விரும்பினார். எப்போது கபீர் வந்து தீக் ஷை பெற யாசித்தாலும் ராமானந்த ஆச்சாரியார் அவரைத் துரத்தி விடுவார். ராமானந்த ஆச்சாரியார் கபீரை ஒரு முதல் தர மாயாவாதியாகவே எண்ணினார். ஒரு நிர்விஷேஷ வாதிக்கு ஒருபோதும் தீக் ஷை அளிக்கக் கூடாது என்பது அவரது கொள்கை. ஆனால் கபீரோ, தான் ராமானந்த ஆச்சாரியாரிடமிருந்து எப்படியாவது மந்திர தீக் ஷையைப்பெற்று அவரைக் குருவாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று ஒரு திட்டம் வகுத்தார். ஒரு நாள் மிகவும் இருட்டான இரவில் ராமானந்த ஆச்சாரியார் குளிக்கப் போவார் என்பதை முன்னரே அறிந்த கபீர், ராமானந்த ஆச்சாரியாருக்குத் தெரியாமல் அவரது பாதையில் முன் கூட்டியேக் குறுக்காகப் படுத்திருந்தார். இருட்டில் கபீர் படுத்திருந்தது இருட்டில் தெரியாததால் ராமானந்த ஆச்சாரியார் தன் கால் கபீரின் உடலில் பட்டுத் தடுக்கி விழப் போனார். யாரோ

ஒருவரைத் தான் காலால் தொட்டு அபராதம் விழைத்து விட்டோமோ என்று கவலைப் பட்டு, "ராமா! சொல், ராமா! " என்றார். இதைக் கேட்டதும் கபீர் உடனே எழுந்து ஸ்ரீ ராமானந்த ஆச்சாரியாரின் கால்களைப் பிடித்துக் கொண்டு, "இது தான் என் மந்திரம், என் தீக் ஷை. தாங்கள் தான் என் குரு ! ராமா, ராமா, ராமா .... "

இந்த மாதிரியான குறுக்குத் திட்டங்களாலும் ஒருவன் தீக் ஷையைப் பெறலாம். ஆனால் இந்த முறையில் ஒருவன் உண்மையான பக்தியை அடைய முடியாது. கபீர் தன் வாழ் நாள் முழுவதும் ஒரு முதல் தர மாயாவாதியாகவே இருந்தார்.

இங்கே கோபகுமார் கூறியவை அனைத்தும் அந்தப் பிராமணரிடம் ஆழ்ந்த நம்பிக்கையை ஏற்படுத்தின. பின் அவர் கோபகுமாரிடம், "நான் தூர தேசத்திலிருந்து இங்கே வந்துள்ளேன். என்னுடைய இதயத்தில் ஒரு விஷயத்தைப் பற்றி அறிய மிகுந்த ஆவலுடன் உள்ளேன். நம் சாத்யமும் சாதனாவும் என்ன? நமது உத்தம இலக்கு என்ன? அதை அடைய நாம் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டார்.

இந்தக் கேள்வி ஒரு சாதகன் அல்லது சிஸ்யனிடம் உதிக்கவில்லையென்றால் அவன் விரும்பிய இலக்கை ஒருபோதும் அடைய மாட்டான். ஸ்ரீ சைதன்ய மகாபிரபு கிழக்கு வங்காளத்தில் இருந்த போது தபன மிஸ்ரா இதையே கேட்டார்," நம் சாத்யமும் சாதனாவும் என்ன?" இந்தக் கேள்வியை ஒரு சிஸ்யன் தன் குருவிடம் கேட்கும் போது அது அந்தக் குருவை மிகவும் சந்தோஷப் பட வைக்கும். குரு உடனே அதற்கு, " ஓ! நீ என்ன அழகான வினாவைக் கேட்டுள்ளாய்? " என்பார்.

ஒரு சிஷ்யன், "இதுவரை நான் நம் சாத்யம் என்னவென்பதை அறியாமல் இருந்தேன். யாரை நாம் வழிபட வேண்டும்? அந்த வழிபாட்டை எவ்வாறு நாம் நடத்த வேண்டும்? நமது தேவைகள் என்ன? நாம் யாரிடம் செல்வோம்? எப்படி நாம் அவரிடம் செல்வோம்? " என்று எண்ணுவான்.

எனவே நம் பக்தி சாதகத்தின் மிகத் தொடக்கத்திலேயே நம் சாதானா என்ன, சாத்யா என்னவென்றுத் தெரிந்திருக்க வேண்டும். " எந்த வழியை நான் எடுக்க வேண்டும்? இந்த வழியில் நான் சென்றால் எதை அடைவேன்? " என்று தெரிந்திருக்க வேண்டும். இந்த ஞானம் உண்மையான சம்பிரதாயத்தில் மட்டும் தான் கொடுக்கப் பட்டுள்ளன. சில சம்பிரதாயங்களில் இதை நாம் காணக் கூட முடியாது.

கோபகுமார் அந்தப் பிராமணரிடம், "என் நண்பனே! நமக்கு மிகக் குறைந்த அளவு நேரமே கொடுக்கப்பட்டுள்ளது. நான் அதை ஒட்டி என் அனுபவத்தில் நடந்த சில சம்பவங்களைக் கூறுகிறேன்.

உமக்கு மந்திரம் போதிக்கப்பட்டு விட்டது. மேலும் மகாதேவா, பார்வதி தேவியின் தரிசனமும் கிடைத்துள்ளது. சில சமயங்களில் இந்த மந்திரம் எல்லாவற்றையுமே அளிக்க இயலும். ஆனால் தகுந்த வைஷ்ணவ சத்சங்கம் இல்லாவிட்டால் இதைப் பொதுவாக அறிய முடியாது. எனவே வெறும் இலகுவான வார்த்தைகளில் சாத்யா என்றால் என்ன, சாதனா என்றால் என்ன என்பதை நான் சுருக்கமாகக் கூறுகிறேன். நான் அவற்றை ஒன்றன் பின் வரிசையாக ஒவ்வொரு நிலையையும் படிப்படியாகக் கூறுகிறேன். நான் உடனடியாக கோபியர்களின் பிரேமையைப் பற்றியும் ஸ்ரீமதி ராதிகாவின் பிரேமையைப் பற்றியும், பிரஜ பிரேமையைப் பற்றியும், நந்த நந்தன ஸ்ரீ கிருஷ்ணர், ராதா காந்தாவான நடவர சியாம சுந்தரர் மட்டுமே எல்லா தெய்வங்களை விடவும் மேலாக வழிபடத் தகுந்தவர் என்பதையும் கூறினால் நீர் புரிந்து கொள்ள மாட்டீர். ஸ்ரீ ராதாவுக்கும் ஸ்ரீ கிருஷ்ணருக்கும் இடையில் நடக்கும் லீலைகளை முதலிலேயே நான் கூறினால் உம்மால் அதைப் புரிந்து கொள்ள முடியாது. மேலும் நான் இவற்றிலுள்ள வித விதமான படி நிலைகளையும் விவரிக்கிறேன். பின் நீர் உமது சுய ரூப பாவத்திற்குத் தக்கவாறு ஒரு குறிப்பிட்ட பாவத்தைப் பிடித்துக் கொள்வீர்" என்று கூறினார்.

அதன் பின் கோபகுமார் தன் சுய சரிதத்தைக் கூற ஆரம்பித்தார்: "நான் கோவர்த்தனாவில் ஒரு மாடு மேய்ப்பவரின் வீட்டில் பிறந்தேன்.." என்று ஆரம்பித்தார். இவ்வாறு பிறப்பதற்குக் காரணம் முந்திய ஜென்மாக்களில் சேர்த்து வைத்த புண்ணியங்கள் - "பிராக்தன் சம்ஸ்கார்". கோவர்த்தன், பிருந்தாவனம் மற்றும் மதுராவில் பிறப்பது என்பது ஒரு மிகப் பெரிய விஷயமாகும். இப்படி ஒருவருக்குப் பிறப்பு கிட்டினால் அது பக்தி சாதனத்தில் நுழைய மிகவும் இயற்கையாக உதவி புரியும். ஏனென்றால் அந்த நபரின் தாய் தந்தை அனைவருமே பக்தர்களாக இருப்பார்கள். ஆனால் தற்போதைய காலத்தில் எத்தனையோ ஹிரண்ய கசிப்புக்களும் இராவணன்களும் கூட பிருந்தாவனத்தில் பிறக்கிறார்கள்.

கோபகுமார் மேலும் தொடர்ந்தார், "நான் வளர்ந்து சிறு பாலகனானவுடன் என் பெற்றோர்கள் என்னைப் பசுக்களை மேய்க்கும் தொழிலில் ஈடுபடுத்தினர். பசுக்களை மேய்ப்பதற்காக வெளியே கொண்டு போவதும், அவற்றின் பாலைப் பருகுவதும், மற்ற சகாக்களுடன் விளையாடுவதும் - இவை அனைத்தும் எனக்குக் கவலையில்லாத மாடு மேய்க்கும் சிறுவனின் வாழ்க்கையை அமைத்தது. நானும் என் தோழர்களும் பயமேயில்லாமல் வாழ்க்கையை நடத்தினோம். ஒருவருக்கொருவர் பெருமை பார்க்காமல் சுதந்திரமாக வாழ்ந்தோம். அங்கே எங்களுக்கிடையிலுள்ள உறவுகள் மிகவும் ஆழ்ந்தவை, உண்மையானவை. இப்படியே தான் நான் வளர்ந்தேன்.

"ஒரு நாள் நான் ஒரு பிராமணரைச் சந்தித்தேன். அவர் மிகவும் கருணை

யுள்ளவராக இருந்தார். எப்போதும் பகவானின் மேல் கீர்த்தனைகளைப் பாடிக் கொண்டேயிருந்தார். எல்லாவற்றையும் அறவே துறந்தவராகவே நான் அவரைக் கண்டேன். அவருக்கு இந்த உலகத்தின் மேல் சிறிது கூட அக்கரையே இல்லை. எனக்கு அவர் மேல் ஆழ்ந்த நம்பிக்கை உண்டானது. என் அம்மா அவருக்குக் கொஞ்சம் பால் கொண்டு கொடுக்கச் சொல்வாள். அதைத் தூக்கிக் கொண்டு போய் குடிக்கக் கொடுப்பேன். நானும் அவரிடம், "உங்களுக்கு எப்போதெல்லாம் பசி எடுக்கிறதோ உடனே எங்களிடம் கூற வேண்டும்" என்றும் கேட்டுக் கொண்டேன். நான் ஒவ்வொரு நாளும் பசுக்களை மேய்க்கச் செல்லும் போதெல்லாம் அவரைத் தவறாமல் பார்க்கச் செல்வேன். மெதுவாக எனக்கு அவர் மேல் பாசம் ஏற்பட்டது. வர வர அது வளர்ந்து அவரை என் முழு இதயத்துடன் உயிரைப் போல் நேசித்தேன். எனவே நான் என் தாய் தந்தையர்களிடமிருந்த பாசத்தையும் மற்றெவருடன் இருந்த பாசத்தையும் மறந்தே விட்டேன்.

"அவர் பற்பல விதமான உணர்ச்சிகளுடன் இருப்பதை அடிக்கடி நான் பார்த்துள்ளேன். சில சமயம் அவர் உரக்கச் சிரிப்பார், சில சமயம் ஓடுவார், சில சமயங்களில் யமுனா தீரத்தில் "ஹா கிருஷ்ணா! ஹா கிருஷ்ணா ! " என்று உரக்கக் கத்தியவாறே உருளுவார். இவற்றையெல்லாம் பார்த்து என்னிடம் அவர் மேல் மிகப் பெரிய நம்பிக்கை எழுந்தது. எனக்கும் அவருக்கும் இடையிலிருந்த உறவு மிகவும் இனிமையானது. என் அம்மாவைப் போல், நான் சில சிமயம் அவருக்குச் சப்பாத்தி போன்றவைகளையும் கொண்டு வருவேன். ஆனால் அவர் அநேகமாக பாலை மட்டுமே உண்ணுவார். நான் அவரது முன்னால் போய் உட்கார்ந்திருக்கும் போது, தன் கைகளை என் தலையின் மேல் வைத்துத் தட்டிக் கொடுத்து, என்னிடம் மிகுந்த அளவில் தன் பாசத்தைக் காட்டுவார். இதன் காரணமாக நான் மெதுவாக வெளி உலகத்துக்கு அன்யோன்யமாக மாறினேன். அவரிடமிருந்து எப்படியும் தீக் ஷை எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற ஆசை என்னிடம் மேலெழுந்தது.

"பின் ஒரு நாள், எனக்கு தீக் ஷை வழங்க வேண்டும் " என்று அவரிடம் கேட்டுக் கொண்டேன். அதற்கு அவர் என்னை யமுனாவில் போய் முதலில் குளிக்கும் படிக் கூறினார். நான் அப்படியே செய்தேன். திரும்ப அவரிடம் வந்ததும் அவர் என் காதில் மந்திரத்தை ஓதினார். அது உமக்கு பார்வதி தேவி அளித்த அதே கோபால மந்திரமே தான்.

அதன் பின் என் குருதேவர் அதை ஜெபிப்பதற்கான விதி முறைகள் அனைத்தையும் கூற ஆரம்பித்தார். அவர், "இந்த மந்திரத்தின் மூல தெய்வம் யார்? இதை நீ ஜெபிக்கும் போது எந்த விதமான பக்தி பாவம் உன் இதயத்தில் வரும்? கேள். தன் கைகளில் வினோதமான புல்லாங்குழலை வைத்துக் கொண்டு, மயில்பீலியைத் தன் தலையில் சூடிக் கொண்டு ஒப்பில்லாத அழகுடன் பொலியும் சியாம சுந்தரர் ...."

இப்படி அவர் கூறிக்கொண்டிருந்த அதே கணம் தன்னுள் எழும்பிய பக்திப் பிரேமையில் மூழ்கி, சுய நினைவை இழந்து, தரையில் அப்படியே சாய்ந்து விட்டார். அவரால் அந்த மந்திரத்தை ஜெபிப்பதற்கான விதிமுறைகளையும், சாத்யம் சாதனா போன்ற விஷயங்களையும் என்னிடம் கூற முடியவில்லை. அவர் எனக்கு வெறும் மந்திரத்தை மட்டுமே கொடுத்திருந்தார். அதனுடைய அர்த்தம், எத்தனை முறைகள் நான் அதை ஜெபிக்க வேண்டும், மேலும் எப்படி நான் உட்கார்ந்து அதை ஜெபிக்க வேன்டும் என்று எதையுமே உபதேசிக்கவில்லை. அவருடைய வாயிலிருந்து நுரை நுரையாக வந்து கொண்டிருந்தது. உடலிலுள்ள எல்லா அங்கங்களும் ஆடின. உடலின் மேல் உள்ள அனைத்து மயிர்களும், குத்திட்டு நின்றன. நான் உடனே யமுனாவை நோக்கி அவருக்குத் தண்ணீர் கொண்டு வர வேகமாக ஓடினேன். ஆனால் நான் திரும்பி வரும் போது அவர் மறைந்து விட்டார். நான் அங்குள்ள குஞ்சாக் காடுகள் அனைத்து இடங்களிலும் தேடிப் பார்த்தேன். பிருந்தாவனம் முழுவதிலும் தேடிப் பார்த்தேன். என் குருவை எங்கிலுமே காண இயலவில்லை. தேடித் தேடி நான் களைத்துப் போய் எங்கிலுமே அவரைக் காண முடியாததால் மிகவும் மன வேதனை அடைந்தேன். "

நாங்களும் முதலில் எங்கள் குருதேவரான ஶ்ரீல பக்தி பிரஞ்ஞான கேசவ மகாராஜாவிடம் தீக் ஷை எடுத்த போது, அவரிடம், "தயவு செய்து இந்த கோபால மந்திரம், காயத்ரி மந்திரத்துக்கெல்லாம் அர்த்தத்தை கூறுங்கள்" என்று கேட்டோம். ஆனால் அவர், "ஶ்ரீ ராதாவும் ஶ்ரீ கிருஷ்ணாவும் தான் கோபால மந்திரமும் காயத்ரி மந்திரமும். அவற்றை நீங்கள் ஜெபிக்கும் போது ராதாவும் கிருஷ்ணாவும் உங்களுக்கு தங்களை தானாகவேக் காட்டுவார்கள். இப்போது அவைகளுக்கு அர்த்தம் தெரியத் தேவையேயில்லை. சரியான சமயம் வரும் போது அந்த மந்திரங்கள் உங்கள் இதயத்தில் பாய்ந்து எல்லாவற்றையும் உங்களுக்கு வெளிப்படுத்தும் " என்று பதிலளித்தார். இதைப் பற்றி வேறு எவரிடமும் கேட்கவும் எங்களுக்குத் தேவையில்லாமல் இருந்தது. நாங்கள் எங்கள் குருதேவர் கூறியதைப் போலவேதான் கடைப்பிடித்தோம்.

# அத்தியாயம் - 2

கோபகுமாரின் குரு மறைந்திருந்தாலும், அவரது நிஷ்தா (ஆழ்ந்த நம்பிக்கை) மறையவேயில்லை. அவர் வேறெந்த வித்தியாசமான வழிகளில் செல்லவும் நினைக்கவில்லை. நமக்கு குரு என்ன கூறுகிறாரோ அதுவே வேத சாஸ்திரங்களின் பரம உண்மை. அதை நாம் எப்போதும் நம்முடன் வைத்துக் கொள்ள வேண்டும். சில சாதகர்கள், நேரில் சொந்தமாக அனுபவத்தால் உணர்ந்த பின்னர் மட்டுமே அடுத்த படியை நோக்கி முன்னே செல்ல விரும்புவார்கள். அவர்கள் மற்றவர்கள் கூறுவதை நம்பாமல், தன் அனுபவத்தை மட்டுமே நம்புவார்கள். ஆனால் இவ்வாறு ஒருவன் படிப்படியாகத் தானாக உணர்ந்து, அதன் பின் முன்னேறினால் அது அவனுக்குக் கோடிக் கணக்கான பிறவிகள் ஆகி விடும் என்பதை ஒரு குரு நன்றாக அறிவார். சுவர்க்கம் என்றால் என்ன? சித்த லோகம் என்றால் என்ன? பூர், புவர், சுவர், மஹர், ஜன மற்றும் தபோ லோகங்கள் என்றால் என்ன? அங்கே பார்ப்பதற்கு என்னவெல்லாம் இருக்கின்றன? அங்கே என்னவென்ன விதமான ஆனந்தங்கள் உள்ளன? எட்டு விதமான ஜடப் பொருட்களால் உண்டான இந்தப் பிரம்மாண்டங்களில் என்ன ஆனந்தம் உள்ளது? சிவலோகம் என்றால் என்ன? வைகுந்த லோகம் என்றால் என்ன? ராம லோகம் என்றால் என்ன? நாம் இவை அனைத்தையும் நேரில் கண்டு அறிந்து அதன் பின் இவற்றில் எது மிகவும் உத்தமமானது என்று தானாக ஊகித்து முடிவு செய்ய எண்ணுவோம். ஆனால் இப்படி செய்வது ஒருபோதும் சாத்தியமாகாது.

உதாரணமாக நாம் லௌகீய வாழ்க்கையில் முழுக்கவும் மூழ்கியுள்ள ஒரு மனிதனை எடுத்துக் கொள்வோம். சாதகங்கள் எதுவுமே செய்யாத அவனிடம் நாம், "எனது நண்பனே! பகவானுக்குப் பஜனை செய்வது மட்டுமே மிகவும் மேலானது. நீ மற்ற அனைத்தையும் விட்டுவிட்டுப் பஜனையில் மட்டுமே எப்போதும் ஈடுபடு" என்று கூறுவதாக வைத்துக் கொள்வோம்.

ஆனால் அந்த மனிதன் என்ன நினைப்பான்? "ஓ! அப்படியானால் நான் என் பெற்றோர்களிடம் வைத்துள்ள பாசத்தை என்ன செய்வது? மேலும் நான் இன்னமும் திருமணம் கூட செய்ய வில்லை. குடும்ப வாழ்க்கையைப் பற்றி எனக்கு அனுபவம் வேண்டாமா?" என்றெல்லாம் அவன் நினைப்பான்.

ஆனால் அவன் தன் முந்தைய பிறவிகளில் புண்ணியங்களைத் தகுந்த அளவில் சேர்த்து வைத்திருந்தால் அவனால் வீட்டை விட்டுவிட்டு உடனே வெளியேற முடியும். ஆனால், அவ்வாறு முந்தையப் புண்ணியங்கள் இல்லாத ஒருவனால் இது சாத்தியமாகாது. எனவே, ஒருவன் தன் குடும்பங்களையெல்லாம் துறந்து கொண்டு ஆழ்ந்த தீர்க்கமுடன் பஜனையில் ஈடுபட்டானானால் அது அவனது முந்தைய ஜென்ம புண்ணியங்களால் வருபவை என்பதை நாம் அறியலாம். அவர்களுக்குக் குடும்ப வாழ்க்கையென்பது தேவையற்ற ஒன்று. மகா பக்தர்களான சுக தேவ கோஸ்வாமி, நாரத முனிவர் இவர்களுக்கெல்லாம் மிகப் பெருமளவு முந்தைய ஜென்மப் புண்ணியங்கள் இருந்தன. சாதாரணமாக ஒருவனின் செயல் களிலிருந்தே முந்தைய ஜென்மங்களிலுள்ள புண்ணியங்கள் அவனிடம் எவ்வளவு இருக்கின்றன என்பதை எளிதாக அறிந்து விடலாம்.

நிறைய பேருக்கு, தானாகவே அனைத்து லோகங்களையும் உணர வேண்டும் என்ற ஆசையுள்ளது. ஆனால் அதற்குத் தேவையான புண்ணியங்களோ எல்லோரிடமும் இருப்பதில்லை. எனவே ஸ்ரீ சனாதன கோஸ்வாமி, நம்மேல் கருணை கொண்டு, அனைத்து லோகங்களைப் பற்றியும், அங்கேயுள்ள நிலவரங்களைப் பற்றியும், ஏன் நாம் சில லோகங்களைத் தவிர்த்து விட்டு இன்னொரு லோகத்தை நாட வேண்டும் என்பதைப் பற்றியும் விளக்குகிறார். அவர் இவை அனைத்தையும் கோபகுமார் என்பவரின் கதையின் மூலம் தெளிவாக்குகிறார். அவர் நம்மை வெவ்வேறு லோகங்களுக்கு படிப்படியாக எடுத்துச் சென்று, பின்னர் கடைசியாக கோலோக பிருந்தாவனத்துக்கே அழைத்துச் செல்கிறார்.

ஆனால், ஸ்ரீ சனாதன கோஸ்வாமி ஒரு கட்டுக் கதையை எழுதியுள்ளார் என்று மட்டும் ஒருபோதும் நினைக்காதீர்கள். (1) மேலும் இதில் மிகவும் உயர்ந்த சித்தாந்தங்களும் ஆழ்ந்த ஞானங்களும் நிறைந்துள்ளன. உதாரணமாக, சிலர் ஸ்ரீ கிருஷ்ணர் பூலோகத்துக்கு வருவதன் காரணம் அசுரர்களை வதம் செய்து பூமியின் பாரத்தைக் குறைப்பதற்காக என்று நினைக்கிறார்கள். ஆனால் உண்மையான காரணம், அவர் பக்தர்களை மகிழ்விப்பதற்காகவும், அதிலும் முக்கியமாகக் கோபியர்களின் உத்தம பக்தியை உலகெங்கிலும் முழக்கம் செய்து, அதைத் தானும் ரசிக்கவே வருகிறார் என்பதே! ஸ்ரீ சைதன்ய மகாபிரபு ஒரே ஒரு செயலினால் எத்தனையோ விஷயங்களை முடித்து விடுகிறார். அவர் ஒன்று செய்யும் போது

அதனால் ஐந்து பேர்கள் அறிவுரை பெறுகிறார்கள், இன்னும் ஐந்து விஷயங்கள் முடிக்கப்பட்டு விடுகின்றன. இதே மாதிரிதான் ஸ்ரீ சனாதன கோஸ்வாமி ஸ்ரீ பிருகத் பாகவதாம்ருதாவைப் படைத்துள்ளார் (குறிப்பு: ஸ்ரீ சனாதன கோஸ்வாமி பின்னர், பிருகத் பாகவதாம்ருதத்தை தான் எழுதவில்லை என்றும், வெறுமனே எழுத்தாணியை மட்டுமே அவர் பிடித்ததாகவும், மதன மோகன் தான் உண்மையில் எழுதியவர் என்றும் கூறியுள்ளார். மேலும், இதே காரணத்தால் தான் அவர் அந்த நூலுக்கு விளக்கவுரையும் பின்னால் படைத்தார்.)

கோபகுமார் தன் கதையைத் தொடர்ந்து கூறினார்: "நான் என் குருவை இழந்ததால் மிகவும் துயரப்பட்டேன். மேலும் நான் மந்திரங்களை மிகவும் ஆழ்ந்து ஜெபித்ததால் எனக்கு ஆன்மீக உணர்ச்சிகள் அதிகமாகி, கடைசியில் என் வீட்டையும் குடும்பத்தையும் துறந்து விட்டேன். ஒரு நாள் பிரயாக்கில், கங்கையின் ஓரத்தில் ஒரு பிராமணன் மிகவும் சிரத்தையுடன் தன் சாலக் கிரமச் சிலையை வழிபட்டதைப் பார்த்தேன். அப்போது நானும் என் மனதில், இவ்வாறு வழிபாடு செய்ய வேண்டும் என்று ஆசைப் பட்டேன். ஆனால் அந்தப் பிராமணன் பின்னர் அந்த சாலகிராம சிலையை ஒரு பெட்டியில் வைத்து மூடும் போது நான் நினைத்தேன், "பகவானை இப்படிப் பெட்டியினுள் வைத்தால் அவர் ஆகாரம் எதுவும் கொள்ள முடியாமல் பட்டினியாக அல்லவா தூங்க வேண்டியிருக்கும்? மேலும் அவரால் நகரக் கூட முடியாதே." அந்த நினைவு எனக்குக் கொஞ்சம் வேதனையையும் சங்கடத்தையுமேக் கொடுத்தன.

"அந்தப் பிராமணனின் அறிவுரையின் படி நான் தென்னிந்தியாவிலுள்ள கேரள தேசத்துக்குச் சென்று அங்கேயிருந்த மன்னனைச் சந்தித்தேன். அந்த மன்னன் நான்கு கைகளுடன் விளங்கும் ஸ்ரீ பத்பநாமரை மிகவும் மாட்சிமையுடன் வழிபட்டு வந்தான். அவன் அவருக்கு உணவு ஊட்டியும், பணிவிடைகள் புரிந்தும், மற்றும் வைஷ்ணவர்களுக்கு வேண்டிய அத்தனைச் சௌகரியங்களையும் செய்து கொடுத்துக் கொண்டிருந்தார். அந்த உயரிய வழிபாடுகளைக் கண்டு, நான் சில காலம் அங்குத் தங்கு பக்தி கொண்டிருந்தேன். மேலும், நானும் அந்த மன்னன் வழிபடுவது போல் வழிபாடுகள் நடத்த வேண்டும் என்று ஆசைப்பட்டேன். அதன் பின் அந்த மன்னன் வாரிசு எதுவுமின்றி இறந்ததால், என் ஜாதகத்தில் அரசனாகும் தகுதி இருப்பதை மன்னனின் சோதிடர்கள் கண்டு, அந்தக் குடிமக்கள் என்னை மன்னனாக்கினர். என்னால் முந்தைய மன்னன் புரிந்த சேவைகளைச் செய்ய முடிந்தது. ஆனால் ஸ்ரீ பத்ம நாபரின் பிரசாதத்தை, கீழ் ஜாதியிலுள்ள எவராவது தொட்டால் அதை எவருமே சாப்பிடாமல் ஒதுக்கியதைக் கண்டேன். மேலும் அவர்கள் பிரசாதம் நன்றாகச் சமைக்கப் பட்டுள்ளதா என்று பார்த்து, பின் அதன் படியே

தான் உண்டனர். இதையெல்லாம் நான் கண்டு மிகவும் கவலையடைந்தேன். விக்கிரக சொரூபத்தில் இருக்கும் பகவானுக்குப் படைக்கப் பட்ட பிரசாதம் ஆன்மீக வஸ்து. அதனிடம் இப்படிப் பட்ட சிந்தனைகளேத் தோன்றக் கூடாது. எனவே நான் அந்த இடத்தைப் பற்றி அனோன்யமாக நினைக்க ஆரம்பித்தேன்.

"அங்கு சில வைஷ்ணவர்களிடமிருந்து ஸ்ரீ ஜகன்னாதரைப் பற்றிக் கேள்விப் பட்டேன். அவர்கள் என்னிடம், "நீலாச் சாலாவில் பிரசாதத்தின் மேல் இப்படிப்பட்ட இழிவானவை எதையும் செய்வ தில்லை. அங்கு பகவானின் பிரசாதத்தை ஒரு நாய் தன் வாயால் தொட்ட போதும் கூட அதைச் சாப்பிடுவார்கள். மேலும் அது உலர்ந்தோ, பழையதாகவோ - இல்லை அழுகிப் போயிருந்தாலும் கூட, அதைப் பகவானைப் போலவேக் கருதுவார்கள்" என்று கூறினார்கள்.

"எனவே நான் அங்கே சென்று, இதையெல்லாம் நேரில் பார்த்ததால் மிகவும் மகிழ்ச்சி கொண்டேன். ஸ்ரீ ஜகன்னாதரைத் தரிசனம் செய்த பின்னர், எனக்கும் அங்குள்ள மன்னன் வழிபாடு செய்ததைப் போல் சேவை செய்ய வேண்டும் என்ற ஆசை எழுந்தது. நானே அங்குள்ள மன்னனாக ஆகி விட்டால் நேரடியாக என் கைகளால் ஸ்ரீ ஜகன்னாதருக்கு சேவை செய்ய முடியமே என்று எண்ணினேன். பின்னர் அந்த மன்னன் இறந்து போனான். அந்த மன்னனுக்குப் பின் நாடாள்வதற்கு எவரும் தகுதியில்லாமல் இருந்தனர். அவனது மூத்த மகன் வீட்டை விட்டுத் துறவறம் பூண்டு பஜனைகள் செய்வதில் ஈடுபட்டிருந்தான். அடுத்த மகனுக்கு மன்னனாகும் தகுதி எதுவுமே இல்லாமலிருந்தது. அங்குள்ள குடிமக்களுக்கு, இனி எவர் மன்னராவார் என்றுக் கவலைப்பட்டு, அவர்கள் ஸ்ரீ ஜெகன்னாதரை வேண்டினர். ஸ்ரீ ஜகன்னாதர் அவர்களின் கனவில் தோன்றி, "எவனுக்குத் தன் கைகளிலும் கால்களிலும் மன்னன் ஆவதற்குத் தேவையான அடையாளங்கள் உள்ளதோ, அவனை மன்னனாக்குங்கள். வேண்டிய அடையாளங்கள் கண்டிப்பாக இருக்க வேண்டும். அவற்றைச் செயற்கை முறைகளால் உண்டாக்கலாகாது. எவனுக்கு வெட்டுப் படாமல் முழுமையாக புஷ்பம், கமண்டலம், நட்சத்திரம், சங்கு இவையெல்லாம் கைகளிலும் கால்களிலும் உள்ளதோ அவனை நீ மன்னனாக்குங்கள்" என்று கூறி மறைந்தார்.

"ஸ்ரீ ஜகன்னாத் கூறிய அத்தனை அடையாளங்களும் என் கையில் மட்டுமே இருப்பதைக் கண்ட குடிமக்கள், என்னைத் தங்களுடைய மன்னனாக்கினர். எனவே நான் பகவானின் விக்கிரக சேவையில் சிறிது காலம் செலவளித்து மிகவும் மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்தேன். ஆனால் கடைசியில் அந்த இடத்துக்கும் அன்யோன்யமாக உணர ஆரம்பித்தேன். அங்குள்ள பூஜாரிகள் தங்களுக்குள்ளேயே அடிக்கடிச் சண்டை பிடிப்பதைப் பார்த்தும், சில சமயங்களில் கோவில்

பிரகாரத்தை மூடி வைப்பதால் என்னால் விக்கிரகங்களைப் பார்க்க முடியாமல் போனதாலும், இவை எல்லாம் சேர்ந்து எனக்கு அவை பெரும் பிரிவுணர்வை உண்டாக்கின. மேலும் ஸ்ரீ ஜகன்னாத் இது வரையிலும் என்னுடன் பேசியதேயில்லை. நான் என் கோபால மந்திரத்தைத் தொடர்ந்து ஜெபித்துக் கொண்டே வந்தேன். பின்னர் எனக்கு ஸ்ரீ கோபாலரின் தரிசனம் கிடைக்க வேண்டும் என்று ஏங்கினேன். கோபாக்களிடம் சுயமாக எந்த விதமான சங்கோசங்களும் இல்லாமல் நெருங்கி விளையாடும் ஸ்ரீ கோபாலரைப் போல் ஜகன்னாதரை நான் மனமாரத் தழுவ முடியாது என்பதையும் உணர்ந்தேன்.

"அதன் பின் ஒரு நாள் ஆச்சரியமாக என் குருதேவர் ஜெகன்னாதரைத் தரிசனம் செய்து கொண்டிருப்பதைக் கண்டேன்! ஆனால் அவர் பக்தி உணர்வில் முழுக்கவும் நிரம்பியிருந்ததால் அவரை உடனே நெருங்க முடியவில்லை. அவர் தொடர்ந்து ஜெகன்னாதரையே பார்த்துக் கொண்டிருந்தார். சிறிது நேரம் கழியட்டும் அதன் பின்னர் நேரில் சென்று பேச வேண்டும் என்று உறுதி கொண்டு வேறு திசையில் தற்காலிகமாகப் பார்த்தேன். ஆனால் திரும்பிப் பார்க்கும் போது அவரைக் காணவில்லை. குருவை இப்போது இரண்டாவதும் இழந்து விட்டதை அறிந்து நான் மிகவும் மன வேதனைப் பட்டேன். ஆனால் அடுத்த நாள் கடற்கரை ஓரத்தில் நடந்து திரியும் போது திடீரென்று அவர் அங்கே இருப்பதைக் கண்டேன். அவரது வாயிலிருந்து நுரைகள் வழிந்து கொண்டிருந்தன. கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாக வழிந்து கொண்டிருந்தது. "கிருஷ்ணா, கிருஷ்ணா" என்று இடைவிடாமல் கூறிக் கொண்டிருந்தார். அவரை நான் மெதுவாக சுய நிலைக்குக் கொண்டு வந்த பின் அவரது பாதங்களில் விழுந்து நமஸ்கரித்தேன். அவர் பின்னர் எனக்குக் கோபால மந்திரத்தைப் பற்றிய விளக்கத்தையும் அதை ஜெபிக்க வேண்டிய விதி முறைகளையும் கூறினார். "இந்த மந்திரம் நீ என்ன வேண்டும் என்று நினைக்கிறாயோ, அவை அனைத்தையும் வழங்கும். நீ என்னவெல்லாம் பார்க்க வேண்டும், மகிழ வேண்டும் என்று நினைக்கிறாயோ - பகவானையேப் பார்க்க வேண்டும் என்று நினைத்தால் கூட, எல்லாவற்றையும் கொடுக்கும்." இவ்வாறு அவர் கூறிய பின்னர் திரும்பவும் பக்தி உணர்ச்சியினால் உந்தப் பட்டார். அதன் பின் அவர் எங்கு சென்றார் என்பது எனக்குத் தெரியாது."

இங்கே எந்த மந்திரத்தைக் குறிப்பிடப் பட்டுள்ளது? கோபால மந்திரம்! தற்போது நமக்கு அந்த அளவுக்கு நம்பிக்கை இன்னமும் வரவில்லை யென்றாலும் கூட, இந்த மந்திரத்தில் எவ்வளவு சக்தி அடங்கியுள்ளது என்பதைப் பாருங்கள்.

கோபகுமார் தொடர்ந்தார்: "ஆனால் அவர் கூறிய இந்த வார்த்தைகளைக் கேட்டவுடன் என் நம்பிக்கை இன்னமும்

அதிகரித்தது. அந்த மந்திரத்தை நான் மிகுந்த ஆர்வமும் அன்பும் கொண்டு உச்சரித்தேன். அப்போது மெதுவாக நீலாசாலாவுக்கு நான் அன்யோனமாக உணர்ந்தேன். அதன் பின்னர் சில ரிஷிகளிடமிருந்து இந்திர லோகத்தில் இந்திரன், பகவானுக்கு நேரடியாகவே சேவை செய்வதைப் பற்றி அறிந்தேன்."

கோபகுமார் தன் கோபால மந்திரத்தை உச்சரித்துக் கொண்டே, தன் மனத்தில் இந்திர லோகம் செல்ல அளவற்ற ஆவலிருந்ததால் உடனடியாக இந்திர லோகத்தை அடைந்தார். அங்கே இந்திரன் உபேந்திர பகவானுக்குத் தானே நேரடியாக சேவைகள் புரிவதைக் கண்டார். மிகவும் உயர் தரமான உணவுப் பதார்த்தங்களையும் திரவங்களையும் தன் சகோதரனான உபேந்திரருக்கு இந்திரன் தன் கைகளாலேயே பரிமாறிக் கொண்டிருந்தான். இதைக் கண்ட கோபகுமார் தன் கோபால மந்திரத்தின் சக்தியினால் இந்திரப் பதவியை அடைய விரும்பினார். பின்னர் அசுரர்களுக்குப் பயந்து இந்திரன் தன் பதவியை விட்டு ஓடிய போது அங்குள்ள முனிவர்களும் தேவர்களும் கோபகுமாரை இந்திரனாக நியமித்தனர். கொஞ்ச காலம் இந்திரப் பதவியிலிருந்தவாறு உபேந்திர பகவானுக்கு வழிபாடுகளை விதம் விதமாக நடத்தினார். ஆனால் இரவு வேளைகளில் அவரால் உபேந்திர பகவானைப் பார்க்கவே முடியவில்லை. இதன் காரணமாக கோபகுமார் இந்திரலோகத்திலும் அன்யோன்யத்தை உணர்ந்தார்.

அடுத்து அவர் பூர், புவர், மற்றும் சுவர் ஆகிய அனைத்து லோகங்களுக்கும் சென்று அங்கு வாழும் பிப்பலாயனா போன்ற ரிஷிகளிடம் உரையாடினார். அதன்பின் பிரம்ம லோகத்துக்குச் சென்றார். பின்னர் படிப்படியாகப் பிரம்மாவின் பதவியையும் பெற்றார்.

பிரம்ம லோகத்தில், வேதங்கள், உபநிஷத்துக்கள், புராணங்கள் மற்றைய சாஸ்திரங்கள் அனைத்தும் உருவங்கள் எடுத்துக் கொண்டுத் தங்களுக்குள் விவாதம் புரிந்து கொண்டிருந்தன. அவைகள், "பிரம்ம ஜோதியில் ஜீவன் ஐக்கியமாவது நல்லது தான்; ஜீவன்கள் பகவானிடம் பக்தி கொள்வதும் நல்லது தான். ஆனால் இவற்றில் எது உயர்ந்தது ? யாரை வழிபட வேண்டும்?" என்று சர்ச்சை செய்து கொண்டிருந்தன. முதலில் பாகவதம் மற்ற அனைவர்களின் கருத்துக்களைக் கேட்டுக் கொண்டு நடு நிலையில் நின்று கொண்டிருந்தது. ஆனால் கடைசியில் அனைத்தும், பாகவதம் கூறுவது மட்டுமே எல்லாவற்றிலும் மிகச் சிறந்தது என்றும், ஸ்ரீ விஷ்ணு மற்றும் அவரது வைகுந்தத்தின் மகிமைகளே மிகவும் உத்தமம் என்றும் முடிவெடுத்தன.

அங்கேயும் கோபகுமாருக்கு திருப்தி ஏற்படாததால் தன்னுடைய கோபால மந்திரத்தை ஜெபித்தவாறு திரும்பவும் பூலோக பிருந்தாவனத்துக்குத் திரும்பினார். அங்கே அவர் தன் குருவை திரும்பவும் கண்டு மகிழ்ந்தார். கோபகுமாருக்கு அவர் ஆசீர்வாதம்

அளித்து, "நீ இதுவரை என்னவெல்லாம் பார்த்தாயோ அவை அனைத்தும் உன்னுடைய மந்திரத்தின் சக்தியினால் நடந்தன. இனி இதை இன்னமும் தொடர்ந்து ஜெபித்தால் உன்னால் எட்டு விதமான உலக வஸ்துக்களையும் கடர முடியும். பிரஜா நதியையும் தாண்டி, சித்த லோகத்துக்கு உன்னால் செல்ல இயலும். ஆனால் எவரும் தன் பூத உடம்புடன் அங்கேச் செல்ல முடியாது. எனவே எனது ஆசீர்வாதங்களை உனக்கு அளித்து, மேல் உலகங்களிலெல்லாம் பயணம் செய்வதற்குகந்த ஒரு உடலை நான் அளிக்கிறேன். உன்னுடைய இதயத்தின் ஆழ்ந்த ஆசைகள் நிச்சயமாக நிறைவேறும். ஆனால் நீ எந்த காரணம் கொண்டும் இந்தப் பயணத்தில் இடையில் நின்று விடாதே. படிப்படியாக, நீ ஆசைப்பட்ட அந்தப் பரம பதத்தையே அடைந்து விடுவாய்" என்று அறிவுரை கூறினார்.

இந்தச் சம்பவம் நமக்கு முன்னால் தண்டகாரண்யா என்ற காட்டில் தவமிருந்த ஒரு முனிவரின் கதையை ஞாபகத்துக்குக் கொண்டு வருகிறது. அவர் கோபால மந்திரத்தை ஆயிரக் கணக்கான வருடங்களாக ஜெபித்துக் கொண்டிருந்தார். இருந்தும் அவர் பூலோகத்திலேயே இருந்தார். பின்னர் ஸ்ரீ ராமச் சந்திரரும் சீதா தேவியும் தண்டகாரண்ய ஆசிரமத்துக்கு விஜயம் செய்த போது அவரது மனம் ஸ்ரீ ராமச் சந்திரரின் கொள்ளை அழகில் மயக்கம் கொண்டது. அவர் ஸ்ரீ ராமரிடம், "உமக்குச் சீதா தேவி சேவை செய்வது போல் நானும் நீவிர் கோபால வடிவத்தில் இருக்கும் போது சேவை செய்ய அருள் புரிய வேண்டும்" என்று யாசித்தார்.

அதற்கு ஸ்ரீ ராமர், "சரி, அப்படியே ஆகட்டும். ஆனால் உன்னால் கோலோகாவுக்கு நேரடியாகச் செல்ல முடியாது. ஸ்ரீ கிருஷ்ணரின் லீலைகள் இந்த உலகத்தில் ஆரம்பிக்கும் போது, முதலில் ஒரு கோபியின் வயிற்றில் பிறந்து உன் சுயரூபத்தைத் துலக்க வேண்டும். நீ ஒரு கோபாவைத் திருமணம் செய்வாய். உனக்குக் கணவன், மாமியார், மாமனார், மைத்துனி எல்லாம் அமையப் பெற்று மறை வழியாக நீ கோபாலரிடம் மிகவும் நேசம் கொள்வாய். கோபியர்களின் சேர்க்கையால் நீ பரிபூரணமடைவாய். உன்னுடைய சந்தேகங்கள், அறியாமை அனைத்தும் தூரவே போய் விடும். நீ கோபியின் வயிற்றில் பிறந்து உன்னுடைய சொரூபத்தை வளர்த்து, பின் பரி பூரணமடைவாய். பின்னர் ஸ்ரீ கிருஷ்ணரின் லீலைகள் முடிந்து அவர்கள் கோலோக பிருந்தாவனத்துக்குத் திரும்பும் போது நீயும் அவர்களுடன் சென்று ஸ்ரீ கிருஷ்ணருக்கு நித்திய சகியாக ஆவாய். இது தான் வழி" என்று கூறி அருளினார்.

நமக்கு இன்னமும் பக்தி பாவம் சரியாக பூரணம் அடையவில்லையென்றால் நாம் இந்த பூலோக பிரஜாவில் தான் இருப்போம். பக்தி உணர்வுகள் பரி பக்குவமடைந்த பின்னர் தான் நாம் இந்த உலகத்தை விட்டு மேலே செல்வோம். இதைப் பகவானே

ஆயிரக்கணக்கான தடவைகள் கூறியிருக்கிறார். நாம் இப்போது அந்த வழியில் படிப்படியாகச் செல்லுகிறோம். நம் குருவின் கருணையால் சரியான தருணம் வரும் போது மேல் உலகங்களுக்குச் செல்லத் தகுதியான உடலைப் பெறுவோம். நம் தற்போதைய பூத உடலால் அங்கே செல்ல இயலாது.

கோபகுமார் முன்னால் இருந்தபடியே தான் தோன்றினார். ஆனால் இப்போது அவர் தனது பூத உடலை எறிந்து விட்டு சுத்தமான ஆன்மீக உடலைப் பெற்றிருந்தார். கோடான கோடி வருடங்கள் சிரமப்பட்டு ஒருவன் எட்டு பூத வஸ்துக்களையும் தாண்டுவதை அவர் ஒரே நிமிடத்தில் மின்சாரம் போல் கடந்து விட்டார். இதைக் கண்ட சொர்க்க லோக வாசிகள் மேலிருந்து மலர் மாரி சொரிந்தனர். இவ்வளவு சீக்கிரமே அவர் வெகுவில் கடந்ததைக் கண்டு பிரம்ம தேவரே அவருக்கு வந்தனம் செலுத்தினார். அந்த எட்டு பூத வஸ்துக்களையும் கடக்கும் போது கோபகுமார் அங்கங்கேயுள்ள ஆனந்தங்களைக் கண்டார். அதன் பின் அவர் பிரஜா நதியையும் தாண்டி சிவ லோகத்தை வந்து அடைந்தார்.

பிரம்ம லோகம் என்று அழைக்கப்படும் உயர்ந்த லோகத்தில் இரண்டு பகுதிகள் உள்ளன. மேலேயுள்ள பாகம் சதாசிவலோகம் என்று அழைக்கப் படுகிறது. கீழேயுள்ள பாகம் சித்தலோகம் என்று அழைக்கப் படுகிறது. பகவானால் நேரடியாகக் கொல்லப்படும் அரக்கர்கள் இந்தச் சித்த லோகத்தையே அடைகின்றனர். மேலும், நிர்விஷேஷ வாதி என்று அழைக்கப்படும் இறைவனை உருவமற்ற ஒளியாக கோடிக் கணக்கான வருடங்கள் தியானிப்பவர்களும் இந்தச் சித்த லோகத்தையே அடைகின்றனர். இதுவே ஸாயுஜ்ய முக்தி என்று அழைக்கப்படுகிறது. இந்தக் கீழ்ப் பாகத்தையே மகா கால புரமென்றும் ஸாயுஜ்ய லோகம் என்றும் முனிவர்கள் அழைக்கிறார்கள். இந்த மகா கால புரத்துக்குத் தான் ஸ்ரீ கிருஷ்ணர் அர்ஜுனனைக் கூட்டிக் கொண்டு வந்து பிராமணரின் மகனை திருப்பி எடுத்துச் சென்றனர். அவர்கள் பிராமணனின் மகனுக்கு எப்படியும் பிரேம பக்தியை அளித்து விட வேண்டும் என்று தீர்மானித்து இவ்வாறு ஒரு புத்திசாலித்தனமாக கபட நாடகம் ஆடி, இந்த முக்தி லோகத்திலிருந்து அவனை விடுவித்து, பின்னர் துவாரகாவிலிருந்த அந்தப் பிராமணரிடம் கொண்டு வந்து சேர்த்தனர்.

இந்தச் சித்த லோகத்தில் கோபகுமார் இருந்த போது, ஆழம் எதுவும் அறிய முடியாத மிகப் பெரும் நதி போன்ற வஸ்துவில் ஜீவன்கள் நிர்விஷேஷ பிரம்மத்தில் மூழ்கி இருப்பதையும் சில சமயங்களில் அவை திரும்பவும் மேலே வருவதையும் தெளிவாகக் கண்டார். தன் கோபால மந்திரத்தை ஜெபிக்கும் போது அவர் மேலே வருவார். ஆனால் கீழேயுள்ள அளவில்லாத லோகங்களின் இழுப்பினால் திரும்பவும் அவர் அதில் மூழ்கி விடுவார். இப்படிப்பட்ட

உருவமற்ற நிர்வாண சொரூபத்தை அவர் மிகவும் அருவருக்கத் தகுந்த ஒன்றாக உணர்ந்தார். பின்னர் அதிலிருந்துத் தப்பிச சதாசிவ லோகத்தை அடைந்தார்.

சதாசிவ லோகத்தில் ஸ்ரீ சங்கரும் பார்வதி தேவியும் அப்போது தேவ கணங்களுடன் சேர்ந்து கீர்த்தனைகள் நடத்திக் கொண்டு ஆடியும் பாடியும் இருந்தார்கள். கௌரி என்று அழைக்கப் படும் பார்வதி தேவியின் அங்கங்கள் சுத்தமான சூடகத்தைப் போல் பிரகாசித்துக் கொண்டிருந்தன.  மிகவும் அழகாகக் காணப்பட்டாள். பார்வதி தேவி இசைக் கருவியொன்றை வாசிக்க, அதற்கு ஸ்ரீ சங்கர் ஒத்தவாறு நடனமாடிக் கொண்டிருந்தார். ஸ்ரீ கணேசரும் பாடிக் கொண்டிருந்தார். ஸ்ரீ கார்த்திகேயர், நந்தி , பிருங்கி மற்றும் அனைத்து சகாக்களும் அங்கேயிருந்தனர். அவர்கள் அனைவரும் பகவானின் நடனத்தைப் பற்றிப் புகழ்ந்து கொண்டிருந்தனர். அப்போது ஸ்ரீ கணேசர் கோபகுமாரிடம், "ஸ்ரீ சங்கரும் பகவானும் ஒன்றே, அவர்கள் வேறல்ல" என்று கூறினார். சில சமயம் கழித்து, கோபகுமார் மேலே வானத்தைப் பார்த்தார். அங்கே நான்கு பேர்கள் கீர்த்தனங்கள் பாடிக் கொண்டு வருவதைக் கண்டார். அவர்கள் வைகுந்தத்தில் நிரந்தரமாக வசிப்பவர்கள். சிவ பெருமானையும் பார்வதி தேவியையும் கண்டதும் அவர்கள் நமஸ்காரம் செலுத்தி, "ஓ மகாதேவா! நீவிரும் ஸ்ரீ ஹரியும் ஒன்றே" என்று புகழ்ந்தனர்.

இதைக் கேட்ட சிவபெருமான் தன் இரு கரங்களையும் கொண்டு தன் காதுகளைப் பொத்திக் கொண்டு, "நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்? உங்களுக்குத் தத்துவங்களைப் பற்றி எதுவுமே தெரியாது! நான் ஈஸ்வரனா? இல்லவே இல்லை, நான் ஈஸ்வரனே அல்ல. நான் அந்த ஈஸ்வரரின் சேவகன். ஸ்ரீ நாராயணரின் சேவகன்" என்று கூறினார்.

அதன் பின் வைகுந்தத்திலிருந்து விஜயம் செய்த அந்த நான்கு பேர்களும் தத்துவங்களைப் பற்றிப் பேசினார்கள். பின் சிவபெருமான் கோபகுமாரிடம் பேச ஆரம்பித்தார்: "வைகுந்தத்துக்கு யார் செல்வார்கள்? ஒரு ஜீவன் தன் நூறு பிறவிகளில் முறையாக வர்ணாஸ்ரம தர்மத்தை தவறாமல் கடைப் பிடித்து, புண்ணிய செயல்கள் பற்பல புரிந்து, தான தர்மங்கள் மிகவும் செய்தால் அவன் பிரம்மாவின் அந்தஸ்தைப் பெறுகிறான். பின் பிரம்மாவின் தொழிலை முறை பிசகாமல் நூறு வருடங்கள் புரிந்தால் அவன் சிவனாகிறான். பின் சிவனாக ஆயிரக் கணக்கான வருடங்கள் பணியாற்றினால் அவன் ஒரு வைஷ்ணவனாகிறான். எனக்கும் நான் ஒரு வைஷ்ணவராக ஆக வேண்டும் என்று ஆசை. அதன் பின் அந்த வைஷ்ணவன் சாதன பக்தியைத் தொடர்ந்து பின்பற்றினால் அவன் வைகுந்தத்தை அடைகிறான். எனவே, வைகுந்தத்துக்குச் செல்வது மிக மிகக் கடினம். அங்கு செல்ல வேறெந்த குறுக்கு வழியும் கிடையாது. எனவே நீ

இங்கிருந்து பூவுலகப் பிரஜாவுக்குச் சென்று அங்கே பஜனைகளும் சாதகங்களும் புரிந்த பின்னர் அங்கே செல்லலாம்."

கோபகுமார் தன் கோபால மந்திரத்தை ஜெபித்தவாறு, அங்கிருந்து நேராக பூலோகப் பிருந்தாவனத்துக்கு வந்தார். எங்கே அவர் தன் குருவை முதலில் சந்தித்தாரோ அதே கேசி காட் என்ற இடத்தின் பக்கம் வந்தடைந்தார். அங்கே அவர் சாதன பஜனையில் முழுவதுமாக மூழ்கி, ஒரு நாள் அவர் தன் குருவிடம் லயம் ஆனார். தன் இதயத்தில் மிகுந்த பிரேம பக்தியுடன், கோபகுமாருக்கு மிகவும் ஆழ்ந்த ரகசியங்களைக் கூறினார். கோபகுமார் மிகவும் ஆனந்தம் அடைந்தார். அந்த ரகசியங்கள் என்ன? அவை சாதன பஜனையில் எவ்வாறு மேலேறுவது என்பதைப் பற்றியவை: "உன் இஷ்ட தேவர் ஸ்ரீ கோபால். நீ அவரை சாக்கிய பாவத்தில் (அதாவது தோழன் என்ற பாவத்தில்) வழிபடுகிறாய். நீ இதுவரை கோபால மந்திரத்தை ஜெபித்தாய். ஆனால் இந்த மந்திரம் வைகுந்தத்தில் உதவாது. ஏனென்றால் அங்கே சாதனா (அப்பியாசம்) எதுவும் கிடையாது. வைகுந்தம் சாத்யா அல்லது முடிவான நிலை. எனவே நீ இதுவரைப் பயிற்சி செய்த அப்பியாசங்களின் எந்த முறையுமே அங்கே செல்லாது. இப்போது உனது சொரூபம் வெளிப்பட்டு விட்டது. நீ ஒரு சகா. உன் ஆத்ம செயல்கள் அனைத்தும் ஸ்ரீ கிருஷ்ணருடம் மாடு மேய்க்கும் சிறுவனின் செயல்களாகவே இருக்கும். நீ ஸ்ரீ கிருஷ்ணரின் நெருங்கிய தோழன்" என்று கூறினார்.

கோபால மந்திரம் கோபகுமாரின் எல்லா விதமான அனர்த்தங்களையும் அபராதங்களையும் அவரது இதயத்திலிருந்து கழுவி இதயத்தைப் பரிசுத்தப் படுத்தி ஸ்ரீ பகவானுக்கும் தனக்கும் உள்ள நித்திய உறவை வெளிப்படுத்தியிருந்தது. இது அவ்வளவு பெரிய விஷயமாகும். நாம் ஸ்ரீ கிருஷ்ணரிடம் எந்த விதமான நித்திய உறவைக் கொள்கிறோம் என்பது, எந்த விதமான பாவம் நம் இதயத்தில் உள்ளது என்பதைப் பொறுத்தது. ஸ்ரீ கிருஷ்ணரிடம் பரிசுத்தமான தொடர்பு ஏற்படவில்லை என்றால் சுத்தமான பஜனை வராது. முக்கியமாக ராகானுக பக்திக்கு வரவேண்டுமானால் ஒருவனுக்கு இந்த விதமான பாவம் தேவை: "கிருஷ்ணர் எனக்குச் சொந்தம். நான் அவருக்குச் சொந்தம்" என்ற பாவம் வர வேண்டும். இந்த நிலையை ஒருவன் அடைந்து விட்டால் பின்னர் இந்தப் பூவுலகத்தில் எந்த விதமான கஷ்டங்கள் வந்தாலும் அவை நம்மை எதுவும் செய்ய முடியாது. "பாவா" என்ற பக்தி நிலையில் ஒரு சாதகன் இருக்கும் போது இப்படிப்பட்ட கஷ்டங்கள் வரும். ஆனால் நாம் "பிரேமை" என்ற பக்தி நிலையை அடையும் போது இவை எதுவும் நம்மைத் தொட முடியாது; நாம் அவற்றைப் பற்றி உணரவே மாட்டோம். அது சுகதேவ கோஸ்வாமி, நாரத ரிஷி மற்றும் பிரகலாத மகாராஜா போன்றவர்களின் நிலை. ஆனால் பரத மகாராஜாவுக்குக்

கொஞ்சம் கஷ்டங்கள் வந்தன. அவர் அப்போது "பாவா" என்ற பக்தி நிலையில் மூழ்கியிருந்தார். "பாவா" என்ற பக்தி நிலையில் கஷ்டங்கள் வரலாம். ஆனால் அவை காற்று நம்மை விட்டு எவ்வாறு நாம் அறியாமலேயே விலகிச் செல்லுகிறதோ அதே போல் அனைத்தும் பறந்து போய் விடும். அதன் பின்னர் அனர்த்தங்கள், கர்ம பலன்கள், தேவையில்லாதவைகள் - இவை எதுவுமே நம்மிடம் வராது. நம் சுய சொரூபத்துடன் ஸ்ரீ கிருஷ்ணரிடம் நமக்கு இருக்கும் நித்திய உறவைத் துலக்கி எப்போதும் மகிழ்ந்திருப்போம்.

பின்னர் கோபகுமாரிடம் அவருடைய குரு ரகசியமாக இந்த மந்திரத்தைப் போதித்தார்:

*ஸ்ரீ கிருஷ்ண கோபால் ஹரே முகுந்தா*
*கோவிந்த ஹே நந்த கிஷோர கிருஷ்ணா*
*ஹா ஸ்ரீ யசோதா தனய பிரசீதா*
*ஸ்ரீ வல்லபி ஜீவன ராதிகோஷ -*

- *(பிருகத் பாகவதாம்ருதா 2. 4. 7)*

இந்த மந்திரத்தில் கோபகுமாருக்கு "ஹா ஸ்ரீ யசோதா தனய பிரசீதா (ஓ, யசோதாவின் மைந்தனே)" வின் மேல் அழுத்தம் அதிகம். அவருக்கு இதுவே ஸ்ரீ கிருஷ்ணரின் முக்கிய நாமம். மற்றவை அனைத்தும் இரண்டாந்தரமான பெயர்களே. அவருடைய பக்தி பாவத்திற்கு , "யசோதா தனயா" என்பதே முக்கியம் - ஏனென்றால் ஸ்ரீ கிருஷ்ணர் கோபகுமாரின் நெருங்கிய நண்பன். மற்ற அனைத்து நாமங்களான ஸ்ரீ கிருஷ்ணா, கோபால், ஹரே, முகுந்தா, கோவிந்தா, நந்த கிஷோரா, ஸ்ரீ வல்லபி ஜீவனா, ராதி கேஷா - இவை அனைத்தும் அதன் விரிவுரையைப் போன்றவையே. இதே மந்திரத்தை மதுரிய பாவத்தில் இருக்கும் ஒரு சாதகன் ஜெபித்தால் அதிலுள்ள ராதிகேஷா (ஸ்ரீ ராதாவின் நாதன் ) என்ற பெயர் முக்கிய நாமமாகவும் மற்ற அனைத்தும் இரண்டாம் தர நாமங்களாகவே தோன்றும்.

ஒருவனுக்கு தன் இதயத்தில் எந்த மாதிரியான பக்தி நிலை அமைந்துள்ளதோ, அதுபோல் தான் பகவானின் நாமங்களில் ஒரு நாமம் முக்கிய நாமமாக அமையும். "ஸ்ரீ யசோதா தனய" என்பது சாக்கிய பாவத்திற்கும் (தோழனாக பாவிக்கும் பக்தி ) வத்சல்ய பாவத்திற்கும் (குழந்தையாகப் பாலிக்கும் பக்தி) முக்கிய நாமமாக அமைய முடியும். ஆனால் மதுரிய பாவத்திலிருக்கும் பக்தனுக்கு இதில் இரண்டு நாமங்கள் மட்டுமே முக்கிய நாமங்களாக இருக்க முடியும். "ஸ்ரீ வல்லபி ஜீவன் (கோபியர்களின் ஜீவன்)" என்பது ஒன்று, "ராதிகேஷா" என்பது இன்னொன்று. "ஸ்ரீ வல்லபி ஜீவன்" என்ற நாமம் மிகவும் முக்கியமானது. இதனுள் மிகவும் ஆழமான பக்தி பாவமொன்று மறைந்துள்ளது. சில பக்தர்களுக்கு "ராதிகேஷா" என்ற நாமம் கொடுக்கப் பட மாட்டாது. அவர்களுக்கு "ஸ்ரீ வல்லபி ஜீவன்" என்ற

நாமம் கொடுக்கப் படும். ஒரு பக்தனுக்கு, தான் ஒரு கோபி (சகி) யாக வேண்டும் என்ற ஆசையின்றி, ஒரு தாசியாக ஶ்ரீ ராதாவுக்கும் ஶ்ரீ கிருஷ்ணருக்கும் பணிவிடைகள் செய்ய விருப்பமிருந்தால் அவனுக்கு "ஶ்ரீ வல்லபி ஜீவன்" என்ற நாமம் கொடுக்கப்படும். ஆனால் "ராதிகேஷா" என்று ஜெபிப்பவர்கள் சகியாக ஆவார்கள். நாம் நம் பக்தி சாதகங்களில் முன்னேறும் போது இவற்றை இன்னமும் தெளிவாக அறிந்து கொள்வோம்.

கோபகுமாரின் குரு இந்த ரகசியங்களை அனைவருக்குமாகக் கூறவில்லை. கோபகுமாருக்கு மட்டுமே கூறினார். பின்னர், கோபகுமார் மறுபக்கம் பார்த்த போது அவரது குரு மறைந்து விட்டார். அவர் எப்போதும் இப்படியேதான் திடீரென்று மிகவும் பிரகாசமான தேஜஸ் ஒளிர மின்சாரம் போல் தோன்றுவார், கோபகுமாரிடம் ஒன்றோ இரண்டோ விஷயங்களைக் கூறுவார், பின் உடனடியாக மறைந்தும் விடுவார். ஆனால் நமக்கோ நம் அதிர்ஷ்டத்தால் நம் குருவிடம் ஏராளமான நேரங்களைச் செலவளிக்க முடிகிறது. ஒவ்வொரு நாளும் நாம் அவரிடம் நேரடியாகப் பேசி அவரிடமிருந்து உபதேசங்கள் மற்றும் அனைத்தையும் பெறுகிறோம். எனவே நாம் அந்த அளவுக்கு உயர்ந்த தகுதியை இன்னமும் பெறவில்லை. இல்லாவிட்டால் நம் குருதேவர் மின்சாரம் போல் ஒளிர்ந்து திடீரென்று தோன்றி நமக்கு எப்போதும் நம் மனத்தில் நிரந்தரமாக இருக்க வேண்டிய உபதேசங்களை வழங்கி விட்டுப் பின் மறைந்து விடுவார்.

அது நமக்குப் பால் கொடுப்பது மாதிரி. தன் குட்டிகளுக்கு தாய் நாய் எப்படிப் பால் கொடுக்கும் என்பதைப் பார்த்திருக்கிறீர்களா? அது, சமயம் தெரிந்ததும் தானாகவேத் தன் குட்டிகளிடம் வந்து பால் கொடுக்கும். அதன் பின் அதன் குட்டிகள் தாயின் பின்னால் ஓடும். ஆனால் அந்த தாய் நாயோ அந்தக் குட்டிகளை சாதுரியாக சுரண்டி விட்டுத் தடுத்து விடும். அந்தக் குட்டிகளோ தூரத்திலிருந்துத் தன் தாய் திரும்பிச் செல்வதைப் பார்த்துக் கொண்டிருக்கும். அதன் பின் அவை வீட்டிற்குள் சென்று விடும். இதேபோல் தான் குருவும் தானாக வந்து, தன் சிஸ்யரின் பக்தி பாவத்தைப் பொறுத்துச் சில உபதேசங்களை வழங்கி விட்டு அதன் பின் மறைந்து விடுவார்.

கோபகுமார் பிருந்தாவனத்தில் கொஞ்ச நாட்கள் வசித்து, பஜனைகள் செய்து, பிரேம பக்தியில் வெகுவாக ஆழ்ந்திருந்தார். அதன் பின் ஒரு நாள் ஆச்சரியத்திலும் ஆச்சரியமான ஒரு தரிசனத்தைப் பெற்றார்: அழகான பட்டுப் பீதாம்பரத்தை உடுத்திக் கொண்டு, கைகளில் புல்லாங்குழலைப் பிடித்து ஊதிய வாறு, கொள்ளை கொள்ள வைக்கும் புன் சிரிப்புடன், தன் கண்களால் பேசும் வண்ணம் ஶ்ரீ கிருஷ்ணர் திடீரென்று அவரது கண் முன் தோன்றினார்! இதைக் கண்ட கோபகுமார் குரல் தழுதழுக்க, உரக்கமாக, "ஓ! என் உயிரின் உயிரே!" என்று கதறியபடி ஶ்ரீ கிருஷ்ணரை நோக்கி ஓடினார். ஶ்ரீ

கிருஷ்ணரின் பக்கத்தில் நெருங்கியதும் அப்படியேக் கட்டிப் பிடித்துத் தழுவுவதற்கு முயன்றார். ஆனால் அதே சமயம் உடனே ஸ்ரீ கிருஷ்ணர் மறைந்து விட்டார். தாங்க ஒண்ணாத பிரிவுத் துயரம் பீறிட, கோபகுமார் தன் சுய நினைவை இழந்து, தரையில் விழுந்தார். அந்த நினைவற்ற நிலையில், தங்கத்தால் உருவாக்கப் பட்டிருந்த ஒரு அழகான விமானம், மன வேகத்துடன் பறந்து கோபகுமாரின் முன்னால் வந்து நின்றது. அந்த விமானத்திற்குள், முன்னால் அவர் சிவலோகத்தில் வைத்துப் பார்த்த அதே நான்கு வைகுந்த வாசிகளும் இருந்தனர். அவர்கள் கோபகுமாரிடம், "தயவு செய்து வாரும். நாம் இப்போது வைகுந்தத்துக்குச் செல்லுகிறோம்" என்று அழைத்தனர்.

கோபகுமார் இன்னமும் சுய நினைவு முழுவதும் திரும்பாமலிருந்தும், எப்படியோ எழுந்து விமானத்தினுள் சென்று அமர்ந்தார். அதன்பின் அவருக்கு எதுவுமே தெரியவில்லை. பின்னர் அவர் கண்களைத் திறந்து பார்த்ததும், "ஓ! நான் எங்கே வந்திருக்கிறேன்? நான் எங்கேயிருக்கிறேன்?" என்று ஆச்சறியப் பட்டார்.

உடனடியாகவே தான் வைகுந்தத்தின் வாசலில் ஒரு ஓய்வறையில் காத்திருப்பதை அறிந்தார். அங்கேயுள்ள வாயிற் காவலர்கள் அவரிடம், "நீங்கள் தயவு செய்து இங்கே காத்திருங்கள். நாங்கள் உள்புறத்தில் சென்று பிரபுவிடம் உத்தரவு வாங்கிக் கொண்டு பின்னர் உம்மை உள்ளே கூட்டிச் செல்வோம்" என்று கூறிக் கொண்டே அவர்கள் உள்புறத்தை நோக்கிச் சென்றனர். அவர்கள் திரும்பி வர வெகுநேரம் ஆகியது.

அப்போது அங்கே பகவானின் நித்திய பக்தர்கள் ஒருவர் பின் ஒருவராக வாசலின் வழியாக உள்ளே வந்து கொண்டிருந்தனர். அவர்கள் ஸ்ரீமன் நாராயணருக்குப் பூஜையில் சமர்ப்பிப்பதற்காக விதம் விதமான திரவியங்களையும் பரிசுகளையும் சுமந்தவாறு வந்து கொண்டேயிருந்தார்கள். அவர்களது பிரகாசமான உருவத்தைப் பார்த்ததும் கோபகுமார் அவர்களை பகவான் நாராயணர் என்று தப்பாக எண்ணி, அவர்களுடைய கால்களில் விழுந்து நமஸ்கரித்து, "ஓ, பகவான் நாராயணரே! ஓ, பிரபு! தயவு செய்து என் மேல் கருணை காட்ட வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

ஆனால் இதைக் கண்ட அந்த பக்தரோ, "ஓ! தயவு செய்து என்னை நாராயணர் என்று கூப்பிடாதீர்! அது அபச்சாரம்! நான் நாராயணர் அல்ல. நான் அவரது ஊழியனுக்கும் ஊழியம் செய்யும் ஒரு அடியவன்" என்று கூறிச் சென்றார். ஆனால் கோபக்குமாரோ, அங்கே வந்து கொண்டிருந்த ஒவ்வொருவரிடமும் இதையே தான் திரும்பத் திரும்பத் கூறினார். அவர் வைகுந்த லோகத்தின் மாட்சிமைகளைக் கண்டு ஆச்சரியத்தால் மதி மயங்கிப் போயிருந்தார். மேலும் அங்கே

குரங்குகள், கரடிகள், மயில்கள், மற்றும் விதம் விதமான பறவைகளைக் கண்டார். அவை அனைத்தும் சொல்ல வொண்ணா விதம் ஆன்மீகப் பேரழகுடன் தோன்றின. அதன் பின் கோபக்குமாரைக் கூட்டிக் கொண்டு வந்திருந்த அதே நான்கு வைஷ்ணவர்களும் அவரிடம் திரும்பி வந்து, "வாரும்! பிரபு உம்மை உள்ளே கூட்டிக் கொண்டு வர உத்தரவு அளித்து விட்டார்" என்று கூறினார்கள்.

வாயிலைத் தாண்டி உள்ளே சென்ற கோபகுமார் அங்கே நின்றிருந்த கதவின் காவலனைக் கண்டதும், அவனது பிரகாசமான உருவத்தைக் கண்டதும் இது தான் நாராயணராக இருக்க வேண்டும் என்று தப்பாக ஊகித்து அவரது கால்களில் விழுந்து நமஸ்காரம் செய்ய ஆரம்பித்தார். இதைக் கண்ட கதவின் காவலனோ தன் கரங்களால் காதைப் பொத்திக் கொண்டார். பின்னர் அவர்கள் உள்ளேயுள்ள ஒரு அறையினுள் புகுந்தனர். அங்கே இலட்சுமி தேவியுடன் நாரதர் மற்றும் பற்பல ரிஷிகளும் பக்கத்தில் அமர்ந்திருக்க, ஸ்ரீமன் நாராயணர் தன் ஒரு முழங்கையைத் தலைக்குக் கொடுத்தவாறு ஒரு பக்கம் சரிந்து படுத்திருந்தார். அவர் வெற்றிலையையும் பாக்கையும் சுவைத்தவாறு மிகவும் அழகாகத் தோன்றினார்.

கோபகுமார் அடக்கத்துடன் தன் நமஸ்காரங்களைச் செலுத்தினார். பதிலாக ஸ்ரீமன் நாராயணர் தன் கரத்தை உயர்த்தி ஆசீர்வாதம் அளித்தவாறு, "நீ எனக்கு அளவில்லாத கஷ்டங்களைக் கொடுத்தள்ளாய். இலட்சக் கணக்கான வருடங்களாக நான் உனக்காகக் காத்துக் கொண்டிருந்தேன். "எப்போது வருவான்" என்று எண்ணிக் கொண்டேயிருந்தேன். நீ என் பெயரை ஒரே ஒரு தடவை உச்சரித்தோ, இல்லை சத்சங்கத்தில் சேர்ந்தோ, இல்லை பிருந்தாவனத்துக்குச் சென்றோ, இல்லை ஏதாவது ஒரு புனிதத் தலத்துக்கு சென்றோயிருந்தால் நான் அதை ஒரு சாக்குப் போக்காகக் காட்டி உன்னை இங்கே கொண்டு வந்திருப்பேன். ஆனால் இலட்சக் கணக்கான வருடங்கள் தான் சென்றன. இது வரைக்கும் உன்னை இங்கு வைகுந்தத்துக்கு வர எந்த விதமான சாக்குப் போக்குமே கிடைக்கவில்லை. இதனால் நான் மிகவும் வருத்தப்பட்டேன். மேலும் உனக்கு என்னைச் சந்திப்பதற்கு எந்த விதமான விருப்பமும் இல்லை. நீ ஏதாவது சத் சங்கத்தில் சேர்ந்திருக்கலாம், இல்லை பிருந்தாவனம் போன்ற புனித தலத்துக்கு யாத்திரை செய்திருக்கலாம், இல்லை ஏதாவது முனிவருக்காவது சேவை செய்திருக்கலாம். நீ எதுவுமே செய்யவில்லை! நீ ஒரு கோயிலைச் சுற்றி பரிக்கிரமம் செய்திருந்தால் கூட போதும். ஒரு புறா இதைத் தான் செய்தது. நான் அதற்கு என் வைகுந்தத்தில் இடம் அளித்துள்ளேன். இதே போல் நான் உனக்கும் வழங்கியிருப்பேன். ஒரு மரக்கிளையில் அந்தப் புறா உட்கார்ந்திருந்த போது ஒரு வேடன் அதை அம்பால் எய்தான். அந்தப் புறா கீழேத் தரையில் விழுந்தது. ஆனால் தன் காயங்களுடன் வலியில் ஒன்றுமே

தெரியாமல் அது பக்கத்திலிருந்த கோயிலைச் சுற்றிச் சுற்றிப் பின்னர் இறந்தது. அதில் கிடைத்த புண்ணியத்தால் பின் அது ஒரு மனிதப் பிறவியை எடுத்து, சுயமாகவே சத்சங்கத்தில் சேர்ந்தான். அவனது அடுத்த பிறவியில் என்னிடமே வந்தான்.

"ஒரு சமயம் ஒரு எலி, கோயில் ஒன்றினுள் நுழைந்து அங்குள்ள நெய்யைக் குடிக்க முயன்றது. அங்கேயிருந்த நெய் விளக்கு அணையும் தருவாயில் விட்டு விட்டு எரிந்து கொண்டிருந்தது. அதிலிருந்த நெய்யை அந்த எலி குடிக்க ஆசைப் பட்டு, தன் வாயை வைத்துக் குடிக்க ஆரம்பித்தது. அதன் அசைவால், அந்த விளக்கு திரும்பவும் பிரகாசமாக எரிய ஆரம்பித்தது. இதைக் கண்ட எலி பயந்து ஓட ஆரம்பித்தது. எலியின் இந்தச் செயலால் விக்கிரகத்துக்கு விளக்குக் காண்பித்த புண்ணியத்தை அது அடைந்தது. தன் அடுத்த பிறவியில் ஒரு மனிதனாகப் பிறந்து பின்னர் வைஷ்ணவர்களின் சேர்க்கையால் அது வைகுந்தந்தைப் பெற்றது. ஆனால் நீயோ அவ்வாறு கூட எதுவுமே செய்யவில்லை. எப்போதும் நீ என்னை எதிர்த்தே வாழ்ந்தாய். நீ கெட்டவர்களுடன் சேர்ந்து எப்போதும் லௌகீய விஷயங்களை மட்டுமே பேசிக் கொண்டிருந்தாய். எப்போதும் இந்திரிய சுகங்களிலேயே நாட்டமுடன் இருந்தாய். என்னிடம் வந்து சேர்வதற்காக நீ எதுவுமே செய்யவில்லை. பின்னர் நான் தான், "இவனை எப்படியும் தடுத்தாட் கொள்ள வேண்டும்" என்று எண்ணி நானே உன் குருவாக வந்தேன். அது வேறு யாருமல்ல! நானே தான்! வந்து உனக்குக் கோபால மந்திரத்தை அளித்தேன். பின்னர் அவ்வப்போது இடையிடையில் தோன்றி உன் மந்திரத்தையும் சாதகத்தையும் உறுதிப் படுத்தினேன்.

"இப்படிப் பட்ட குருவை எவனும் ஒன்றிரண்டு ஜென்மங்களில் அடைய முடியாது. ஆயிரக் கணக்கானப் பிறவிகளுக்குப் பின்னர் தான் ஒருவன் என்னிடம் கொண்டு சேர்க்கும் ஒரு குருவை அடைய முடியும். நான் அநேக உருவங்களில் தோன்றி உனக்கு ஆத்ம பலமும் நம்பிக்கை யும் பெற வைத்தேன். பஜனையின் ஆழ்ந்த உள் ரகசியங் களையும் உபதேசித்தேன். இப்போது நாம் கடைசியாகச் சேர்ந்ததைத் பற்றி மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். நீ வேறு எங்கும் இனி செல்லாமல் இங்கேயே இரு" என்று பகவான் கோபகுமாரிடம் கூறினார்.

அதன் பின் கோபகுமார் தொடர்ந்து வைகுந்தத்தில் வசிக்க ஆரம்பித்தார். ஒரு நாள் சாயங்கால நேரம், கோபகுமாரைத் தவிர அனைவரும் ஸ்ரீமன் நாராயணரிடம் விடை பெற்றுக் கொண்டு தத்தம் இருப்பிடங்களுக்குச் சென்று விட்டதை இலட்சு தேவி பார்த்தாள். இலட்சுமி தேவி மட்டுமே ஸ்ரீமன் நாராயணருக்கு உணவு, மற்றும் அருந்தும் பதார்த்தங்கள் அனைத்தையும் நேரே அளிப்பதும், கால்களைப் பிடித்து விடுவதும் போன்ற நேரடி சேவைகளைச் செய்வதால், அவள் விஷ்வ கர்மா போன்ற மற்றவர்களிடம் ஜாடை

செய்து கோபகுமாரை வெளியே இழுக்கத் தூண்டினாள். உடனே அவர்கள் கோபகுமாரிடம், "வாரும் போகலாம். நேரம் ஆகிவிட்டது. எல்லோரும் கிளம்பி விட்டார்கள். நீர் கொஞ்சம் ஓய்வு எடும். பார்த்தால் மிகவும் களைத்திருப்பதாகத் தெரிகிறது. எனவே எங்களுடன் வந்து கொஞ்சம் ஓய்வு எடும்" என்று கூறி அழைத்தனர். ஆனால் அவர்கள் எப்படி அழைத்தும் கோபகுமார் அங்கிருந்து நகர்வதாகத் தெரிய வில்லை. எனவே அவர்கள் அன்புடன் கோபகுமாரின் கையைப் பற்றி இழுத்துக் கொண்டு வெளியே வந்தனர். இதனால் கோபகுமார் மிகவும் கவலை அடைந்தார்.

இன்னொரு நாள் ஸ்ரீமன் நாராயணர் கோபகுமாரை அன்புடன், "வா! வந்து எனக்குக் கொஞ்சம் விசிறி விடு!" என்று கூப்பிட்டார். இதைக் கேட்ட கோபகுமார் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். ஆனால் அவருக்கு உண்மையில் என்ன ஆசை? "நான் அவருடன் புல்லாங்குழல் வாசிக்க வேண்டும். கட்டிப் பிடிக்க வேண்டும். அவர் வாயிலிருந்து பிரசாதத்தை உண்ண வேண்டும். பசுக்களை எல்லாம் கூட்டிக் கொண்டு அவருடன் மேய்க்க வேண்டும். பின் அவருடன் வீட்டுக்குச் சென்று அங்கே கூடவே உட்கார்ந்து அவரது அம்மா அளிக்கும் ருசியான பதார்த்தங்களைச் சாப்பிட வேண்டும். சுயமான நெருங்கிய சினேகம் வேண்டும். ஆனால் அவர் இங்கு அவ்வாறு பழகுவார் என்பது சந்தேகமாக உள்ளது. இங்கே நான் கட்டிப் போட்டிருப்பதைப் போல் உணர்கிறேன். நான் அவருக்கு வந்தனம் மட்டுமே செய்ய முடிகிறது ..." இவ்வாறு நினைத்துக் கொண்டு, கோபகுமார் இன்னமும் அதிகமாக வருத்தப் பட்டார்.

பின்னர் ஒரு நாள் நாரதர் கோபக்குமாரை நெருங்கி, "உன் முகம் ஏன் இப்படி எப்போதும் வாடியுள்ளது? இங்கே நீ மகிழ்ச்சியாய் இல்லை என்பதைக் காண்கிறேன்" என்று கூறினார். கோபகுமார் பதிலளிக்கும் முன்பே எல்லாவற்றையும் நாரதர் அறிந்தும் கொண்டார். பக்கத்தில் இலட்சுமி தேவியிருந்ததால் அவரால் மனம் விட்டுப் பேச முடியாத நிலையில் கோபகுமாரைக் கூட்டிக் கொண்டு ஒரு தனியிடமடைந்தார். "ஓ! உன் உள் இதயத்தில் ஆழ்ந்த ஆசை ஏதாவது உள்ளதா? இங்கே பகவானிடம் நீ எதிர் பார்க்கும் உறவு வைக்க முடியாது. நீயோ சாக்கிய பாவத்தை (தோழனாக) விரும்புகிறாய். இங்கே பகவான் உன்னை முத்தமிடவோ, தழுவி அரவணைக்கவோ மாட்டார். நீ அவர் சாப்பிடும் அதே தட்டில் சேர்ந்து சாப்பிடுவதையோ, அவருடன் சேர்ந்து ஒரே படுக்கையில் தூங்குவதையோ இங்கே நினைத்துக் கூடப் பார்க்க முடியாது. அன்புப் பரிமாற்றங்கள் நிறைந்த சாக்கிய பாவத்தை நீ விரும்புகிறாய். இப்படிப்பட்ட ஆசைகளே உன்னிடம் மிகவும் ஆழமாக பலமுடன் நீண்ட காலமாகக் குடி கொண்டுள்ளன.

"இங்கே, வைகுந்தத்தில் உன் ஆசைகளை ஒருபோதும்

திருப்திப்படுத்த முடியாது. ஆனால் நீ இதனால் மனம் குன்றாதே. ஏனென்றால் நீ ஒன்றைக் கண்டிப்பாக அறிந்து கொள்ள வேண்டும்: நாராயணரே உன் வணக்கத்துக்குள்ள பகவான். அவரும், நீ சாக்கிய பாவத்தில் அடைய விரும்பும் கோபாலும் உண்மையில் ஒருவரே! அவர்கள் வித்தியாசமானவர்கள் அல்ல. உன் உள் மனதில் நீ அவரிடம் சாக்கிய பாவத்தால் உறவு கொண்டு விளையாட வேண்டும் என்று நீ விரும்புகிறாய். ஆனால் அந்த ஆசையை நீ இங்குத் திருப்திப் படுத்த முடியாது. அதற்கு நீ மேலே எங்கே செல்ல வேண்டும் என்பதை உனக்குக் கூறுகிறேன்" என்று நாரதர் கோபகுமாருக்கு அறிவுரை அளித்தார்.

# அத்தியாயம் - 3

வைகுந்தத்தை அடைய ஒருவன் எப்படிப்பட்ட சாதகங்களைச் செய்ய வேண்டும் என்பதை ஸ்ரீமன் நாராயணருடன் நான்கு கைகள் கொண்டு நித்தியமாக வைகுந்தத்தில் வாழும் சக பக்தர்கள் கோபகுமாரிடம் கூறினார்கள்:

*மன்யாமஹே கீர்த்தனம் ஏவ சட்டமம்*
*லோகாத்மகைக ஸ்வ ஹ்ரிடி சமரத் ஸ்ம்ருதேக*
*வாச்சி ஸ்வ யுக்தே மனஸி ஸ்ருதௌ ததா*
*திவ்யாத் பரான் அபி அபகுர்வத் ஆத்மிய வத்*

"கீர்த்தனம் ஒருவனது குரல், காதுகள், மற்றும் மனத்தையும் சேர்த்துப் பயன் படுத்துவதாலும், அதைக் கேட்கும் மற்றவர்களையும் அதில் ஈடுபடுத்துவதாலும், எப்போதும் அலை பாய்ந்து ஓடுகின்ற மனத்தால் பகவானைத் தியானிக்க முயற்சி செய்வதை விடவும் கீர்த்தனை செய்வதே மிகவும் சிறந்ததாகும்."

வைகுந்தத்தின் மேல் பாகத்தில் இருக்கும் பிருந்தாவனத்தை அடைவதையும் சேர்த்து, வைகுந்தத்தை அடைவதற்கு எத்தனையோ விதமான சாதகங்கள் உள்ளன. மேலெழுந்த வாரியாகப் பார்த்தால், வைகுந்தத்தை அடைய நிறைய வழிகள் உள்ளன என்று பொதுவாக ஒருவர் கூறலாம். அவை: ஒன்பது வகைகளான பக்திகள், ஐந்து விதங்களான பக்திகள், அறுபத்து நான்கு வகைகளான பக்திகள் - இப்படிப் பற்பல உள்ளன. அவை எல்லாவற்றிலும் மேலானவை "சிரவணம், கீர்த்தனம், ஸ்மரணம்" என்ற மூன்றுமேயாகும். இவை மூன்றிலும் கீர்த்தனமும் ஸ்மரணமும் மிகவும் முதன்மையானவை. ஸ்மரணம் என்றால் என்ன? "உனது நாக்கு பகவானின் திரு நாமங்களை ஜெபித்துக் கொண்டிருக்கும் போது உன் மனமோ

பகவானின் திருவிளையாடல்களைப் பற்றி நினைத்துக் கொண்டிருக்க வேண்டும்," என்று ஸ்ரீல ரூபகோஸ்வாமி கூறுகிறார்.

நம் சம்பிரதாயத்தில், மற்ற எல்லா சாதக முறைகளையும் ஒதுக்கி விட்டு நாம் வெறுமனே தியானத்தில் மட்டுமே மூழ்கியிருக்க வேண்டும் என்று பலர் கருதுகிறார்கள். முக்கியமாக, ராகானுக பக்தியில் முன்னேற வேண்டுமானால், ஒருவன் பகவானின் எட்டு நேர லீலைகளான "அஷ்ட காலிய லீலை" களில் சிந்தனையை எப்போதும் மூழ்க வைக்க வேண்டும். ஆனால் இங்கே சனாதன கோஸ்வாமி, கோபகுமாருக்கு ஸ்ரீ நாராயணரின் சக வைகுந்த வாசிகள் மூலம் சங்கீர்த்தனமே மிகவும் முக்கியமான சாதகம் என்று கூறுகிறார். ஏன்? மனம் எப்போதும் அலை பாய்ந்து கொண்டேயிருக்கும். அது ஒரு இடத்தில் நிலையாக நிற்பதில்லை. ஒருவன் உண்மையிலேயே ஸ்ரீ கிருஷ்ணரின் லீலைகளைத் தன் மனத்தில் ஆழ்ந்து தியானித்தால் அது மிக மிக நன்று. ஆனால் மனமோ, அனேகமாக எந்த விதமான சூழ் நிலையிலும் அமைதியாக இருப்பதில்லை. எப்போதும் அலைந்து கொண்டேயிருக்கும். எனவே தான் ஒரே ஒரு வழி தான் நமக்கு உள்ளது:

*ஏவம் விருத்தஹ ஸ்வ ப்ரிய நாம கீர்த்யா*
*ஜாதானுராகோ த்ருத சித்த உச்சைஹி -*
*(ஸ்ரீமத் பாகவதம் 11. 2. 40)*

உருகிய மனத்துடன் ஒருவன் பகவானின் நாமங்களையும் அவரது ரூபம், குணங்கள் மற்றும் லீலைகளையும் பற்றிப் பாட வேண்டும். ஒருவன் இவ்வாறு பகவானைத் தனக்குப் பிடித்தமான நாமங்களுடன் ஜெபிக்கும் போது, நாவிலிருந்து அந்த நாமம் மனத்திற்கும், அங்கிருந்து பின்னர் தன் இதயத்தினுள்ளும் புகுந்து அனைத்து இந்திரியங்களையும் அது சாந்தப் படுத்தி விடும். இதைத் தவிர வேறு எந்த விதமான முறைகளாலும் அலைபாயும் மனத்தை ஒருவன் கட்டுப் படுத்த முயன்றால் அது பயனின்றியே போய் விடும். மனத்தை ஒருமைப் படுத்த கீர்த்தனம் மிக மிக அவசியம். குறிப்பாக இந்தக் கலியுகத்திற்கு நாம சங்கீர்த்தனத்தையே "யுக" தர்மமாக ஸ்ரீ சைதன்ய மகாபிரபு வழங்கியுள்ளார்.

*ஹரேர் நாம ஹரேர் நாம*
*ஹரேர் நாமய்வ கேவலம்*
*கலௌ நாஸ்தி ஏவ நாஸ்தி ஏவ*
*நாஸ்தி ஏவ கதிர் அன்யதா*
*-- ( பிருகன் நாரதீய புராணம் 38. 126)*

"கலியுகத்தில் ஹரி கீர்த்தனம் மட்டுமே ஒருவனை முக்தியடைய வைக்கும். இதைத் தவிர வேறு எந்த வழியுமே கிடையாது."

நாம சங்கீர்த்தனத்தால் மட்டுமே அலை பாயும் மனத்தை ஒரு நிலையில் கொண்டு வர முடியும். எனவே தான் நாம சங்கீர்த்தனம் எல்லாவற்றிலும் சிறந்தது. ஒருவன் தியானம் செய்யும் போது அது கீர்த்தனத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தால் மிகவும் பயனுள்ள தாகும். நாவிலிருந்து தொடங்கும் நாம சங்கீர்த்தனம் எல்லா இந்திரியங் களையும் மனத்தையும் கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வருகிறது. இல்லாவிட்டால் மனம், ஓட்டுனர் இல்லாத குதிரையைப் போல் ஆகிவிடும். கடிவாளமும் ஓட்டுனரும் இல்லாத குதிரை என்ன செய்யும்? தன் ஆசை எங்கெங்கெல்லாம் இழுக்கிறதோ அங்கெல்லாம் ஓடும். ஆனால் கீர்த்தனம் என்ற ஓட்டுனர் மனமென்ற குதிரையின் மேல் ஏறி கடிவாளங்களைப் பிடிக்கும் போது, மனம் கண்டபடி ஓடாமல் ஓட்டுனரின் கட்டளைக்குப் படிந்து அதன் பிரகாரம் நடக்கிறது. எனவே ஸ்ரீமன் நாராயணருடன் வசிக்கும் நான்கு கைகள் படைத்த வைகுந்த வாசிகள் கூறிய உபதேசங்கள் ஒருவனுக்குப் பக்தியை வளர்த்து, பின்னர் பிரஜா வரைக்கும் செல்ல உதவும். இந்தக் காரணத்தினால் தான் கோபக்குமாரின் குரு இந்த மந்திரத்தை ஜெபிக்கக் கொடுத்தார்.

*ஸ்ரீ கிருஷ்ண கோபால் ஹரே முகுந்தா*
*கோவிந்த ஹே நந்த கிஷோர கிருஷ்ணா*
*ஹா ஸ்ரீ யசோதா தனய பிரஸீதா*
*ஸ்ரீ வல்லபி ஜீவன ராதிகே ஷா --- (பிருகத் பாகவத். 2.4.7)*

மேலும், ஒருவன் வெறுமனே இந்தக் கோபால மந்திரத்தை மட்டும் ஜெபித்துக் கொண்டு கீர்த்தனம் எதுவும் செய்யாமலிருந்தால் அவனால் கோலோக பிரஜாவில் நுழைய முடியாது என்றும் நாம் கேட்டிருக்கிறோம். சத்திய யுகத்தில் கோபால மந்திரத்தை மட்டும் தொடர்ந்து ஜெபித்து, பின்னர் ஸ்ரீ ராமரைச் சந்தித்த பின்னர் அறுபதாயிரம் மக ரிஷிகளும் கோபியர்களாக மறு பிறப்பில் பிறந்ததாகவும் அறிகிறோம். இதைக் காணும் எவரும், "அப்படி யென்றால் எந்த விதத்தில் கோபால மந்திரம் குறைந்தது? காம காயத்ரி மந்திரம் உண்மையில் குறைந்ததா? அது ஒருவனைக் கோலோகத் துக்குக் கொண்டு செல்லாதா? கோபால மந்திரமும் காம காயத்ரி மந்திரமும் பரிபூரணமான மந்திரங்கள். எவனொருவன் அவற்றை ஜெபித்து சாதகம் புரிந்தாலும் அவை அவனை கோலோகத்துக்குச் செல்ல வைக்கும்!" என்று கூறுவார்கள்.

நாம் இதை எவ்வாறு சமரசப் படுத்துவது? இதை சமரசப் படுத்துவது மிகவும் கடினம். ஏனென்றால் நம் சித்தாந்தத்தில் ஏதோ ஒரு கருத்து மாறுபாடு உள்ளது போல் தெரிகிறது. சிலர் நாம சங்கீர்த்தனம் நம்மைக் கோலோகத்துக்குக் கொண்டு செல்லும் என்றும், இன்னும் சிலர், கோபால மந்திரத்தை ஜெபித்து ஏராளமானவர்கள் கோலோக பிரஜாவுக்குச் சென்றுள்ளனர் என்றும் எழுதியுள்ளனர். எனவே நாம்

இதை எவ்வாறு சமரசம் செய்வது?

இது மிகவும் எளிது. பூரணம் எங்கே கிடைக்கிறது? சாதனா எங்கே கடைப்பிடிக்கப் படுகிறது? இந்தப் பூவுலகிலும் மற்றும் தண்டகாரண்யாவிலுள்ள ரிஷிக்களும் கோபால மந்திரத்தை ஜெபித்து சாதானாவை மேற்கொண்டனர். அந்த மந்திரத்தால் அவர்கள் சம்பந்த ஞானத்தைப் பெற்று அதன் பின் கடைசியாக ஸ்தாயி-பாவா என்ற நிரந்தர பக்தி பாவத்தைப் பெற்று, பின்னர் தங்கள் தனிப்பட்ட உள் சுபாவத்தின் பிரகாரம் அவர்கள் பூரணம் அடைந்தனர். அவர்கள் இந்த உலகத்தின் எல்லையை அடைந்து அதற்கும் மேலாகச் செல்லத் தகுதி பெற்றனர். பின்னர் யோக மாயையின் அருளினால் அந்தப் பூரண ஜீவன்கள் ஸ்ரீ கிருஷ்ணர் பூலோகத்தில் லீலைகள் புரிந்த போது கோபியர்களின் வயிற்றில் பிறந்தார்கள். அவ்வாறு அவர்கள் கோபியர்களின் வயிற்றில் பிறவி எடுத்த பின்னரே, ஸ்ரீ கிருஷ்ணருக்கு அவர்கள் சகாக்களாகவும், தாய் தந்தை போன்ற பாதுகாவலர் களாகவும், கோபியர்களாவும் ஆனார்கள். ஆனால் அவர்கள் இவ்வாறு கோகுலத்தில் பிறந்து அதன் பின்னரே தங்கள் சொரூபத்தை வளர்க்க முடிந்தது என்பதைக் கவனமாக உணர வேண்டும்.

அவர்கள் அப்படிப் பிறக்கும் போது, மந்திரத்தை ஜெபிக்க வேண்டிய அவசியம் இல்லை. பதிலாக அவர்கள் ஸ்ரீ கிருஷ்ணரின் லீலைகளைக் கேட்டும் ஜெபித்தும் மற்றும் ஸ்ரீ கோபாலரிடமும் அவரது நித்திய கோபியர்களுடனும் சகாக்களுடனுடம் நேரடியாகத் தொடர்பு கொண்டு, ஸ்ரீ கிருஷ்ணரின் நித்திய குழாமுடன் சேர்ந்து, பின்னர் கோலோக பிருந்தாவனத்துக்குச் செல்லுகின்றனர். எனவே, ஒருவன் நேரடியாகக் கோலோக பிருந்தாவனத்துக்குச் செல்வதில்லை. இப்போது எல்லாம் எளிதாக விளங்கும்: முதலில் சொரூப சித்தி. அதன் பின் பூத உடலை விடும் போது வஸ்து சித்தி. மந்திரம் சாதானா புரிவதற்கு மட்டுமே உபயோகப்படுகிறது. பின்னர் பரிபூரண நிலையை அடைந்த நிலையில் அது தேவையில்லை.

எனவே கோபால மந்திரம் ஒருவனைக் கோலோக பிரஜா வுக்குக் கொண்டு செல்லும் என்று சொல்வதும் சரியே. அது நம்மை அதன் வாயில் வரையிலும் கொண்டு செல்லும். அதன் பின்னர் அதன் செயல்கள் அனைத்தும் நின்று விடும்! எனவே மந்திரத்தைப் பற்றிக் கூறப்பட்ட இரண்டு கருத்துக்களும் சரியே. ஆனால் கோபால மந்திரமும் காம காயத்ரி மந்திரமுமில்லாமல் வெறும் நாம சங்கீர்த் தனத்தால் மட்டும் நமது சாதனா நிறைவு பெறுமா? இல்லை! ஏனென்றால் நாம சங்கீர்த்தனத்தை மட்டும் செய்தால் நம்மால் ஸ்ரீ கிருஷ்ணரின் சுத்த நாமத்தை உச்சரிக்க முடியாமல் போகிறது. மந்திரத்தால் நமக்கு முதலாவதாக சம்பந்த ஞானம் வருகிறது. அதன் பின் நாம் ஒரு குறிப்பிட்ட பக்தி பாவத்தை உணர்கிறோம். பின்,

கடைசியில் நம் நித்திய சொரூபத்தை அறிகிறோம். அதன் பின் நாம-சங்கீர்த்தனத்தில் மிகவும் ஆழமாக மூழ்கும் போது எல்லாம் பரிபூரணமாகிறது.

உதாரணமாக நாம் புல் வெட்டுகிறோம் என்று வைத்துக் கொள்வோம். சிலர், "நீ தங்கத்தால் ஆன கத்தியால் வெட்டு" என்பார்கள். நாம் உண்மையிலேயே தங்கத்தால் ஆன கத்தியை உபயோகிப்போமா? இல்லை! வெறும் இரும்பால் ஆன கத்தியே அதற்குப் பொருந்தும். அதே போல் தான் நாம் மாயையால் கட்டுண்ட ஜீவன்களாக இருப்பதால் கோபால மந்திரத்தையும் காயத்ரி மந்திரத்தையும் ஜெபிக்க வேண்டியது அவசியமாகிறது. வெவ்வேறு நிலைகளில் வெவ்வேறு விதங்களானவைகள் தேவைப்படுகின்றன. ஆனால் சாதனா நிலை, பரிபூரண நிலை இப்படி அனைத்திலும் நாம சங்கீர்த்தனமே சிறப்பானது என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும். கோபால மந்திரம் சாதனா நிலையில் மட்டுமே உபயோகமாகும். பரிபூரணமடைந்த நிலையில் அது உபயோகமில்லை. பரிபூரண நிலையை அடைந்த ஜீவன்கள் அதை ஜெபிப்பதில்லை. ஏனென்றால் அதன் வேலை முடிந்து விட்டது. நாம் இதை மிக நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும்: நாம சங்கீர்த்தனம் மாயையின் பிடியில் இருக்கும் போது தேவை. ஆனால் அதன் கூடவே நாம் கோபால மந்திரம், மகா பிரபுவின் மந்திரம் (கௌர காயத்ரி) மற்றும் குரு நமக்கு வழங்கிய மற்ற மந்திரங்களையும் ஜெபிக்க வேண்டும். இந்த மந்திரங்களின் மகிமை என்னவென்றால், நாம் இதை ஜெபிக்கும் போது அது நம் சம்பந்த ஞானத்தை வளர வைத்து, இந்திரிய சுகங்களிலுள்ள நாட்டங்களை அருக்கி அழித்து விடும். இவ்வாறு ஒருவன் ஒரு வருடமோ, இல்லை ஆறு மாதங்களோ தொடர்ந்து தவறாமல் ஜெபிக்கும் போது அது நிச்சயமாகப் பலனைக் கொடுக்கும்.

அவ்வாறு பலன் கிடைக்கவில்லையென்றால் அங்கே ஏதோ குறைகள் உள்ளன என்று அர்த்தம். ஒரு வேளை அந்த மந்திர விதைக்குச் சக்தியில்லாமல் இருக்கலாம். காரணம் அதைக் கொடுத்த குரு சுத்தமான குருவாக இல்லாமலிருக்கலாம். இல்லை நாம் அதை நம் இதயத்திலிருந்து ஜெபிக்காமலோ அல்லது ஜெபிப்பது போல் ஏமாற்றிக் கொண்டோ இருக்கலாம். நாம் நம் இதயத்தை முழுவதுமாகக் கொடுத்து ஆழ்ந்த நம்பிக்கையுடனும் தீர்க்கமுடனும் மந்திரத்தை ஜெபிக்க வேண்டும்.

*கிருஷ்ணஸ்ய நானா வித கீர்த்தனேசு*
*தன் நாம சங்கீர்த்தனம் ஏவ முக்யம்*
*தத் பிரேம சம்பஜ் ஜனனே ஸ்வயம் த்ராக்*
*சக்தம் ததஹ ஷிரேஷ்டதமம் மதம் தத்*

*– (பிருகத். பாகவத் - 2. 3. 158)*

"எல்லா விதமான கிருஷ்ண கீர்த்தனைகளிலும், அவரது முக்கிய நாமங்களால் ஆன கீர்த்தனையே மிகவும் உத்தமமானது. அது எல்லாச் சொத்துக்களிலும் மேலானதான சுத்த பக்தியை வெகு சீக்கிரத்திலேயே அளிக்க வல்லதால் அதுவே எல்லாவற்றிலும் மிகச் சிறந்தது."

கிருஷ்ண கீர்த்தனைகளில் பல விதங்கள் உள்ளன. சில அவரது குணங்களைப் பற்றிப் பாடுவது. சில அவரது ரூபங்களைப் பற்றிப் பாடுவது. இன்னும் சில அவரது திருவிளையாடல்களைப் புகழ்ந்து பாடுவது. ஆனால் இவை எல்லாவற்றையும் விடவும், ஸ்ரீ கிருஷ்ணரின் நாமங்களால் ஆன கீர்த்தனைகளே மிகவும் சிறந்தவை. நான் இப்போது, "இங்கே வா" என்று கூப்பிட்டால் யார் வருவார்கள்? நிறைய பேர்கள் வரலாம். நான் அந்த நபரின் குணங்களைக் குறிப்பாகக் கூறி கூப்பிட்டாலும் கூட நிறைய பேர்கள் வரலாம். ஆனால் நான் அந்த நபரைப் பெயரால் கூப்பிட்டால் உடனே அந்த நபர் மட்டுமே வருவார். இதேபோல், பகவானின் கல்யாண குணங்கள், மகத்தான ரூபங்கள், அவரது லீலைகள் அனைத்தையும் பற்றி ஏராளமான கீர்த்தனைகள் இருந்தாலும், நாம சங்கீர்த்தனத்தால் பாடுவதே மிகச் சிறந்தது. நாம சங்கீர்த்தனத்தில் அவரது கல்யாண குணங்கள், ரூபங்கள் மற்றும் தித்திக்கும் திருவிளையாடல்கள் அனைத்துமே அடங்கப் பட்டுள்ளன. இவ்வாறு நாம், "ஹே கோவிந்தா! , ஹே கோபி நாதா! ஹே மதன மோகனா!" என்று கீர்த்தனையில் முழுக்கவும் அவரது நாமங்களாகப் பாட வேண்டும். மேலும் அந்தப் புனித நாமங்களிலும் ஸ்ரீ கிருஷ்ணர் கோபியர்களிடம் கொண்டுள்ள உறவுகளைப் பற்றியுள்ள நாமங்கள் எல்லாவற்றை விடவும் மிகச் சிறந்தவை. ஒருவன் சீக்கிரமாக ஸ்ரீ கிருஷ்ணரின் தாமரைப் பாதங்களை அடைந்து பிரஜ பிரேமையைப் பெற வேண்டுமானால், அவனுக்கு நாம சங்கீர்த்தனமே மிகவும் உயர்ந்ததும் மிகவும் சக்தியுள்ள சாதகமாகும். இதுவே ஸ்ரீல சனாதன கோஸ்வாமியின் முடிவான கருத்துமாகும். ஏனென்றால் நாம் நாம சங்கீர்த்தனத்தை மிகவும் சிரத்தையுடன் பாடும் போது வெகு சீக்கிரமே கிருஷ்ணப் பிரேமை தோன்றுகிறது.

*நாம சங்கீர்த்தனம் புரோக்தம்*
*கிருஷ்ணஸ்ய பிரேம சம்பதி*
*பலிஷ்தம் சாதனம் சிரேஷ்தம்*
*பரமா கர்ஷ மந்த்ர வத்* - *(பிருகத் பாகவத் 2. 3.164)*

"நாம சங்கீர்த்தனமே எல்லாவற்றிலும் மிகச் சிறந்தது என்று கூறுகிறார்கள். அதுவே கிருஷ்ணப் பிரேமை என்ற பொக்கிஷத்தை அடைய வழி. ஏனென்றால் அந்த மந்திரம் பிரம்மாண்டமான காந்தம் போல் ஸ்ரீ கிருஷ்ணரை சாதகனிடம் இழுக்கிறது."

எனவே தான் கோபகுமாருக்கு அவரது குரு திரும்பவும் பூலோகத்துக்குத் திரும்பிப் போகக் கூறி அங்கே கீர்த்தனை செய்யும் படி உபதேசித்து, அவருக்கு ஜெபிப்பதற்கு மந்திரத்தையும் வழங்கினார்:

*ஸ்ரீ கிருஷ்ண கோபால ஹரே முகுந்தா*
*கோவிந்த ஹே நந்த கிஷோர கிருஷ்ணா*
*ஹா ஸ்ரீ யசோதா தனய பிரசீதா*
*ஸ்ரீ வல்லபீ ஜீவன ராதி கேஷா --(பிருகத் பாகவத் 2. 4. 7)*

இங்கே நமக்கு ஒரு சந்தேகம் வருகிறது. ஸ்ரீ சனாதன கோஸ்வாமியும் ஸ்ரீ சைதன்ய மகாபிரபுவும் சமீப காலத்தில் தோன்றியவர்கள். அந்த சமயம் மகாமந்திரத்தைப் பற்றிய பிரச் சாரங்கள் நடந்து கொண்டிருந்தன. மகாபிரபு நவத்வீப்பில் மகாமந்திர பிரச்சாரங்களைத் துவங்கியிருந்தார். அதே சமயம் ஜகன்னாத் பூரியிலும் அது நடந்து கொண்டிருந்தது. ஆனால் பிருகத் பாகவதாம்ருதாவில் ஸ்ரீ சனாதன கோஸ்வாமி மகா மந்திரத்தைப் பற்றி எதுவுமே எழுதவில்லை. பதிலாக அவர் ஸ்ரீ கிருஷ்ணரின் பெயர்கள் அடங்கிய "ஸ்ரீ கிருஷ்ண கோபால ஹரே முகுந்தா" என்ற இன்னொரு மந்திரத்தைக் கொடுத்துள்ளார். அப்படியென்றால் அவருக்கு மகா மந்திரத்தைப் பற்றித் தெரியவில்லை என்று நாம் எண்ணலாமா? அவர் மகா மந்திரத்தைக் கொடுக்காததன் காரணம் என்ன?

மகா மந்திரம் குறிப்பாகக் கலியுகத்துக்காகக் கொடுக்கப் பட்ட விஷேஷமான மந்திரம். ஆனால் பிருகத் பாகவதாம்ருதாவில் வரும் இந்த மந்திரம் எல்லாக் காலங்களுக்கும் உகந்தது. கோபால மந்திரமும் காயத்ரி மந்திரமும் அதே போல் தான். ஆனால் இங்கே மிகவும் முக்கியமான விஷயம் ஒன்று உள்ளது. கோபகுமாருடைய உள் பக்திப் பாவமோ அவர் ஒரு மாடு மேய்க்கும் பாலகன். எனவே அவருக்குக் குறிப்பாக "ஸ்ரீ - யசோதா - தனயா", மற்றும் "நந்த - கிஷோர கிருஷ்ணா" என்று வரும் இந்த மந்திரம் கொடுக்கப் பட்டது. ஸ்ரீ சைதன்ய மகாபிரபுவும் கோஸ்வாமிகளும் மகா மந்திரத்தின் உண்மை யான அர்த்தம் "ஸ்ரீ ராதாவும் ஸ்ரீ கிருஷ்ணாவும்" என்று அறிந்து தான் ஜெபித்தார்கள். ஆனால் சாதாரண மக்கள் இந்த அர்த்தத்தைக் காண மாட்டார்கள். கோஸ்வாமிகளோ, தங்களை முழுமையாகப் பிரஜ ரச பாவத்தில் மூழ்க வைத்து இதயத்தில் கடுமையான விப்ரலம்பா (பிரிவுத் துயர்) பாவத்துடனேயே தான் எப்போதும் மகா மந்திரத்தை ஜெபித்தார்கள். மகா மந்திரத்தின் இந்த அர்த்தத்தை அறிந்த எவருமே "ஸ்ரீ கிருஷ்ண கோபால் ஹரே முகுந்தா" என்ற மந்திரத்தைக் கண்டிப்பாக ஜெபிக்க விரும்ப மாட்டார்கள். ஆனால் கோபகுமார் வெறும் மாடு மேய்க்கும் சிறுவனாக இருந்ததாலும், அவரால் தத்துவங் களைக் கிரகிக்கும் அளவு அறிவு இல்லாததாலும், பிரஜ பிரேமையை

மகா மந்திரத்தில் அவரால் காண முடியாது என்ற காரணத்தாலுமே அவருக்கு மகா மந்திரம் கொடுக்கப் படவில்லை.

ஒரு விதையினுள் அதன் மரத்தையோ செடியையோ நம்மால் நேரடியாகக் காண முடிவதில்லை. ஆனால் அவை அந்த விதையில் உள்ளன. ஒரு நிபுணன் அந்த விதையை மேலும் ஆராய்ந்து, அது எந்த விதமான பலனைக் கொடுக்கும் என்றும் கூடக் கூறி விடுவான். உதாரணமாக இங்கே இரண்டு பாத்திரங்களில் தயிர் இருக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். அவற்றில் எது இயற்கையான சுவையுடன் உள்ளது என்று நீங்கள் எப்படிக் கண்டு பிடிப்பீர்கள்? சீனி சேர்க்கப்பட்ட தயிர் சிறு ஊதா நிறம் கொண்டிருக்கும். அதன் விலையும் ஒரு கிலோவுக்கு வெறும் மூன்று ரூபாய்களே தான் இருக்கும். ஏன்? அவர்கள் தயிரிலிருந்து அதன் பாலாடைக் கட்டியைப் பிரித்து விட்டு மீதியிருக்கும் மலிந்த தயிரில் சிறிது சீனியைச் சேர்த்து அதற்குச் செயற்கையான ருசியைக் கொடுத்துள்ளனர். ஆனால் மற்ற பாத்திரத்தில் உள்ள தயிரோ சுத்தமானதாக, அதன் இயற்கையான சுவையுடனும் இயற்கையான வெள்ளை நிறத்துடனும் இருக்கிறது. அதன் விலை ஒரு கிலோவுக்குப் பத்து ரூபாய் வரை இருக்கும். ஏனென்றால் அது சுத்தமான பாலிலிருந்து எடுக்கப் பட்டுக் கலப்படம் எதுவுமின்றி நெய்யுடன் இருக்கிறது.

இதே போல் தான் கோஸ்வாமிகள், மகா மந்திரத்தில் வரும் பதினாறு நாமங்களையும் ஆராய்ந்து, அதன் அர்த்தங்களைப் பிழிந்து எடுத்து அதை ருசித்தவர்கள். நாம் மகா மந்திரத்தை ஜெபிக்கும் போது, எந்த இறைவனை நினைத்து சேவை புரிய ஆசைப் படுகிறோமோ, அதே இறைவன் நாம் கூப்பிடும் பெயர்களில் நிஜமாகவே துலங்கி விடுவார். உதாரணமாக "ஹரே ராமா" என்ற நாமத்தில் ராமா என்றால் "ராதா ரமண் கிருஷ்ணா" என்றே நாம் அர்த்தம் கொள்வோம். மேலும் "ஹரே" என்றால் ஸ்ரீ கிருஷ்ணரைத் திருடி, குஞ்சாக் காடுகளில் கொண்டு சென்று அவருக்கு அளவில்லாத ஆனந்தங்களைக் கொடுத்து, மகா பிரேம பாவத்துடன் சேவகம் செய்யும் ஸ்ரீமதி ராதிகாவைக் குறிக்கும். நாம் "ஹரே" என்று ஜெபிக்கும் போது ஸ்ரீமதி ராதிகாவையே குறிப்பாக அழைக்கிறோம். எவனொருவன் ஒரு சத்குரு அல்லது ரசிக வைஷ்ணவரிடமிருந்து இந்த விதமான அறிவைப் பெற்று, மகா மந்திரத்தை முழு பாவத்துடன் ஜெபிக்கிறானோ, அவன் தன் நித்ய சொரூபத்தை சீக்கிரமாகவே உணர்ந்து விடுவான். அப்படியில்லாமல் மகா மந்திரத்தைத் தகாத வழியில் ஒருவன் பெற்றால், அது அவனுக்கு "மகா மந்திரத்தின் அர்த்தம் ஸ்ரீ ராதாவோ ஸ்ரீ கிருஷ்ணரோ அல்ல, உண்மையான அர்த்தம் வேறு" என்று தான் நினைக்க வைக்கும்.

எனவே ஸ்ரீ பிருகத் பாகவதாம்ருதாவில் ஸ்ரீல சனாதன கோஸ்வாமி "ஸ்ரீ கிருஷ்ண கோபால் ஹரே முகுந்தா" என்ற மந்திரத்தை, சிலருக்கு இந்த மந்திரம் தேவை என்பதால் அதை வழங்கியுள்ளார். ஆனால் பொதுவாகக் கலியுகத்தில் தோன்றியிருக்கும் ஜீவாத்மாக்களுக்கு மகா மந்திரமே கொடுக்கப் படுகிறது. அந்த மகா மந்திரத்தை சாஸ்திரங்களில் கொடுக்கப் பட்டுள்ள விதி முறைகளுடன் கடுமையாகக் கடைப் பிடித்து எப்போதும் தவறாமல் ஜெபிக்க வேண்டும்.

# அத்தியாயம் - 4

கோபகுமார் வைகுந்த லோகத்துக்கு வந்து சேர்ந்த பின்பும் கூட அவரது இதயத்தில் திருப்தியை அவர் உணரவில்லை. சமீபத்தில் எனக்கும் இதேபோல் பம்பாய் நகரத்தில் அனுபவம் ஒன்று நேர்ந்தது. எங்களை ஒரு மிகப் பெரும் செல்வந்தர் தன் வீட்டில் தங்குவதற்காக அழைத்திருந்தார். மிகவும் ஆடம்பரமான அந்த வீட்டினுள் எனக்கு வழி எதுவுமே காண முடியாமல் திகைத்தேன். பளிங்கிலான தரைகள் மிகவும் அழகாகக் கண்ணாடி போல் பளபளத்தன. இதனால் துரியோதனன் எவ்வாறு யுதிஷ்டிர மகாராஜாவின் மாளிகையினுள் தடுமாறினானோ அதேபோல் நானும் தடுமாறினேன். சைதன்ய மகாபிரபுவும் அவரது  பக்தர்களும் ஒருபோதும் மன்னர்களின் அரண்மனைக்குள் செல்ல மாட்டார்கள். காரணம், உலக சுகங்களில் மூழ்கியிருக்கும் மனிதர்களின் போக ஆசைகள் ஒருவனைக் கெடுத்து விடும். அவர்களுடைய செல்வக் கொழிப்பைப் பார்த்ததும், "ஓ, என்னுடைய வீடும் இப்படி இருக்க வேண்டும்" என்றும், "என்னுடைய ஆஸ்ரமம் இப்படி இருக்க வேண்டும்" என்றும் நாம் எண்ண ஆரம்பித்து விடுவோம். பின், அவ்வாறு ஆசைப்பட்டதைப் பெற இயலாமல், அந்த ஆசை உள்ளே மேன் மேலும் பலமாக வளரும். எனவே நாங்கள் பம்பாயில் அந்த வீட்டில் தங்காமல் அதை விட்டு விட்டு வேறொரு சாதாரண குடும்பத்தினரின் வீட்டில் தங்கினோம்.

பம்பாய் நகரத்தில் எங்களை அழைத்திருந்த அந்த மனிதரையும் விட ஆயிரக்கணக்கான இலட்சங்கள் அதிகமாகச் செல்வம் படைத்த வர்களும் இருக்கிறார்கள். அப்படியென்றால் சுவர்க்க லோகங்களில் எவ்வளவு போகங்கள் இருக்கும் என்பதை எவ்வாறு கூற முடியும்? அவற்றை நம்மால் நினைக்கவே முடியாது. நாம் அங்கே சென்றோ மானால் இந்த உலகத்தைப் பற்றி அறவே மறந்து போய் விடுவோம். எனவே, நாம் வைகுந்தத்துக்குப் போனோமானால் அங்கே என்னவெல்லாம் காண்போம்? அங்கே சுவர்க்க லோகங்களையும் விட

மிகவும் மேலான செல்வங்கள் கொழிக்கும். ஒருவன் வைகுந்த லோகத்துக்குச் சென்று அங்குள்ள செல்வங்களையும் போகங்களையும் ஆனந்தங்களையும் சுகித்தால், பின் அவனுக்கு அங்கிருந்து வெளியே செல்வதற்கு ஒருபோதும் ஆசையே வராது. அங்கே அவ்வளவு தூரம் அழகாக உள்ளது. அங்கே எவருமே வயதாவதோ நோய் வாய்ப்படுவதோ இல்லை. அங்கே பிறப்புமில்லை, இறப்புமில்லை.

ஆனால் சுவர்க்க லோகத்தில் பிறப்பும் இறப்பும் உண்டு. மகர லோகம், ஜன லோகம், தப லோகம் மற்றும் சத்ய லோகம் வரையிலும் பிறப்பும் இறப்பும் உண்டு. ஆனால் வைகுந்த லோகத்தில் அவை கிடையவே கிடையாது. அங்கே எப்போதும் உன்னதமான செல்வக் கொழிப்புடன் புதுமையும் சுத்தமும் நிறைந்து எப்போதும் ஆனந்த மாகவே இருக்கும். அங்கேயுள்ள மண்ணில் கூட சின்மயம் நிறைந்திருக்கும்,

*கல்ப தரவோ த்ருமா பூமிஸ் சிந்தாமணி கண மயீ*
*தோயம் அம்ருதம் கதா கானம் நட்யம் கமனம் அபி*
*(பிரம்ம சம்ஹிதா 5.56)*

அங்கே கல்ப தாரு மரங்கள் உள்ளன. தரையெல்லாம் சிந்தாமணி மயமாக இருக்கும். நீரோ அமிர்தமாக இருக்கும். பேசுவதோ பாடல்களாக இருக்கும். நடப்பதோ நடனமாக இருக்கும். அப்படிப்பட்ட இடமே வைகுந்தமாகும். ஆனால் அப்படிப்பட்ட வைகுந்தத்தில் கோப குமார் திருப்தியாக இல்லை! இதைக் கண்ட நாரத முனிவர் கோபகுமாரிடம், "இது மிகவும் தர்ம சங்கடமான விஷயம்! இங்கே வைகுந்தத்தில் நான் உன் முகம் கவலையால் வாடியிருப்பதை அல்லவா பார்க்கிறேன். இது எப்படி இங்கே நடக்க முடியும்? இங்கே வருபவர் எவருமே கவலையோடு இருப்பதேயில்லை. ஆனால் நான் உன்னைக் கவலையுடையவனாகக் காண்கிறேன். இது என்ன? உனக்கு இங்கே ஏதாவது குறையுள்ளதா? அல்லது வேறு ஏதாவது உன்னைக் கவலைப் பட வைக்கிறதா? அது என்ன?" என்று கேட்டார்.

அந்த மாதிரி கவலையை அங்கே எவரும் உணரவே மாட்டார்கள். ஆனால் ஒரு அசாதாரணமான ஒருவன் மட்டுமே அங்கு கவலையை உணர முடியும். அப்படி அங்கே ஏதாவது காரணத்துக்காக ஒருவன் கவலைப்பட்டால் கூட, அவனால் வைகுந்தத்தில் அதை வேறு யாரிடமும் கூறவோ பகிரவோ முடியாது. மேலும் ஒருவன் மிகப் பெரிய அளவில் கவலைப்பட்டாலும் கூட அதைத் தன் சொந்த தாய், தகப்பன், சகோதரன், சகோதரி இப்படி எவரிடமும் கூற முடியாது. ஆனால் ஒரு சக தோழனிடம் அதைக் கூற முடியும். அவன் ஏதாவது ஒரு வழி முறையைக் கண்டு பிடித்து அந்த முள்ளை எடுத்து விடுவான். அவனால் மட்டுமே உன்னுடைய உணர்ச்சிகளை அறிய முடியும். நாரத

முனிவரால் எல்லா ஜீவன்களின் உள்ளால் பார்க்க முடியும். அவருக்கு அனைத்துமே தெரியும். அவர் தன் கண்களை மூடி, சிறிது தியானத்திலிருந்து, பின்னர் கோபகுமாரின் கவலையின் காரணத்தை அறிந்து மிகவும் ஆனந்தப் பட்டார். ஏன் அவர் இன்னொருவரின் கவலையைக் கண்டு மகிழ்ச்சியடைந்தார்? இதையொட்டி அழகான நடந்த சம்பவம் ஒன்று உள்ளது.

ஸ்ரீ கிருஷ்ணரின் மந்திரியான உத்தவா பிருந்தாவனத்துக்குச் சென்ற போது அங்கே நந்த மகாராஜா கதறிக் கதறி அழுது கொண்டிருந்தார். ஸ்ரீ கிருஷ்ணர் அவர்களது மகத்தான மகன். ஆனால் இப்போது அவர் தன் தந்தையான நந்த பாபாவை விட்டு விட்டுச் சென்று விட்டார். அதனால் நந்த பாபா பெருங் கவலையில் துடித்துக் கொண்டிருந்தார். ஆனால் இதைக் கண்ட உத்தவா என்ன நினைத்தார்? "இன்று நான் பகவானுக்காகக் கதறி அழும் ஒரு உத்தமரின் தரிசனத்தைப் பெறும் பாக்கியத்தை அடைந்தேன்" என்று எண்ணி மகிழ்ச்சியடைந்தார்.

பூலோக வாழ்க்கையில் மாயையில் கட்டுண்ட ஒவ்வொரு ஜீவனும் தங்களுக்காகக் கதறி அழுகிறார்கள். அவர்கள் அழுவதெல்லாம் தங்களுக்காக மட்டுமே! ஒரு குடும்பத்தில் ஒரு சகோதரன் இறந்து போய் விட்டால் அந்தக் குடும்பம் அழுகிறது. ஆனால் அவர்கள் யாருக்காக அழுகிறார்கள்? அந்த சகோதரனுக்காவா, இல்லை தங்களுக்காகவா? நாம் பார்க்கும் போது அவர்கள் அனைவரும் அந்தச் சகோதரனுக்காக அழுவது போல் தான் தெரியும். ஆனால் உண்மை அதுவல்ல. "என் சகோதரன் உயிரோடு இருந்திருந்தால் அவன் எனக்கு எல்லாவிதமான உதவிகளையும் செய்திருப்பான். இப்போது நான் ஆதரவில்லாமல் ஆகி விட்டேன்" என்பது தான் அவர்கள் அழுவதெல்லாம். "என் தந்தை இறந்து விட்டார். அவர் இருந்திருந்தால் அவர் என்னுடைய ஆசைகள் அனைத்தையும் பூர்த்தி செய்து வைத்திருப்பார். என்னுடைய மனைவி இறந்து விட்டாள். அவள் மிகவும் அழகாக இருந்தாள். அவள் எனக்கு மிகவும் சிறந்த சேவைகள் செய்பவள். எங்களைச் சௌகரியமாக உட்கார வைத்து வேண்டிய உணவுப் பதார்த்தங்கள், தண்ணீர் இப்படி எல்லாவற்றையும் பரிமாறுவாள். இப்போது அவள் போய் விட்டாளே!" என்றெல்லாம் அரற்றி அழுவார்கள். ஆனால் உண்மையில் அவர்கள் அவனது மனைவிக்காகவோ அழுகிறார்கள்? அவர்கள் அனைவரும் தங்களுக்காக மட்டுமே தான் அழுகிறார்கள்.

எனவே எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் ஒரு தகப்பன் தன் மைந்தனுக்காக அழுதாலும், அது உண்மையிலேயேத் தனக்காகவே தான் அழுகிறான் என்று நாம் அறிகிறோம். ஆனால் உத்தவா இங்கேக் கண்ட நந்தபாபாவின் அழுகை தனக்காக அல்ல - கிருஷ்ணருக்காக!

அவ்வளவு ஆழ்ந்த பிரேமை நந்தபாபாவிடம் இருந்தது. நாமும் கொஞ்சமாவது அப்படி இருக்க ஆசைப் பட வேண்டும். பகவானுக்காக நாம் ஒரே ஒரு தடவை கூடக் கண்ணீர் விட்டால் போதும், நம் வாழ்க்கைகள் அர்த்தமுள்ளதாகி விடும். ஆனால் நம் இதயமோ இன்னமும் உருகவில்லை. எனவே தான் நாம் ஹரி நாமத்தை ஜெபிக்கும் போது நம் மயிர்கள் சிலிர்க்கவில்லை. ஸ்ரீ சைதன்ய மகாபிரபு கூறியிருக்கிறார்:

*நயனம் கலத் அஸ்ரு தாரயா*
*வதனம் கத்கத ருத்தயா கிரா*
*புலகைர் நிசிதம் வபு கதா*
*தவ நாம க்ரஹணே பவிஸ்யதி (ஸ்ரீ ஷிக் ஷாஷ்டகம் #6)*

"ஹே பிரபு! எனக்கு எப்போது உமது நாமங்களை ஜெபிக்கும் போது கண்களிலிருந்து தாரை தாரையாகக் கண்ணீர் பாயும்? எப்போது அந்த ஆனந்தத்தில் என் குரல் தழுவி அடைத்துக் கொண்டு, என் உடலில் மயிர்கள் எல்லாம் சிலிர்த்து நிற்கும்?"

இங்கே பவிஸ்யதி என்றால் என்ன அர்த்தம்? ஹரி நாமத்தை ஜெபிக்கும் போது கண்களிலிருந்து தாரை தாரையாக, நிற்காமல் தொடர்ந்து எப்போது கண்ணீர் பாயும்? அந்த நாள் எப்போது எனக்கு வரும்? எப்போது நாம் நமது உடலில் நடுக்கம் ஏற்பட்டு, நெஞ்சம் உருகி, சில சமயம் தரையில் உருண்டும் புரண்டும், சில சமயம் உரக்கச் சிரித்தும், சில சமயம் கதறி அழுதும், சில சமயம் பாடவும் செய்வோம்? உத்தவா இவையனைத்தையும் நேரில் கண்டு, "இன்று நான் அப்படிப் பட்ட ஒரு உத்தமரை நேரிலே காணும் பாக்கியத்தைப் பெற்றிருக் கிறேன். ஆனால் இவரிடம் நான் என்ன சொல்ல? "நீவிர் மிகவும் அதிர்ஷ்டசாலி" என்று சொல்லவா? என்னால் அவ்வாறும் கூற முடியவில்லை. அவரிடம் "நீங்கள் இப்படியே இன்னமும் அழுங்கள்" என்று சொல்வதா, இல்லை, "நீங்கள் அழாதீர்கள்" என்று ஆறுதல் கூறுவதா? எனக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லையே! இந்த உலகத்தில் ஒருவன் கிருஷ்ணருக்காக அழுதான் என்றால் அது எவ்வளவு உயர்ந்தது! இப்படிப் பட்ட பாச உணர்வு எனக்கும் வர வேண்டு மென்று ஆசைப் படுகிறேன். இவர் இங்கே உண்மையிலேயே கிருஷ்ண பிரேமையினால் அழுகிறார் என்றால் இவரல்லவோ உத்தமமான அதிர்ஷ்டம் உள்ள மனிதர்! நான் இவரிடம் "நீவிர் அழும்" என்று கூறவா, "நீவிர் அழக் கூடாது" என்று கூறவா? என்னால் இவற்றில் எதையும் கூற முடியாது. என்ன செய்வது?" என்று தடுமாறினார்.

எனவே உத்தவாவினால் நந்தபாபாவிடம் ஒரு வார்த்தை கூடப் பேச முடியவில்லை. நந்தபாபாவின் உத்தமமான ஆன்மீக நிலையைக்

கண்ட உத்தவா அன்று தான் தன் வாழ்க்கையின் வெற்றிகரமான நாள் என்று உணர்ந்தார். இதே மாதிரியான நிலைதான் கோபகுமாரின் சங்கடமான நிலையைக் கண்ட நாரதருக்கும் ஏற்பட்டது. நாரதர் கோபகுமாரிடம், "நீ மிக மிக அதிர்ஷ்டசாலி. நீ இங்கே வைகுந்தத் திலும் கூட மகிழ்ச்சியாய் இல்லை. ஏனென்றால் நீ இங்கே ஸ்ரீமன் நாராயணரை கிருஷ்ணராகப் பார்க்க விரும்புகிறாய். நீ கன்று பசுக்களை எல்லாம் கூட்டிக் கொண்டு கிருஷ்ணருடன் மாடு மேய்க்கப் போக வேண்டும் என்று விரும்புகிறாய். அவருடன் கூடி வாழ வேண்டும் என்று விரும்புகிறாய். நீ கிருஷ்ணரை உன் கைகளால் கட்டிப் பிடித்து நண்பனைப் போல் இருக்க வேண்டும் என்று விரும்புகிறாய். கிருஷ்ணர் உன்னிடம், 'ஹே கோபகுமார்! அந்தப் பசுக்களை இந்தப் பக்கம் கொண்டு வா! அவை தண்ணீர்த் தாகத்துடன் உள்ளன. அவற்றிற்கு நீ தண்ணீர் கொடு!' என்று சொல்ல வேண்டும் என்று விரும்புகிறாய். நீ அந்த உத்தரவைப் பாசத்துடன் சரியாகச் செய்து முடிக்க விரும்புகிறாய். சில சமயம் கிருஷ்ணர் உன்னையும், மற்ற சமயம் நீ கிருஷ்ணரையும் கட்டிப் பிடிக்க ஆசைப் படுகிறாய். நீ அவருடன் கூடவே உட்கார்ந்து சாப்பிட்டு, உங்கள் எச்சில் கரங்களால் ஒருவருக்கொருவர் உணவை வாயில் திணித்துச் சாப்பிட விரும்புகிறாய். சில சமயம் யசோதாவின் கட்டிலில் அவர் தூங்கிக் கொண்டிருக்கும் போது, உன் உடலில் முழுவதும் பிருந்தாவனத்தின் புழுதிகள் நிறைந்திருந்தாலும் கூட, அங்கே கட்டிலின் அருகே நீ ஓடிச் சென்று, 'ஹே! நீ இப்போது தூங்காதே! பசுக்கள் எல்லாம் வாசலில் தயாராக வந்து விட்டன. மாடு மேய்க்கக் கிளம்பு போகலாம்' என்று கூற ஆசைப்படுகிறாய். இவை எல்லாவற்றையும் நீ செய்ய ஆசைப்படுகிறாய். இதை நீ சாக்கிய பாவத்துடன் மிகவும் எளிதாகச் செய்து விடலாம்.

"ஆனால் இங்கேயோ, ஸ்ரீமன் நாராயணர் என்ன செய்கிறார்? நீ அவரிடம் செல்லும் போது அவர் தன் வலது கரத்தை உயர்த்தி, 'உனக்கு எல்லாம் மங்களமாகட்டும்!' என்று ஆசீர்வாதம் அளிக்கிறார். ஒவ்வொருவரும்,'நமோ நாராயணா, நமோ நாராயணா' என்று தங்கள் வந்தனங்களைச் செலுத்துகின்றனர். அவர் தன் கரங்களைத் தூக்கி, 'உங்களுக்கு எந்த விதமான பயமும் இருக்காது. எல்லா மங்களங்களும் உங்களுக்குக் கிடைக்கும்' என்று ஆசீர்வதிக்கிறார். ஆனால் நீயோ அவரிடம் ஓடிச் சென்றுத் தழுவி அணைத்துக் கொள்ள வேண்டும் என்று விரும்புகிறாய். நீ அவருடன் புல்லாங்குழல் ஊத வேண்டும் என்று ஆசைப்படுகிறாய். ஆனால் இவை எதையும் உன்னால் இங்கு செய்ய முடியவில்லை. நீ இரவில் அவருடன் ஒரே படுக்கையில் தூங்க வேண்டும் என்று எண்ணுகிறாய். ஆனால் தன் புத்திசாலித்தனத்தையும் ஏமாற்று வித்தைகளையும் பயன்படுத்தி ஸ்ரீ இலக்சுமி தேவி உன்னை வெளியே அனுப்பி விடுகிறாள்! அப்படியும் நீ அங்கிருந்து செல்லவில்லையானால் அவள் என்ன செய்கிறாள்?

வாயிற்காவலர்களான ஜெயாவையும் விஜயாவையும் கூப்பிட்டு,'நான் சொல்வதை இவன் கேட்க மாட்டேன்' என்கிறான் என்று கூறி உன்னைப் பலாத்காரமாக வெளியேத் தள்ளி விடுகிறாள்!

"மேலும் நீ, 'ஸ்ரீ கிருஷ்ணா! கோபாலா! ஹரே! முகுந்தா! ஹே கோவிந்தா! ஹே நந்த கிஷோரா! ஹே கிருஷ்ணா! ஹே ஸ்ரீ யசோதா-தனயா! ஹே ஸ்ரீ வல்லபி-ஜீவனா! ஹே ராதிகேஷா! என்னிடம் கருணை காட்டு' என்று பாடி உன் புல்லாங்குழலையும் வாசித்து, பசுக்களைக் காட்டுக்குள் கொண்டு செல்ல உன் ஆவலை வெளிப் படுத்திய போது, வைகுந்த வாசிகள் அனைவரும் உன்னைக் கிண்டல் செய்து உன் மனதை வேதனைப் பட வைத்து, 'ஹே ! நீ என்ன சொல்கிறாய்? பிரபு நாராயணர் எல்லா ஈஸ்வரர்களுக்கும் ஈஸ்வரன். நீ அவரைக் கோபால் என்று அழைத்து அவரை உன்னுடன் காட்டில் பசுக்களை மேய்க்கவா கூப்பிடுகிறாய்? நீ அவரை பசுக்களின் காவலன் என்றா ஆக்குகிறாய்? மேலும் நீ அவரை பசுக்களிலிருந்து பால் கறப்பவராகவும், ஏதோ சில இடைச்சிப் பெண்களிடம் அவர் நேசம் வைத்திருப்பவராகவும், அவர் ஒரு மாடு மேய்க்கும் இடையனின் மகன் என்றும் வேறு கூறுகிறாய். நீயும் அவரும் சேர்ந்து இடையர்களின் வீடுகளில் வெண்ணெய்யையும் இனிப்புக்களையும் களவு செய்யவும் வேறு கூப்பிடுகிறாய்! நீ அவரைக் கள்ளன் என்றா கூப்பிடுகிறாய்? நீ அவரை ஏளனம் செய்கிறாய்! நீ அவரை ஆயிரக் கணக்கான முகங்கள் கொண்ட விஷ்ணு என்றல்லவா கூற வேண்டும்? மேலும் நீ அவரை இப்படியான உருவத்தில் வழிபட்டு அவரிடமிருந்து நமக்கு எல்லாம் மங்களமாக இருக்க வேண்டி ஆசீர்வாதங்களை அல்லவா கேட்க வேண்டும்? நீ அவரை எப்படி இடையன் என்றும், கள்வன் என்றும், கபடன் என்றும் கூறலாம்? நீ இப்படி ஒருபோதும் செய்யக் கூடாது' என்று உன்னைக் கடிந்தார்கள். இவ்வாறு கூறி உன்னைப் பரிகாசம் செய்து உன் மேல் ஏளனமாகச் சிரித்தார்கள்.

"இன்னும் சிலர் உன்னிடம், 'என் நண்பனே! ஸ்ரீமன் நாராயணர் ஒரு சமயம் ஸ்ரீ கிருஷ்ணராகத் தோன்றி, தன் மகிழ்ச்சிக் காகவும் தன் பக்தர்களின் ஆனந்தத்துக்காகவும் பற்பல திருவிளை யாடல்களை நடத்தினார் என்பது உண்மைதான். ஆனால் அவை யெல்லாம் முக்கியமானவையல்ல. இது வைகுந்த லோகம். பிரஜா அல்ல. இங்கே நீ அப்படிப்பட்டவைகள் எதையும் பேசக் கூடாது' என்று அறிவுரை கூறினார்கள். நீ அவை அனைத்தையும் கேட்டு மேன்மேலும் வெட்கம் அடைந்தாய்." இவ்வாறு நாரதர் கூறி முடித்தார்.

உதாரணமாக மாடு மேய்க்கும் சிறுவர்களான ஸ்ரீ தாமா அல்லது சுபாலா, கிருஷ்ணரைப் பார்க்கத் துவாரகைக்குச் செல்வதாக வைத்துக் கொள்வோம். அவர்கள் அங்கே பெரும் மாட்சிமை வாய்ந்த சுதர்மா என்ற ராஜ சபையில் துவாரகாதீஷாவாக - துவாரகையின்

மன்னராக - ஸ்ரீ கிருஷ்ணர் சிம்மாசனத்தில் உட்கார்ந்திருப்பதைப் பார்ப்பார்கள். அவரது வலது பக்கத்தில் உக்ரசேனர், வாசுதேவர் மற்றும் யாதவ குலத்திலுள்ள மூத்தவர்களும், அவரது முன்னால் கார்க முனிவர் முதலான மிகப் பெரும் முனிவர்களும், இடது பக்கத்தில் அவரது மகன்களான சம்பா, அனிருத்தா, மற்றும் பிரத்யும்னா போன்றவர்களும் உட்கார்ந்திருப்பார்கள். அவரது பின் பக்கம், திரைச் சீலைகளுக்குப் பின்னால் ருக்மிணி, சத்யபாமா முதலான இராணி மார்களும் இருப்பார்கள். அப்போது அங்கே ஒரு மாடு மேய்க்கும் சிறுவன் தோன்றினால் அது எப்படி இருக்கும்? இடையர்களின் துணிகளை அணிந்து கொண்டு, ஒரு கையில் மாடுகளை மேய்க்க உதவும் ஒரு வளைந்த கம்பையும் பிடித்துக் கொண்டு, மறு கையில் ஒரு புல்லாங் குழலையும் பிடித்துக் கொண்டு தான் இருப்பான். மேலும் அவன் அப்போது தான் தனது மாடுகளுடன் மேய்ப்பிலிருந்து வீட்டுக்குத் திரும்பி வந்திருந்தானானால் உடம்பும் துணிகளும் மிகவும் அழுக்கடைந்து இருக்கும். அப்படி அவன் அங்குத் தோன்றி, கிருஷ்ணரைக் கட்டிப் பிடிக்க வேண்டும் என்று விரும்பினால், கிருஷ்ணர் தன் சிம்மாசனத்தில் அமைதியாக உட்கார்ந்து கொண்டு வேண்டுமென்றால் ஒரே ஒரு முறை அந்தச் சிறுவனைப் பார்த்து விட்டு, பின்னர் அந்த திசையில் பார்க்கவே மாட்டார்!

ஆனால் மாடு மேய்க்கும் இந்த ஏழைச் சிறுவனோ அளவுக்கு மிஞ்சின எதிர்பார்ப்புடன் வந்திருக்கிறான். எப்படி? "ஸ்ரீ கிருஷ்ணர் தன் பக்தவத்சல்ய குணத்தினால் என்னை அன்புடன் அருகில் கூப்பிட்டுப் பக்கத்தில் இருத்திக் கொள்வார்" என்று எண்ணுவான். ஆனால் இங்கே என்ன நடக்கிறது? யாரோ ஒருவன் அந்த சிறுவனிடம், "என் நண்பனே, கொஞ்சம் தள்ளிப் போ" என்கிறார்கள். அந்தச் சிறுவன் என்ன செய்வான்? அங்கேயுள்ள செல்வக் கொழிப்பைக் கண்டு வியந்து, "ஓ, அந்தக் குடையைப் பார்! அந்தச் சாமரத்தைப் பார்! இங்கேயுள்ள ஜனங்களைப் பார்!" என்று எண்ணிக் கொள்வான். பின் அவன் தன்னைப் பார்த்து வெட்கம் கொண்டு, அங்கிருந்து ஓடியே போய் விடுவான். மேலும் அங்கே ருக்மிணியும் சத்யபாமாவும் தங்களை மிகவும் உயர்தரமான அலங்காரங்கள் செய்து கொண்டு இராணிகளாக வீற்றிருப்பார்கள். அங்கே ஒரு சாதாரணப் பெண், தன் தலையில் சிவப்பு நிற குஞ்சா மலர்களை அணிந்து கொண்டு எந்த விதமான ஆடம்பரமுமின்றி விலை மதிப்புள்ள ஆபரணங்கள் எதுவுமே அணியாமல் போய் நின்றால் அவளுக்கு என்ன நிலை நேரிடும். அவளுக்கு எந்த விதமான மதிப்புமே கிடையாது. எனவே தான் கோபியர்கள் துவாரகைக்கு ஒரு போதும் செல்ல மாட்டார்கள்.

நாரதர் நினைத்தார், "இந்தக் கோபகுமார் எவ்வளவு உயர்ந்த பக்தி நிலையில் இருக்கிறான்! இவன் கிருஷ்ணரைத் தன் நெருங்கிய நண்பனாக அல்லவா பாவிக்கிறான். எனவே இவன் இங்கு

வைகுந்தத்தில் மகிழ்ச்சியாகவே இருக்க முடியாது. அவனது சொரூபம் இங்கே செல்லாது. யாருக்குமே தெரியவும் தெரியாது. அவனது பக்தி நிலையின் முழு மகிமையை இங்கே உணரவே முடியாது." நாமும் ஒரு வேளை அதிர்ஷ்டத்தால் ஒரு கோபியாகவோ கோபாவாகவோ சொரூபம் பெற்றிருந்தால் நாம் வைகுந்தத்துக்குச் சென்றால் அங்கே நமக்குப் பிடிக்கவே செய்யாது. ஒருவேளை நாரதர் நம்மிடம் வந்து நம் உள் ஆத்ம சொரூபத்தைக் கண்டு, "ஓ, இவள் மிகவும் விஷேஷ மானவள். இவள் ஸ்ரீமதி ராதிகாவின் பணிப்பெண்!" என்று வியந்து கொள்வார். ஆனால் அவர் அதை வேறு எவரிடமும் கூற மாட்டார். அவர் அவளுக்கு அமைதியாக வந்தனம் செய்வார். அந்தச் சொரூபத்துக்கு வைகுந்த லோகம் சரியானதல்ல என்று எண்ணுவார். இவற்றை எல்லாம் ஒரு குரு தானாகவே அறிந்து கொள்வார்.

அதே போல் தான் நாரதர் கோபகுமாரின் பக்தி பாவத்தையும், அவரது உயர்ந்த நிலையையும் அறிந்து மிகவும் ஆனந்தம் அடைந்தார். பின்னர் அவர் எவற்றைக் கூறலாம், எவற்றைக் கூறக் கூடாது என்பதை நினைத்துப் பார்த்து, கடைசியில் , "ம்ம், நான் உன்னுடைய நாடிப் துடிப்பைப் பார்த்ததில், உன்னுடைய வியாதி சாதாரணமானதல்ல என்று எண்ணுகிறேன். அதற்குள்ள மருந்து இங்கே வைகுந்தத்தில் கிடையாது. நீ இங்கே மேலும் தொடர்ந்து தங்கியிருந்தால் இந்த வியாதி இன்னமும் அதிகரித்து முற்றி விடும். உன் வியாதியை எப்படிக் குணமாக்கலாம் என்பதை நான் கூறுகிறேன். உனக்குத் தேவை எந்த விதமான சங்கோஷங்களும் இல்லாத பரிசுத்தமான அன்பு. இதையே விஸ்ரம்ப - பாவா அல்லது மிகவும் நெருங்கிய அன்பு என்று கூறுவார்கள். இங்கே வைகுந்தத்தில் வெறும் சம்பிரம பாவா மட்டுமே உண்டு" என்று நாரதர் கூறினார்.

ஸ்ரீ சைதன்ய சரிதாம்ருதாவில் (ஆதி லீலா 4.17) கீழ்வரும் சுலோகம் வருகிறது.

*ஐஸ்வர்ய ஞானாதே சப ஜகத் மிஸ்ரித*
*ஐஸ்வர்ய சித்தில - பிரேமே நாஹி மோர ப்ரீத*

வைகுந்தத்தில் பிரேமை உள்ளது. ஆனால் அங்குள்ள பகவானின் பக்தர்கள் அவரது ஐஸ்வர்யங்களையும் மகிமைகளையும் உணர்ந்திருப்பதால் அந்தப் பிரேமை மங்கி விடுகிறது. அவர்கள் அனைவரும் பகவானின் ஐஸ்வர்ய ஞானத்துடனும் சிறிது பயத்துடனும் தான் சேவை செய்கிறார்கள். பகவான் ஸ்ரீ இராமச் சந்திரர் ஒரு படுக்கையில் உட்கார்ந்திருக்கிறார். அவருக்குக் கீழே குனிந்து ஹனுமான் குளிர் காலங்களில் ஸ்ரீ இராமச்சந்திரரின் கால்களைப் பிடித்து விட்டு, கால்களைப் போர்வையால் மூடுகிறார். அவர் மிகுந்த பிரேமையுடன் சேவகம் செய்கிறார். அந்தச் சேவையில் பகவானுக்கும் முழு திருப்தி. ஆனால் இதை விடவும் மேலான பிரேமை

உள்ளது. அதையே விஸ்ரம்பா என்று அழைப்பார்கள். வைகுந்தத்தில் ஜெயா, விஜயா மற்றும் இலக்சுமி தேவி அனைவரும் வைத்திருக்கும் பிரேமை விஸ்ரம்பா பிரேமை அல்ல. அது சம்பிரம பிரேமையே. ஏனென்றால் அவர்கள் தங்கள் தாழ்ந்த நிலையை ஞாபகத்தில் வைத்திருப்பதால் அவர்களிடம் சிறிது பயம் உள்ளது. இப்படிப்பட்ட சேவையில் பகவான் முழுத் திருப்தியடைவதில்லை. ஆனால் அதே சமயம் நாம் நம் முழுமையற்ற நிலையில் விஸ்ரம்பா நிலையில் சேவை புரிந்தால் அது அபராதமாகவும் ஆகி விடும்! சாஸ்திரங்களில் "விஸ்ரம்பேன குரவ் சேவா" - அதாவது ஒரு குருவுக்கு நாம் மிகவும் நெருங்கி சேவை செய்ய வேண்டும் என்று எழுதப்பட்டிருப்பதன் பொருள் என்னவென்றால், நாம் நம் குருவை ஒரு நண்பனாக நினைத்துக் கொண்டு அதே சமயம் நாம் நம் தாய், தந்தை, சகோதரன் மற்றும் நண்பனுக்கு எவ்வாறு சேவை செய்வோமோ அவ்வாறு சேவகம் புரிய வேண்டும் என்பதே.

உன் குடும்ப நண்பர் ஒருவர் உங்கள் வீட்டுக்கு வந்தால் யாரும் உன்னிடம், "உன் நண்பர் வந்திருக்கிறார். நீ அவருக்கு இருக்க ஒரு நல்ல இடத்தையும் கொடுத்து அவருக்குக் குடிப்பதற்கு ஏதாவது கொடு" என்று சொல்லிக் கொடுக்க வேண்டியதில்லை. நீ தானாகவே அதைச் செய்வாய். எனவே ஒரு குருவின் உத்தம சிஸ்யன் குருவின் ஆசைகளைத் தானாகவே அறிந்து எந்த விதமான உத்தரவுகளும் தேவையின்றி குருவுக்குச் சேவகம் புரிவான். யாருமே உத்தரவிடத் தேவையில்லாமல் தானாகவே சேவகம் செய்வது ஒரு உத்தம சேவகனின் இலட்சணமாகும். என்ன செய்ய வேண்டும் என்று கேட்டு அதன் படி சேவை செய்பவன் ஒரு மத்தியம சேவகன்.

ஆனால் இன்னொரு விதமான சேவகனும் உண்டு. அவனிடம் ஒரு குரு, "நீ போய் அந்த மகாராஜாவைக் கூட்டிக் கொண்டு வா" என்று உத்தரவிட்டால் அவன் பதிலுக்கு, "ஆனால், குருதேவா, இப்போது சாயங்காலம் ஆகிவிட்டது. இனி சீக்கிரம் இருட்டி விடும்" என்பான்.

நேரம் இருட்ட ஆரம்பித்து விட்டது என்பது குருவுக்கு நன்றாகவே தெரியும். அவர் அவனிடம், "இருட்டினாலும் பரவாயில்லை. நீ போய்க் கூட்டிக் கொண்டு வா" என்று மேலும் உத்தர விடுவார்.

அதற்கு அந்த சேவகன், "ஆனால், குருதேவா, சாலையில் நிறைய நாய்கள் உள்ளன" என்பான்.

"இருந்தாலும் பரவாயில்லை. ஒரு கம்பைக் கையில் வைத்துக் கொள். நீ போய்க் கூட்டிக் கொண்டு வா!" என்று குரு திரும்பவும் உத்தர விடுவார்.

அதற்கு அந்த சேவகன், "ஆனால், குருதேவா, அங்கே மகாராஜா இல்லையென்றால் நான் என்ன செய்வது?" என்று கேட்பான்.

இப்படிப்பட்ட சேவகனால் என்ன தான் செய்ய முடியும்? "சேவக்" என்ற வார்த்தையிலுள்ள "சே" வை எடுத்து விட்டால் என்ன ஆகும்? "வக்" என்று ஆகும். "வக்" என்றால் நாரை, அதாவது ஒரு பாசாங்குக் காரனாக சிஸ்யன்! நாரை குளக்கரையில் ஒற்றைக் காலில், எல்லாவற்றையும் துறந்த ஒரு பெரும் பக்தன் தியானத்தில் இருப்பதைப் போல் அசையாமல் அமைதியாக நின்று கொண்டிருக்கும். ஆனால் அதன் பக்கம் ஒரு மீன் நீந்தி வந்ததும் உடனே லபக்கென்று அதைக் கொத்திச் சாப்பிட்டு விட்டு, பின்னர் மறுபடியும் அதே போல் தியானத்தில் திரும்பவும் ஈடுபடும்.  எனவே உத்தம சேகவன் ஒரு உண்மையான சேவகன். மத்தியம சேவகனையும் கூட ஒரு உண்மையான சேவகன் என்று கூறலாம். ஆனால் வாதம் செய்யும் சேவகன் ஒரு சேவகனே அல்ல.

நாம் நம் குருவின் இதயத்தையே அறிந்து கொள்ள இயலவில்லை என்றால் எவ்வாறு கிருஷ்ணரின் இதயத்தை அறிய முடியும்? எனவே வைகுந்தத்தைத் தாண்டிச் செல்ல ஆசைப் படுபவர்கள் முதலாவதாக தங்கள் குருவுக்கு விஸ்ரம்ப பக்தியுடன் சேவை செய்ய வேண்டும். ஒருவன் தன் குருவிடம் எதையாவது மறைத்தால், அவனது இதயம் இன்னமும் குருவின் முன்னால் திறக்கவில்லை என்று அர்த்தம். அப்படியானால் அவன் எப்படிப் பகவானின் முன்னால் போக முடியும். இதுதான் சிக் ஷாவின் மிகவும் முக்கியமான அடித்தளம். குருவுக்கு நேர்மையுடனும் திறந்த மனத்துடனும் சேவை செய்தால் மட்டும் தான் அறிவைச் செவ்வனே பெறுவோம்.

நாரத முனிவர், "இந்தக் கோபகுமார் ஒரு பெரிய விஷ்ரம்ப சேவகாவாக அல்லவா இருக்கிறார்! இவருக்கு வைகுந்தம் ருசியாக இருக்காது"  என்று எண்ணினார். எனவே அவர் கோபகுமாருக்கு மேலும் உயர்ந்த தத்துவங்களை உபதேசிக்க ஆரம்பித்தார்.  "பார்! இங்கே வைகுந்தத்தில் எல்லாமே சின்மயம். பகவானுக்கு இங்கே ஆயிரக் கணக்கான ரூபங்கள் உள்ளன" என்று உபதேசித்தார். இதன் அர்த்தம் என்ன? வைகுந்தத்தில் பற்பல வராஹ ரூபங்களும், பற்பல மீன ரூபங்களும், பற்பல கூர்ம தேவ ரூபங்களும், பற்பல நரசிம்ம தேவ ரூபங்களும் பற்பல வாமன ரூபங்களும், பற்பல பரசு ராம ரூபங்களும் இப்படி நிறைய ரூபங்கள் உள்ளன. பொதுவாக அனைவரும் மொத்தம் இருபத்து நான்கு விதங்களான  லீலா அவதாரங்கள் இருப்பதாக அறிவார்கள். ஆனால் உண்மையில் அவை வெறும் இருபத்தி நான்கு மட்டுமல்ல - எண்ணுக் கடங்காதவைகள். அதே சமயம் ஒரு அவதாரம் இன்னொரு அவதாரத்திலிருந்து குணத்தில் வித்தியாசப் படுவதுமில்லை. அவையெல்லாம் வைகுந்தத்தில்

தனித்தனியான மண்டலங்களில் வாழுகின்றன. அவை அனைத்தும் எப்போதும் நிரந்தரமானவை. ஆம், பகவான் ஒருவரே தான். ஆனால் அவர் தன் பக்தர்களின் வெவ்வேறு பக்தி நிலைகளுக்குத் தகுந்தாற் போல் விதம் விதமாகக் காட்சி அளிக்கிறார். ஒரே பகவான் ஒருவனின் பக்தி பாவத்திற்குத் தகுந்தவாறு வித்தியாசமாகக் காணப் படுகிறார்.

பிருந்தாவனத்தில், யமுனை நதியின் தீரத்திலுள்ள காளிய ஹிருதா என்ற இடத்தில் சௌபரி ரிஷி என்ற முனிவர் ஒருவர் ஆயிரக் கணக்கான வருடங்களாகத் தவம் புரிந்து வந்தார். ஆனால் அங்கே கருடன் அவ்வப்போது வந்து மீன்களைச் சாப்பிடுவதைக் கண்ட சௌபரி ரிஷி, கோபம் அடைந்து கருடனைச் சபித்து விட்டார். இந்த அபராதத்தால் அவருள் உலக ஆசைகள் புகுந்து விட்டன. அடுத்து அவர் தன் யோக சக்தியினால் தன்னை ஐம்பது உருவங்களாக பெருக்கிக் கொண்டு மாந்தாதா முனிவரின் ஐம்பது புத்திரிகளையும் திருமணம் செய்து கொண்டு, அவர்களுக்கு ஐம்பது அரண்மனை களையும் உண்டு பண்ணினார். ஒவ்வொரு அரண்மனையைச் சுற்றிலும் அழகான பூந்தோட்டங்கள் இருந்தன. இந்திர லோகத்தையே நாணம் கொள்ள வைக்கும் அளவுக்கு மிகவும் அழகாக அவற்றை அமைத்திருந்தார். மிகவும் உயர்தரமாக இந்திரிய சுகங்களை அனுபவிக்க வேண்டிய அத்தனை வசதிகளும் அங்கே இருந்தன. இவ்வாறு அவர் பத்தாயிரம் வருடங்கள் சுக இன்பங்களை அனுபவித்தார். அவரது பேரன் மற்றும் கொள்ளுப் பேரன்கள் கூட வளர்ந்து விட்டனர். ஒரு நாள் மாந்தாதா முனிவர் அங்கே வருகை தந்து, "நான் என் புத்திரிகளைக் காணாமல் வெகு காலமாக வாழ்ந்து விட்டதால் அவர்கள் என்னை அடையாளம் கூடக் கண்டு பிடிக்க முடியாதவாறு ஆகிவிட்டது. அவர்களுக்குத் தன் தகப்பனாரைக் கூடப் போய்ப் பார்ப்பதற்கு ஆசையில்லாத படி அப்படி இங்கு என்ன சுகம் உள்ளது என்பதைக் காண நான் வந்துள்ளேன். இங்கே என்ன நடக்கிறது?" என்று கேட்டார். பின்னர் அவர் சுற்றிலுமுள்ளவைகளை நேரில் கண்டார். "ஓ, இங்கே எவ்வளவு ஐஸ்வர்யங்களும் அனுபவிக்க போகங்களும் உள்ளன! என் புத்திரிகள் என்னைப் பார்க்க இது வரையிலும் ஏன் வரவில்லை என்பதன் காரணம் இப்போது எனக்கு நன்றாகப் புரிகிறது" என்று எண்ணினார்.

சௌபரி ரிஷி எடுத்த ஐம்பது உருவங்களும் அவரது காய -வ்யூஹ உருவங்கள். அவர் தன் கையை உயர்த்தினால் அத்தனை ரூபங்களும் கையை உயர்த்தும். காய-வ்யூஹ உருவங்களை ஒருவர் தன் சக்தியினால் உண்டு பண்ணும் போது, அதன் அசலான ரூபம் பேசினால் மற்ற எல்லா ரூபங்களும் பேசும். அது தூங்கினால் எல்லா உருவங்களும் தூங்கும். அது நகர்ந்தால் மற்ற எல்லா உருவங்களும் நகரும். ஒன்றே ஒன்று தான் அசல், மற்றவையெல்லாம் அதன் நகல்களே. ஆனால் பகவானின் அவதாரங்கள் அப்படியல்ல. எல்லா

ரூபங்களும் சுயமாக இயங்கக் கூடியவை.

இங்கே இப்போது துவாராகாவின் ஐஸ்வர்யத்தையும் பிருந்தாவனத்தின் இனிமையையும் பற்றி ஒரு முக்கியமான கருத்தை அறிய வேண்டும். துவாரகாவில் ஸ்ரீ கிருஷ்ணர் பதினாறாயிரம் இராணிகளைத் திருமணம் செய்கிறார். ஒரு அரண்மனையில் அவர் பகடைக் காய்களை வைத்து விளையாடும் விளையாட்டில் இருக்கிறார். இன்னொரு இடத்தில் அவர் பசுக்களைப் பிராமணர்களுக்குத் தானம் செய்து கொண்டிருக்கிறார். வேறு எங்கோ ஒரு இடத்தில் அவர் ஒரு திருமணத்தை நடத்தி வைக்கிறார். இன்னும் ஒரு அரண்மனையில் அவர் அக்னி யக்ஞம் செய்து கொண்டிருக்கிறார். இதுபோல் மற்ற அரண்மனைகளிலும் வெவ்வேறு செயல்களைப் புரிந்து கொண்டிருக்கிறார். அவரது எல்லா உருவங்களும் ஒரே மாதிரியாக உள்ளன. அவற்றிற்குள் எந்த விதமான குண வேறுபாடுகளும் கிடையாது. எனவே இங்கே ஸ்ரீ கிருஷ்ணர் தன் ஐஸ்வர்யத்தினால் தனிப்பட்ட சுயமான பற்பல உருவங்களை எடுத்துள்ளார். ஆனால் அவரது எல்லா உருவங்களும் ஒன்றே. அதாவது ஒவ்வொன்றும் சுயமாக, முழு சக்தியுடனும் முழு ஐஸ்வர்யத்துடனும் விளங்குகின்றன. ஒவ்வொரு இராணியும் தனித்தனியாகச் சமைத்து அவற்றை ஸ்ரீ கிருஷ்ணருக்குப் படைக்கிறாள். ஒரு அரண்மனையில் அவர் பருப்பு, பூரி போன்றவற்றைச் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார். இன்னொரு அரண்மனையில் அவர் சப்ஜியைச் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார். இன்னொரு அரண்மனையில் அவர் பகோராவைப் புசித்துக் கொண்டிருக்கிறார். வேறு இன்னும் ஒரு அரண்மனையில் அவர் பாயாசம் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார். ஸ்ரீ கிருஷ்ணர் தன் ஐஸ்வர்யத்தாலும் அளவற்ற சக்தியினாலும் பற்பல உருவங்களில் தன்னை உண்டாக்குகிறார். எல்லா உருவங்களும் உண்மையானவை, சுயமாக இயங்குபவை.

ஆனால் பிருந்தாவனத்தில் என்ன நடக்கிறது? பிருந்தாவனம் ஒரு ஐஸ்வரியமும் செல்வாக்கும் நிறைந்த மண்டலம் அல்ல. அங்கே ஐஸ்வர்யத்திற்கும் மேலான மதுர்யம் அதாவது இனிமை உள்ளது. இதை நாம் எவ்வாறு சரியாக புரிந்து கொள்ளலாம்? பிரஜாவில் வெறும் பதினாறாயிரம் இராணிகளல்ல. இலட்சக் கணக்கான கோபியர்கள் உள்ளனர். ரஸ நடனத்தின் போது ஒவ்வொரு இரண்டு கோபியர் களுக்கும் இடையில் ஒரு கிருஷ்ணர், அல்லது ஒவ்வொரு இரண்டு கிருஷ்ணர்களுக்குமிடையில் ஒரு கோபி இருந்தாள் என்று நமக்குத் தெரிகிறது. ஆனால் இது ஸ்ரீ கிருஷ்ணரின் ஐஸ்வர்யத்தினால் நடக்கிறது என்று மட்டும் நாம் ஒரு போதும் நினைக்கக் கூடாது. பிருந்தாவனத்தில் ஐஸ்வர்யம் கிடையாது. அங்கு இருப்பது மதுர்யம். மதுர்யம் என்றால் என்ன? ஸ்ரீ கிருஷ்ணர் தன் மனித ரூபத்தில் நிகழ்த்தும் திருவிளையாடல்களுக்கு (நர லீலைகள்) உகந்தது மதுர்யம்.

நர லீலைக்கு நேர் எதிரானது ஐஸ்வர்யம். உதாரணமாக ஸ்ரீ கிருஷ்ணரின் ஐஸ்வரியம் பொருந்திய விஸ்வ ரூபத்தைக் கண்ட அர்ஜுனன் மிகவும் ஆச்சரியமடைந்து, "உம்மை நான் நண்பன் என்று கூப்பிட்டதால் நான் மிகப் பெரிய அபராதத்தை விளைவித்திருக் கிறேன். இனிமேல் உம்மை நான் ஒருபோதும் நண்பன் என்று கூப்பிட மாட்டேன். என்னுடைய தேரை ஓட்டுவதற்கும் விடமாட்டேன். நான் மிகப் பெரிய அபச்சாரத்தை அல்லவா செய்து விட்டேன்" என்று அங்கலாய்த்தான். இது ஐஸ்வர்ய புத்தி - அதாவது ஸ்ரீ கிருஷ்ணரின் மகிமைகளைப் பற்றி உணர்ந்திருப்பது. இது நர லீலைகளுக்கு ஒத்து வராது.

ஸ்ரீ கிருஷ்ணர் கம்ஸனைக் கொன்றதைப் பார்த்த வாசுதேவரும் தேவகியும் பின்னர் ஸ்ரீ கிருஷ்ணருக்குப் பாசத்துடன் பால் ஊட்டுவதை மறந்தே போய் விட்டார்கள். ஸ்ரீ கிருஷ்ணரின் நர லீலைகளுக்கு இப்படிப் பட்ட உணர்ச்சி பாவங்கள் ஒத்துக் கொள்வதில்லை. எனவே இவையெல்லாம் ஐஸ்வர்யங்கள். ஆனால் பிருந்தாவனத்தில் ஸ்ரீ கிருஷ்ணர் அவ்வளவு பெரிய கோவர்த்தன மலையை அலாக்காகத் தன் இடது கை சுண்டு விரலால் தூக்கி வைத்திருந்த போது, யசோதா தன்னுள் பெருமையுடன் "இன்று என் மகன் கோவர்த்தன மலையைத் தூக்கி விட்டான்" என்று நினைத்தாள். ஆனால் அந்தப் பெருமையில் ஸ்ரீ கிருஷ்ணன் தன் சொந்த மகன் என்ற உணர்வு மாறவேயில்லை. அப்போது ஸ்ரீ கிருஷ்ணர் தன் சக்தியையும் மகிமைகளையும் காட்டுவது போல் கோவர்த்தன மலையைத் தூக்கி னாலும், கிருஷ்ணன் தன் மகன் என்ற உணர்வு யசோதாவுக்குக் கொஞ்சம் கூட மாறவேயில்லை. அவள், "ஓ, என் மகன் மிகவும் பலசாலி. இந்த உலகத்திலேயே என் மகனை விடப் பலசாலி யாருமே கிடையாது" என்று நினைத்தாள்.

தெய்வீகமான பிரிவினால் ஏற்பட்ட குழப்பத்தில், கோபியர்கள் ஒரு தேனீயிடம் பேசிக் கொண்டிருந்தனர்: "ஹே தூதுவனே! நாங்கள் ஒரு போதும் கிருஷ்ணரிடம் நெருங்கிய தொடர்பு வைக்கவே மாட்டோம். நிச்சயமாக ஒருபோதும் வைக்க மாட்டோம், ஏனென்றால் அவர் கோணலான புத்தியுள்ளவர். மிகப் பெரிய பொய்யன். ஏமாற்றுக்காரன். நாங்கள் ஒருபோதும் அவரை நம்பவே மாட்டோம். நாங்கள் அவரிடம் எந்த விதமான சிநேகமும் வைத்துக் கொள்ள மாட்டோம். ஏன்? அவர் பகவான்! அப்படித் தானே? எங்களுக்கு அவர் பகவான் என்று பௌர்ணமாசி கூறியிருப்பது ஞாபகம் வருகிறது. எங்களுக்கு அதில் நம்பிக்கை உள்ளது. தன்னுடைய முந்தைய பிறப்பில் அவரே ஸ்ரீ ராமர். அவரே இப்போது அழகாக அதேக் கறுப்பான நிறத்தில் திரும்பவும் வந்துள்ளார். அது மாறவில்லை. அவரோ எந்தப் பெண்ணாலும் ஆளப்பட முடியாத, எல்லாவற்றையும் துறந்த ஒரு பெரிய மகான். ஆனாலும் அவர் ஒரு பெண்ணால் கட்டுண்டு தன்

மனைவியுடன் காட்டுக்குச் சென்றவர். அவரிடம் ஒரு சாதுவுக்கு உள்ள அத்தனை அடையாளங்களும் இருந்தன. ஒரு சாதுவின் அணிகளை உடுத்தியிருந்தார். அப்படியிருந்தும் கூட அவர் காட்டுக்குத் தன் மனைவியுடன் சென்றார். மேலும் அவரது மனைவி, "ஆரிய புத்திரரே, அங்கே ஒரு அழகான தங்க நிறத்தால் ஆன ஒரு மான் நிற்கிறது. அதைத் தயவு செய்து பிடித்துத் தாருங்கள். பின் அதை நாம் பரதனிடம் கொண்டு செல்லலாம். உங்களால் அதை உயிரோடு பிடிக்க முடியவில்லையென்றால், அதை உங்களது அம்பினால் கொன்று, பின்னர் அதன் தோலினால் மன்னனின் அரியாசனத்துக்கு உகந்ததான ஒரு அழகான இருக்கையைச் செய்யலாம். அதில் உட்கார்ந்து கொண்டு பரதன் மிகவும் மகிழ்ச்சியடைவான். பின்னர் தாங்களும் அந்த அரியாசனத்தில் உட்கார்ந்திருக்கலாம்" என்று கேட்டாள்.

அதைக் கேட்ட இலட்சுமணன், "அந்த மான் ஒரு ராக்ஷசனுடைய மாய ரூபம். தயவு செய்து போகாதீர்" என்று எச்சரித்தும் கூட ராமர் இலட்சுமணர் கூறியதைக் கேட்கவில்லை. தான் ஒருபோதும் ஒரு பெண்ணின் சக்திக்கு அடிமையாக மாட்டேன் என்று கூறியிருந்தாலும் யாருடைய வார்த்தைகளை அவர் கேட்டார்? அவரது மனைவியினுடையதை. அவர் தன் மனைவியின் ஆதிக்கத்துக்குள் சிக்கினார். அப்படிபட்ட ஒருவரே அவர். அதன் பின்னர் இன்னொரு பெண் வந்தாள். அவளது மூக்கையும் காதுகளையும் வெட்டி விட்டார். அவள் அவரிடம் பிரேமையுடன் தன்னிடமுள்ள எல்லாவற்றையுமேக் கொடுக்க வந்தாள். அவளது மேல் ஏதாவது குற்றம் உண்டா? மூன்று உலகங்களிலுமுள்ள அத்தனை அழகுகளும் நிறைந்த ராமரிடம் அவள் மயங்கியதால் அவள் பேரில் ஏதாவது தப்பு உண்டா? அது எல்லா பெண்களுக்கும் அமைந்த இயற்கையான இயல்பு அல்லவா? ஆனால் அவர் என்ன செய்தார்? அவளது மூக்கையும் காதுகளையும் வெட்டி விட்டார். அது மட்டுமல்ல, வாலியை நேரடியாக யுத்தம் செய்து கொல்வதற்குப் பதிலாக மறைந்திருந்து கொன்றார்.

"மேலும், நாங்கள் அவர் பாலி மகாராஜாவுக்குச் செய்தவை களைப் பற்றியும் கேள்விப் பட்டோம். அவர் தன் வாமன தேவ ரூபத்தில் வந்து மூன்றடி நிலம் கேட்ட போது பாலி மகாராஜாவும் அதைக் கொடுப்பதற்கு சம்மதித்திருந்தார். ஆனால் அவரோ ஒரு மிகப் பிரம்மாண்டமான உருவத்தை எடுத்துக் கொண்டு எல்லாவற்றையும் பிடுங்கிக் கொண்டார். இதைப் பார்த்துக் கொண்டிருந்த பாலி மகாராஜாவின் புத்திரி, "எந்த உருவத்துடன் நீர் மூன்றடி நிலம் கேட்டீரோ, இது அந்த உருவமல்ல. எனவே நாங்கள் உமக்கு அதைக் கொடுக்க மாட்டோம்" என்று கூறினாள். ஆனால் பாலி மகாராஜாவோ, "சரி பரவாயில்லை. அப்படியே தருகிறேன்" என்று கூறியும், இதைக் கேட்ட பாலி மகாராஜாவின் புத்திரியோ, வாமன தேவரிடம், "இல்லவேயில்லை! நான் உம்மைக் கொல்வேன். உமக்கு நான்

விஷத்தைக் கொடுத்துக் கொல்வேன்!" என்று சபதமிட்டாள். எனவே அவள் பின்னர் பூத்தனாவாக வந்து விஷத்தைக் கொடுத்தாள். முதலில் அவள் வாமன தேவரைக் கண்டதும் அவரது அழகைப் பார்த்து அவர் தன் மகனாக வர வேண்டும் என்று ஆசைப்பட்டாள். ஆனால் பின் அவரது ஏமாற்றுக் குணத்தைப் பார்த்த பின்னர் அவள் அவரைக் கொல்ல எண்ணினாள். அவளை நாம் எப்படிக் குறை கூற முடியும்? மேலும் தன் தகப்பனாரிடமிருந்து கேட்ட படி மூன்று காலடி அளவுக்கு எல்லாவற்றையும் பெற்ற பிறகும் கூட, ஒரு காக்கை தன் உணவைப் பிடுங்கிக் கொண்டு அதை வைத்திருந்த பெட்டியையே உதைத்துத் தள்ளுவது போல், பாலி மகாராஜாவைக் கட்டி வைத்தார். எனவே நாங்கள் கிருஷ்ணரைக் கண்டிப்பாக கண்களுக்குக் கண்களாகப் பார்க்கவே முடியாது."

கோபியர்கள் கூறிய மேலே குறிப்பிடப்பட்டவைகளுக்கு விளக்கம் என்னவென்றால், அவர்கள் ஸ்ரீ கிருஷ்ணர் பகவான் என்று பௌர்ணமாசி கூறியதில் முழு நம்பிக்கைக் கொண்டிருந்தனர். ஆனால் அவர் பகவான் என்று தெரிந்தும் கூட, அவர் மனித ரூபத்தில் நிகழ்த்திய லீலைகளில் மட்டும் தான் அவர்கள் மூழ்கியிருந்தனர். கட்டில்லாமல் எப்போதும் பொங்கி வழிந்து கொண்டிருக்கும் பிரேமையினால் வரும் குழப்பத்தில் அவர்கள் ஸ்ரீ கிருஷ்ணரிடம் ஒருபோதும் நெருங்கிய தொடர்பு வைக்கவே மாட்டோம் என்றனர். இது தான் மதுர்ய பாவத்தின் ஒரு உதாரணம்.

பிருந்தாவனத்தில் ரஸ லீலையின் போது ஸ்ரீ கிருஷ்ணர் இலட்சக் கணக்கான உருவங்கள் எடுத்ததாக நாம் நினைக்கலாம். ஆனால் உண்மையில் அவர் அப்படி நிறைய உருவங்கள் எடுக்க வில்லை. ஸ்ரீல விஸ்வநாத சக்கரவர்த்தி தாக்கூரா தனது ஸ்ரீமத் பாகவதத்தின் விளக்கவுரையில், ஸ்ரீ கிருஷ்ணர் ரஸ லீலையின் போது தன் சுய அசல் உருவத்தில் ஒரே உருவத்தில் தான் இருந்தார் என்றும், ஆனால் அவர் மிகவும் வேகமாக ஆடியதால் அவர் சில சமயம் இங்கேயும், சில சமயம் அங்கேயுமாகக் காணப்பட்டார் என்றும் எழுதி யுள்ளார். எனவே ஒவ்வொரு கோபியும், "அவர் என்னுடன் தான் ஆடுகிறார்" என்று நினைத்தாள். ஒரு கம்பின் ஒரு ஓரத்தில் நெருப்பை எரிய விட்டு அதை மிகவும் வேகமாகச் சுற்றும் போது எவ்வாறு அந்த நெருப்பு வட்டத்தில் எல்லா இடத்திலும் தெரிகிறதோ அதே போல் தான் அவர் அந்த அளவு வேகமாக ரஸ லீலாவின் வட்டத்தில் ஆடினார் என்று அறிகிறோம்.

வாரனாசியின் பக்கமுள்ள எங்களுடைய கிராமத்தில், நான்கு அல்லது ஐயாயிரம் ரூபாய்கள் கொடுத்தால் மிகத் திறமையாக நடனமாடும் நடிகர்கள் இருந்தனர். அவர்கள் தங்கள் தலைகளின் மேல் பானைகளுக்கு மேல் பானைகளாக நிறைய அடுக்கியிருப்பார்கள்.

பானைகளுக்கு இடையில் தட்டுக்கள் வைக்கப் பட்டிருக்கும். எல்லாவற்றிற்கும் மேலாக மிக உயரத்தில் ஒரு தட்டின் மேல் தீபங்கள் எரிந்து கொண்டிருக்கும். அவர்கள் நாம் நினைக்க முடியாத அளவு வேகமாக சுழன்று ஆடுவார்கள். அப்போது மேலே எரிந்து கொண்டிருக்கும் தீபமோ பானைகளோ எதுவுமே கீழே விழாது. இவ்வாறு ஒரு சாதாரண மனிதனால் நடனமாட முடிந்தால் ஏன் கிருஷ்ணரால் ஆட முடியாது? அந்த ஒரே கிருஷ்ணரே நினைக்க முடியாத அளவு வேகமாக இலட்சக் கணக்கான கோபியர்களிடையில் ஆடினார். இதுவே மதுர்யம். மனித ரூபத்தில் நிகழ்த்தும் நர லீலைகளுக்கு மதுர்யம் உகந்தது. ஸ்ரீ கிருஷ்ணர், துவாரகையில் தன் ஐஸ்வர்ய சக்தியினால் தனித் தனியான உருவங்களை எடுத்தார். ஆனால் பிருந்தாவனத்திலோ எந்த விதமான காய- வியூஹமும் கிடையாது, எந்த விதமான அவதாரங்களும் கிடையாது, எந்த விதமான விரிவு உருவங்களும் கிடையாது. ஒரே கிருஷ்ணர் எல்லா கோபியர் களுடனும் மிகவும் வேகமாக ஆடியதால் அது ஒவ்வொரு கோபியும், "கிருஷ்ணர் என்னுடன் மட்டுமே ஆடுகிறார்" என்று நினைத்தாள்.

இந்த மதுர்யம் வைகுந்தத்தில் கிடையாது. இதே காரணத்தால் தான் கோபகுமார் அங்கேத் திருப்திப் படவில்லை. நாரதர் கோபகுமாரின் நாடித் துடிப்பைப் பார்த்த பின், "நீ ஆசைப்படுவது மிக மிகப் பெரியது. எனவே நான் உனக்கு உயர்ந்த தத்துவங்களைப் போதித்து உனக்குப் புரிவதற்காக உதவி செய்கிறேன். கோலோகத்துக்குச் செல்ல வேண்டுமானால் இவை அனைத்தையும் அறிந்திருப்பது மிகவும் அவசியம்" என்று அறிவுரை கூறினார்.

# அத்தியாயம் - 5

வைகுந்தம் ஒரு மிகப் பரந்து விரிந்த லோகம். மேலும் அங்கே அயோத்தியா, ஜகன்னாத் பூரி, துவாரகா, மதுரா, பிருந்தாவனம், கோவர்த்தனம் மற்றும் ராதா குண்டம் அனைத்தும் உள்ளன. அங்கு ஸ்ரீ கிருஷ்ணர் மட்டுமின்றி அவரது கோடிக் கணக்கான அவதாரங்களும் உள்ளன. பிரம்ம தேவரின் இரண்டு ஐம்பது வருட காலத்தில் ஒரு குறிப்பிட்ட மன்வந்தராவில் குறிப்பாக ஒரு சதுர் யுகத்தில் பகவானே தானாக இந்தப் பூவுலகத்தில் தோன்றுகிறார். பின்னர் அவரது பக்தர்கள் தங்கள் பக்தி பாவங்களைப் பொறுத்து வைகுந்தத்தில் குறிப்பிட்ட பகுதியை அடைந்து அங்கு பகவானின் தரிசனத்தை நேரடியாகப் பெற்று சேவை செய்து வாழ்கின்றனர்.

ஒரு சூரியன், தன் கதிர்களை கண்ணாடி போல் பிரதிபலிக்கும் எந்தப் பொருட்களின் மேல் வீசினாலும் அங்கு சூரியன் தெரிகிறது. ஆனால் சூரியனும் அதன் பிரதி பிம்பமும் ஒன்றல்ல. சூரியன் ஒரு பிம்பம். அதன் பிரதிபலிப்பான பிரதி பிம்பங்கள் எல்லா உலகங் களிலும் தெரிகின்றன. அவை பல விதங்களில் வித்தியாசமாகத் தெரிந்தாலும் அவற்றுள் பற்பல ஒற்றுமைகளும் உள்ளன. பகவானோ, சூரியனைப் போலல்லாமல், எத்தனை அவதாரங்கள் எடுத்தாலும் அவையனைத்தும் முழுவதுமாகச் சச்சிதானந்தைக் கொண்டவைகள். வைகுந்தத்தில் பகவான் அவரது காய-வியூஹ ரூபத்தில் இல்லை. பதிலாக அவர் எத்தனையோ உருவங்களில் குணங்களில் வித்தியாச மின்றி தோன்றி, தன் பக்தர்களின் ஆசைகளை நிவர்த்தி செய்கிறார். இராமாயணத்தில், பகவான் ஒருவரேயென்றும், பக்தர் களின் விருப்பத்திற்குத் தகுந்தவாறு நரசிம்ம அவரதாரம், கூர்ம அவதாரம், வாமன அவதாரம், ஹயக்ரீவ அவதாரம் - இப்படிப் பற்பல அவதாரங் களில் தோன்றுகிறார் என்று எழுதப்பட்டுள்ளது. பகவானால் அநேக

விதமான உருவங்களில் தோன்ற முடியும். சிலர், பகவானுக்கு வடிவமேயில்லையென்றும், இந்த உலகத்திலிருந்து எவர் கூப்பிட்டாலும் அவர்களுடைய குறிப்பான விருப்பத்துக்கு ஏற்றாற் போல் அவர் இந்த உலகத்தில் தோன்றுகிறார் என்றும் சொல்வார்கள். ஆனால் இது சரியல்ல. அவருடைய அனைத்து வடிவங்களும் நிஜமானவை, நித்தியமானவை. பகவானின் எந்த ஒரு வடிவத்தின் பெயரால் ஒரு பக்தன் கூப்பிடுகிறானோ அந்த வடிவம் அவனுக்குத் தோற்றம் அளிக்கிறது. எல்லா சாஸ்திரங்களும் இதையே தான் கூறுகின்றன. பகவானின் எந்த வடிவத்திலும் ஒரு குறையுமே கிடையாது.

சில பக்தர்கள் பகவானை "ஓம் நாராயணாய நமஹ" என்றும் "ஓம் நமோ பகவதே வாசுதேவாய" என்றும் மந்திரங்களை ஜெபித்து ஸ்ரீ இலக்சுமி பதி நாராயணரை வழிபடுகின்றனர். இதையே துருவ மகாராஜாவும் செய்து, மோட்சமும் பெற்றார். சிலர் நவத்வீப் மண்டலத்தில் ஓம் வராஹாய நமஹ என்று ஜெபித்து வராக பகவானை வழிபடுகிறார்கள். மற்றும் சிலர் ஓம் நரசிம்ஹாய நமஹ என்று நரசிம்ம தேவரை வழிபடுகிறார்கள். இந்த பக்தர்கள் அனைவரும் பின்னர் வைகுந்தத்துக்குச் செல்லும் போது அங்கே தனிப்பட்ட பகுதிகளை அடைகின்றனர். அங்கே ஸ்ரீமன் நாராயணர் எவ்வாறு தோன்றுகிறார்? ஒரு இடத்தில் அவரது நரசிம்ம ரூபத்திலும் இன்னொரு இடத்தில் அவரது வராக ரூபத்திலும் தோன்றுகிறார். உலகத்தில் எந்தப் பாகத்தில் எப்படிப்பட்ட ரூபம் தேவையோ அங்கெல்லாம் அவர் அந்தந்த ரூபத்தில் வருகிறார். உதாரணமாக, ஸ்ரீ கிருஷ்ணர் வரும் போது அவர் நந்த நந்தனனாக, கையில் புல்லாங்குழலுடன் தோன்றுகிறார். அந்த ரூபத்தை அவர் மாற்றவே மாட்டார். அவர் அதே ரூபத்திலேயே தான் இருப்பார். ஆனால் அவர் தன் இரண்டாந்தரமான லீலைகளை விஷேஷமான விதத்தில் நிகழ்த்துகிறார். அவர் கோபியர்களுடன் ராஸ லீலைகள் புரிவது, நந்த மகாராஜாவின் வீட்டில் குழந்தையாக விளையாடுவது - இவை அனைத்தும் நிரந்தரமானவை. ஆனால் கம்ஸனைக் கொல்லுதல் போன்றவற்றை அவர் கொஞ்சம் மாற்றலாம். கம்ஸனைக் கொல்வதற்குப் பதிலாக அவர் ஜராஸந்தனையோ வேறு யாரையுமோக் கொல்லலாம். அவ்வப் போதுள்ள தேவைகளுக்குத் தகுந்தவாறு அவர் தன் இரண்டாந்தர லீலைகளை மாற்றலாம். ஆனால் அவரது நித்தியமான லீலைகள் மாறுவதில்லை.

ஸ்ரீமன் நாராயணரை வழிபடுபவர்கள் வைகுந்தத்துக்குச் செல்வார்கள். ஆனால் வைகுந்தத்தின் எந்தப் பகுதிக்கு அவர்கள் செல்கிறார்கள்? ஸ்ரீ இலக்சுமி நாராயணர் வசிக்கும் குறிப்பான பகுதியை அவர்கள் அடைகிறார்கள். அதேபோல் நரசிம்ம மந்திரத்தை ஜெபிக்கும் பக்தர்கள் வைகுந்தத்தில் எங்கே நரசிம்ம தேவரின் பஜனைகள் நடைபெறுகிறதோ அங்கே தான் செல்வார்கள். அவர்கள்

ராமரையோ நாராயணரையோ பார்க்க மாட்டார்கள். நரசிம்மா, வராகா, கூர்மா இவர்களெல்லாம் லீலைகளில் வித்தியாசமானவர்கள், ஆனால் தத்துவத்தில் வித்தியாசமில்லாதவர்கள்.

இந்திர லோகத்தில் வாமன தேவர் அவதாரம் எடுப்பதற்கு முன்னால், நான்கு கரங்களுடன் கூடிய விஷ்ணுவின் ஒரு விஷேஷமான உருவத்தை இந்திர லோக தேவர்கள் வழிபட்டு வந்தனர். பின்னர் எழுந்த விஷேஷமான சம்பவத்தினால், வாமன தேவர் தோன்றி, பாலி மகாராஜாவிடமிருந்து அனைத்தையும் பிடுங்கிக் கொண்டார். தேவர்களின் தாயாரான அதிதி சில தவங்கள் மேற் கொண்டதால் தான் அவர் அப்போது தோன்றினார். எனவே வாமன தேவர், சொர்க்க லோகத்தில் எப்போதும் உறைந்திருக்கும் நான்கு கரங்கள் கொண்ட விஷ்ணுவை விடவும் வித்தியாசமான லீலைகளை நடத்தினார். ஆனால் தத்துவ ரீதியில் அவர்கள் இருவரும் ஒன்றே. வாமன தேவர் விஷ்ணுவிலிருந்து சிறிது வித்தியாசப் பட்டவரும் கூட. ஏனென்றால் வாமன தேவரிடம் சிறிது கபடமும் ஆனால் கடைசியில் விஷேஷமான கருணையை வழங்கும் குணமும் உள்ளது. வெளியில் பார்க்கும் போது அங்கே திருட்டு நடப்பது போல் தோன்றினாலும் உள்ளே மிகுந்த கருணையும் பக்த வாத்சல்யதாவும் (தன் பக்தர்களிடம் விஷேஷமான பாசம்) நிறைந்துள்ளது. அவர் தன் பக்தர்களின் மகிமைகளை அதிகரிக்க வைத்தார். பாலி மகாராஜாவைக் கஷ்டங்களுக்குள் சிக்க வைத்து அவரது பெயர் அழியாமல் உலகில் எப்போதும் விளங்க வைத்தார். வாமன தேவர் தோன்றவில்லை யென்றால் பாலி மகாராஜாவைப் பற்றி யாருக்குத் தான் தெரியும்? எனவே வாமன தேவர் அவரைக் கஷ்டங்களுக்குள் சிக்க வைத்தார். தன் பக்தர்களைப் பாதுகாப்பதற்காக அவர் ஒரு அழகான உருவத்தில் வந்தார்.

மேலெழுந்த வாரியாகப் பார்க்கும் போது அவர் அசுரர்களை ஏமாற்றி, தேவர்களைப் பாதுகாக்க வந்தது போல் தெரியலாம். ஆனால் உண்மை அதுவல்ல. அவர் இரண்டு பக்கங்களுக்கும் நன்மை பயக்க வைத்தார். உண்மையில், அவர் தேவர்களை விடவும் பாலி மகாராஜா வுக்கே அதிகமான கருணையை வழங்கியுள்ளார். தேவர்களுக்கு விஷேஷமான எந்தப் பயனும் இல்லை. ஆனால் பாலி மகாராஜாவுக்கு அது கிடைத்தது. பாலி மகாராஜாவிடமிருந்து பூதவுலக இன்பங்களைச் சுவைக்க வைக்கும் ஆசைகளைப் பிடுங்கிக் கொண்டு அவருக்குப் பக்தியை வழங்கினார். ஆனால் அவர் தேவர்களிடம் இருந்து அவ்வாறு பறிக்கவில்லை. மாறாக அவர்கள் சுகபோகங்களில் மூழ்க உதவியாக அவர்களது தேசங்கள் அனைத்தையும் மீட்டிக் கொடுத்தார். எனவே, அவர் உண்மையில் யாரிடம் கருணையை வழங்கியுள்ளார்? ஆனால் நாமோ இந்திரன் வழிபடுவது போல், "ஓ, பிரபு, தயவு செய்து எங்கள் இந்திரிய சுக போகங்களை மட்டும் பறித்து விடாதீர்! இவ்வாறு

கருணை செய்து எங்கள் வாழ் நாட்களையும் அதிகமாக்குவீர். என் மகன், மகள், செல்வம், மனைவி - இவைகளை தயவு செய்து எடுத்து விடாதீர். நான் பஜனை செய்வேன். ஆனால் அவர்களும் என்னுடன் எப்போதும் இருக்கட்டும்" என்று வழிபட விரும்புகிறோம்.

ஆனால் சிலரோ, "பிரபு! தயவு செய்து என்னிடமிருந்து எல்லாவற்றையும் பறித்துக் கொண்டு எனக்கு உமது கமலப் பாதங்களின் மேல் பரிசுத்தமான பக்தியைத் தாரும்!" என்று வேண்டுகின்றனர். இவற்றில் எது சரியானது? உன்னுடைய இரு கரங்களிலும் இவ்வாறு இரண்டு லட்டுக்களைக் கொடுத்திருந்தால் நீ இரண்டையும் கேட்பாயா, அல்லது ஒன்றை மட்டும் கேட்பாயா? பகவான் உன்னிடம், "சரி, நீ இந்திரிய சுக போகங்களையும் எடுத்துக் கொள், என்னிடம் பரிசுத்தமான பக்தியையும் வைத்துக்கொள்" என்று கூறி இரண்டையும் உன் கரங்களில் வைத்தால் நீ சுக போகங்களைத் தான் எடுத்துக் கொள்வாய்! பக்தியை எடுக்க மாட்டாய். உனக்கு உண்மையிலேயே பிரேம பக்தியில் அவ்வளவு தூரம் விருப்பம் இருந்தால் சுக போகங்களை அனுபவிக்கத் துடிக்கும் மன நிலையை கண்டிப்பாக விட்டு விட வேண்டும். இல்லாவிட்டால் நம் பக்தியில் களங்கமும் ஏமாற்றமும் சேர்ந்து விடும். ஆனால் உலகத்தில் வாழும் 99 சதவீதமான பேர்களும், "எங்கள் சுக போகங்கள் நன்றாக இருக்க வேண்டும். எங்கள் குடும்பங்கள் நன்றாக இருக்க வேண்டும். எங்கள் செல்வம், சுவையான உணவுகள் எல்லாம் நன்றாக இருக்க வேண்டும். எங்கள் தொழில், வியாபாரங்கள் அனைத்தும் நன்றாக நடக்க வேண்டும். இவையனைத்துடன் நாங்கள் உமக்குப் பக்தி செலுத்துவோம்" என்று வேண்டுகின்றனர். அதற்கு பிரபுவோ, "சரி" என்று கூறிக் கொண்டு அவர்களுக்கு வெறும் 'சாதாரணமான' பக்தியை மட்டுமே வழங்கி அவர்களை சுக போகங்களில் தொடர விடுகிறார்.

உலகங்களைப் பரிபாலிக்கும் பொறுப்பைப் பகவான் தேவர்களிடம் விட்டு விடுகிறார். ஆனால் இந்த உலகங்களோ தற்காலிகமானவை, அழியக் கூடியவை. தேவர்களிடம் அவர், "நீங்கள் எனக்கு இந்தச் சேவைகளைச் செய்யுங்கள்" என்று கூறி அவர்களுக்குப் பதவிகளைக் கொடுக்கிறார். ஆனால் சில தேவர்களோ, "நான் இப்போது இந்த மூவுலகங்களுக்கும் அதிபதியாகி விட்டேன். பிரபு எனக்கு இந்தப் பெரும் பதவியை அளித்துள்ளார். நான் இப்போது இந்தப் பிரம்மாண்டத்துக்கே தலைவன்" என்று எண்ணி விடுகிறார்கள். உண்மையில் இந்த விதமான பதவிகள் பக்திக்கு எதிரானவைகள் என்பதை அவர்கள் புரியாதவர்களாகயிருக்கிறார்கள். எனவே வாமன தேவர் இப்படிப் பட்ட தூண்டுதலை இந்திரனின் கைகளில் வைத்து விட்டு, அதே சமயம் பாலி மகாராஜாவிடமிருந்து இதே தூண்டுதல் களைப் பிடுங்கிக் கொண்டு அவருக்குப் பரிசுத்தமான பக்தியை வழங்கினார். இவ்வாறு வாமனதேவர் பாலி மகாராஜாவுக்கு

உண்மையிலேயே விஷேஷமான கருணையைக் காட்டியிருப்பதை அநேகமான மக்கள் அறிய மாட்டார்கள்.

ஆனால் இப்படிப் பட்ட அவதாரங்களை எடுத்துக் கொண்டு மிகவும் அழகான லீலைகளை ஸ்ரீமன் நாராயணர் ஒருபோதும் புரிய மாட்டார். அதே போல் சுவர்க்க லோகத்தில் உறைந்திருக்கும் நான்கு கரங்கள் கொண்ட விஷ்ணுவும் செய்ய மாட்டார். வாமன தேவர் ஏமாற்றியதைப் போல் நாராயணர் ஏமாற்ற மாட்டார். அவர் நிச்சயமாக பிரேமையை வழங்குவார். ஆனால் அவர் தம்மை ஏமாற்றுக்காரன் என்று மற்றவர்கள் எண்ணுவதற்கு வழி விட மாட்டார். சாதாரண மக்களோ, வாமன தேவர் ஏமாற்றினார் என்றே எண்ணுகிறார்கள். அவர் முதலில் மூன்றடி நிலம் கேட்டு, பின் மிகவும் பெரிய உருவத்தை எடுத்து அனைத்தையும் திருடி எடுத்துக் கொண்டார் என்று கூறுவார்கள். வாமன தேவர் இவ்வாறு பல விதமான திருவிளையாடல் களைப் புரிவார், ஆனால் ஸ்ரீமன் நாராயணர் அவ்வாறு செய்ய மாட்டார். இதே போல் தான் ஸ்ரீ ராமர் மற்றும் அனைத்து அவதாரங்களிலும் தனிப்பட்ட தன்மைகள் அமைந்துள்ளன. அவர்கள் அனைத்தும் தத்துவத்தில் ஒன்றேயென்றாலும், லீலைகள், ரஸா, மற்றும் தங்கள் பக்தர்களுடன் நடத்தும் விஷேஷமான பக்திப் பரிமாற்றங்களிளல் வித்தியாசங்கள் உள்ளன.

பிரம்ம தேவரின் இரண்டு ஐம்பது ஐம்பது வருடங்களும் சென்ற பின் மகா பிரளயம் நடைபெறுகிறது என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. பிரம்மாவுடன் இயற்கையும் சேர்ந்து கர்போதக சாயி விஷ்ணுவிடம் கலந்து விடுகிறார்கள். அதன் பின் கர்போதக சாயி விஷ்ணுவும் மறைந்து அவர் காரணோதகசாயி விஷ்ணுவிடம் கலந்து விடுகிறார். அப்போது எண்ணற்ற ஜீவாத்மாக்களும் விஷ்ணுவின் உடலில் கலந்து விடுகின்றன. மேலும், முக்தி பெற்ற ஜீவாத்மாக்கள் பிரம்மதேவருடன் வைகுந்தத்தை அடைகின்றனர். மற்ற ஜீவாத்மாக்களோ திரும்பவும் பிறவி சாகரத்தில் நுழைந்து மாயாவின் சக்கரத்தில் மாட்டிக் கொள்கிறார்கள். அப்போது பகவானின் மீன அவதாரம் சீக்கிரமேத் தோன்றுகிறது.

மார்க்கண்டேய ரிஷி வெகு காலமாகத் தவம் செய்து கொண்டிருந்தார். ஒரு நாள் அவர் கங்கையில் குளித்துக் கொண்டிருக்கும் போது ஒரு சிறு மீன் அவரது கமண்டலத்தினுள் புகுந்தது. அவர் அதைத் தன் வீட்டுக்கு எடுத்துச் சென்றார். பின்னர் அந்த மீன் அவரிடம், "மகா ரிஷியே, நான் உமது கமண்டலத்தினுள் வந்தேன். ஆனால் இங்கே எனக்கு இடம் போதவில்லை. தயவு செய்து என்னை நிறைய தண்ணீர் இருக்கும் ஒரு பெரிய இடத்தில் விட வேண்டும்" என்று கேட்டுக் கொண்டது.

மார்க்கண்டேய ரிஷி அந்த மீனைப் பார்த்த போது அது உண்மையிலேயே பெரிதாக வளர்ந்திருந்தது. எனவே அவர் அதை ஒரு சிறு குளத்தில் கொண்டு விட்டார். ஆனால் சீக்கிரமே அது அவரது கனவில் தோன்றி, "மகா ரிஷியே, நான் இப்போது இன்னமும் பெரியதாக வளர்ந்து விட்டேன். இந்தக் குளத்திலும் இனி என்னால் வசிக்க முடியாது" என்று கூறியது. மார்க்கண்டேய ரிஷி அந்த மீனைத் தூக்கிக் கொண்டு ஒரு ஆற்றில் விட்டார். ஆனால் அந்த மீன் திரும்பவும் அவரது கனவில் தோன்றி, "என்னால் இந்த ஆற்றிலும் இனிமேல் வசிக்க முடியாது. தயவு செய்து என்னைக் கடலில் கொண்டு போய் விட வேண்டும்" என்று கேட்டுக் கொண்டது.

தனது யோக வலிமையினால் மார்க்கண்டேய ரிஷி அந்தப் பெரிய மீனைக் கடலுக்கு மாற்றினார். அதன் பின் ஒரு கனவில் பிரம்ம தேவரின் இரவில் நடப்பதைப் போன்ற ஒரு பிரளயம் நடக்க விருப்பதை அறிந்தார். பிரம்மாவின் நூறு வருடங்களுக்குப் பின் வருவது மகா பிரளயம். ஆனால் பிரம்மாவின் இரவில் வருவதை நித்யப் பிரளயம் என்று கூறலாம்.

அந்த மீன் அவரிடம், "கடல் நீர் மட்டம் உயர்ந்து கொண்டே போகும். அப்போது நான் வருவேன். நீ இந்த உலகத்தில் உள்ள அனைத்து விதைகளையும் - தாவரங்களின் விதைகள், மாம்பழ விதை, கடுகு விதை இப்படி எல்லாவற்றையும் சேகரி. பறவைகள், மிருகங்கள் இப்படி அனைத்து ஜீவராசிகளையும் இரண்டு இரண்டாகச் சேர்த்து, ஒரு பெரிய வலிமையான படகினுள் வை. நான் காலையில் வரும்போது அந்தப் படகை என் மேல் கட்டி விடு" என்று கூறியது.

இரவோடு இரவாக மார்க்கண்டேய ரிஷி எல்லாவற்றையும் சேகரித்தார். ஒரு மிகவும் பலம் வாய்ந்த படகையும் உண்டு பண்ணி அதைக் கட்ட பலமான கயிறையும் தயார் செய்து, எல்லா விதை களையும் ஜீவராசிகளையும் படகினுள் அடைத்தார். அவர் தயாரான போது அண்ட சராசரமும் நீரில் மூழ்கிக் கொண்டிருப்பதைக் கண்டார். அவரால் வேறு எதையுமேப் பார்க்க இயலவில்லை. நீர் மெதுவாக மேலெழும்பி, உயரமான இடங்களையும் நிரப்பிக் கொண்டிருந்தது. இப்போது அந்த மீன் மிகவும் பிரம்மாண்டமான அளவில் பெரியதாகி, அதற்கு இரண்டு கொம்புகளும் முளைத்திருந்தன. "உன் படகை என் கொம்புகளில் கட்டு" என்று அந்த மீன் கட்டளையிட்டது. அந்த உத்தரவின் படி மார்க்கண்டேய ரிஷியும் கட்டினார். பிரம்மாண்டமான அளவான அந்த மீனோ, படகை அங்குமிங்குமாக எங்கெல்லாமோ இழுத்துச் சென்றது. அந்தப் பிரளயம் பிரம்மாவின் ஒரு இரவுவேளை முழுவதும் நடந்தது. மார்க்கண்டேய ரிஷி அந்தப் பிரளய காலம் முழுவதும் எதையும் உண்ணவோ அருந்தவோ இல்லை. அவரால் ஓய்வெடுப்பதற்கும் எந்த இடத்தையும் காண முடியவில்லை. "இது

என்ன வாழ்க்கை?" என்று நினைத்துக் கவலைப்பட்டார்.

கடைசியாக அவர்கள் பிரயாக்கில் வந்து சேர்ந்தார்கள். அங்கே அவர் ஒரு ஆல மரத்தை மட்டும் கண்டார். வேறு எதுவுமேயில்லை. அந்த மரத்தின் உச்சத்தில் ஒரே ஒரு இலை இருந்தது. அதன் மேல் வத்சாயி விஷ்ணு தன் கால் விரலை வாயில் வைத்துச் சூப்பியவாறு உறங்கிக் கொண்டிருக்கும் லீலையைக் கண்டார். மார்க்கண்டேய ரிஷியை அந்த விஷ்ணு ரூபம் கருணையுடன் பார்த்து ஆறுதல் கூறி, வேண்டிய சக்தியை வழங்கியது. உண்ணுவதற்கும் அருந்துவதற்கும் வசதிகள் அளித்து, "இவையெல்லாம் இன்னும் சில நாட்களில் முடிந்து விடும். அதன் பின் நீவிர் திரும்பவும் ஒரு பிரஜாபதியாக ஆவீர். பிரம்ம தேவர் திரும்பவும் படைப்புத் தொழிலை ஆரம்பிப்பார்" என்று கூறியது.

இது ஒரு மீன அவதாரம். இந்த மீன அவதாரம் வைகுந்தத்தில் உள்ளது. உலகத்தில் எப்போதெல்லாம் தேவையோ அப்போதெல்லாம் அவர் வருகிறார். அவரது தத்துவம் ஸ்ரீமன் நாராயணரிடமிருந்து வேறல்ல. அவர்களது லீலைகள் வெவ்வேறானவை, ஆனால் தத்துவத்தில் அனைத்தும் ஒன்றேயாகும்.

இன்னொரு மீன அவதாரம் வேதங்களைப் பாதுகாத்தது. ஒரு சமயம், அசுரர்கள் வேதங்களைத் திருடி அவற்றைப் பிரளய கால சமுத்திரத்தினுள் எறிந்து விட்டதால் வேதங்கள் மறைந்து விட்டன. அழிக்கும் மனப்பான்மை அசுரர்களின் குணம். நாம் இப்போதும் வேத சாஸ்திரங்களெல்லாம் மெதுவாக அழிவதைக் காண்கிறோம். ஜனங்கள் அவற்றை மதிக்க வில்லையானால் என்ன ஆகும்? அவைகள் மெதுவாக மறைந்து போகும். வேதங்கள் இருக்காது. ஸ்ரீமத் பாகவதத்தைக் காண முடியாது. இப்படி அனைத்து சாஸ்திரங்களும் முழுவதுமாக மறைந்து போகும். பிருந்தாவனம், மதுரா போன்ற புண்ணியத் தலங்களில் பக்தி நிலைகள் மாறிவிடும். பின்னர் மனிதர்களும் மாறி விடுவார்கள். அவர்கள் சாதுக்களையும் முனிவர்களையும் மதிக்க மாட்டார்கள். பகவத் கீதையையும் ஸ்ரீமத் பாகவதத்தையும் மதிக்க மாட்டார்கள். இவ்வாறு, வேதங்கள் மறைந்து போனதால் அவற்றைப் பாதுகாக்க இன்னொரு மீன அவதாரம் தோன்றியது.

அந்த மீன அவதாரம் சத்ய விரத முனிவரைக் காப்பாற்றியது. அவர் அப்போது தாமோதாராஷ்டகத்தைப் பாடி வழிபட்டுக் கொண்டிருந்தார். தன்னுடன் எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு கடலினுள் மிகவும் நீண்ட காலங்கள் வசித்து வந்தார். வேதங்கள், சாஸ்திரங்கள் அனைத்தும் அவரது இதயத்தில் இருந்தன. திரும்பவும் பிரளயம் நடந்தது. பின்னர் நான்கு திசைகளிலும் படைப்புக்கள் ஆரம்பித்தன. எனவே வைகுந்தத்தில் ஒரு மீன அவதாரமல்ல, பற்பல மீனவதாரங்கள் உள்ளன. அங்கே விதம் விதமான பகுதிகள் விதம்

விதமான பக்தர்களுக்குத் தகுந்தவாறு அமைந்துள்ளன. சத்யவிரத முனிவரின் வழி பாட்டுக்குகந்த பகவானின் சொரூபம் இந்த மீன அவதாரமேயாகும்.

இதே போல் தான் கூர்ம அவதாரம். பாற்கடலைக் கடையும் போது அசுரர்களும் தேவர்களும் சேர்ந்து, அதில் வெளிவரும் திரவியங்களைப் பகிர்ந்து கொள்ள சம்மதித்தனர். பிரம்மதேவரின் மூலம் விஷ்ணு சில உபதேசங்களைக் கொடுத்திருந்தார். இல்லாவிடில் பாற்கடலிலிருந்து எதுவுமே தோன்றியிருக்காது. அவர்கள் அனைவரும் பாற்கடலைக் கடைய முடிவு செய்து மந்தார மலையை மத்தாக நடுவில் கொண்டு வைத்தனர். ஆனால் அதைத் தாங்குவதற்கு எந்த விதமான அடித்தளமும் இல்லாததால் அது உடனே மூழ்கியது. அவர்கள், "இது மிகவும் கடினமான வேலை. இதை நாம் எப்படிக் கடலின் உள்ளிலிருந்து மேலே தூக்க முடியும்? இதை அடியில் தாங்கும் அடித்தளம் எங்கே கிடைக்கும்?" என்று எண்ணினார்கள்.

எனவே அவர்கள் விஷ்ணுவை வழிபட்டார்கள். அவர் ஆமையின் வடிவத்தை எடுத்து கூர்ம அவதாரமாகத் தோன்றினார். "உங்களின் நலனுக்காக நான் இந்த ஆமை வடிவத்தை எடுத்துள்ளேன். என் மேல் அந்த மலையை நிறுத்தி, வாசுகி என்ற பாம்பைக் கயிறாகச் சுற்றி இந்தப் பாற்கடலைக் கடையுங்கள்" என்று அறிவுரை கூறினார்.

தேவர்களும் அசுரர்களும் மந்தார மலையைப் பாற்கடலின் அடியில் ஆமையாக நின்றிருந்த விஷ்ணுவின் மேல் வைத்து, பாம்புகளின் அரசனான வாசுகியினால் அதைச் சுற்றிக் கட்டினார்கள். ஒரு பக்கத்தில் அதன் வாய்ப் பாகமும் மறு பக்கத்தில் அதன் வால் பாகமும் அமைந்தன. அப்போது தேவர்கள் அசுரர்களிடம்,"நாங்கள் உங்களை விடவும் மூத்தவர்களானதால்தலைப் பக்கத்தை நாங்கள் எடுக்கிறோம். நாங்கள் உங்களை விடவும் மதிப்பில் உயர்ந்தவர்கள்" என்று வாதித்தனர்.

அதற்கு அசுரர்களோ, "இல்லவே இல்லை. நாங்கள் உங்களுக்கு எந்த விதமான மதிப்பும் கொடுக்க மாட்டோம். நாங்கள் தான் தலைப் பக்கத்தைப் பிடிப்போம். வால் பக்கம் கீழ்த் தனமானது. நாங்கள் அதை எடுக்க மாட்டோம்" என்று மறுவாதம் செய்தனர். தேவர்களின் புத்திசாலித்தனமான திட்டத்தை அறியாத அசுரர்கள் தலைப் பக்கத்தையே பிடிவாதமாகக் கேட்டனர். ஆனால் தேவர்கள் விட்டுக் கொடுக்காமல், "நீங்கள் எங்களுடைய சிறு சகோதரர்கள். அதிதியின் புதல்வர்கள். எனவே கடையும் போது என்னவெல்லாம் முதலில் வருகிறதோ அவைகள் எங்களுக்குச் சொந்தம். பின்னால் வருபவைகளை நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள். அது மட்டுமல்ல, நாங்கள் உங்களுக்கு மூத்தவர்களானதால் வாசுகியின் தலைப்

பக்கத்தையே எடுப்போம்" என்று இன்னமும் பிடிவாதமாகக் கூறினார்கள்.

ஆனால் அசுரர்களோ, "இல்லவேயில்லை! அப்படி ஒருபோதும் நடக்காது. நாங்கள் தான் உங்களை விடவும் உயர்ந்தவர்கள். நாங்கள் உங்களுக்கு இளையவர்களா? அது என்ன? நாங்கள் தான் உயர்ந்தவர்கள். நாங்கள் தான் வாசுகியின் தலைப் பகுதியை எடுப்போம்" என்று அடம் பிடித்தனர்.

உண்மையில் தேவர்கள் வாசுகியின் வால் பக்கத்தையே எடுக்க முடிவெடுத்திருந்தனர். ஏனென்றால் கடையும் போது வாசுகியின் சீறும் சத்தத்துடன் அதன் வாயிலிருந்து கொடிய ஆலகால விஷம் வெளிப்படும் என்பது தேவர்களுக்கு நன்றாக தெரியும். ஆனால் அந்த அசுரர்களோ இதை அறியாதிருந்தனர். அவர்கள் பாய்ந்து சென்று வாசுகியின் தலைப் பாகத்தைப் பிடித்துக் கொண்டனர். பின்னர் இரு பக்கமும் கடும் பலத்தைக் கொடுத்துக் கடையும் போது வாசுகியின் வாயிலிருந்து ஆலகால விஷம் வெளியே வந்ததால் அது அசுரர்களை எரித்தது. "ஓ! தேவர்கள் நம்மை திட்டமிட்டு ஏமாற்றியுள்ளனர்! இனி அவர்கள் என்ன சொல்கிறார்களோ அதற்கு எதிராக நாம் செய்ய வேண்டும்" என்று அசுரர்கள் எண்ணினார்கள்.

பாற் கடலைக் கடையும் போது முதலில் ஆலகால விஷமும் பின் இலக்சுமி தேவியும் வெளிப்பட்டார்கள். அதன் பின் அமிர்தம் வெளிவந்தது. அதன் பின் தன்வந்தரியும், வெள்ளை யானையும், குதிரையும் இவ்வாறு பற்பல அதிசயமான திரவியங்கள் வெளி வந்தன. இலக்சுமி தேவி வெளியே வந்த போது, "நான் யாரைத் திருமணம் செய்ய?" என்று சிந்தித்தாள். யாரைப் பார்த்தாலும் அவர்களிடம் நிறையவும் குறைகளையேக் கண்டாள். பிரம்மாவைக் கூட வேண்டாம் என்று அனைவரையும் ஒதுக்கினாள். கடைசியில் அங்கே விஷ்ணு தோன்றினார். இலக்சுமி தேவி விஷ்ணுவின் கழுத்தில் மாலையை அணிவித்து அவரை மணம் செய்து கொண்டாள்.

இவ்வாறு பிரம்மாண்டமாக பாற்கடலைக் கடைந்து கொண்டிருக்கும் போது கூர்ம தேவரோ அதைத் தன் முதுகில் அதை ஒரு சிறு சொறி போல் உணர்ந்தார். அவ்வளவு பெரிய மலையால் கடைந்தும் அது அவரது முதுகில் ஒரு சிறு உரசல் போலவே தெரிந்தது! அப்போது அவர் சுவாசிக்கும் போது கடலில் ஏற்ற இறக்கங்கள் ஏற்பட்டன. சிலர் கடலின் ஏற்ற இறக்கங்கள் சந்திரனால் ஏற்படுவதாகக் கூறுவார்கள். ஆனால் சாஸ்திரங்கள் கூறுவது தான் சரி.

இன்னொரு கூர்ம அவதாரம் வேறொரு யுகத்தில் ஒரு மன்வந்தரா சமயத்தில் பூமியை ஆதாரமாகத் தாங்குவதற்காக

ஏற்பட்டது. இவை இரண்டு கூர்ம அவதாரங்களும் வெவ்வேறானவை.

இனி வராக அவதாரத்தைப் பற்றிப் பார்ப்போம். பிரம்ம தேவர் தன் படைப்புத் தொழிலை ஆரம்பிப்பதற்கு முன்னால் எங்கும் நீரால் நிரம்பப்பட்டிருந்தது. பின்னர், தான் தபசு புரிய வேண்டும் என்று கூறும் ஒரு சத்தத்தைக் கேட்டார். பின்னர் ஸ்ரீமன் நாராயணரைச் சந்தித்து அவரிடமிருந்து ஸ்ரீமத் பாகவதத்தின் சதுர் சுலோகங்களைக் கேட்டுப் படைப்புத் தொழிலுக்குத் தேவையான பலங்களைப் பெற்றார். ஆனால் அப்போது பூமி தண்ணீருக்குள் முழுவதுமாக மூழ்கப்பட்டுக் கிடந்தது. எனவே வராக தேவர் முதலில் பிரம்மாவின் நாசித் துவாரம் வழியாக சிறு உருவத்தில் வெளிப்பட்டார். பின்னர் அவர் இரண்டு மடங்கு பெரியதாகவும் பின் மேன்மேலும் பெரியதாகி சிறிது தூரம் சென்றதும் மிகப் பெரிய பிரம்மாண்டமான உருவத்தை எடுத்து வானம் முழுவதும் அடைத்துக் கொண்டார். தன் நீளமான முன்பற்களையும் நான்கு கால்களையும் கீழே நோக்கியவாறு நேராக சமுத்திரத்தில் குதித்தார். அதிலிருந்து எழுந்த அலைகள் பிரம்ம லோகம் வரையிலும் சென்று எல்லா விடங்களிலும் பாய்ந்தன. வராக தேவர் ரஸாதலத்தை அடைந்து அங்கிருந்த பூமியைத் தன் இரண்டு முன்-பற்களுக்கிடையில் வைத்துப் பிடித்தவாறு வெளியே கொண்டு வந்தார். இது ஒரு வராக அவதாரம்.

இன்னொரு வராக அவதாரமும் உள்ளது. இந்த வராகர் ரஸாதலத்தை அடையும் போது அங்கே ஹிரண்யக் ஷா தயாராகக் காத்துக் கொண்டிருந்தான். ஹிரண்யக் ஷா தன்னுடன் சரி நிகரான பலத்துடன் யுத்தம் செய்ய ஒருவரைத் தேடிக் கொண்டிருந்தான். அப்போது அவன் நாரத முனிவரிடம் தான் எங்கே அப்படி ஒருவரைக் காண முடியும் என்று கேட்டான். அதற்கு நாரதர் வருண தேவரிடம் போய்க் கேட்குமாறு கூறினார். வருண தேவன், "ஆம், நீ ஒரு சரியானவரைக் காண்பாய். அவர் உன்னைப் பொடிப் பொடியாக அரைத்து விடுவார்" என்றான்.
"அது யார் அவன்?"
"விஷ்ணு."
"விஷ்ணுவை நான் எங்கே காணலாம்."
"அவர் எங்கிலும் இருக்கிறார். ஆனால் நீ அவரைக் காண வேண்டுமானால் அது மிகவும் கடினம். நீ அவரைச் சந்திக்கும் போது அவர் உன் அகங்காரத்தை அழித்து விடுவார்".

மகா பிரளயத்தின் போது ரஸாதலத்திற்குச் சென்றால் அங்கே விஷ்ணுவைச் சந்திக்கலாம் என்பதை அறிந்த ஹிரண்யக் ஷா அங்கே முன் கூட்டியே போய்க் காத்திருந்தான். வெகு நாட்களாக நீரில் மூழ்கியிருந்தான். கடைசியில் அங்கே வராக பெருமான் தோன்றி மூழ்கியிருந்த பூமியைத் தன் முன்-பற்களுக்கிடையில் பிடித்தவாறு ஒரு யானை எவ்வாறு ஒரு சிறு மலரை அலாக்காகத் தூக்குமோ அதுபோல்

தூக்கி பூமியை நீரின் வெளியில் விட்டார். பின்னர் அவர் ஹிரண்யக் ஷாவுடன் யுத்தம் புரிய திரும்பினார். அவர்கள் இருவரும் ஆயிரக்கணக்கான வருடங்களாக யுத்தம் செய்து கடைசியில் வராக பெருமான் தன் கதாயுதத்தால் ஹிரண்யாக் ஷாவை அடித்துக் கொன்று அவனது அகங்காரத்தையும் அழித்து பின் மறைந்து போய் விட்டார். இவை இரண்டும் வேறு வேறான வராக அவதாரங்கள். ஒன்று வெள்ளை நிறம், மற்றொன்று கறுப்பு நிறம்.

இன்னொரு வராக அவதாரம் யக்ஞ வராக பெருமானாவார். அவரது ஒவ்வொரு மயிர் நாளங்களிலும் இலட்சக் கணக்கான பிரம்மாண்டங்கள் அடங்கியுள்ளன. அவர் யக்ஞ பலன்களை ஏற்றுக் கொள்ளுகிறார். அவரது கருணையினால் பூமி தேவி புராணங்களைக் கேட்டாள். அதையே வியாஸ தேவர் எழுதி வைத்தார். எனவே இதிலிருந்து புராணங்கள் நித்தியமானவைகள் என்று தெரிகிறது. பூமியின் பரப்பு மிகவும் கடினமானதாக இருந்ததால் மக்களால் விவசாயம் எதுவும் செய்யமுடியவில்லை என்று பக்தர்கள் வேண்டி னார்கள். பூமியினால் நீரைத் தேக்கி வைக்க முடியவில்லை, மக்கள் தானியங்களில்லாமல் உயிர் வாழ முடியவில்லை. எனவே யக்ஞ வராகர் கருணை கொண்டு தன் பலமான முன் பற்களால் மலை களையெல்லாம் வீழ்த்தி, மண்ணை மிருதுவாக ஆக்கினார். காட்டுப் பன்றியின் இயற்கையான குணம், தன் இரு முன்-பற்களைக் கொண்டு பூமியைத் தோண்டுவது. அதன் பின் பூமியின் மேற்பரப்பு உழுது வைத்தது போல் ஆகியது. அப்போது பூமி ஒரு பெண் பன்றி உருவம் எடுத்தது. அவளது பெயர் தத்ரி தேவி. அவள் பூதேவியின் ஒரு சக்தி. விஷ்ணுவின் பன்றி அவதாரமும் பூதேவியின் பன்றி அவதாரமும் சேர்ந்து அவர்களுக்குப் பிறந்தவனே நரகாசுரன். அவனுக்கு முதலாவது தத்ரி-நந்தனன் என்ற பெயர் இருந்தது. ஆனால் பின்னர் கெட்ட சேர்க்கையினால் அவன் அசுர குணத்தைப் பெற்றான். எப்படி ஒருவன் ஒரு சாதுவுடன் சேர்ந்தால் நல்லவனாக ஆகிறானோ அதே போல் ஒருவன் ஒரு துஷ்டனுடன் சேரும் போது கெட்டுப் போகிறான். நம்மிடன் எதுவும் எழுதப்படாத ஒரு வெறும் காகிதம் இருந்தால் அதில் நல்லதையும் எழுதலாம் கெட்டதையும் எழுதலாம். நம் இதயம் அவ்வாறு ஒரு வெறும் காகிதம் போன்றது. ஒருவன் ஒரு சாதுவின் சேர்க்கை கிடைக்கப் பெற்றால் அந்த சாது அவனிடம் எதுவும் பேசவில்லையானாலும் கூட, சாதுவின் பக்கத்தில் இருந்தாலே போதும், காற்றைப் போல் தானாக அவரிடமிருந்து வாழ்க்கைக்குத் தேவையான எல்லா நலன்களும் வந்து சேரும். ஒரு சாதுவின் பக்கத்தில் போய் வெறுமனே உட்கார்ந்திருந்தாலே போதும், அவருடைய சுத்தமான எண்ணங்கள் நம்மிடம் புகுந்து அவை நம்மைப் புனிதப்படுத்தும்.

ஊதுவத்தி நன்றாக மணத்துடன் எரியும் போது அதிலிருந்து

வட்ட வட்டங்களாகப் புகை கிளம்புகிறது. ஆனால் காற்று எதுவும் இல்லையென்றால் அவை எங்கேயும் செல்லுமா? செல்லாது. ஆனால் அது காற்றின் உதவியால் எங்கும் பரவி, ஆயிரக் கணக்கானவர்களின் மூக்கினுள் நுழையும். எப்போதும் தெய்வீக எண்ணங்களையேத் தன்னுள் கொண்டுள்ள ஒரு பக்தன் பஜனை செய்கிறான் என்று வைத்துக் கொள்வோம். அவனிடமிருந்து இதே போல் மங்களகரமான பக்தி அலைகள் எழும்பாமல் இருக்குமா? கண்டிப்பாக எழும்பி அனைவரையும் அது கவரும். அகஸ்திய முனிவரின் ஆஸ்ரமத்தில் அவரது தெய்வீகத்தன்மையினால் பாம்புகளும் கீரிகளும், புலிகளும், மான்களும் எந்த விதமான பகையுமே இன்றி அமைதியாக வாழ்ந்தன. நீ ஒரு கெட்டவனுடன் சேர்ந்தால் அவனது கெட்ட குணங்கள் உனக்கும் வந்து அவை உன்னை அழித்து விடும். ஆனால் ஒரு சாதுவின் சேர்க்கையில் அவர் உன்னிடம் எதுவுமே பேசவில்லை யென்றாலும் கூட அவரது எண்ணங்கள் உன்னைத் தூய்மைப் படுத்தும். ஒருவன் வேண்டும் என்றோ வேண்டாம் என்றோ எப்படியான எண்ணத்துடன் சூரியனின் முன் போய் உட்கார்ந்தாலும் சூரிய வெளிச்சம் அவன் மேல் கண்டிப்பாக விழும். அதே போல் தான் ஒரு சாதுவின் இயற்கையும். தானாக அதன் நன்மைகள் வந்து சேரும். அந்த சாது பேசாமல் இருந்தாலும் கூட, அவர் பக்கம் உட்கார்ந்தால் நீ உடனடியாகச் சுத்தமடைவாய். அவரது பாவபக்தி மெதுவாக உனக்கும் வந்து சேரும். ஆனால் ஒருவன் சாதுவின் பக்கத்தில் உட்கார்ந்திருந்தும் அவனது மனநிலை மாறவில்லையென்றால் அவன் கெட்ட சேர்க்கையில் மிகவும் அதிகமாக ஈடுபட்டு, அவனும் அவர்களைப் போல் மிகவும் கெட்டு விட்டான் என்று அறிந்து கொள்ள வேண்டும். கெட்ட சேர்க்கை என்பது என்ன? ஒருவன் கொடிய இதயத்துடன் வேண்டுமென்றே தீய செயல்களைச் செய்வது. இது எல்லாவற்றிலும் மோசமானது. அப்படிப்பட்ட ஒருவனுடன் நீ சேர்ந்தால் அவனுடைய செல்வாக்கு உன்னைப் பலமாகப் பாதிக்கும். கொடிய இதயம் கொண்ட எவருடனும் நீ சேராதே. சாதுக்களின் சேர்க்கையில் எப்போதும் இரு.

நாம் இரண்டு விதமான திருடர்களை எடுத்துக் கொள்வோம். ஒரு திருடன் வெளியிலுள்ளவன். அவன் நமது பணம், கடிகாரம், வானொலிப் பெட்டி, இது அது என்று எல்லாவற்றையும் திருடிக் கொண்டு போய் விட்டான் என்று வைத்துக் கொள்வோம். இன்னொருவன் நம் பேரில் மிகவும் பாசம் வைத்துக் கொண்டு, "என் நண்பனே! நீ பஜனை எதுவும் செய்ய வேண்டாம். உன் அருமையான வாழ்க்கையை எங்களுடன் களித்து நீ எப்போதும் மகிழ்ச்சியாக இரு. கவிதைகளிலும் பாடல்களிலும் மிகவும் அழகாகப் பாடப் பட்ட காதல் மற்றும் பாசங்களை நாங்கள் உங்களிடம் காட்டுகிறோம். நீ அந்தப் பாசத்தில் பகவானையே மறந்து விடலாம்" என்று அறிவுரை கூறுகிறான் என்று வைத்துக் கொள்ளுங்கள். முதலாவது திருடனோ நம் பணத்தையும் சில உலகப் பொருட்களையும் மட்டுமேத் திருடிக்

கொண்டு செல்கிறான். இவர்கள் இருவரிலும் எவன் மிகவும் ஆபத்தானவன்? பகவானிடம் பக்தி செலுத்த அவசியமில்லை என்று கூறுபவனே மிகவும் ஆபத்தானவன்! முதல் திருடனோ நம்மிடமிருந்து நம் பொருட்களை மட்டுமே திருடியிருக்கிறான். ஆனால் நம் பக்தி நம்மிடமேயுள்ளது. அதை அவன் திருடவில்லை. ஒருவகையில் அவன் (நம் உலக பொருட்களைத் திருடியதால்) நமக்கு நண்பனாகவும் ஆகிறான். ஆனால் பக்தியின் மேல் நமக்கு இருக்கும் ஆவலை ஒருவன் திருடினால் அவன் நமக்கு மிகப் பெரிய எதிரி ஆகிறான். அவனை நண்பன் என்ற உடையில் வந்திருக்கும் எதிரி என்றே அழைக்க வேண்டும்.

சேர்க்கையே ஒருவனின் இதயத்தில் பக்தியைக் கொடுக்கிறது. அதுவே ஒருவனிடமிருந்து பக்தியை அழிக்கவும் செய்கிறது. சேர்க்கையே நம்மை இந்த உலகில் கட்டிப் போடவும் முக்தியை அளிக்கவும் காரணம். நாம் எவர்களிடம் சேர்க்கை வைத்துள்ளோமோ அவர்களுடைய குணங்களே நமக்கும் வருமானதால், கெட்ட சேர்க்கையே நமது இதயத்தின் முதல் எதிரி. கெட்ட சேர்க்கையினால் பகவானுக்கும் பூமி தேவிக்கும் பிறந்த மகன் கூட கெட்டு விட்டான். யாருடைய சேர்க்கையை அவன் வைத்திருந்தான்? துரியோதனன், சகுனி, கம்ஸன், ஜராஸந்தன் - இவ்வாறு யாரெல்லாம் ஸ்ரீ கிருஷ்ணருக்குப் பகையாளிகளாகவும் நாத்திகர்களாகவும் இருந்தார் களோ அவர்கள் அனைவரிடமும் சேர்க்கை வைத்துக் கொண்டு பகவானுக்குத் தொல்லைகளைக் கொடுத்தான். எனவே தான் அவனுக்கு நரகாசுரன் என்ற பெயர் வந்தது.

சாஸ்திரங்களில் மொத்தம் ஐந்து விதமான வராக அவதாரங்கள் கூறப்பட்டுள்ளன. அவையனைத்தும் வைகுந்த லோகத்தில் உள்ளன. உலகங்களில் எங்கு அவர்கள் தேவையோ அங்கெல்லாம் அவர்கள் தோன்றி தன் பக்தர்களுக்கும் அதே உருவத்தில் காட்சியளிக்கிறார்கள். பின்னர் அந்தப் பக்தர்கள் முக்தி யடையும் போது அவர்கள் வைகுந்தத்துக்குச் சென்று பகவானுக்கு நேரடியாகச் சேவை செய்வார்கள்.

இதுபோல் நரசிம்ம தேவரும் பற்பல அவதாரங்களில் தோன்றியுள்ளார். அவற்றில் ஒரு அவதாரமே ஹிரண்யகசிப்புவைக் கொன்று பிரகலாதனைக் காப்பாற்றியது. இன்னொன்று "மாத்ர் சக்ர பிரமட்டா" என்ற அவதாரம். மாத்ர் சக்ர என்றால் உலக நன்மை களுக்குத் தீங்கு விளைவிக்கும் மாதுக்கள் என்று அர்த்தம். அவர்களது வலிமை மேலோங்கும் போது நரசிம்ம பகவான் தோன்றி அவர்களை அடக்குகிறார். இன்னொரு அவதாரம் பூனை வடிவத்தில் வந்து பற்பல திருவிளையாடல்களை நிகழ்த்தியது. அதுவும் அரக்கர்களை அடக்கி பக்தர்களைக் காத்தது.

தென்னிந்தியாவில் ஜீயர் நரசிம்மா என்றும் பானா நரசிம்மா என்றும் இரண்டு நரசிம்ம மூர்த்திகள் உள்ளனர். அவை இரண்டும் தனித்தனியான அவதாரங்கள். வேறு வேறு கல்பத்தில் தோன்றிய வர்கள். அவர்களுடைய லீலைகளிலும் பல வித்தியாசங்கள் உண்டு. ஒரு தேசத்தில் ஒரு சமயம் பெரிய காட்டுப் பன்றி ஒன்று வாழ்ந்து வந்தது. அந்த தேசத்தைச் சுற்றிலும் மலைகளும் காடுகளுமாக இருந்தன. அங்கே ஒரு பெரும் பக்தர் விவசாயியாக வாழ்ந்து வந்தார். அவர் சோளத்தைப் பயிரிட்டிருந்தார். ஒவ்வொரு இரவும் இந்தக் காட்டுப் பன்றி வந்து அவரது சோளங்களைச் சாப்பிட்டுச் சேதங்கள் செய்து விட்டுப் போவது வழக்கம். தன் நிலமும் பயிர்களும் இப்படி அழிகிறதே என்று அந்த பக்தருக்கு மிகவும் வருத்தம். எனவே அவர் ஒரு சிறு காவல் குடிசையை உயரமாக நிலத்தின் நடுப்பாகத்தில் கட்டி அதிலிருந்து இரவில் இதைக் கண்காணித்தார். எதிர் பார்த்தது போல் அந்தக் காட்டுப் பன்றி வந்து பயிர்களை எல்லாம் சேதம் செய்தது. இதைக் கண்ட விவசாயி தன் கையில் ஒரு கம்பை எடுத்துக் கொண்டு, காவல் குடிசையிலிருந்து கீழே இறங்கி அந்தப் பன்றியைத் துரத்தினார். அந்த பன்றி ஓட, அதன் பின்னால் அந்த பக்தரும் ஓடினார். சிறிது தூரம் சென்றதும் அந்தப் பன்றி சிரித்தவாறு நின்று கொண்டு, தன் நரசிம்ம ரூபத்தைக் காண்பித்தது. "நான் உனக்கு என் கருணையுடன் தரிசனம் கொடுக்க வேண்டும் என்பதற்காகத் தான் இவ்வாறு செய்தேன். இனி நீ எனக்கு சோளங்களைப் படைக்க வேண்டும். அது எனக்கு மிகவும் பிரியமானது. நான் உன் இதயத்தில் இருக்கும் எல்லா ஆசைகளையும் நிவிர்த்தி செய்கிறேன். நீ இங்குள்ள மன்னனிடம் சென்று செல்வங் களைக் கேட்டு அதைக் கொண்டு எனக்கு ஒரு கோயிலை, சம்பா பூக்கள் நிறைந்துள்ள இந்த மலையின் உச்சியில் கட்டுவாயாக" என்று கூறி மறைந்தார்.

நரசிம்மராக இருந்தாலும் காட்டுப் பன்றியின் உருவத்தை அவர் எடுத்தார். இன்றும் அந்தக் கோயிலில் ஒவ்வொரு அக் ஷய-த்ருதீயா நாட்களிலும் நரசிம்ம மூர்த்தியைச் சந்தனங்களால் அலங்கரித்து அவரைப் பன்றி ரூபத்தில் தோன்ற வைக்கிறார்கள். இவ்வளவு தான் - அவர் ஒரு வருடத்தில் ஒரே ஒரு நாள் தான் இப்படிப் பன்றி ரூபத்தில் தரிசனம் அளிக்கிறார். இது ஜீயர் நரசிம்மா. அவர் ஒரு குறிப்பிட்ட கல்பத்தில் தோன்றியவர். இதனால் சில இடங்களில் நரசிம்மரையும் வராகரையும் சேர்த்து ஒன்றாகவும் வழிபடுகிறார்கள்.

இதேபோல், சாஸ்திரங்களில் ஹயக்ரீவா, ஹம்ஸா போன்ற அவதாரங்களுக்கும் இரண்டு, நான்கு அல்லது ஐந்து விதமான அவதாரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆனால் அவர்கள் அனைவரின் தத்துவமும் ஒன்றே. தங்கள் பக்தர்களின் பக்திப் பாவங்களுக்குத் தகுந்தவாறு அவர்களிடமிருந்து விதம் விதமான சேவைகளைப் பெற்று

பக்தர்களை மகிழ்விப்பதற்காக அவர்கள் வைகுந்தத்தில் வீற்றிருக்கின்றனர்.

வைகுந்தத்தில் கோபகுமாரிடம் நாரதர், "இங்கே பக்தர்கள் பரசுராமா, நரசிம்மா, வாமனா மற்றும் பற்பல அவதாரங்களுக்குப் பூஜை செய்கிறார்கள். ஒரு பக்தன் முதலில் ஒரு மூர்த்திக்குப் பூஜை செய்து விட்டு, பின்னர் அந்த மூர்த்தியை விட்டு விட்டு இன்னொரு மூர்த்தியை வழிபடுவதில் எந்த விதமான குற்றமும் கிடையாது. நீயும் உன் வாழ் நாட்களில் பகவானின் எத்தனை எத்தனையோ அவதாரங்களை வழிபட்டுள்ளாய். எனவே ஒரு பக்தன் தன் சொந்த நிஷ்தாவைப் பொறுத்து இங்கேயும் அங்கேயும் செல்லலாம். ஏனென்றால் பகவான் ஒருவரே. நான் ஏன் இதைக் கூறுகிறேன் என்றால், உனக்கு இங்குப் பிடிப்பதாக எனக்குத் தெரியவில்லை. நீ இங்கே வைகுந்தத்தில் இருந்தாலும் கூட உன் உள் சொரூபம் ஒரு கோபாவாக இருந்தால், நீ எப்போதும் கோபாலைத் தான் வழிபட விரும்புவாய். எனவே நீ இங்கு மகிழ்ச்சியாக இல்லை. இதில் எந்த விதமான குற்றமும் இல்லை. இது மிகவும் ஆழமானது. இவை எந்த சாஸ்திரத்திலும் எழுதப் படவில்லை. ஆனால் நான் உன் நாடித் துடிப்பைப் பார்த்து உன்னுடைய அதிருப்திக்குக் காரணம் என்ன வென்பதைக் கண்டு பிடித்து விட்டேன். இங்கே ஸ்ரீ இலக்சுமி தேவி வேறு எவரையும் பகவானின் பாதங்களைப் பிடித்து விட அனுமதிப்பாளோ? வேறு எவரும் அவருக்கு உணவு வகைகளை ஊட்ட விடுவாளோ? மாட்டவே மாட்டாள். ஸ்ரீ இலக்சுமி, "இது முழுக்கவும் என் கடமை" என்று எண்ணுகிறாள். நீ தூரத்தில் நின்று கொண்டு உன் வணக்கங்களை மட்டுமே பகவானுக்குச் செலுத்த முடியும். இங்கே பக்தர் எவராவது, பிரகலாதன் நரசிம்ம தேவரின் மடியில் உட்கார்ந்தது போல் ஸ்ரீமன் நாராயணரின் மடியில் போய் உட்கார வரும்பினால் அதற்கு இலக்சுமி தேவி அனுமதி கொடுக்கவே மாட்டாள்.

"எனவே நீ இங்கிருந்து உன் பயணத்தைத் தொடர வேண்டும். நீ வித்தியாசம் வித்தியாசமான பற்பல லீலைகளையும் மிகவும் நெருங்கிய பக்தி ரஸங்களையும் அனுபவிக்கப் போகிறாய். நான் உனக்கு விளங்கக் கூறியது போல், முதலில் நீ பகவானின் அனைத்து ரூபங்களும் தத்துவத்தில் ஒன்றே என்பதை அறிந்து கொள்ள வேண்டும். எனவே ஒரு அவதாரத்தை விட்டு விட்டு இன்னொரு அவதாரத்தை நோக்கிச் செல்வதில் எந்த விதமான குற்றமும் இல்லை. ஏனென்றால் அவை அனைத்தும் ஒன்றே தான். அவர்கள் தங்கள் பக்தர்களின் விதம் விதமான பக்தி பாவங்களுக்குத் தகுந்தவாறு வித்தியான ரூபங்களில் தோன்றுகிறார்கள்" என்று நாரதர் கூறினார்.

# அத்தியாயம் - 6

பகவானின் அவதாரங்கள் அனைத்தும் ஒரே விதமான குணங்களைக் கொண்டவை. ஒரு தீபத்திலிருந்து நாம் எத்தனை தீபங்களை உண்டு பண்ணினாலும் அவை அனைத்தும் குணத்தில் ஒரே மாதிரியாகவே இருக்கின்றன. அவற்றில் எது மூலம், எவை இரண்டாந்தரமானவை என்று நம்மால் கூறவே முடியாது.

*ஏதச் ச வ்ருந்தா - விபினே அக ஹந்துர்*
*ஹ்ருத்வார்ப வத்ஸான் அனுபூதம் அஸ்தி*
*ஸ்ரீ பிரம்மணா த்வாரவதி புரேச*
*பிரசாத வர்கேசு மயா பிரமித்வா*

நாரதர், "பிரம்மா பிருந்தாவனத்திலிருந்து மாடு மேய்க்கும் சிறுவர்களையும் கன்றுகளையும் திருடியபோது, அகாசுரன் என்ற அரக்கனைக் கொன்ற ஸ்ரீ கிருஷ்ணர், தான் ஒருவராக இருந்த போதும் கூட, எவ்வாறு பற்பல சொரூபங்களில் தோற்றமெடுத்தார் என்பதை அனுபவத்தில் நேரில் கண்டார். நானும் கூட முன்னால் துவாரகைக்கு சென்றிருந்த போது இதை நேரில் கண்டுள்ளேன்" என்று கூறுகிறார்.

பிருந்தாவனத்தில் கோபியர்கள் மற்றும் கோபர்களின் தாய் தந்தைகள் அனைவரும் ஸ்ரீ கிருஷ்ணரின் கொள்ளை அழகையும் அவரது நயனமான பேச்சையும் மனத்தை அள்ளும் இனிமையான சுபாவத்தையும் கண்டு, தங்களுக்கு ஸ்ரீ கிருஷ்ணர் மகனாக வரமாட்டானா என்று ஏங்கினார்கள். அதே போல், தங்கள் கன்று களுக்குப் பாலூட்டும் பசுக்களும், "ஸ்ரீ கிருஷ்ணர் சில சமயங்களில் எங்கள் மடுக்களிலிருந்து தன் வாயாலேயே நேரடியாகப் பாலைக் குடிக்கிறார். அவர் எங்களுக்குக் கன்றுகளாகப் பிறந்து எங்கள் பாலைக்

குடித்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்!" என்று ஏங்கிக் கிடந்தன.

பிரஜ மண்டலத்தில் எத்தனை எத்தனையோ பசுக்கள் உள்ளன. அதே போல் எத்தனை எத்தனையோ தாய் மார்களும் உள்ளனர். அத்தனை பேரும் கிருஷ்ணர் தனக்கு மகனாகப் பிறக்க மாட்டானா, அவ்வாறு தங்கள் தாய்ப் பாசங்களை அவருக்கு அளிக்க மாட்டோமா என்று ஏங்கினார்கள். ஸ்ரீ கிருஷ்ணர் தங்கள் வீடுகளில் வெண்ணெயைத் திருடும் போது இருப்பதை விடவும் அவர் மாடு மேய்த்து விட்டு சாயங்காலம் வீடு திரும்பும் போது தான் இந்த ஆசைகள் அதிகமாக இருந்தன. அப்போது யசோதா தன் தாய்ப் பாசம் பொங்கி வழிய ஸ்ரீ கிருஷ்ணரின் முகத்தைத் துடைக்கும் போது மற்ற தாய்மார்களும் பசுக்களும் கிருஷ்ணரைத் தன் மகனாகப் பெற ஏங்கு வார்கள். அவர்கள் தங்களுடைய சொந்தக் குழந்தைகளை விட்டு விட்டு முதன் முதலாகக் கிருஷ்ணரைத் தான் பார்க்க அடங்காத ஆவலுடன் ஓடி வருவார்கள். அதன் பின்னர் தான் தங்கள் சொந்தக் குழந்தைகளை மடிகளில் எடுத்து வைத்துக் கொண்டு முகங்களைத் துடைத்து தங்கள் பாசங்களைக் காட்டுவார்கள்.

கிருஷ்ணர் அவர்கள் அனைவருடைய ஆசைகளையும் அறிவார். எப்படி அவர் அறிவார்? ஸ்ரீமத் பாகவதத்தில், அவர் தன் திருவிளையாடல்களில் முழுவதுமாக மூழ்கிக் கோபியர்களுடன் லீலைகள் புரியும் போது எல்லாவற்றையுமே அவர் மறந்து விடுகிறார் என்று வருகிறது. "நான் எங்கேயிருக்கிறேன்?" என்று கேட்பார். அப்போது எல்லா விதமான நஷ்ட லாபங்களும் மறந்து போகின்றன. அப்போது ஏதாவது எதிரிகள் அவரைத் தாக்கினால் என்ன ஆகும்? அகாசுரன் அல்லது பகாசுரன் போன்ற அசுரர்கள் வரலாம். ஆனால் எல்லாமே அவருக்கு மறந்து விடும். வீட்டு வேலைகள், அருந்துவது, உண்பது, குளிப்பது எல்லாமே மறந்து போய் விடும். அவர் கோபியர்களின் பிரேமையில் முழுவதுமாக மூழ்கி விடுவதால் எல்லாவற்றையும் மறந்து விடுவார். எதைப் பற்றியுமே ஞாபகம் இருக்காது. அவரது தாய்மார்கள், நண்பர்கள் அனைவருடன் வைத்துள்ள பாசங்களும் கூட மறக்கப் பட்டு விடுகின்றன.

இதைப் பற்றி ஸ்ரீ விஸ்வநாத சக்கரவர்த்தி தாக்கூரா ஒரு கேள்வி கேட்கிறார்: "பக்தர்களாகிய நீங்கள் கிருஷ்ணரிடம் தொழுகிறீர்கள்: "ஓ கிருஷ்ண சந்திரா! எனக்குத் தயவு செய்து உமது கமலப் பாதங்களைக் காட்ட வேண்டும்" என்று கதறி அழுகிறீர்கள். ஆனால் அப்போது உங்கள் பிரார்த்தனையை யார் கேட்கிறார்? கிருஷ்ணரோ எல்லாவற்றையும் மறந்து விட்டார். அப்படி அவர் எல்லாவற்றையும் மறந்து விடும் போது "சர்வஞாதா" என்ற மற்றவர்களின் இதயத்தை அறியும் சக்தி குறைந்து விடுகிறது. சர்வ ஞாதா என்பது அவரது ஐஸ்வர்யத்தின் ஒரு அம்சமாகும்.

"இவ்வாறு சில சமயங்களில் அவர் கோபியர்களின் கால்களைப் பிடித்துக் கெஞ்சும் போதும், சில சமயங்களில் அவர்களுக்குச் சேவகம் செய்யும் போதும், மற்ற சமயங்களில் கோபியர்களின் சேவகங்களை ஏற்றுக் கொள்ளும் போதும் அவர் அவற்றில் தன்னை மறந்து ஈடுபடுவதால் அவரைச் சுற்றிலுமுள்ள அனைத்தையும் அவர் மறந்து விடுகிறார். சர்வ ஞாதா அனைத்தும் கை விடப்படுகின்றன. ஆறு விதமான ஐஸ்வர்யங்களும் மறக்கப்பட்டு விடுகின்றன. அப்படியென்றால் உங்களுடைய பிரார்த்தனையைக் கேட்க யார் தான் இருக்கிறார்?

"எல்லாவற்றையும் அறிவது ஐஸ்வர்யத்தின் ஒரு அம்சம். எனவே இந்தச் சமயத்தில் சர்வ ஞாதா தோன்றினால் அவரது மதுர்ய பாவம் பாதிக்கப் படும். எனவே அந்த சமயத்தில் யார் உங்கள் பிரார்த்தனையைக் கேட்கப் போகிறார்? இது ஒரு பெரிய பிரச்சினை. நாமோ பிராத்தனை செய்கிறோம். ஆனால் அது அர்த்தமில்லாமல் அல்லவா போய் விடுகிறது? உங்கள் பிராத்தனையைக் கேட்பதற்கு யாருமேயில்லையென்றால் நிச்சயமாக அது அர்த்தமற்றதாகி விடுகிறது.

"பரமாத்மா கிருஷ்ணரின் ஒரு அம்சம். அவர் எங்கும் நிறைந்து பரவி சாட்சியாக எப்போதும் இருக்கிறார். அவருக்காவது நம் பிரார்த்தனைகள் தெரியுமா? அப்படியே அவருக்கு நம் பிரார்த்தனை தெரிந்தாலும், நாம் நேரடியாக கோவிந்தாவுக்கல்லவா பிரார்த்தனை செய்கிறோம்? அது பரமாத்மாவுக்குத் தெரிந்து என்ன பிரயோஜனம்? நாமோ ஒரு அரசனைப் பிரார்த்திக்கிறோம். ஆனால் அதை வெறுமனே காவலாளி மட்டும் கேட்டால் அதனால் என்ன பிரயோஜனம்? அதில் நாம் திருப்திப் படவே மாட்டோம். அதனால் என்ன? நமது பிரார்த்தனை நேரடியாகக் கிருஷ்ணரிடம் போகாதா? அவை கிருஷ்ணரின் காதில் கேட்கவில்லையென்றால், நாம் கதறுவது எதையும் யாருமே கேட்கமுடியவில்லை என்றல்லவோ ஆகி விடுகிறது? யாருமே அதைக் கேட்க முடியவில்லையென்றால், பின் யார் தான் அதைக் கேட்டு ஏதாவது நிவிர்த்தி செய்ய இயலும்? ஒரு குழந்தை பசி தாங்காமல் பாலுக்காக அழுகிறது. ஆனால் அதை எவருமே கேட்கவில்லையென்றால் அந்த குழந்தை என்ன செய்யும்? நம் அழுகையும் இதே போல் தானா?... ஆனால் நீங்கள் எந்த விதக் கவலையும் பட வேண்டிய அவசியமேயில்லை. கிருஷ்ணர் அதைக் கண்டிப்பாக கேட்பார்!"

நாம், "அதெப்படி முடியும்? அவரால் அவ்வாறு நம் பிரார்த்தனையையும் கேட்க முடிந்தால் அது ஐஸ்வர்யா அல்லவா?" என்று நினைக்கலாம். கிருஷ்ணரிடம் இரண்டு விதமான குணங்கள்

உள்ளன. ஒன்று முக்தா, இன்னொன்று சர்வஞ்ஞா. முக்தா என்றால் என்ன அர்த்தம்? பிரேமையில் கட்டுண்டு எதுவுமே தெரியாதது போல் இருத்தல். யசோதா கிருஷ்ணரின் காதுகளைப் பிடித்தவாறு, "நீ அந்த மூலையில் போய், நான் இனி திருடவே மாட்டேன் என்று தோப்புக் காரணம் போடு!" என்று தண்டனைக் கொடுக்கும் போது கிருஷ்ணரும் அப்படியே செய்வான். மேலும் கையில் ஒரு கம்பை எடுத்துக் கொண்டு, "இன்று நீ அடிபடாமல் தப்பிக்கவே மாட்டாய்" என்று யசோதா கிருஷ்ணனை உறுக்கும் போது, கிருஷ்ணனோ தன் கண்களில் கண்ணீருடன், "அம்மா, என்னை அடிக்காதே!" என்று அழுவான். இது தான் முக்ததா-அதாவது உணர்ச்சியால் முழுவதுமாக ஈடுபட்டு மற்ற எல்லாவற்றையும் மறந்து விடுதல். கிருஷ்ணனைக் கண்டால் எந்த பயமுமே பயப்படும். ஆனால் யசோதாவின் கம்புக்கு முன் கிருஷ்ணன் பயந்து நடுங்குவான்! உண்மையில் யசோதா கிருஷ்ணனை அடிப்பதில்லை - பயமுறுத்தவே செய்வாள். இருந்தாலும் பயத்தினால் கண்களிலிருந்து கண்ணீர் வழிய அழுவான். இங்கே கிருஷ்ணன் உண்மையிலேயே அழுகிறானா? இல்லை அழுவது போல் நடிக்கிறானா? சாதாரண மக்கள், "ஓ, பகவான் எங்கே அழுவார்? அவர் ஒருபோதும் அழவே மாட்டார்? அவர் எதைக் கண்டு பயப்பட வேண்டும்?" என்று கூறுவார்கள். ஆனால் ஒரு பிரேம பக்தன் என்ன கூறுவான்? " ஓ, அவர் உண்மையிலேயே அழுகிறார்!" என்று. இது தான் முக்ததா.

ஜராசந்தன், பூத்தனா, அகாசுரா, பகாசுரா, கம்ஸா, அல்லது நரகாசுரா இப்படி யார் வந்தாலும் கிருஷ்ணன் சிறு பாலகனாக இருந்தாலும் அவர்களை எளிதாகக் கொன்று விடுகிறான். இது சர்வ சக்திமத்தா - எல்லா சக்திகளும் நிறைந்த குணம். எனவே பகவான் ஒரு பக்கம் எல்லாவற்றையும் அறிந்து கொண்டிருக்கும் போது, இன்னொரு பக்கம் தன் லீலைகளில் மூழ்கி எல்லாவற்றையும் மறந்தும் விடுகிறார். ஒரே நேரத்தில் இப்படி இரண்டு விதமான குணங்கள் பகவானுக்கு உள்ளன. உதாரணமாக, ஒரு சமயம் உத்தவாவைக் கூப்பிடுகிறார். "உத்தவா! இன்று ஒரு பெரிய பிரச்சினை தோன்றியுள்ளது. அதற்கு நீதான் ஒரு வழி கூற வேண்டும்" என்று கேட்கிறார்.
"என்ன பிரச்சினை?"
"இன்று ஹஸ்தினாபுரத்திலிருந்து ராஜ சூய யக்ஞத்துக்கு அழைப்பு வந்துள்ளது. அது நாளை ஆரம்பிக்கிறது. ஆனால் எதிர் பக்கத்தில் ஜராசந்தன் மிகப் பெரிய எதிரியாக நம்மைத் தாக்க ஆயத்தமாகிறான். எனவே அவனையும் கொல்ல வேண்டும். நாம் இந்த இரண்டையும் செய்ய வேண்டும். ஆனால் எவ்வாறு இவை இரண்டையும் ஒரே நேரம் செய்ய முடியும் என்று தான் புரியவில்லை. நீ ஒரு புத்திசாலித்தனமானவன், மிகவும் அறிவுக் கூர்மையுள்ளவன். மேலும் நீ என் மந்திரி மட்டுமின்றி என் நெருங்கிய நண்பனும் கூட. நான் என்ன

செய்ய வேண்டுமென்று நீ ஆலோசனை கொடு. நான் ராஜசூய யக்ஞத்துக்காகப் பாண்டவர்களிடம் போகவா, இல்லை ஜராசந்தனைக் கொல்லச் செல்ல வேண்டுமா?"

உத்தவா யோசித்தான். "இதைப் பார்! எல்லாம் அறிந்த, எல்லா சக்திகளையும் பெற்ற சுயம் பகவானே என்னிடம் ஆலோசனைக் கேட்கிறார்! பார்க்கும் போது அவர் எனக்கு மரியாதை கொடுக்க வேண்டுமென்பதற்காகக் கேட்பதாகத் தெரியவில்லை. அவர் உண்மை யிலேயே கேட்கிறார். ஒரு அரசன் தன் மந்திரியிடம் வெறும் விதி முறைக்காகக் கேட்பது போல் இது தெரியவில்லை. அவர் உண்மையிலேயே அந்த விதி முறையைப் பின்பற்றுவதற்காகக் கேட்கிறாரா, இல்லை உண்மையிலேயேக் கேட்கிறாரா?"

பின்னர் உத்தவா பதில் கூறினான். "பிரபோ! நாம் ஹஸ்தினா புரிக்கு ராஜ சூய யக்ஞத்துக்குச் செல்வது தான் சரியென்று எனக்குத் தோன்றுகிறது. ஏனென்றால் அங்கே நாம் இரண்டையும் ஒரே நேரத்தில் முடித்து விடலாம். ராஜசூய யக்ஞத்தில் எப்படியும் ஒரு குதிரையை எல்லா தேசத்துக்கும் அனுப்புவார்கள். எந்த மன்னர்கள் சவால் விட்டு குதிரையைக் கட்டி வைக்கிறார்களோ அவர்களைத் தாங்களும் அர்சுனனும் பின் சென்று அடக்கலாம். தயவு செய்து பீமனையும் உங்களுடன் கூட்டிச் செல்லுங்கள். அந்தக் குதிரை எப்படியும் மகத நாட்டு மன்னனான ஜராசந்தனையும் சந்திக்கும். அப்போது தாங்கள் ஜராசந்தனைக் கொல்லலாம். இவ்வாறு செய்தால், தாங்கள் ராஜசூய யக்ஞத்தையும் முடித்து விடலாம், ஜராசந்தனையும் கொன்று விடலாம்."

இதைக் கேட்ட கிருஷ்ண பகவான் உத்தவாவின் முதுகில் தட்டிக் கொடுத்தார். அவருக்கு இந்த ஆலோசனை மிகவும் பிடித்திருந்தது. கிருஷ்ண பகவானால் சொந்தமாக முடிவை எடுக்க முடியவில்லை. ஆனால் அவரது மந்திரி உத்தவா கொடுத்த ஆலோசனையைக் கேட்டு மிகவும் மகிழ்ச்சியடைந்தார்.

எனவே பகவானிடம் "முக்தா" வும் "சர்வஞ்ஞ" என்ற இரண்டு குணங்களும் ஒரே சமயத்தில் உள்ளன. இது ஒரு குற்றம் அல்ல. மாறாக இது நம்மால் புரிந்து கொள்ள முடியாத பகவானின் ஒரு சக்தி. வேதாந்த சூத்திரத்தில் ஒன்றுக் கொன்று முரண்பாடான குணங்கள் கூட கிருஷ்ணரிடம் எவ்வாறு பிணக்கமின்றி இணக்கமாக அமைந்துள்ளன என்று குறிப்பிடப்பட்டுள்ளது: "விருத்த தர்மம் தஸ்மின் ந சித்ரம்". ஸ்ரீ கிருஷ்ணரிடம் முக்ததாவும் சர்வஞ்ஞதாவும் ஒரே நேரத்தில் போய்க் கொண்டிருக்கின்றன. இதில் எந்த விதமான குற்றமும் இல்லை. ஆனால் மற்றவர்களிடம் இது சாத்திய மாகாது. ஒரு ஜீவாத்மா தன்னிடம் இந்த குணம் உள்ளது என்று கூறினால் அவர்கள் ஏமாற்றுக்காரர்கள் என்று

அர்த்தம்.

ஸ்ரீ கிருஷ்ணர் இவ்வாறு சர்வஞ்ஞராக இருக்கிறார்: ராஸ லீலா ஆரம்பிக்கும் போது அவர் எண்ணற்ற கோபியர்களைப் பார்க்கிறார். அவர்கள் அனைவருமே, "கிருஷ்ணர் என்னுடன் மட்டுமே ஆடுவார். அவர் என்னைத் திருப்திப் படுத்துவார். நான் மிகவும் பாக்கியசாலியாவேன்!" என்று ஆசைப்படுகிறார்கள். கிருஷ்ணர் அவர்களின் ஆசைகளை நன்றாக அறிகிறார். எனவே அவர் ராஸ லீல நடனத்தில் ஒவ்வொரு இரண்டு கோபியர்களுக்குமிடையில் அவர் தெரியுமாறு ஆடி அவர்களது ஆசைகளையெல்லாம் திருப்திப் படுத்தினார். இது தான் சர்வஞ்ஞதா. இப்படிப்பட்ட சர்வஞ்ஞதாவை ராமரிடமோ, நாராயணரிடமோ காண முடியாது. இவையெல்லாவற்றுக்குமிடையில் ஸ்ரீமதி ராதிகா ராஸ லீலா நடனத்திலிருந்து மறைந்து விடுகிறாள்.

ஸ்ரீ கிருஷ்ணர் யோசித்துப் பார்க்கிறார், "ஸ்ரீ ராதா ராணி எங்கே போய் விட்டாள்?" அவருக்குத் தெரியவில்லை. தான் சர்வஞ்ஞுவாக இருந்தாலும் கூட அவர் மிகவும் கவலைப்பட்டு ஸ்ரீ ராதா ராணிக்காக அழுகிறார். ஸ்ரீ ராமச்சந்திரர் எவ்வாறு சீதா தேவிக்காக அழுதாரோ அதே போல் இங்கு ஸ்ரீ கிருஷ்ணர் ஸ்ரீராதா ராணிக்காக அழுகிறார். பின்னர் அவர்கள் திரும்பவும் சேரும் போது ஸ்ரீ கிருஷ்ணர் ஸ்ரீமதி ராதா ராணிக்குச் சொந்தமாகி விடுகிறார். ராதாராணி கிருஷ்ணரிடம், "இன்று தாங்கள் தான் எனது தலைமுடியை அலங்கரிக்க வேண்டும்" என்று கூறுகிறாள். ஸ்ரீ கிருஷ்ணரோ ஒரு மலரைக் கையில் எடுத்துக் கொண்டு ராதா ராணியின் பின்னால் தொடர்கிறார். ஆனால் ராதா ராணியோ, "என்னால் இனி நடக்க இயலாது" என்று கூறுகிறாள். ஸ்ரீ கிருஷ்ணர் ராதா ராணியைத் தன் தோள்களில் தூக்கிக் கொண்டு சுமந்து செல்கிறார். இவையனைத்தும் முக்ததா ஆகும். இதுவே ராஸா மற்றும் பகவத்த தத்துவங்களின் சிகரமாகும்.

வயதான கோபியர்களோ கிருஷ்ணன் தங்கள் சொந்த மகனாக வரமாட்டானா என்று ஏங்கினார்கள். பசுக்களோ கிருஷ்ணன் தங்கள் கன்றாகப் பிறக்க மாட்டானா என்று ஏங்கினார்கள். ஒரே ஒரு தாயின் பாலைக் குடித்தால் அது தன் வயிற்றை நிரப்ப முடியாது என்பதைக் கிருஷ்ணன் உணர்கிறான். அதே போல் ஒரே ஒரு கோபியின் பிரேமை மட்டும் அவருக்குப் போதாது! கோடிக்கணக்கானக் கோபியர்கள் அவருக்குத் தேவை. கோடிக்கணக்கான தாய்மார்களின் பாசங்கள் தனது வயிற்றை நிரப்ப வேண்டும் என்று ஆசைப்பட்டார். எனவே ஒரு நாள் அவர் நினைத்தார், "இன்று நான் பிரஜாவில் கோடிக்கணக்கான தாய்மார்களைப் பெறுவேன். கோடிக் கணக்கான கோபியர்களைத் திருமணம் செய்வேன். கோடிக் கணக்கானப் பசுக்களுக்கு கன்றாவேன்.

ஆனால் இதை நான் எப்படிச் செய்வேன்? அந்தர்யாமியிடம் தொடர்பு கொண்டு நான் இதைச் செய்யலாம். ஆனால் இதை இந்த நர லீலைக்குத் தகுந்தவாறு இந்த மனித ரூபத்தில் நிகழ்த்துவது மிகவும் கடினமான காரியம்."

எனவே அவர் பிரம்ம தேவருக்குக் குழப்பமான மனநிலையை உண்டு பண்ணினார். அவரது இதயத்தில் தேவையான உந்துதலை உண்டு பண்ணி தன்னிடம் வரத் தூண்டினார். கிருஷ்ணன் அகாசுரனைக் கொன்றதைக் கண்டு பிரம்ம தேவர் ஆச்சரியப்பட்டார். " இது என்னே அதிசயமாக உள்ளது! இந்தப் பச்சிளம் மாடு மேய்க்கும் பாலகனால் ஒரு அசுரனைக் கொன்றது மட்டுமின்றி அவனுக்கு மோட்சத்தையும் கூட எப்படி கொடுக்க முடிந்தது?"

இவ்வாறு இன்னமும் எத்தனையோ லீலைகளைப் பார்க்க வேண்டுமென்று பிரம்மதேவர் கிருஷ்ணரிடம் வேண்டியிருக்கலாம். "பிரபோ! நான் இப்படி இன்னமும் நிறைய லீலைகளைப் பார்க்க விரும்புகிறேன். தயவு செய்து என்னிடம் கருணை கொண்டு மேலும் உம் திருவிளையாடல்களை நான் காண அருள் புரிய வேண்டும்" என்று கேட்டிருக்கலாம். இது ஒரு சாதாரணமான பிரார்த்தனை தான். எனவே ஸ்ரீ கிருஷ்ணர் இதை மிகவும் எளிதாகவே நிறைவேற்றியிருக்கலாம். ஆனால் பிரம்மாவோ இதைக் கேட்கவில்லை. மாறாக, "சரி சரி! நானாகவே அவரது லீலைகளைப் பார்க்கப் போகிறேன்" என்று நினைத்தார்.

உங்களுக்குப் பிடித்தவொன்றை அடைய வேண்டுமானால் ஒரு விதத்தில் அதைப் பற்றித் தெரிந்தவர்களிடம் கேட்கலாம். இன்னொரு விதத்தில் தானாக எவராவது வந்து நம்மிடம் வந்து கூறுவது வரைக் காத்திருக்கலாம். ஒருவன் தானாக அறிந்து கொள்ள வேண்டும் என்ற விருப்பத்தைத் தவிர்த்து, "நான் உண்மையிலேயே தகுதி உள்ளவன் ஆனால் அவரே என்னடம் வந்து கூறட்டும்" என்று காத்திருக்கலாம். ஆனால் பிரம்மதேவரோ, "ஓ, நான் அவரது லீலையில் தடங்கலை ஏற்படுத்திப் பார்க்க வேண்டும்" என்று எண்ணினார். அவருக்கு இப்படி ஒரு ஆசை எவ்வாறு வந்தது? ஒவ்வொருவரின் இதயத்திலும் சைத்ய குருவாக வீற்றிருக்கும் பகவான் இப்படிப் பட்ட எண்ணங்களைத் தோன்ற வைக்கிறார். எனவே அவர் பிரம்மாவின் இதயத்தில் தன் திருவிளையாடல்களுக்குத் தடங்கலான செயலைச் செய்வதற்காகத் தூண்டி, தன் நர லீலையின் மூலமாகவே அவரது விருப்பங்கள் அனைத்தையும் கச்சிதமாக முடித்து விடுகிறார்.

ஸ்ரீ கிருஷ்ணர் அகாசுரனைக் கொன்று அவனுக்கு முக்தி யளித்த அதே நாள் சாயங்காலம் அவர் தன் சக தோழர்களுடன் பசியாறுவதற்காக அமர்ந்து அனைவருடன் சாப்பிட ஆரம்பித்தார்.

அவர்கள் அனைவரும் மிகுந்த உற்சாகத்துடனும் நெருங்கிய பாசத்துடனும் சிரித்தவாறும் விளையாடியவாறும் உணவைப் புசித்துக் கொண்டிருந்தனர். இதைக் கவனித்துக் கொண்டிருந்த பிரம்ம தேவர், "இது தான் சரியான தருணம்!" என்று உணர்ந்தார். அப்போது பசுங்கன்றுகள் தொடர்ந்து நடந்து சென்று கொண்டிருந்தன. யோக மாயையின் செயலால் அவை தூரத்தில் மிகவும் பச்சையான புற்கள் இருப்பதாக எண்ணி மேன்மேலும் தூரத்தில் காட்டுக்குள் சென்று விட்டன. ஆனால் சகாக்களோ தொடர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். அவர்களுக்கு பசுங்கன்றுகள் மிகவும் தூரத்தில் சென்று விட்டதைப் பற்றித் தெரியவில்லை. அப்போது பிரம்ம தேவர் கன்றுக்கள் அனைத்தையும் திருடினார். சிலர் அவர் அவற்றைத் தன் பிரம்ம லோகத்துக்குக் கொண்டு சென்றார் என்றும் மறு சிலர் அவற்றைக் கோவர்த்தன மலையினுள் மறைத்து வைத்தார் என்றும் கூறுகிறார்கள். கோவர்த்தன மலை மிகவும் பெரியது. அதில் நிறைய குகைகள் இருந்தன.

திடீரென்று சிறுவர்கள் அனைவரும் தங்கள் கன்றுகளைக் காண முடியாமல், "நம் கன்றுகள் எங்கே போய் விட்டன?" என்று கேட்டனர். அதற்கு ஶ்ரீ கிருஷ்ணர், "நான் போய் அவற்றை இங்கேத் திரும்பவும் கொண்டு வருகிறேன். நான் போய் என் புல்லாங்குழலை ஊதினாலே போதும் - அனைத்துக் கன்றுகளும் தானாக இங்கே வந்து விடும். நீங்கள் தொடர்ந்து சாப்பிடுங்கள். நான் போகிறேன்" என்று கூறி நடந்தார்.

ஶ்ரீ கிருஷ்ணர் ஏன் அப்படிச் செய்தார்? பிரம்மதேவரை ஏமாற வைத்து அதே சமயம் தான் அத்தனைக் கன்றுக்களாகவும் மாடு மேய்க்கும் சிறுவர்களாகவும் ரூபம் எடுக்க வேண்டுமென்ற திட்டத்தால் அப்படிச் செய்தார். அவர் பிரம்மதேவர் விரும்பியது போல் நடப்பதற்காக அந்தச் சிறுவர்களிடமிருந்து சற்று பிரிந்து செல்லவே அவ்வாறு செய்தார். இதைக் கண்ட பிரம்மதேவர், "ஓ, நான் என்ன நடக்க வேண்டுமென்று நினைத்தேனோ, சரியாக அதுவே நடக்கிறது! நான் இந்த சிறுவர்கள் அனைவரையும் கிருஷ்ணரின் பார்வையில் இருந்து அப்பால் எடுத்துச் செல்ல வேண்டும் என்று நினைத்தேன். இது தான் சரியான தருணம்! கிருஷ்ணரே தானாக தூரத்தில் போகிறார்" என்று மகிழ்ந்தார். கிருஷ்ணர் அங்கிருந்து தூரத்தில் சென்றார். அவர் எப்படிச் சென்றார்? எந்த விதமான கவனமுமில்லாத ஒரு மாடு மேய்க்கும் சிறுவனைப் போல், கைகளில் சாதத்தையும் தயிரையும் அள்ளிக் கொண்டு கன்றுகளைத் தேடிக் கொண்டு சென்றார். தேடித் தேடிப் பார்த்தும் கன்றுகளைக் காண முடியாததால் அவர், "இந்த கன்றுகள் அனைத்தும் எங்கே சென்று விட்டன?" என்று எண்ணினார். இது முக்ததா.

கொஞ்ச நேரம் அலைந்து கொண்டு கன்றுகளைக் காண முடியாத ஸ்ரீ கிருஷ்ணர் திரும்பவும் அவர்கள் அனைவரும் உட்கார்ந்து சாப்பிட்ட இடத்துக்கு வந்தார். ஆனால் இப்போதோ அவரது சகாக்களையும் கூடக் காணோம்! பிரம்மதேவர் அவர்கள் அனைவரையும் எடுத்துச் சென்று மலையின் குகைகளுக்குள் மறைத்து வைத்து விட்டார். உண்மையிலேயே கிருஷ்ணர் இதைப் பற்றி எதுவுமே அறியவில்லை! அங்குமெங்குமாகத் தேடிப் பார்த்தார். சிறுவர்களையும் காணவில்லை, கன்றுகளையும் காணவில்லை. தன் கைகளில் இன்னமும் சாப்பிடாமல் மீதமான சாதம் இருந்தது. அவரது முகம் கவலையினால் வாட ஆரம்பித்தது. நெஞ்சில் பயம் குடி கொண்டது. "இனி நான் அவர்களுடைய தாய்மார்களுக்கு என்ன பதில் கூறுவேன்? எல்லா கன்றுகளும் தொலைந்து விட்டன. சிறுவர்களையும் காணவில்லை. நான் பிரஜாவில் உள்ள தாய்மார்களுக்கு என்ன பதிலைக் கூறுவேன்?" என்று அங்கலாய்க்க ஆரம்பித்தார். அவரது அங்கங்கள் அனைத்தும் புழுதியினால் படிந்திருந்தன. முகம் கவலையினாலும், பசியினாலும் தாகத்தினாலும் மிகவும் வாடி யிருந்தது. அப்போது சர்வஞ்ஞதா அங்கே இல்லை.

சிறிது நேரம் கழித்து யோக மாயா, "ஓ, நான் இப்போது இங்கே கொஞ்சம் சேவை செய்து உதவி புரிய வேண்டும்" என்று நினைத்தாள். யோக மாயா தோன்றிய பின் கிருஷ்ணர், "ஓ! ஆமாம். இந்த சம்பவ சூழ்நிலைகள் அனைத்தும் யோகமாயையினால், பிரஜ வாசிகளின் ஆசைகளைப் பூர்த்தி செய்வதற்காக உண்டு பண்ணப் பட்டுள்ளது" என்று யோசித்தார். அதன் பின் கிருஷ்ணர், தானாகவே அத்தனை சிறுவர்களாகவும் அத்தனைக் கன்றுக்களாகவும் உருவம் எடுத்தார். அத்தனை சிறுவர்களுக்கும் தன் கைகளாலேயே உணவு ஊட்டி ஒன்று சேர அமர்ந்து கொண்டு ஆனந்தமாக இருந்தார்கள். முன்னர் எவ்வாறு அவர்கள் சிரித்தவாறும் விளையாடிய வாறும் உணவை உண்டும் அருந்தியும் குதூகலமாக இருந்தார்களோ அவ்வாறே தான் இருந்தார்கள். சாயங்காலம் ஆனதும் அவர்கள் அனைவரும் தங்கள் வீடுகளுக்குத் திரும்பினார்கள். எல்லாத் தாய்மார்களும், "ஆஹா! என் மகன் வீடு திரும்பி வந்து விட்டான்" என்று நினைத்து மகிழ்ந்தனர். ஆனால் முன்பெல்லாம் அவர்கள் முதலாவது கிருஷ்ணரிடம் சென்று தன் பாசங்களைக் கொட்டி அணைத்துக் கொண்டு அதன் பின் தான் தங்கள் சொந்தக் குழந்தைகளைக் கவனிப்பது வழக்கம். ஆனால் அன்று அவர்கள் தங்கள் குழந்தைகளை மட்டுமே பாசத்துடன் கவனித்தனர். கிருஷ்ணரைப் பற்றி அவர்கள் மறந்தே போனார்கள். யசோதா மட்டுமே கிருஷ்ணரைக் கவனித்தாள். மற்ற அனைவரும் தங்கள் சொந்தக் குழந்தைகளை மட்டுமே கவனித்தனர். அது மட்டுமல்லாமல் பசுக்களும் தங்கள் பச்சிளம் கன்றுகளைக் கொஞ்சமும் கவனிக்காமல், காட்டில் மேய்ந்து விட்டு வந்த வயதான கன்றுகளை மட்டுமே கவனித்தன. அவற்றிற்கு மட்டுமே தங்கள் மடுக்களிலிருந்து பாலைக்

குடிக்கக் கொடுத்து மிகவும் பாசத்துடன் நாக்கினால் நக்கிக் கொடுத்தன. ஆனால் பச்சிளம் கன்றுக்களுக்கோ அவ்வாறு பாசத்தை அவை காட்டவில்லை.

சில நாட்களுக்குப் பின், இந்த விசித்திரத்தைக் கண்ட பல தேவ பிரபு, "இது என்ன? கோவர்த்தனாவிலிருந்து கன்றுகள் மேய்ந்து விட்டு வருகின்றன. இந்தப் பசுக்கள் தன் பச்சிளம் கன்றுகளைக் கவனிக்காமல், அந்த வயதான கன்றுகளை ஏன் அவ்வளவு பாசத்துடன் கவனிக்கின்றன? ஏன் இப்படி? மேலும் பிரஜாவிலுள்ள தாய்மார்கள் முதலாவது கிருஷ்ணரைக் கவனித்த பின்னர் தான் தங்கள் குழந்தைகளைக் கவனிப்பது வழக்கம். ஆனால் இப்போது அவர்கள் கிருஷ்ணரைக் கவனிக்காமல் தங்கள் குழந்தைகளை ஏன் முதலில் கவனிக்கிறார்கள்? இது ஏன்? என்ன நடந்தது? ஏன் இப்படி?" என்று எண்ணி ஆச்சரியப்பட்டார்.

கிருஷ்ணரே அத்தனை சிறுவர்களாக உருவம் எடுத்திருந்ததால் அவர் இவ்வாறு அனைவரிடமுமிருந்து பாசத்தைப் பெற்றார். பிரஜாவில் வசித்த அத்தனைத் தாய்மார்களும், பசுக்களும் கிருஷ்ணர் தங்கள் மகனாகவும் கன்றாகவும் பிறக்க வேண்டுமென்று ஆசைப் பட்டதை, அவர் திருப்திப் படுத்தி, கோடிக்கணக்கான தாய்மார்களின் பாசத்தை அவர் பெற்றுக் கொண்டார். அது மட்டுமல்லாமல் அதே வருடத்தில் கோடிக்கணக்கான இளம் கோபியர்களையும் திருமணம் செய்து கொண்டார். பிருந்தாவனத்திலிருந்த அத்தனை சிறுமிகளையும் தன் வெவ்வேறு பாலக உருவத்தில் மணந்து கொண்டு தன் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொண்டார்.

இவ்வாறு எல்லாவற்றையும் செவ்வனே செய்த பின்னர் இந்த லீலையை முடிப்பதற்காக அவர் பலதேவ பிரபுவுக்குத் தூண்டுதலை உண்டு பண்ணினார். இல்லாவிடில் இதைப் பற்றி பலதேவ பிரபுவுக்கு எதுவுமே தெரியாமல் போயிருக்கும். பலதேவர் கிருஷ்ணரிடம், "என் அன்பு சகோதரனே! இதை என்னால் புரிந்து கொள்ளவே முடியவில்லை. இது யாருடைய மாயை? இது தேவர்களின் மாயையா? அல்லது மகாமாயையா? யாருடைய மாயை இது? இது நிச்சயமாக என்னுடைய மாயை அல்ல. தேவர்களின் மாயையை நான் இலகுவாக அறிந்து விடுவேன்" என்று கேட்டார். "ஓ! கிருஷ்ணனா அத்தனை சிறுவர்களாகவும் கன்றுகளாகவும் உருவம் எடுத்துள்ளான்? ஏன்அப்படிச் செய்ய வேண்டும்?" கிருஷ்ணரிடம் மேலும் கேட்டார், "என் அன்பு சகோதரனே, இது என்ன? இன்று வரைக்கும் என்னால் இதை அறிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் இன்று நான் ஒப்பற்ற ஒன்றைக் காண்கிறேன். நீ ஏன் இப்படி இத்தனைச் சிறுவர்களாகவும் கன்றுகளாகவும் தோன்றினாய்? இது என்ன?" இதைக் கேட்ட கிருஷ்ணர் சிரித்தார். அத்தனை ஜனங்களின் ஆசைகளையும் திருப்திப்

படுத்தவும், அதே சமயம் பிரம்ம தேவரைக் குழப்பத்தில் ஆழ்த்தவும் தன் சொந்த யோக மாயாவினால் கிருஷ்ணர் இந்த அற்புத லீலையை நிகழ்த்தினார்.

அப்போது பிரம்மதேவர் தன் சொந்த லோகத்திலிருந்து கவலையுடன் திரும்பி வந்தார். தனது லோகத்தில் அவருக்கு இனி எந்த இடமுமே கிடையாது என்பதைக் கண்டபின் வேறு வழியின்றி பிரஜாவுக்குத் திரும்பி வந்தார். ஸ்ரீ கிருஷ்ணரே ஹிரண்யகர்ப்ப பிரம்மாவாக உருவம் கொண்டு பிரம்ம தேவரின் லோகத்தில் அமர்ந்து விட்டார். மேலும் அவர் அங்குள்ள வாயிற் காவலனிடம், "யாராவது என்னைப் போல் உருவம் கொண்டு பிரம்மதேவர் என்று கூறிக் கொண்டு இங்கே வந்தால் நீ அவரை உள்ளே விடாதே!" என்று உத்தரவும் இட்டிருந்தார்.

பிரம்ம தேவர் சிறுவர்களையும் கன்றுகளையும் திருடுவதற்காக வந்து அவர் பின்னர் பிரம்மலோகம் சென்று உடனே திரும்பி வருவதற்கும் இடையில் ஒரு முழு வருடம் பூலோகத்தில் ஆகியிருந்தது. பிரம்ம தேவருக்கு ஒரு நிமிடம் நமக்கு ஆறு மாதங்கள். அவர் தன் பிரம்ம லோகத்துக்குச் சென்ற போது அங்கே வாயிற்காவலன், "யார் நீர்? எங்கள் தாத்தாவான பிரம்மதேவர் இங்கேயிருக்கிறார். அவர், இங்கே வேறு எந்த நான்கு தலைகள் உள்ள பிரம்மா வந்தாலும் உள்ளே விடக் கூடாது என்று உத்தரவிட்டுள்ளார். எனவே நீர் உள்ளே செல்ல முடியாது. வெளியே நில்லும்! நீர் மாயா உண்டு பண்ணிய பிரம்மாவாகத் தான் இருக்க வேண்டும்" என்று தடுத்து விட்டான்.

பிரம்மதேவர் யோசித்தார், "ஓ! கிருஷ்ணர் இங்கும் வந்து விட்டாரா? நான் அவரது பாதங்களில் எவ்வளவு பெரிய அபராதத்தை உண்டு பண்ணி விட்டேன். நான் உடனே பூலோகத்துக்குச் செல்ல வேண்டும்." அவர் பூலோகத்துக்குத் திரும்பி வரும் போது இன்னொரு ஆறு மாதங்கள் ஆனது. இவ்வாறு மொத்தத்தில் பூலோகத்தில் ஒரு வருடம் கழிந்தது.

*ஏதச் ச விருந்தா-விபினே அக ஹந்துர்*
*ஹ்ருத்வார்ப-வத்சான் அனுபூதம் அஸ்தி ஸ்ரீபிரம்மணா*
*(பிருகத் பாகவதாம்ருதம் 2.4.164)*

மாடு மேய்க்கும் சிறுவர்களையும் கன்றுகளையும் திருடிய பின்னர் பிரம்ம தேவர் கிருஷ்ணர் எவ்வாறு தான் ஒன்றாக இருந்தாலும் அதே சமயம் எவ்வாறு கோடிக்கணக்கான உருவங்களில் ஒரே நேரத்தில் இருக்கிறார் என்பதை பிரம்மா உணர்ந்தார். "ஏகோ பஹு ஸ்யாம்: கிருஷ்ணர் ஒருவரே. ஆனால் அவர் எண்ணற்றவராகவும் தோன்றுகிறார். இப்படி அவர் எண்ணவற்றவராக இருந்தாலும் அவர்

ஒருவராகவே இருக்கிறார்! முதலில் பிரம்மதேவர் பார்த்தார், "இங்கே கிருஷ்ணர் தன் கையில் சாதத்தை வைத்துக் கொண்டு, நான் ஒரு வருடத்துக்கு முன்னர் வரும்போது, தன் சகாக்களுடனும் கன்று களுடனும் எப்படி இருந்தாரோ அதே மாதிரி தான் இப்போதும் பார்க்கிறேன். இவர்கள் அனைவரும் நான் திருடிச் சென்ற அதே சிறுவர்களும் கன்றுகளுமா, இல்லை வேறானவைகளா? ஒருவேளை தன் சொந்த மாயா சக்தியினால் கிருஷ்ணர் நான் குகைகளில் மறைத்து வைத்திருந்தவைகளையெல்லாம் திரும்பவும் கொண்டு வந்து விட்டாரா? இவர்கள் எல்லோரும் யார்? உண்மை எது போலி எது?"

தன் சந்தேகத்தைத் தீர்ப்பதற்காக கோவர்த்தன மலையின் குகைகளுக்குச் சென்று பார்த்தார். அங்கே அவர்கள், தான் பிரம்ம லோகத்துக்குச் செல்வதற்கு முன்னர் எப்படி யோக நித்ரையில் வைக்கப் பட்டிருந்தார்களோ அதே போல் அங்கு தூங்கிக் கொண்டிருந்தனர். திரும்பவும் கிருஷ்ணரிடம் வந்து பார்த்தார். அங்கே அதே சிறுவர்களும் கன்றுகளும் இருந்தனர்! பிரம்ம தேவர் இன்னமும் யோசித்தார், "நான் இங்கு வரும் போது அவர் சிறுவர்களையும் கன்றுகளையும் இங்கே கொண்டு வந்து விட்டு, பின் நான் கோவர்த்தனாவுக்குச் செல்லும் போது அனைவரையும் திரும்பவும் அங்கே கொண்டு வருகிறார் போலும்."

பிரம்மதேவர் தன் சக்தியினால், இரண்டு தலைகளில் உள்ள நான்கு கண்களால் கோவர்த்தன குகைகளையும், தன் மற்ற இரண்டு தலைகளிலுள்ள நான்கு கண்களால் கிருஷ்ணர் இருந்த இடத்தையும் ஒரே நேரத்தில் பார்த்தார். அவரால் நம்பவே முடியவில்லை. எந்த சிறுவர்களும் கன்றுகளும் குகைகளுக்குள் தூங்கிக் கொண்டிருந்தார் களோ அதே சிறுவர்களும் கன்றுகளும் தான் கிருஷ்ணரிடமும் உட்கார்ந்து கொண்டு உணவு உட்கொண்டும் அருந்தியும் லீலையில் மூழ்கியிருந்தனர்.

சிறிது நேரத்தில் அந்தக் காட்சி முழுவதுமாக மறைந்து, ஒவ்வொரு சிறுவனும் கன்றும் நான்கு கரங்கள் கொண்ட நாராயண உருவங்களாகத் தோன்றின. அது மட்டுமல்ல. ஒவ்வொரு பிரம்மாண் டத்திலும் எண்ணிலடங்காத மனிதர்களை அவர் கண்டார். எத்தனையோ பிரம்மாக்களும், சங்கரர்களும், தேவர்களும், விலங்கு களும், தாவரங்களும் நிறைந்து அவை காணப்பட்டன. நான்கு கரங்கள் கொண்ட அந்த நாராயண ரூபங்களும் ஸ்ரீ கிருஷ்ணருக்கு வந்தனம் செலுத்தியும் கீர்த்தனங்களால் பாடியும் துதித்துக் கொண்டிருந்தன.

நான்கு கரங்களுடன் தோன்றிய ஒவ்வொரு நாராயண ரூபமும் குணங்களில் மூல நாராயணரை முழுவதும் ஒத்திருந்தன. அனைவரும் சச்சிதானந்தமாகத் தோன்றினார்கள். ஆறு விதமான மகிமைகளை

முழுவதுமாகப் பெற்றிருந்தனர். அவர்கள் அனைவரும் சர்வ-அந்தர்யாமியாக, பகவானின் அறுபது குணங்களையும் கொண்டிருந்தனர். ஸ்ரீ கிருஷ்ணருக்கு மட்டும் இன்னமும் நான்கு குணங்கள் அதிகம். இவ்வாறு நான்கு கரங்கள் கொண்ட நாராயண ரூபத்தைப் பெற்ற ஒவ்வொரு சிறுவர்களிடம் போர்வைகள், கம்புகள், புல்லாங்குழல்கள், ஊது கொம்புகள் மற்றும் விதம் விதமான பொருட்களும் இருந்தன. இதைக் கண்ட பிரம்மதேவர், ஆச்சரியம் தாங்க முடியாமல் பற்பல வந்தனங்களையும் பிரார்த்தனைகளையும் கூறித் துதிக்க ஆரம்பித்தார். "ஓ பகவான்! முதலாவது உம்மைத் தனியாக ஒருவராகக் காட்டினீர். பின்னர் எல்லா சிறுவர்களும் கன்றுகளும் பகவான் தான் என்று காட்டினீர். கடைசியாக எல்லாமே பகவான் என்று காட்டினீர். பகவானின்றி எதுவுமே இருக்க முடியாது. ஜீவாத்மாக்கள் இருக்க முடியாது, பூவுலக வஸ்துக்கள் எதுவுமே இருக்க முடியாது. ஆனால் அதே சமயம் எல்லாம் நேரடியாக பகவானும் இல்லை. ஆனால் நான் அனைத்து சிறுவர்களையும் கன்றுகளையும் உம் சொரூபமாகவேக் காண்கிறேன். அனைவரும் பகவானின் குணங்களைப் பெற்றுள்ளனர். அவற்றுள் ஒன்று இன்னொன்றை விட உயர்ந்ததோ தாழ்ந்ததோ என்ற பேதம் எதுவுமேயில்லை. அதன் பின் நான் திரும்பவும் பார்க்கும் போது அந்த அனைத்து உருவங்களும் மறைந்து விட்டன. நீவிர், ஸ்ரீ கிருஷ்ணர் மட்டுமே இருக்கிறீர்."

ஸ்ரீ கிருஷ்ணரின் இந்த லீலையைக் கண்ட பிரம்மதேவர், "ஓ பகவான்! உம்முடைய அசிந்த்ய சக்தியின் மகிமைகளை யாரால் தான் விவரிக்க முடியும்?" என வியந்தார்.

*ஜானந்த ஏவ ஜானந்து*
*கிம் பகூக்த்யா ந மே பிரபோ*
*மனஸோ வபுஷோ வாச்சோ*
*வைபவம் தவ கோ - சரஹ ---(ஸ்ரீமத் பாகவதம் 10.14. 38)*

"பகவானையும், அவரது மகிமைகளையும் பற்றி ஒருவன் தனக்குத் தெரியும் என்று கூறினால் - உண்மையில் அவனுக்கு எதுவுமே தெரியாது. இன்று வரையிலும் நானும் அவ்வாறே நினைத்தேன். ஆனால் உண்மையில் என்னால் உம் மகிமைகளைப் பற்றி விவரிக்க இயலாது" என்று ஆச்சரியத்துடன் வணங்கினார்.

உண்மையில், பிரம்ம தேவரென்ன? ஸ்ரீ கிருஷ்ணரால் கூட அவரது மகிமைகளை விவரிக்க இயலாது. அவரால் அவரது நாமம், குணங்கள், ரூபம் இவற்றின் மகிமைகளின் ஆழத்தைக் காண முடியாது. அவர் அந்த ஆழத்தைக் காணவே தான் ஸ்ரீமதி ராதிகாவின் நிறத்தையும் பக்தி பாவங்களையும் கொண்டு ஸ்ரீ சைதன்ய மகாப ிரபுவாகத் தோன்றினார். அப்படியும் கூட அவரால் அந்த ஆழங்களைக் கண்டு கொள்ள இயலவில்லை. இவ்வாறு ஸ்ரீ கிருஷ்ணர்

எவராலும் அறிய முடியாதவர். அவர் ஒன்றாக இருந்தாலும் பற்பல ரூபங்களில் தோன்றுகிறார். ஒரே சமயத்தில் அவர் முக்த-வாகவும் சர்வஞ்ஞ-வாகவும் இருக்கிறார். ஒன்றுக்கு ஒன்று முரணானவைகள் கூட அவரிடம் ஒற்றுமையாகக் காணப் படுகின்றன. ஆனால் இதை நீங்கள் தர்க்க ரீதியாகப் புரிந்து கொள்ள முயலாதீர்கள். ஒருவன் ஸ்ரீ கிருஷ்ணரிடம் முழுவதுமாக சரணடைந்திருந்தால் மட்டுமே ஒருவேளை அவனால் அவருடைய மகிமைகளைப் பற்றி சிறிது அறிய முடியலாம். நீங்கள் அவருக்குச் சேவை செய்வதைப் பற்றி மட்டுமே எண்ணுங்கள். மாறாக அவரது மகிமைகளை அளக்கவோ எண்ணத்தால் மதிப்பிடவோ பிரயாசப்பட்டால் அது அபச்சாரத்தில் கொண்டு தான் முடியும். எனவே தான் பிரம்மதேவர், "பிரபோ, உமது மகிமைகளின் ஆழங்களை என்னால் கண்டு பிடிக்கவே இயலாது. உமது மாயா சக்தியினால் உண்டு பண்ணப்பட்ட உலகங்கள் அனைத்தும் ஒரு கனவு போல் தோன்றுகிறது" என்று கூறுகிறார்.

உலகங்கள் அனைத்தும் ஒரு கனவு போல் தோன்றுகிறது என்ற உவமையை நாம் எவ்வாறு புரிந்து கொள்வோம்? இந்த உதாரணத்திலிருந்து விதம் விதமான அர்த்தங்களை எடுக்கலாம். ஆனால் நாம் இதைச் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும்: இதில் இரண்டு உண்மைகள் அடங்கியுள்ளன. முதலாவது, நாம் தூக்கத்திலிருந்து விழிக்கும் போது நாம் கனவில் கண்டவை அனைத்தும் நிஜமல்ல என்று அறிகிறோம். ஒருவன் தன் கனவில் புலியொன்று தாக்குவதாகக் காணும் போது அவன் மிகவும் பயந்து துடிக்கிறான். ஆனால் அவன் விழிக்கும் போது அந்தக் கஷ்டத்திலிருந்து காப்பாற்றப் பட்டு விடுகிறான். ஒரு மனிதன் தன் கனவில் ஒரு பெரும் தீய்க்குள் மாட்டிக் கொண்டு எரிந்து வேதனைப் படுவதாகக் காண்கிறான். ஆனால் அவன் கனவிலிருந்து விழிக்கும் போது அவையெல்லாம் உண்மையிலேயே பொய் என்பதை உணர்கிறான். அதேபோல் இந்த உலகத்துடன் நாம் வைத்திருக்கும் சம்பந்தங்கள் அனைத்தும் வெறும் பொய்! உண்மையல்ல. உலக மாயையில் சிக்கி நாம் இது என் கணவன், இது என் சகோதரன், இது என் நண்பன், இது என் செல்வம், இது என் சொத்து என்றெல்லாம் உரிமை கொண்டாடுகிறோம். இவை அனைத்தும் நாம் கனவு காண்பதைப் போன்றதே.

அப்படியென்றால் இந்த சூரியன், சந்திரன், அனைத்துமே கூடப் பொய்யானவைகளா? இந்த உலகமே பொய்யா? எனது உடலும் பொய்யா? மாயையிடம் நமக்கு இருக்கும் சம்பந்தமும் பொய்யா? இல்லை! அப்படியென்றால் என்ன? இவையனைத்தும் தற்காலிகமானவை. நிரந்தரமானவையல்ல. இது அதிலுள்ள இரண்டாவது அர்த்தம். இந்த உலகம் உண்மை தான் - ஆனால் அது தற்காலிகமானது. பொய்யானதல்ல. ஆனால் இந்த உலகத்தில் கனவில்

நிகழ்வது போல் நாம் உண்டு பண்ணும் சம்பந்தங்கள் - இது என் தாயார், இது என் தகப்பனார், இது என் மாமனார், இது என் மாமியார், இது என் மனைவி, இந்தச் சொத்து அனைத்தும் என்னுடையது, பின்னர் அது என் மகன்களுக்குச் செல்லும் - என்ற இவையனைத்தும் பொய். அதே சமயம், சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், பகவான், அவரது லீலைகள், நாம் இந்த உலக விஷயங்களில் கட்டுண்டு அதனால் வேதனைப்படுதல் - இவையனைத்தும் உண்மையானவை. நாம் இதை சாஸ்திரங்களிலிருந்து மிகவும் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். அவை குருவை பொய்யென்று கூறவில்லை. அவரை ஏதோ நாம் கனவில் காண்பது போல் உண்மையல்ல என்று கூறவில்லை. அது பொய்யாக இருந்தால் பின் நம்மால் எவ்வாறு அவரிடமிருந்து புண்ணியங்களை நம் வாழ்க்கையில் பெற முடியும்? நாம் இவைகளையெல்லாம் பொய் என்று ஒருபோதும் எண்ணக் கூடாது.

ஆனால் மாயாவாதிகளும் அத்வைத வாதிகளும் எல்லாமே பொய்யென்று வாதிப்பார்கள்: பிரம்ம சத்யம் ஜெகம் மித்யா - என்று. அப்படியானால் ஏன் அவர்கள் உபதேசிக்கிறார்கள்? உதாரணமாக, மும்பையில் அவர்கள் ஜனங்களிடமிருந்து நிறைய பணங்களைச் சேகரித்து ஆஸ்ரமம் கட்டுவதை நாம் பார்க்கிறோம். ஆனால் எல்லாமே பொய்யானவையென்றால் பின் அவர்கள் ஏன் இவற்றையெல்லாம் செய்கிறார்கள்? அவர்கள் எத்தனையோ சிஸ்யர்களையும் சிஸ்யைகளையும் சேர்க்கிறார்கள். இவையெல்லாம் எதற்காக? இவையெல்லாம் போலித்தனமா? உபயோகமில்லாதவைகளா? எல்லாமே பொய்யென்று கூறுவது தவறானது. நாம் இதைப் பற்றிச் சரியாக அறிந்திருக்க வேண்டும்: இந்த உலகம் உண்மை, ஆனால் தற்காலிகமானது. அதில் நாம் உண்டு பண்ணும் சம்பந்தங்கள் அனைத்தும் கனவைப் போன்றவை.

பகவானின் மகிமைகள் அளவற்றவை. அவற்றின் ஆழத்தை எவரால் தான் அறிய முடியும்? பிரம்ம தேவரால் முடியவில்லை, பலதேவ பிரபுவினால் முடியவில்லை, கேவலம் கிருஷ்ணரால் கூட அறிய முடியவில்லை. எனவே பகவானின் மகிமைகளை எந்தக் காரணம் கொண்டும் தர்க்க ரீதியில் அறிய முயலாதீர்கள். அவருக்குச் சேவை செய்யும் போது அவற்றைச் சிறிது அறிய முடியும். எனவே நாம் பக்தியை எவ்வாறு அடையலாம் என்பதற்கு மட்டுமே பிரயாசப்பட வேண்டும்.

பிரம்ம மோகன லீலையை கிருஷ்ணர் நிகழ்த்தியதற்குக் காரணம் பிரம்மதேவரைக் குழப்பத்தில் ஆழ்த்த வேண்டும் என்பதே. பிரம்மா தன் வாழ்க்கையின் நடுவில் இவ்வாறு சில சமயங்களில் குழம்புவது வழக்கம். இது நாமும் நம் வாழ்க்கையில் தற்போது அறிவில்லாமல் இருப்பதைப் போல். பின்னர் நாம் ஒரு குருவின்

அனுக்கிரகத்தால் பக்தியில் உற்சாகம் பெற்று, நம் சந்தேகங்கள் தீர்க்கப்படுகின்றன. இதேபோல் தான் ஒரு சமயம் பிரம்மாவும் தன்னை இந்தப் பிரம்மாண்டத்தின் அதிபதியாக எண்ணிக் கர்வமடைந்து, துவாரகாபுரியில் ஸ்ரீ கிருஷ்ணரைச் சந்திக்கச் சென்றார். துவாரகையின் வாயிலை அடைந்து அங்குள்ள வாயிற் காவலனிடம், "நான் கிருஷ்ணரைச் சந்திக்க வந்திருக்கிறேன்" என்று கூறினார். அதைக் கேட்ட வாயிற்காவலன் ஸ்ரீ கிருஷ்ணரிடம் சென்று, "பிரம்மா என்று ஒருவர் தங்களைப் பார்க்க வந்திருக்கிறார்" என்று கூறினான்.

அதற்கு ஸ்ரீ கிருஷ்ணர், "நீ போய் அவர் எந்த பிரம்மா என்பதைக் கேட்டுக் கொண்டு வா" என்று கேட்க அனுப்பினார். வாயிற் காவவன் திரும்பவும் பிரம்மாவிடம் சென்று, "நீங்கள் எந்த பிரம்மா?" என்று கேட்டான். "நான் நான்கு தலைகள் கொண்ட பிரம்மா. எல்லோருக்குமே நான் தான் தாத்தா!" என்று பிரம்மா பதிலளித்தார்.

வாயிற் காவலன் ஸ்ரீ கிருஷ்ணரிடம் திரும்பவும் சென்று பிரம்மா கூறியதை அப்படியே ஒப்பித்தார். ஸ்ரீ கிருஷ்ணர் சிரித்துக் கொண்டே யோசித்தார், "நான் இவருக்கு இந்த ஒரு சிறு பதவியைக் கொடுத்துள்ளேன். ஆனால் இவருக்கு அதனால் எவ்வளவு பெரிய கர்வம் பிடித்துள்ளது பாருங்கள்!" என்று. எனவே வாயிற்காவலனிடம், "சரி,போய் அவரைக் கூப்பிடு" என்று உத்தரவிட்டார்.

பிரம்மா சுதர்ம சபையினுள் நுழைந்தார். சுதர்ம சபையின் ஒரு பெரிய மகிமை என்னவென்றால் அதனுள் எத்தனைக் கோடிக் கணக்கானவர்கள் நுழைந்தாலும் அவர்கள் அனைவருக்கும் அது இடமளிக்கும். தேவைக்குத் தகுந்தாற் போல் பெரிதாக விரியவோ சிறிதாகச் சுருங்கவோ செய்யும். வேனிற் காலத்தில் இதமாகவும், குளிர் காலத்தில் வெதுவெதுப்பாகவும் இருக்கும். ஒருவன் எப்படி விருப்பப்படுகிறானோ அவ்வாறே அது ஆகிவிடும். பிரம்மா அதனுள் நுழைந்து அந்த மிகப் பெரிய ராஜ சபாவின் நடுவில் ஸ்ரீ கிருஷ்ணர் உட்கார்ந்திருந்ததைப் பார்த்தார். மேலும் அங்கேக் கோடிக்கணக்கான பிரம்மாக்களும் வந்திருந்ததைக் கண்டார். அவர்களில் மிகவும் சிறிதானவரோ எட்டு தலைகளுடன் கூடிய ஒரு பிரம்மா. அவர் மற்ற எல்லா பிரம்மாக்களுக்கும் பின்னால் உட்கார்ந்திருந்தார். முன் வரிசையில் ஆயிரக்கணக்கான தலைகள் கொண்ட பிரம்மாக்கள் உட்கார்ந்திருந்தனர். அவர்களுடைய கிரீடங்கள் அனைத்தும் முழுக்க முழுக்க விலை மதிக்க முடியாத மணிகளால் ஆக்கப் பட்டிருந்தன. அவர்கள் ஸ்ரீ கிருஷ்ணருக்குத் தங்கள் சிரங்களைத் தாழ்த்தி வணக்கம் செலுத்தும் போது, அந்தக் கிரீடங்கள் ஒன்றுக் கொன்று மோதியதால் உண்டான சப்தங்கள் நான்கு திசைகளிலும் எதிரொலித்தன. மேலும் அங்கே சில பிரம்மாக்கள் பதினாறு தலைகளுடனும், சில பிரம்மாக்கள்

அறுபத்து நான்கு தலைகளுடனும் - இவ்வாறு எல்லா பிரம்மாக்களும் தன்னைவிட மிக மிகப் பெரியவர்களாகத் தோன்றினார்கள். இதைக் கண்ட பிரம்மாவின் கர்வம் அழிந்தது. நேராக ஸ்ரீ கிருஷ்ணரிடம் சென்று சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்காரம் செய்தார். பின்னர் எழுந்து பார்க்கும் போது எல்லா பிரம்மாக்களும் மறைந்து விட்டனர். ஸ்ரீ கிருஷ்ணர் மட்டும் சிரித்தவாறு உட்கார்ந்திருந்தார். இவ்வாறு ஸ்ரீ கிருஷ்ணரின் மகிமைகள் அளவில்லாதவை! கோபகுமாரைப் போல் யாராவது வைகுண்ட லோகத்துக்குச் சென்றால் அவர்கள் அங்கே இப்படி ஒன்றல்ல, பகவானின் எல்லா அவதாரங்களுமே இவ்வாறு எல்லையற்ற மகிமைகளுடன் இருப்பதை அறிவார்கள்.

# அத்தியாயம் - 7

பிரம்மா கோபக சிறுவர்களையும் திருடிய பின்னர், ஸ்ரீ கிருஷ்ணர், தானே அந்த சிறுவர்களாகவும் கன்றுகளாகவும் உருவம் கொண்டு, ஒவ்வொரு சிறுவர்களின் தனித்தனியான குணங்களையும் கொண்டிருந்ததை பிரம்மா உணர்ந்தார். மேலும் அவரே அவர்களுடைய கம்புகளாகவும் போர்வைகளாகவும் மற்றும் விதவிதமான பொருட்களாகவும் ரூபம் எடுத்தார். அவை எதுவுமே ஸ்ரீ கிருஷ்ணரிடமிருந்து வேறானதல்ல. இதைப் பிரம்ம தேவரே நேரில் உணர்ந்தார்.

*துர்வித்தர்க்யா ஹி ஸா சக்திர்*
*அத்புதா பரமேஸ்வரீ*
*கிந்த்வ் அஸ்யைக் காந்த - பக்தேஷு*
*கூதம் கிஞ்சின் ந திஷ்டதி --- ( பிருகத் பாகவதாம்ருதம் 2.4.165)*

"பகவானின் சக்திகள் பெரும் அதிசயமாகவும் அறிய முடியாதவைகளுமாக இருந்தாலும் அவரது பரம பக்தர்களுக்கு அவை இரகசியமானவைகளல்ல." ஆனால் அவர்கள் பகவானின் எல்லா உருவங்களிடமும் ஒரே மாதிரியான பக்தி பாவத்தை வைப்பதில்லை. அப்படி வைத்தால் அவர்களால் பக்தி பாவத்தின் உயர்ந்த நிலைகளை அடைய முடியாது. நாம் ஸ்ரீ கிருஷ்ணரே தானாக உருவம் எடுத்த கம்புகளையும் கூட ஸ்ரீ கிருஷ்ணராகவே பார்ப்போமா? அவ்வாறே தான் அவர் ராமசந்திரராகவும் நாராயணராகவும் நரசிம்மராகவும் வாமனராகவும் தோன்றியிருக்கிறார். எனவே ஒரு சாதாரண சமநிலை மனிதனோ, அவர்கள் அனைவரையும் சமமாகவேக் கருதுவான். உதாரணமாக இது எல்லா துளசி இலைகளும் சமம் என்று கூறுவது போல். சில இலைகள்

சிறிதாகவும் சில இலைகள் பெரிதாகவும், சில ஓட்டையுடனும், சில உலர்ந்தும், மற்றும் சில இலைகள் நனைந்தும், இன்னமும் சில இலைகள் நன்றாகப் பக்குவம் வராததாகவும் இருக்கலாம். ஆனால் அவை அனைத்தும் ஒரு வகையில் சமமே. அதே போல் தான் ஒரு சம நிலையான மனிதன், "எங்களுக்கு எல்லா வைஷ்ணவர்களும் ஒன்று தான். அவர்களில் யார் உத்தம பாகவத், யார் மத்தியம பாகவத், யார் கனிஷ்தா என்றெல்லாம் பார்க்க மாட்டோம். அவர்கள் அனைவருமே வைஷ்ணவர்கள் என்பதை மட்டுமே நாங்கள் பார்ப்போம். அவர்கள் அனைவரும் காவித் துணியை உடுத்திக் கொண்டு திலகத்தையும் இட்டுக் கொண்டு ஹரி நாமத்தை ஜெபித்துக் கொண்டிருக்கிறார்கள். எங்களுக்கு அவர்கள் அனைவருமே பகவானின் பிரதி நிதிகள்!" என்று கூறுவான்.

இப்படித் தான் சிலர் பேசுவார்கள். ஆனால் பகவத்-பக்தியில் இப்படிப்பட்ட சரிசமமான மனப்பான்மை இருந்தால் அது நல்லதல்ல. பக்தியில் ஒரு பக்தனுக்கு ஒரே ஒரு மூர்த்தியில் தான் அவ்வளவு பக்தி பாவங்களும் இருக்க வேண்டும். கிருஷ்ணர், ராமர், நரசிம்மர், நாராயணர் - இப்படி அனைவருமே ஒன்றாக இருப்பினும், அவன் ஒரு குறிப்பிட்ட இஷ்ட தேவதையில் முழுக்க முழுக்கப் பக்தி கொண்டிருக்க வேண்டும். அப்படியானால் அவனது பஜனா முழுமையாகி நிறைவு பெறும். மாறாக, அவன் எல்லா மூர்த்திகளுமே ஒன்றுதான் என்று நினைத்தால், தத்துவத்தில் அது சரியாகத் தோன்றினாலும் உபாசனை அல்லது வழிபாடு விஷயத்தில் பார்க்கும் போது அந்த மனப்பான்மை சில குறைகளையேக் கொண்டுள்ளது.

உதாரணமாக, கிருஷ்ணன் ஒவ்வொரு வீடுகளிலும் திருடிக் கொண்டு பொய்களையும் கூறிக் கொண்டு திரிகிறான். தாய் யசோதா, "ஏ!, நீ மற்ற வீடுகளில் திருடுகிறாயா?" என்று கேட்கிறாள்.

அதற்குக் கிருஷ்ணனோ, "அம்மா, எந்த நேரத்தில் இதை நான் செய்திருக்க முடியும். விடியற்காலம் எழுந்ததும் நீ என்னை மாடுகளை மேய்ப்பதற்காகக் காட்டுக்கு அனுப்பி விடுகிறாய். நாள் முழுவதும் அவற்றை மேய்த்துக் கொண்டு, பின்னர் சாயங்காலம் மட்டுமே அவற்றை வீட்டுக்குக் கூட்டிக் கொண்டு வருகிறேன். அதன் பின் நான் உன்னிடம் இருக்கிறேன். நீயே சொல். நான் எந்த நேரத்தில் எதைத் திருட முடியும்?"

ஆனால் உண்மையில் அவன் திருடுகிறான். இது தான் முக்ததா. பகவானின் இந்த உன்னதமான குணத்தை பக்தர்கள் மிகவும் விரும்புகிறார்கள். ஆனால் நிர்விஷேஷ வாதிகளோ இதை ஒரு குறையாகக் கருதுவார்கள். அவர்கள் இதை ஒருபோதும் புரிந்து கொள்ள முடியாததால் அதை ஒரு குறையாகவே எண்ணுகிறார்கள்.

பகவானின் இப்படிப்பட்ட, பற்பல வண்ணங்கள் நிறைந்த அற்புதக் குணங்களை ஒரு சம நிலை மனிதனால் ஒருபோதும் அறிந்து கொள்ள முடியாது.

சமநிலைமை என்றால் என்ன? உதாரணமாக ஒரு நீதிமன்ற வழக்கு ஒரு சாதுவுக்கும் திருடனுக்கும் இடையில் நடக்கிறது என்று எடுத்துக் கொள்வோம். அங்கே ஒரு சம நிலையான மனிதன், "எங்களுக்கு இரண்டு பேரும் சமம்" என்றே கூறுவான். இன்னொரு உதாரணம் அயோத்தியா கோவில் விவகாரம். இராமரின் மேல் பக்தி கொண்டுள்ள ஒருவன் என்ன விலை கொடுத்தாவது கோவிலைத் திரும்பவும் கட்ட வேண்டும் என்பான். ஆனால் ஒரு சம நிலையில் உள்ளவனோ, "நண்பனே, ஏன் நீங்கள் இப்படி ஒருவருக்கொருவர் சண்டை செய்து கொண்டு உங்களையேக் கொல்கிறீர்கள்? இங்கே கோவிலோ அல்லது மசூதியோ எது இருந்தால் என்ன? எப்படியும் வழிபாடு நடந்து கொண்டு தானே இருக்கிறது? இதற்காகப் போய் ஏன் சண்டை செய்கிறீர்கள்? இருவருக்கும் நடுநிலையாக இங்கே ஒரு தாய்-சேய் நிலையம் ஒன்றைக் கட்டினால் அது மிகவும் நன்று" என்று கூறுவான்.

எங்கிலும், எப்போதும், நாம் இப்படி நடுவில் ஒரு சம நிலையாக நிற்கும் மனிதர்களைக் காணலாம். ஆனால் பக்தி ராஜ்ஜியத்தில் இப்படிப்பட்ட நடுநிலமை அடியோடு வேண்டப்படாத ஒன்றாகும். தனிப்பட்ட முழுமையான சிரத்தை பக்தியின் ஒரு விஷேஷமான ஒரு குணம். எனவே தான் கிருஷ்ணரிடம் வைத்திருக்கும் சம்பந்தத்தில் ஒரு போதும் நாம் சம நிலமையில் இருக்கக் கூடாது. சமநிலமை என்பது பிரம்மத்துக்கு உகந்தது. எனவே அது பிரம்ம வாதிகளுக்கு மிகவும் பொருந்தும். யாராவது ஒருவன் சமநிலை தான் ஸ்ரீ கிருஷ்ணரின் குணம் என்று வாதித்தால் அவன் கண்டிப்பாக சம நிலையவாதியென்று அறிந்து கொள்ள வேண்டும். பாண்டவர்களுக்கும் துரியோதனனுக்கும் இடையே நடந்த மகாபாரதப் போரில் ஸ்ரீ கிருஷ்ணர் புத்திசாலித்தனத்தாலும் ஏமாற்றியும் தான் தனது பக்தர்களான பாண்டவர்களிடம் சேர்ந்து கொண்டார். ஒருவன் சூரியனை சமநிலமையானது என்று கூறலாம். ஆனால் அது தன் எதிரில் நிற்பவனுக்கு மட்டுமே வெளிச்சத்தைக் கொடுக்கிறது. வீட்டினுள் உட்கார்ந்திருக்கும் இன்னொருவனுக்கு அது வெளிச்சத்தைக் கொடுப்பதில்லை. அப்படியானால் எங்கே அதன் சமநிலமை? பகவானும் இதே போல் தான்.

ஒரு வீட்டில் எஜமானன் எவ்வாறு அமைதியாக உட்கார்ந்திருப்பானோ அதே போல் தான் ஸ்ரீ கிருஷ்ணரும் உட்கார்ந்திருக்கிறார். ஒவ்வொரு துறைக்கும் அவர் தனித்தனியாக அதிபதிகளை நியமித்து அவர்களிடம், "நீங்கள் ஒவ்வொருவரும்

உங்கள் வேலைகளைச் செய்யுங்கள்" என்று உத்தரவிட்டிருக்கிறார். அவர் வெறுமனே உட்கார்ந்து கொண்டு அமைதியாக அனைத்தையும் மேற்பார்வை செய்து கொண்டிருக்கிறார். இதுபோல் ஸ்ரீ கிருஷ்ணர் தன்னிடம் அத்தனை சக்திகள் இருந்தாலும் அவர் மற்றவர்களையும் சுயமாக சேவை செய்ய விடுகிறார். பிரம்மாண்டங்களை இவ்வாறு அவரது மேற்பார்வையில் நிர்வகிக்கும் சக்திகள் அவற்றை எந்த விதமான குழப்பங்களுமின்றிக் கவனித்துக் கொள்கின்றன. அவைகளுக்குள் இதுவரையில் எந்தக் குழப்பமும் வந்ததுமில்லை, இனி வரப்போவதுமில்லை. அவரது சக்திகளின் மகிமைகள் அப்படிப்பட்டவை!

கிருஷ்ணன் எதையோ திருடியிருக்கிறான். அந்த செய்தியை யசோதா அறிந்ததும் கோபப்பட்டாள். பரப்பிரம்மம் வீடுகளில் திருடியும் அங்குள்ள பாண்டங்களை உடைத்துமிருக்கிறான். எனவே அவனைத் தண்டிக்க வேண்டும். ஆனால் அவனது உடலோ மிகவும் மிருதுவானதால் யசோதா ஒருபோதும் கிருஷ்ணனை அடிக்கவே மாட்டாள். ஆனால் அவன் எப்படியும் ஒரு பாடம் படிக்க வேண்டும் என்று நினைத்து உரலில் கிருஷ்ணனைக் கட்டிப் போடப் போனாள். ஒரு கயிறை கைகளில் எடுத்துக் கொண்டு கிருஷ்ணனைக் கட்ட ஆரம்பித்தாள். ஆனால் அது இரண்டு விரல் வீதியளவுக்குக் கட்டையாக இருந்தது. அவள் மேலும் நிறையக் கயிறுகளைக் கோர்த்துக் கொண்டு கிருஷ்ணனை இன்னமும் கட்ட முயன்றாள். எத்தனை எத்தனை கயிறுகளைச் சேர்த்துக் கட்டியும் அது இரண்டு விரல் வீதியளவுக்குக் குறைவாகவே இருந்தது. விடாமல் தொடர்ந்து காலையில் பத்து மணி வரையிலும் முயற்சி செய்துப் பார்த்து விட்டாள். எத்தனைக் கயிறுகளால் கட்டினாலும் அவை இரண்டு விரல் வீதியளவுக்குக் குறைவாகவேயிருந்தது. அப்போது யசோதா மிகவும் ஆச்சரியமடைந்தாள். ஆனால் கோபியர்களோ மகிழ்ச்சி அடைந்தனர். அவர்கள் முதலில் யசோதாவிடம் முறையிட்டு கிருஷ்ணனுக்குத் தண்டனை வாங்கிக் கொடுக்க ஆசைப்பட்டிருந்தாலும், இப்போது அவர்கள் யசோதாவை நோக்கிக் கைகளைக் கொட்டிச் சிரித்துக் கொண்டு, "ஓ யசோதா! பார், உன்னால் அவனைக் கட்டுப் படுத்தவே முடியாது! அவனை எப்படி நீ கட்ட முடியும்?" என்று பரிகசித்தனர். மேலும் அவர்களும் பிரஜா முழுவதுமுள்ள அத்தனை கயிறுகளையும் கொண்டு வந்து யசோதாவிடம் கொடுத்தனர். அவற்றாலும் கிருஷ்ணனைக் கட்ட முடியவில்லை. எப்போதும் அது இரண்டு விரல் வீதியளவில் குறைவாகவே இருந்தது. யசோதாவோ எல்லாக் கயிறுகளையும் சேர்த்துக் கட்டினாள். கிருஷ்ணனின் இடையோ, அல்லது அரையில் கட்டியிருந்த ஆபரணங்களோ கொஞ்சமும் பெரிதாகவுமில்லை. அப்படியென்றால் இது என்ன?

பகவானின் அசிந்திய சக்தி பெரும்பாலும் எதுவும் செய்யாமல் தூக்கத்திலேயே தான் இருக்கும். ஆனால் அது எப்போது சேவை செய்யலாம் என்று காத்துக் கொண்டேயிருக்கும். சிலர் வேலை எதுவுமின்றி எஜமான் எப்போது வேலை கொடுப்பார் என்று காத்துக் கிடப்பது போல் பகவானின் கோடிக் கணக்கான சக்திகள் அவரது கட்டளைக்காகக் காத்துக் கிடக்கும்.

ஆனால் இது நாம் மற்றவர்களுக்கு வேலை கொடுப்பது போல் அல்ல. பகவான் என்ன செய்ய வேண்டுமென்று தன் மனதில் நினைத்தாலே போதும், அதே நேரத்தில் அது உடனடியாக நடந்து விடுகிறது. இங்கே ஸ்ரீ கிருஷ்ணன், "இன்று என் அம்மா என்னைக் கட்டிப் போடுகிறாள். ஆனால் வெளியே பசுக்கள் அனைத்தும் என் தரிசனத்துக்காகக் காத்துக் கிடக்கின்றன. நான் வருவது வரை அவை பாலைக் கறக்கவும் விடாது. கன்றுகளும் எனக்காகக் காத்துக் கிடக்கின்றன. இனி சீக்கிரமே என் சகாக்களும் வந்து விடுவார்கள். என்னால் வெளியே போய் அவர்களுடன் விளையாட முடியாது. எனவே இன்று நான் மிகவும் கவலையில் தான் இருப்பேன்" என்று நினைத்தான்.

மாடு மேய்க்கும் தன் சக பாலகர்கள் இவற்றை யெல்லாம் கண்டனர். "இன்று உன் அம்மா உனக்குச் சரியான பாடம் படிப்பித் தார்கள்" என்று கூறிக் கொண்டனர். அன்று கிருஷ்ணனுடன் தங்களால் விளையாட முடியாது என்று மிகவும் வருத்தப்பட்டாலும், அதே சமயம் தங்கள் பிரியமான கிருஷ்ணனைப் பார்க்க முடிந்ததால் மகிழ்ச்சி கொண்டனர். அப்போது கிருஷ்ணனுக்கு வெறும் மூன்றரை வயதுகள் தான் ஆகியிருந்தது. எனவே மற்ற சிறுவர்கள் அப்போது மூன்றோ அல்லது இரண்டோ வயதுகள் தான் இருப்பார்கள். ஆனால் அவர்கள் அனைவரும் கிருஷ்ணனைப் பார்த்ததும் அளவில்லா மகிழ்ச்சி யடைந்தனர். ஆனால் அதே சமயம், "ஓ, இன்று கிருஷ்ணனின் அம்மா அவனைக் கட்டிப் போட்டிருப்பதால் நம்மோடு அவன் இன்றைக்கு விளையாட வர முடியாதே" என்று அங்கலாய்த்துக் கொண்டனர்.

இது முக்ததா - சர்வஞ்ஞதா அல்ல. இதே சொரூப சக்தியே யோக மாயா என்று அழைக்கப் படுகிறது. கிருஷ்ணர் தனது இதே யோக மாயா சக்தியினால் தான் எத்தனையெத்தனையோ லீலைகளை நிகழ்த்துகிறார். இதே யோக மாயா, அப்போது கிருஷ்ணருக்குச் சேவை செய்ய சந்தர்ப்பம் வந்துள்ளதை அறிந்தவுடன், தேவையான காரியத்தில் இறங்கினாள். "கிருஷ்ணரின் வயிற்றை யாராலும் கட்ட முடியவில்லையென்றால் அவன் வெளியே விளையாடப் போய் விடுவான்" என்று எண்ணினாள். எனவே எவ்வளவு நீளமான கயிற்றால் கட்டியும் அது இரண்டு விரல் வீதியளவுக்குக் குறைவாகவே யிருந்தது. இது முடியாதவொன்று. ஆனால் அவரது சொரூப சக்தி

யினால் இது சாத்தியமாகி பகவானின் லீலைகள் செவ்வனே நடக்கின்றன.

பகவானின் தரிசனம் யாருக்குக் கிடைக்க வேண்டும், யாருக்குக் கிடைக்கக் கூடாது என்பது யோக மாயாவுக்கு எப்படித் தெரிகிறது. யோக மாயாவை ஒருவன் திருப்தியடைய வைத்தால் அவனுக்கு ஸ்ரீ கிருஷ்ணரின் தரிசனம் கிடைக்கிறது. அவள் திருப்திப்படவில்லையானால் அவனுக்கு ஸ்ரீ கிருஷ்ணரின் தரிசனம் கிடைப்பதில்லை. இந்த யோக மாயா தான் அவரது அனைத்து லீலைகளுக்கும் மூல காரணம். இதே யோக மாயாவின் மூல காரணம் ஸ்ரீமதி ராதா ராணியாகும். இதே சக்தி தான் துவாரகையில் சத்யபாமா, ருக்மிணி போன்றவர்களாகவும், வைகுந்தத்தில் இலக்சுமிகளாகவும், மற்ற தேவ லோகங்களில் பகவானின் துணைவிகளாகவும் இருக்கிறார்கள். தேவ லோகங்களில் அவள் சஞ்சல (நிரந்தர நிலையற்ற) இலக்சுமியாகவும், வைகுந்தத்தில் அசஞ்சல (நிலையான) இலக்சுமியாகவும் உள்ளாள். அவர்கள் அனைவரும் ஸ்ரீமதி ராதாராணியின் பிரதி பிம்பமான உருவங்களாகும்.

பூவுலகத்தில் சஞ்சல இலக்சுமி இருக்கிறாள். இங்கே அவளுக்கு ஏன் இந்தப் பெயர் வந்தது? காரணம், செல்வம் எப்போதும் ஒரே யிடத்தில் இருப்பதில்லை. அது இன்று ஒருவனிடமும் நாளை இன்னொருவனிடமும் இருக்கும். அவள் எப்போதும் ஒரு கணவனிடம் இருப்பதில்லை. எப்போதும் நான்கு திசைகளிலும் அலைந்து கொண்டேயிருப்பாள். அவள் யார்? நிரந்தர இலக்சுமி( பூமாதேவி, ஸ்ரீதேவி, நீளாதேவி) யின் பிரதி பிம்பம். இதே போல் துர்கா(விந்திய வாசினி, கங்காளி, சாமுண்டி) வும் அந்த சக்தியின் நிழலே தான். அவை அனைவருமே நிரந்தர இலக்சுமியின் பிரதி பிம்பங்கள். ஸ்ரீ இராம சந்திரரின் லீலைகள் நடந்த போது இலங்கையிலும் இலங்கினியாக இருந்தவள் இதே இலக்சுமியின் நிழலேயாகும். இலங்கையிலுள்ள அசுரர்கள் அனைவரும் இந்த சஞ்சலமான இலக்சுமியையே வணங்கி னார்கள். பின்னர் அங்கே ஹனுமான் சென்று தாக்கிய போது அவள் மனங்கலங்கி, "வெகு சீக்கிரமே இவன் இராவணனைக் கொன்று விடுவான். இந்தக் குரங்கு நிச்சயமாக நம் அனைவரையும் வென்று விடும்" என்று எண்ணி இலங்கையை விட்டே ஓடி விட்டாள்.

எனவே இந்த உலகத்தில் இலக்சுமி மிகவும் சஞ்சலம் உள்ளவள். ஒரே இடத்தில் நிரந்தரமாக இருப்பதில்லை. சில பெரிய செல்வந்தர்கள் தங்களுக்குப் பின் செல்வங்கள் அனைத்தும் தன் குழந்தைகளிடம் தங்கியிருக்கும் என்று நினைப்பார்கள். ஆனால் உண்மையில் அது அவர்களது குடும்பத்தில் தான் தங்கியிருக்கும் என்று எந்த விதமான உத்தரவாதமும் கிடையாது. ஆனால் பக்தி வடிவமாக பக்தி தேவியாக பகவானிடம் எப்போதும் உறைந்துள்ள இலக்சுமி

நிரந்தரமாக இருப்பவள். இந்த இலக்சுமி எங்கேயிருந்தாலும் அவள் நிரந்தரமாக இருப்பாள். அவளை யாராவது அவமதித்தால் மட்டுமே அங்கிருந்து விலவுவாள். இல்லாவிடில் அவள் நிரந்தரமாக இருப்பவள். ஆனால் அந்த பக்தி தேவியோ எளிதில் கிடைப்பதில்லை. கிடைப்பது மிக மிக அபூர்வம். எனவேதான் அப்படிப் பட்ட பகவானின் பரா சக்தியைத் தர்க்க ரீதியில் அறிந்து கொள்ள இயலுவதில்லை. சேவைகள் செய்து மட்டுமே அறிய முடியும். நமக்குப் பகவானின் குறிப்பிட்ட ஒரே ஒரு சொரூபத்தில் மட்டும் முழுவதுமான இணக்கம் ஏற்பட்டால் மட்டுமே பக்தி உண்டாகும். அவ்வாறு முழுமையாக பிணக்கமில்லையென்றால் பக்தி உண்டாவதில்லை.

உங்களுக்கு ஒருவேளை ஸ்ரீராமரையும், சீதா தேவியையும், அதே சமயத்தில் ஸ்ரீ ராதா ராணியையும் ஸ்ரீ கிருஷ்ணரையும், மற்றும் சந்திராவளியையும் கிருஷ்ணரையும் இப்படி அனைவரையும் பஜனை செய்ய வேண்டும் என்று ஆவல் உண்டாகலாம். இதை நாம் தத்துவ ரீதியாகப் பார்க்கும் போது எல்லாம் சரியாகத் தோன்றலாம். அது மட்டுமல்ல இதனால் நீங்கள் வைகுந்தத்தைக் கூட அடையலாம். ஆனால் உங்களுக்கு ஒரு குறிப்பிட்ட ரூபத்தில் நிஷ்தா வரவில்லை யென்றால் அங்கே ரஸா வருவதில்லை. ரஸா வரவில்லையென்றால் அங்கே ஆனந்தம் இல்லை.

பிரகத் பாகவதாம்ருதாவில், 2.4.165 ஆம் சுலோகத்தில் பரமேஸ்வரி என்ற வார்த்தை வருகிறது. பரமேஸ்வரி தான் அசிந்திய சக்தி. இந்தச் சக்தியை ஒருபோதும் அறிவினாலோ தர்க்கத்தினாலோ அறிய இயலாது. அவள் இவை எல்லாவற்றையும் கடந்தவள். அந்த சக்தியின் தரிசனம் நமக்கு எப்போது கிடைக்கிறது? நாம் முழுமையாகப் பஜனையில் ஈடுபட்டால் மட்டுமே அது சாத்தியமாகிறது. பிருந்தாவனத்துக் கோபியர்களிடமிருந்த ராகானுக பக்தி மிக மிக அபூர்வம். அது கிடைப்பது மிக மிகக் கடினமான ஒன்று. ஆனால், கிடைப்பது மிக மிக அரிதாக இருந்தாலும் அதை அடைவது சாத்தியம். சில சமயங்களில் இந்த உலகத்திலேயே கீழ்மையான ஒன்று, அதிர்ஷ்டவசமாக பகவானின் சேவையில் ஈடுபட்டால் அது மகத்தானதாக ஆகி விடுகிறது.

*விக்ரீதிதம் வ்ரஜ-வதூபிர் இதம் ச விஷ்ணோ*
*ஸ்ரத்தான் விதோ அனுஷ்ருணுயாத் அத வர்ணயேத் யஹ்*
*பக்திம் பரம் பகவதி பிரத்திலப்ய காமம்*
*ஹ்ர்ட் ரோகம் ஆஷ்வ் அபஹினோதி அசிரேண தீரஹ*
*(ஸ்ரீமத் பாகவதம் 10.33.39)*

"எவனொருவன் நம்பிக்கையுடன் ஸ்ரீ கிருஷ்ணர் பிருந்தாவனத்துக் கோபியர்களுடன் நிகழ்த்திய தெய்வீக லீலைகளைக் கேட்கவோ

கூறவோ செய்கிறானோ அவனுக்குக் காமம் போன்ற ஆசைகள் இதயத்திலிருந்து நீங்கப் பெற்று வெகு சீக்கிரமே சுத்த பக்தி கிடைக்கிறது."

ஸ்ரீமத் பாகவதத்தில் வரும் இந்தச் சுலோகத்துக்கு ஸ்ரீ விஸ்வநாத சக்கரவர்த்தி தாக்கூர் அளித்த விளக்கவுரை மிகவும் அழகானது. சிலர் முதலாவது தங்கள் அனர்த்தங்கள், கெட்ட செயல்கள் அனைத்தையும் நிவிர்த்தி செய்து விட்டுப் பின்னர் தங்கள் சுயமான நற்செயல்கள் மூலம் பரிசுத்தமாக மாறி, அதன் பின் மட்டுமே பஜனை யில் ஈடுபட வேண்டும் என்று கூறுவது நகைக்கத் தக்க ஒரு விஷயம். முதலாவது மனத்தை ஒன்று படுத்தி, பின் இதயத்தைத் தூய்மை செய்து, பின் பஜனைகள் செய்து, அதன் பின்னரா பக்தி வரும்? இல்லவே இல்லை. இப்படி ஒருபோதும் நடக்காது. நீங்கள் உங்கள் மனதை ஒரு நிலையில் ஈடுபடுத்த எத்தனையோ கோடிக்கணக்கான பிறவிகளில் முயற்சி செய்தாலும் அந்த மனம் ஒரு நிலைப்படும் என்று எந்த விதமான உத்தரவாதமும் கிடையாது. விஸ்வாமித்திரர் மற்றும் சௌபரி போன்ற எத்தனையோ பெரும் பெரும் ரிஷிகள் கூடக் கஷ்டப்பட்டார்கள் என்றால், நாம் நம் சொந்த முயற்சியினால் கோடிக் கணக்கான பிறப்புகளிலும் கூட அது சாத்தியமாக முடியாது. வெறுமனே நீ அத்தனைக் கோடிக்கணக்கான பிறப்புக்களிலும் காத்துக் கொண்டே தான் இருப்பாய். எதுவுமே நடக்காது. அது ஒருவன் நதி யொன்றைத் தாண்டுவதற்கு அதன் தண்ணீர் அனைத்தும் வற்றுவது வரைகக் காத்துக் கிடப்பதைப் போன்றது. எனவே நீ எப்போது எப்படி இருந்தாலும் - ஒரு திருடனாகவோ, அயோக்கியனாகவோ, இல்லை சுத்தமானவனாகவோ - எப்படியிருந்தாலும் இப்போதே கிருஷ்ண பஜனையையும் ஹரி நாம ஜெபத்தையும் உடனடியாக ஆரம்பிக்க வேண்டும். பின்னர் பக்தி தானாகவே மற்ற அனைத்தையும் பார்த்துக் கொள்ளும்.

இந்த உலகத்தில் கணவனையே விட்டு விட்டு இன்னொருவரிடம் அன்பு செலுத்துதலைப் போல் மோசமான ஒழுக்கம் கெட்ட வேறொரு செயல் கிடையவே கிடையாது. ஆனால் அதையே ஸ்ரீ கிருஷ்ணருக்காகச் செய்யும் போது அது ஒழுக்கம் கெட்ட செயலாகாது. ஏன் அப்படி? காரணம் என்னவென்றால் ஸ்ரீ கிருஷ்ணர் மட்டுமே அனைவருக்கும் புருஷர். பிருந்தாவனத்துக் கோபியர்கள் இந்த உலகத்திலும் பரலோகத்திலும் ஸ்ரீ கிருஷ்ணரின் மேல் வைத்திருக்கும் பக்தி பாவத்திற்கு மேலாக இன்னொரு பக்தியே கிடையாது. ஸ்ரீமத் பாகவதத்தின் பத்தாம் காண்டத்தைப் படிக்கும் சிலர், "ஹே! இது ஒரு சாதாரண உலக வாழ்க்கைக் கதை. மறை முகமாகவும், ஏமாற்றியும் கோபியர்கள் ஸ்ரீ கிருஷ்ணரிடம் உறவு வைத்ததினால் கோபியர்களை ஏன் மிகவும் உத்தமமானவர்கள் என்று கூற முடியும்?" என்று கேட்பார்கள்.

அவர்கள் உண்மையிலேயே மிகவும் உத்தமமானவர்கள். அதனால் தான் எல்லோரும் பின்பற்றத் தக்க மிகப் பெரும் உத்தமர்களான நாரதர், உத்தவா, நான்கு குமாரர்கள் அனைவருமே கோபியர்களின் பாதங்களைத் தங்கள் இதயத்தில் வைத்துத் தியானம் செய்கிறார்கள். அப்படிப்பட்ட கோபியர்களின் பக்தி பாவத்தை அடைந்த ஒரு சுத்த பக்தன் - விக்ரீதிதம் வ்ரஜ வதூபிர்: அவனால் ஸ்ரீ கிருஷ்ணரின் லீலைகளிலும் நுழைய முடியும்.

ஸ்ரீ கிருஷ்ணர் பிரஜ கோபியர்களுடன் நிகழ்த்திய லீலைகளை ஒருவன் நம்பிக்கையுடன் 'அனுஷ்ருணுயாத்': பகவத் தத்துவத்தை அறிந்த ஒரு பரிசுத்தமான ரசிக வைஷ்ணவ குருவை ஏற்றுக் கொண்டு - அதன் பின் அவரிடமிருந்து இடைவிடாமல் உபதேசங்களைக் கேட்கும் போது பூரணமான பக்தி பாவம் உண்டாகும். இதுவே எல்லாவற்றிலும் மேலான பக்தி பாவம். அது நம்மில் உண்டாகி அளவில்லா ஆனந்தத்தைக் கொடுக்கும். 'அனுவர்ணயேத்' என்றால் அது ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கும் வழங்கப் படுகிறது என்று பொருள். ஸ்ரீ வியாஸ தேவர் எவ்வாறு ஸ்ரீல சுக தேவ கோஸ்வாமிக்கு வழங்கினாரோ அதையே பின்னர் சுகதேவ கோஸ்வாமி பரீக் ஷித் மகாராஜாவுக்கு வழங்கினார். மேலும் சுகதேவ கோஸ்வாமி போதித்ததையே பின்னர் ஸ்ரீல சுத கோஸ்வாமி மகா முனிவர்களின் சபையில் போதித்தார். இவ்வாறு ஒருவர் போதிப்பதை இன்னொருவர் ஆழ்ந்த நம்பிக்கையுடன் கேட்கும் போது என்ன ஆகிறது? பக்தி பராம் பகவதி: இங்கே பராம் என்றால் ஸ்ரீ கிருஷ்ணர். நீங்கள் எல்லாத் தத்துவங்களிலும் மேலான பக்தியை, கிருஷ்ண பக்தியைப் பெறுவீர்கள். அந்த பக்தி மிகவும் உருக்கமுடன் பின்னர் வளர்ந்து "பிரதிலப்ய காமம் ஹ்ருத்-ரோகம் ஆஷு": நீங்கள் பிரஜ கோபியர்களின் பிரேமையையும் பெறுவீர்கள். அதைப் பெறும் போது என்ன நடக்கும்? இதயத்திலுள்ள நோய் வேரோடு பிடுங்கப் படும். அது என்ன நோய்? நம் புத்தியையே மறைக்க வைக்கும், ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் உண்டாகும் காமமே அந்த நோய். அது கீழ்ப் பிறப்புக்களான மிருகங்கள், பறவைகள் அனைத்துக்கும் கூடப் போராட்டத்தை உண்டு பண்ணுகிறது என்றால் மனிதர்களை எங்கே விட்டு வைக்கும்?

இந்தக் காமம் இன்னும் எத்தனையோ விதங்களில் ரூபம் எடுக்கிறது. நாம் நினைக்கிறோம், "நான் தான் இன்பம் சுகிப்பவன். நான் தான் எஜமான்" என்று! அது மட்டுமல்ல. உணவு, துணிமணிகள் இப்படி மிகவும் சாதாரண விஷயங்களில் கூட நாம் நம் சொந்த இன்பத்துக்காக ஆசைப் படுவதும் காமமே. இவ்வாறு காமம், மிகவும் நுட்பமான ரூபத்திலிருந்து பெரிய அளவு வரை எத்தனையோ வகைகளாக உள்ளன. ஆனால் பிருந்தாவனக் கோபியர்கள் ஸ்ரீ கிருஷ்ணரிடம் கொண்டிருந்த பிரேமையைப் பற்றிக் கேட்கும் போது,

உலக ஆசைகளில் நம்மைப் பிறவிக்கு மேல் பிறவியாக அத்தனை பிறவிகளிலும் கட்டிப் போடும் இந்த நோய் நம் இதயத்திலிருந்து வேரோடு பிடுங்கப் படுகிறது. அதன் பின் நம்மால் கோடிக் கணக்கான பிறவிகளிலும் கூட நமது சுய முயற்சிகளால் அடைய முடியாமலிருந்த பிரேமை மெதுவாக வருகிறது. பாருங்கள்! இந்த உலகத்தில் எந்த ஒரு ஒழுக்கம் கெட்ட விஷயத்தையும் பகவானிடம் செலுத்தும் போது எப்படி அது பரிசுத்தமாகி விடுகிறது!

எனவே விஸ்வ நாத சக்கரவர்த்தி, "உன்னுடைய கெட்ட குணங்களைத் துரத்துவோ, உன் மனதை ஒருநிலைப்படுத்தவோ, உன் காமங்களை எறியவோ, உன்னுடைய சுய முயற்சிகள் உதவாது. கோடிக் கணக்கான பிறப்புகளிலும் கூட அது இயலாது. நீ எந்த விதக் கவலையுமின்றி ஒன்றே ஒன்றை மட்டும் செய்: சிரவணம், கீர்த்தனம் மற்றும் ஸ்மரணத்தின் மூலம் பகவத் பக்தியில் ஈடுபடு. ஸ்ரீ கிருஷ்ணரின் லீலைகள் எத்தனை எத்தனையோ உள்ளன. ஆனால் அவை அனைத்திலும், கோபியர்களுடன் அவர் நிகழ்த்திய ராஸ லீலா போன்றவைகளைப் பற்றியவைகளே மிகவும் உத்தமமானவை. அவற்றில் ஒருவன் மூழ்கி இரவும் பகலும் ஆழ்ந்திருப்பானானால் அவனுக்கு வேறு எதற்குமே நேரம் இருக்காது. பின் அவன் எப்படி எந்த விதமான பாவச் செயல்களிலும் ஈடுபட முடியும்? அவனே தீரா-தன்னுடைய புத்தி, சிந்தனை அனைத்தையும் நிலைப் படுத்தியவன்" என்று கூறுகிறார்.

*தே ஷாம் சதத யுக்தானாம்*
*பஜதாம் ப்ரீதி பூர்வகம்*
*ததாமி புத்தி யோகம்தம்*
*யேன மாம் உபயாந்திதே (பகவத் கீதை 10.10)*

"எவனொருவன் எனக்கு மிகவும் நேர்மையாக அன்புடன் சேவை புரிகிறானோ, அவனுக்கு என்னை எப்படி அடைவது என்ற ஞானத்தை நானே வழங்குகிறேன்."

இந்த சுலோகத்தில் "புத்தி" என்றால் பகவானைப் பெற வேண்டிய அறிவு என்று பொருள். இதில் முழுக்கவும் கருணையை நாம் காணலாம். ஒரு இடத்தில் ஸ்ரீ விஸ்வநாத சக்கரவர்த்தி கூறுகிறார்: "ஓ கிருஷ்ணா! நீர் மிகவும் கருணையுடையவர். மேலும் நீரே "ததாமி புத்தி யோகம்" என்றும் கூறியிருக்கிறீர். ஆனால் நீர் என்னிடம், "உனக்கு எந்த புத்தியோகம் வேண்டும் என்று கேட்கலாம். அர்ஜுனனுக்கு வழங்கிய புத்தி யோகம் எங்களுக்கு வேண்டாம். அது அர்ஜுனனுக்கு உகந்ததாக இருக்கலாம். அதை விரும்புபவர்களுக்கும் இது சரியாக இருக்கலாம். ஆனால் எங்களுக்கு, நீர் எவ்வாறு உம்மையே மறந்து, குழம்பி கோபியர்களுடன் லீலைகள் புரிந்திருந்ததைப் பற்றி அறிய

வைக்கும் அந்தப் புத்தி யோகத்தைக் கொடுக்க வேண்டும். அதற்குச் சேவை செய்யும் போது ஒருவன் தன்னை முழுவதுமாக மறந்து விடுகிறான். எந்தப் புத்தி ஒருவனை கோபியர்களின் பணிப் பெண்களாக ஆக்கி எல்லாவற்றையும் மறக்க வைக்குமோ எனக்கு அந்தப் புத்தி தான் வேண்டும். அவ்வாறு எல்லாவற்றையும் மறந்து உமக்கு மட்டுமே சேவை செய்பவர்களிடம் நீர் சாதாரண மனிதர் போலவே உறவு கொள்கிறீர்! எனவே என்னிடம் கருணை கொண்டு அந்த விதமான புத்தி யோகத்தை வழங்குவீர். அப்படிப்பட்ட ஒரு தீரனாக இருப்பதே என் ஆசை. இப்படிப்பட்ட புத்தியினால் உம்மிடம் வருவதையே எங்களுக்கு அருள வேண்டும்". இவ்வாறு விஸ்வநாத சக்கரவர்த்தி விண்ணப்பித்த பிரார்த்தனைகள் மிக மிக அழகானவை. இதை விடவும் உயர்ந்த ஒரு பிரார்த்தனையை வேறு எவராலும் வழங்கவே முடியாது.

எனவே தான் அவர் அப்படிக் கூறுகிறார், "என் நண்பர்களே, அப்படிப் பட்ட சாதனாவை நீங்கள் செய்ய வேண்டும். அதே சமயம் தொடர்ந்து, "ஓ கிருஷ்ணா, நான் ஒரு மிகப் பெரிய திருடன், பெரிய அயோக்கியன்..." என்றும் பிரார்த்திக்கக் கூடாது. அவரது மகத்தான லீலைகளில் மிகவும் ஆழ்ந்து ஊறியிருக்க வேண்டும். மாறாக, "நான் இதற்கு தகுதியற்றவன், நான் இதற்கு தகுதியற்றவன்" என்று சமநிலை வாதிகளைப் போலும் ஆகக் கூடாது. உதாரணமாக உனக்கு ரசகுல்லா வில் மிகப் பெரும் ஆசை என்று வைத்துக் கொள்வோம். ஆனால் உன் பையிலோ பணம் எதுவுமேயில்லை. ஆனால் உனக்கு ரசகுல்லாவின் மேல் மிகவும் ஆசையிருப்பதால் அதை எப்படியாவது பிடுங்கியோ, களவு செய்தோ, எந்த விதத்திலாவது நீ எடுத்து விடுவாய். இதேபோல் தான் நமக்கு பக்தியை அடையவும் பேராசை இருக்க வேண்டும். நாம் பகவானிடம், பக்தியின் மேல் இப்படிப்பட்ட பேராசையைக் கொடுத்துக் கருணை செய்ய வேண்டுமென்று பிரார்த்திக்க வேண்டும். எனவே இந்த விளக்கத்தின் சாரம் என்னவென்றால் நமக்கு வேண்டும் என்று கேட்கும் புத்தியோகம் உண்மையிலேயே யோகமாயாவின் கருணையையே!

பகவானின் இந்த யோக மாய சக்தி தான் துர்வித் தர்க்யா- அறிய முடியாத, தர்க்கங்களுக்கும் வாதங்களுக்கும் அப்பால் உள்ளது. ஆனால் நாம், "பலர் இதைப் பெற்றுள்ளனர். எனவே நாமும் அதைக் கண்டிப்பாகப் பெற வேண்டும். அவர்களுக்கு ஏன் அது கொடுக்கப் பட்டது? வில்வ மங்களா மிகவும் மோசமான குணங்களைப் பெற்றவர், கெட்ட செயல்களைச் செய்தவர். ஆனால் அவருக்கு ஏன் கிடைத்தது? எனது எண்ணங்களோ சுத்தமானது. நான் எதையும் திருடியதோ, எங்கும் பொய் பேசியதோ இல்லை. அப்படியானால் எனக்கு ஏன் பக்தி கிடைக்கக் கூடாது?" என்று ஒருபோதும் நினைக்கக் கூடாது. மாறாக, "எப்போது எனக்குப் பக்தி கிடைக்கும்? அதை நான் எப்படிப்

பெறுவேன்?" என்று தான் நினைக்க வேண்டும். இது துர்வித்தர்க்யா.

இதே யோக மாயையின் அற்புதமான செயல்களால் மட்டுமே பகவான் எண்ணற்ற உருவங்களில் தோன்றுகிறார். பகவான் நர நாராயண உருவத்தில் தோன்றும் போது அவர் எப்போதும் தியானத்தில் மூழ்கியிருப்பார். அது ஒரு நிலை.

ஸ்ரீ ராமர் சொரூபத்தில் அவர் ஒரு தனிப்பட்டக் குணத்தில் தோன்றுகிறார். இவ்வாறு அவரது ஒவ்வொரு உருவத்திலும் பரமேஸ்வரியான யோக மாயையின் சக்தியினால் தனித்தனியான குணங்களில் தோன்றுகிறார். பரமேஸ்வரரிடமிருந்து வந்தது பரமேஸ்வரி. "*இந்த்வ் அஸ்யைக் காந்த பக்தேசு, கூதம் கிஞ்சின் ந திஷ்டதி*": இவையனைத்தும் யாராலும் அறிய முடியாதததாக இருந்தாலும், பகவானின் சுத்த பக்தர்களுக்கு இந்த ரகசியங்கள் அனைத்தும் தெரியாததல்ல. யாருடைய கருணையினால் நாம் முழுமையான பக்தியை அடைய முடியும்? யோக மாயாவிடமிருந்து தான் நாம் பக்தியை உண்மையிலேயே சரியான வழியில் அறிந்து கொள்ள முடியும். இல்லாவிடில் எவராலும் இதை அறிந்து கொள்ள இயலாது.

நாம் பக்தி சாஸ்திரங்களிலுள்ள எந்த ஒரு கதையிலிருந்தோ சுலோகத்திலிருந்தோ அதன் ஆழ்ந்த உள் அர்த்தத்தை மிகவும் தெளிவாக அறிந்து கொள்ள முயல வேண்டும். நாம் எந்த ஒரு லீலையிலும் அதன் பின்னால் உள்ள விஷயங்களைக் கொஞ்சமாவது தெரிந்திருந்தால் நம் இதயத்தில் பரவசம் உண்டாகி அது பேரானந்தத்தைக் கொடுக்கும். இல்லாவிட்டால் நாம் பகவானின் லீலைகளை ஆயிரக் கணக்கான வருடங்கள் படித்தாலும் கேட்டாலும் அவை நிச்சயமாக சுக்ருதியை அளித்தாலும், நம்மால் அவரது லீலைகளில் முழுவதுமாக நுழைய முடியாது. ஆனால் மிகவும் சிரத்தையும் நம்பிக்கையும் கொண்டு ஒரு வைஷ்ணவரிடமிருந்து பகவானின் லீலைகளைக் கேட்கும் போது நமக்கும் அந்த லீலைகளில் நுழைய வேண்டும் என்ற ஆசை உண்டாகும். நாரதர் கோபகுமாரிடம், "கோலோகத்துக்குச் செல்ல வேண்டுமானால் நீ இதையெல்லாம் கண்டிப்பாகத் தெரிந்திருக்க வேண்டும். அப்படியானால் தான் உன்னால் அங்கு ஏதாவது செய்ய முடியும். இல்லாவிட்டால் நீயும் இங்கே வைகுந்தத்தில் சிக்கிக் கொண்டு, நான்கு குமாரர்களைப் போல் அவ்வப்போது நாராயணரின் தரிசனத்தைப் பெற்று, வணக்கங்களையும் செலுத்தி விட்டுப் பின்னர் தன் சொந்த இருப்பிடத்திற்கு திரும்பவும் சென்று விடுவது போல் ஆகி விடும்" என்று கூறினார்.

இனி நாம் அடுத்த சுலோகத்தைப் பார்ப்போம்:

*பத்னீ-சஹஸ்ரைர் யுகபத் ப்ரணீதம்*
*த்ரவ்யம் ஷ புங்க்தே பகவான் யதைகஹ*
*பஷ்யந்தி தானி அத்ர யதா பிரதிஸ்வம்*
*ஆதௌ மமாதத்தா தத் ஏவ மே அத்தி*
*(பிருகத் பாகவதாம்ருதா 2.4.166)*

"பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் ஒரே நேரத்தில் அவரது எல்லா இராணிகளும் படைத்த உணவுப் பதார்த்தங்களையும், ஒவ்வொரு இராணியும் தான் படைத்த உணவையே முதலில் உண்டது போல் தெரியுமாறு சாப்பிட்டார்."

இங்கே நாரதர், ஒரு சமயம் துவாரகைக்குச் சென்றிருந்த போது அங்கே அவர் கண்ட ஒரு லீலையைப் பற்றிக் கூறுகிறார். துவாரகையில் கிருஷ்ணருக்கு ருக்மிணி தேவி முதல் ஆயிரக் கணக்கான இராணிகள் இருந்தனர். அனைவரும் கிருஷ்ணருக்கு விதம் விதமான உணவு வகைகளைச் சமைத்து, தாங்கள் சமைத்ததையே கிருஷ்ணர் மிகவும் அழகாகவும் சுவையாகவும் உள்ளது என்று உண்டு மகிழ வேண்டும் என ஆசைப்பட்டனர். அவர்கள் அனைவரும் கிருஷ்ணரைத் தங்கள் அரண்மனைக்கு அழைத்தனர். யாருடைய அரண்மனைக்கு அவர் முதலில் வருகிறார் என்பதையும் கவனித்துக் கொண்டிருந்தனர். இராணிகள் அனைவரும் முன்னமேயே கிருஷ்ணருக்கு அழைப்பு விட்டிருந்தனர். கிருஷ்ணர் தன் ராஜ சபையிலிருந்து நாரதருடன் வெளியே வந்தார். எந்த இராணியின் அரண்மனையினுள் அவர் முதலாவது சென்று உணவுப் பதார்த்தங் களை புசிக்கிறாரோ அந்த இராணி மிகவும் உயர்ந்தவள், மிகவும் அதிர்ஷ்டசாலி என்பது அனைவருக்கும் தெரியும். இராஜ சபாவிலிருந்து கிருஷ்ணர் வெளியே வருவதைக் கண்டதும் ஒவ்வொரு இராணியும் தத்தம் அரண்மனையிலிருந்து வெளியே வந்து வாசலில் ஆவலுடன் காத்துக் கொண்டிருந்தனர். நாரதர் நினைத்துக் கொண்டிருந்தார், "யாருடைய அரண்மனைக்கு கிருஷ்ணர் முதலில் போகப் போகிறார்?" என்று.

அப்போது கிருஷ்ணர் எத்தனை இராணிகள் இருந்தார்களோ அத்தனை எண்ணிக்கையான உருவங்களை ஒரே நேரத்தில் எடுத்துக் கொண்டு ஒவ்வொரு இராணியின் அரண்மனைக்குள்ளும் நுழைந்தார். அதே போல் நாரதரும் அத்தனை உருவங்கள் எடுத்துக் கொண்டு கிருஷ்ணரைப் பின் தொடர்ந்தார். இவ்வாறு பற்பல உருவங்களை சுத்த பக்தர்களாலும் எடுக்க முடியும். அப்படி பக்தர்களால் பற்பல உருவங்களை எடுக்க முடியாதென்று ஒருபோதும் நினைக்காதீர்கள். ஸ்ரீமதி ராதிகா ஒன்றே. ஆனால் ஸ்ரீ கிருஷ்ணர் ஸ்ரீமன் நாராயணராகத் தோன்றும் போது அங்ககே இலக்சுமியாகத் தோன்றுகிறாள். அவர் வாமனராகத் தோன்றும் போது அங்கேயும் வாமனரின் இலக்சுமியாகத் தோன்றுகிறாள். ஆனால் ஸ்ரீ சைதன்ய

மகாபிரபுவாக அவர் வரும் போது ஸ்ரீ விஷ்ணு பிரியாவாகவும் ஸ்ரீ இலக்சுமி பிரியாவாகவும் தோன்றுகிறாள். இவ்வாறு, எங்கெல்லாம் கிருஷ்ணரின் லீலைகள் நடக்கிறதோ அங்கெல்லாம் தவறாமல் தோன்றுவாள். சதாசிவர் சங்கரராக வரும் போது அங்கே பார்வதி தேவியாகத் தோன்றுகிறாள். இதே போல் தான் ரசிக பக்தர்களும். சில பக்தர்கள் ஒரே ஒரு லீலையில் மட்டுமே திருப்தியடைகிறார்கள். மற்றும் சில பக்தர்களோ பற்பல உருவங்களை எடுத்துக் கொண்டு பகவானின் அத்தனை லீலைகளிலும் கலந்து கொண்டு ஆனந்தமடைகிறார்கள். அவர்கள் ஒரே ஒரு லீலையில் மட்டும் கலந்து கொள்வதில் திருப்தி யடைய மாட்டார்கள். அப்படிப்பட்டவரே நாரதர். ரசிக பக்தர்களை நாம் எப்போது அவர்கள் எங்கேயிருக்கிறார்கள் என்று அறியவே முடியாது. உதாரணமாக நாரதர் ஸ்ரீ நாராயணரிடமும் இருக்கிறார். அதே சமயம் அவ்ர ஸ்ரீ ராமரிடமும் இருக்கிறார். ஆனால் ஸ்ரீ ராமரிடம் செல்லும் நாரதரும் ஸ்ரீ கிருஷ்ணரிடம் செல்லும் நாரதரும் வெவ்வேறு உருவங்கள். அவைகள் தத்துவ ரீதிகள் ஒன்றே. ஆனால் பக்தி பாவத்தில் வித்தியாசமானவை. ஒவ்வொரு நாரத ரூபத்துக்கும் தனித் தனியான ஸ்தாயி-பாவா(நிரந்தரமான பக்தி உணர்ச்சிகள்) உண்டு. ஸ்ரீ கிருஷ்ணர் ஒரு போதும் பிருந்தாவனத்தை விட்டுச் செல்வதேயில்லை என்பது போல் தான் பக்தர்களும். கோபியர்கள் பிருந்தாவனத்தை விட்டு வேறு எங்கேயும் போக மாட்டார்கள். அவர்கள் அப்படிப் போனால் அது அவர்களுடைய மற்ற சொரூபங்களே. இதேபோல் தான் பிருந்தாவனத்துக் கோபர்களும்.

நாரதர் இவ்வாறு பிருந்தாவனத்தில் நுழையும் போது அவர் "மதுமங்கல்" ஆகத் தோன்றுகிறார். கோவர்த்தனத்திலுள்ள குசும சரோவராவின் பக்கத்திலுள்ள நாரத குண்டத்தில் அவர் ஏன் தவமிருந்து வழிபாடு செய்து வருகிறார்? அவரது ஆசைகள் முழுவதுமாகப் பூர்த்தியடைவில்லை. "ஓ கிருஷ்ணா, நான் உம்முடன் சாக்ய (தோழமை) ரசம் எப்படிப்பட்ட ருசியை உடையது என்பதைப் பார்த்தேன். வாத்ஸல்ய ரசத்தையும் பார்த்து விட்டேன். தாஸ்ய பாவத்தையும் பார்த்து விட்டேன். பிரபு, இனி என்ன மிஞ்சியுள்ளது?" அவருக்கு இன்னமும் மிஞ்சியிருப்பதையும் ருசிக்க வேண்டும் என்று ஆவல். ஆனால் அவர் இன்னொரு குறிப்பிட்ட வகையான ரூபம் எடுக்காமல் அது முடியாது.

எனவே நாரதர், கிருஷ்ணர் துவாரகையில் சுதர்மா சபையிலிருந்து வெளியில் வரும் போது, தானும் அவரைத் தொடர்ந்து சென்றதாகக் கூறுகிறார். அத்தனை இராணிகளும் கிருஷ்ணருக்காக விதம் விதமான உணவு வகைகளைத் தயாரித்து வைத்துக் கொண்டுக் காத்திருந்த போது அவர் ஆயிரக் கணக்கான சொரூபங்களை எடுத்துக் கொண்டு ஒவ்வொரு இராணியின் அரண்மனையிலும் நுழைந்தார். மேலும் ஒரே விதமான உணர்ச்சியுடன் ஒரே நேரத்தில் அத்தனை

இராணிகளின் படைப்புக்களையும் விரும்பிச் சாப்பிட்டார். சிலர் துவாரகையில் கிருஷ்ணர் ஒரே ஒரு உருவத்தில் தான் இருந்தார் என்றும் அவர் ஒரு அரண்மனையிலிருந்து இன்னொரு அரண்மனைக்கு மிகவும் வேகமாகச் செல்வதால் அவர் ஒரே நேரத்தில் பற்பல ரூபத்தில் இருப்பது போல் தெரிகிறது என்றும் கூறுகிறார்கள். ஆனால் கிருஷ்ணர் அப்படிச் செய்திருந்தால், நாரதரால் அவ்வாறு செய்ய முடிந்திருக்காது. அவர்கள், ஒரு மணித்துளியை எப்படி இலட்சக் கணக்கான பாகங்களாகப் பிரிக்கலாமோ அந்த அளவு வேகத்தில் அவர் சென்றார் என்று கூறுகிறார்கள். இது அவர் பிருந்தாவனத்தில் மதுரிய லீலைகளின் போது செய்வது. ஆனால் துவாரகையிலுள்ள ஐஸ்வர்ய லீலையில் அவர் அத்தனை ரூபங்களையும் ஒரே சமயத்தில் எடுத்தார். பிரஜாவில் அவர் அவ்வாறு பற்பல ரூபங்களை எடுப்பதில்லை. ஒரே உருவத்தில் தான் இருக்கிறார். துவாரகையில் கிருஷ்ணர் ஒரே நேரத்தில் அத்தனை ரூபங்கள் எடுத்ததைக் கண்ட நாரதர் ஆச்சரியப் படவேயில்லை. பின் எப்போது அவர் ஆச்சரியமடைந்தார்? கிருஷ்ணரின் மதுர்ய லீலையைகக் கண்ட போது! நினைக்க முடியாத அளவு வேகத்தில் அவர் ஒவ்வொரு கோபியிடமும், தனித்தனியாக ஆடுவது போல் தோற்றம் கொடுத்தவாறு, கோடிக்கணக்கான கோபியர்களின் இடையில் ஒரே நேரம் தோன்றியவாறு ஆடினார். ஒவ்வொரு கோபியும், "ஓ, கிருஷ்ணர் என்னிடம் மட்டுமே முழுவதுமாக இழுக்கப்பட்டுள்ளார். எல்லோரை விடவும் அவர் என்னை மட்டுமே மேலாக நேசிக்கிறார்" என்று எண்ணினார்கள்.

நாரதர் அடுத்ததாக கீழ்வரும் சுலோகத்தைக் கூறுகிறார்:

*க்வசித் கேஷ்வ் அபி ஜீவேஷு*
*தத் தச் சக்தி பிரவேஷதஹ*
*தஸ்யா வேஷாவதாரா ஏ*
*தே அபி தத்வன் மதா யுத்தைஹி*

"பகவானின் சக்தி ஒரு ஜீவாத்மாவில் நுழையும் போது அது சக்திய வேஷ அவதாரம் என்று அறியப் படுகிறது."

பகவானின் எந்த விதமான தனிப்பட்ட சக்தியும் ஒரு ஜீவாத்மாவினுள் நுழையும் போது, அதை சக்திய வேஷ அவதாரம் என்று கூறுகிறோம். சக்திய வேஷ அவதாரத்தின் அர்த்தம் இது தான்: "பகவான், தன் சொந்தமான பகவத்த-சக்தியை ஒருவனின் மேல் செலுத்துகிறார். எல்லாச் சக்திகளும் நிறைந்தவர் பகவான். ஆனால் பகவத்தா என்பது அந்த சக்தியின் ஒரு சொரூபமே. பகவானுக்கோ எண்ணுக் கடங்கான குணங்கள் உள்ளன. இந்தச் சக்தியே அவை அனைத்தையும் தோன்ற வைக்கிறது. பகவானின் புருஷத்தன்மை, கருணை, ஞானம், முழுமையான ஆறு விதங்களான ஐஸ்வர்யங்கள்

அனைத்தும் இந்தச் சக்தியினால் தான் உண்டாக்கப் பட்டுள்ளன. கிரி ராஜாவான கோவர்த்தன மலையை உண்மையில் தூக்கியவர் யார்? அவரது சக்தியே. அந்தச் சக்தியில்லையேல் பகவானின் எந்த விதமான செயல்களுமே நடக்க முடியாது. ஆனால் அதே சமயம் நாம் சக்தியும் சக்திமானும் வெவ்வேறு என்றும் நினைக்கக் கூடாது.
அவை இரண்டும் ஒன்றே தான்.

எவரிடமெல்லாம் பகவானின் சக்தி நுழைந்துள்ளதோ அவர்கள் அனைவர்களையும் நாம் எவ்வாறு அவரது அவதாரங்களுக்கு மதிப்புக் கொடுப்போமோ, அதே போல் மதிக்க வேண்டும். நாரதர், பரசு ராமர், கபில தேவர் அனைவருக்கும் நாம் மதிப்புக் கொடுக்க வேண்டும். ஏனென்றால் அவர்கள் அனைவரிடமும் பகவானின் சக்தி அமைந்துள்ளது. குருவென்பது யார்? குருக்களில் வித்தியாசங்கள் உண்டு. ஆனால் அவர்கள் பகவானின் ஞான அவதாரமாகவோ, பக்தி அவதாரமாகவோ அல்லது பிரேம அவதாரமாகவோ இருப்பார்கள்.

*சாக்சாத் தரித்வேன சமஸ்த சாஸ்த்ரைர்*
*உக்தஸ் ததா பாவ்யத ஏவ சத்பிஹ்*
*கிந்து பிரபோ யஹ் ப்ரிய ஏவ தஸ்ய*
*வந்தே குரோ ஸ்ரீ சரணார விந்தம் (ஸ்ரீ குருவஷ்டகம் #7)*

"நாம் பகவானுக்கு எவ்வளவு தூரம் மதிப்புக் கொடுப்போமோ அந்த அளவுக்குக் குருவுக்கும் மதிப்புக் கொடுக்க வேண்டும். ஏனென்றால் பகவானின் மிகவும் அந்தரங்கமான சேவகர் தான் குரு தேவர். இது அனைத்து சாஸ்திரங்களில் மட்டுமின்றி எல்லா சம்பிரதாயத்திலும் தொடர்ந்து பின்பிற்றி வரும் உண்மை. அப்படிப் பட்ட குருவுக்கு நான் என் சிரங்களைத் தாழ்த்தி அவரது கமலப் பாதங்களுக்கு வந்தனம் செய்கிறேன்."

ஒரு வைஷ்ணவர் நமக்குப் பக்தியை வழங்கினால் நாம் அவரை எப்படி அழைப்போம். அவரிடம் நாம் எந்த விதமான உணர்ச்சிகளை வைத்திருப்போம்? அவர் நமக்கு சிக் ஷ உபதேசங்களை வழங்குகிறார். அவர் நம் காதில் மந்திரங்களை ஓதவில்லை யென்றாலும் அவர் நமக்குப் பக்தியை வழங்குகிறார். அவர் நமக்கு யாராலும் சாதாரணமாக அளிக்க முடியாத விவரிக்கவே இயலாத ஒன்றைக் கொடுக்கிறார். ஸ்ரீல ரகு நாத தாஸ கோஸ்வாமிக்கு முதலாவதாக ஸ்ரீல எது-நந்தன் என்ற ஆச்சார்யா தீக் ஷையை வழங்கினார். ஆனால் அவருக்குப் பின்னர் ஸ்ரீல ரூப கோஸ்வாமி வழங்கியவைகளைக் குறைந்தவைகள் என்றா கூற முடியும்? பகவானின் சக்தியே குருவிடம் உள்ளது. எனவே நாம் அவரைப் பகவானைப் போல் நினைத்து மரியாதை அளிக்க வேண்டும். சொல்லப் போனால் நாம் பகவானை விடவும் குருவுக்குத் தான் அதிக மரியாதை கொடுக்க வேண்டும். ஏனென்றால் அவரது கருணையினால்

தான் நாம் பகவானைப் புரிந்து கொள்ள முடிகிறது. நமக்குப் பகவானைப் பற்றி நேரடியாக எந்த விதமான ஞானமும் கிடையாது. ஸ்ரீ சைதன்ய மகாபிரபு மிகவும் கருணையுள்ளவர். ஆனால் நமக்கு அவரை உண்மையிலேயே தெரியும் என்று ஒரு போதும் நம்மால் கூற முடியாது. இதே போல் தான் பக்தி வினோதாதாக்கூரா, விஸ்வநாத சக்கரவர்த்தி தாக்கூரா, ரூபகோஸ்வாமி அனைவரும். அவர்கள் மிகவும் கருணையுள்ளவர்கள் என்றும், அவர்களுடைய உத்தமமான நிலை யிலிருந்து நமக்குக் கிருபைகளைச் செய்ய முடியும் என்றும் கேள்விப்பட்டுள்ளோம். ஆனால் நமக்கு நம் குருவேதவருடன் நேரடியான தொடர்பு இருப்பதால், அவரே நமக்கு வேண்டிய எந்த விதமான விஷேஷ கருணைகளையும் வழங்க முடியும். அவர் நம்மை பக்தியில் இழுத்து நமக்கு பூவுல இன்பங்களைச் சுவைக்க வேண்டு மென்ற ஆசைகளைக் கிள்ளி எடுத்து வீசி விடுகிறார். எனவே நாம் எத்தனை எத்தனைப் பிறவி எடுத்தாலும் அவருக்கு நாம் கடன் பட்டேதான் இருப்போம்!

# அத்தியாயம் - 8

பகவான் ஒருவராக இருந்தாலும் எவ்வாறு அவர் பற்பல அவதாரங்களாகத் தோன்றுகிறார் என்பதையும், அதே போல் அவரது பரா சக்தி ஒன்றாகயிருந்தாலும் எவ்வாறு அவள் பற்பல அவதாரங் களில் தோன்றுகிறாள் என்பதையும் நாரத முனிவர் கோப குமாருக்கு விவரித்துள்ளார். பரா சக்தியின் விதம் விதமான செயல்களுக்குத் தகுந்தவாறு அவளுக்கு விதம் விதமான பெயர்கள் உள்ளன. இதே சக்தி தான் துவாரகாபுரியிலும் வைகுந்தத்திலும் நாராயணரின் விதம் விதமான அவதாரங்களுடன் தோன்றுகிறாள்.

சில சாஸ்திரங்களில், ஒரு பக்தன் ஐஸ்வர்யத்தின் தேவதை யான இலக்சுமி தேவியின் அனுக்கிரகத்தை விரும்ப மாட்டான் என்று எழுதப் பட்டுள்ளது. ஆனால் இது ஸ்ரீமன் நாராயணரின் ஸ்ரீமகா இலக்சுமியைப் பற்றியல்ல என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். மகா இலட்சுமி நிரந்தரமில்லாத எங்கும் அலையும் சஞ்சல இலக்சுமி அல்ல. மகா இலக்சுமி நிரந்தரமாக என்றும் ஸ்ரீமன் நாராயணருக்குச் சேவை செய்து கொண்டிருக்கிறாள்.

பாற்கடலைக் கடைந்த போது தோன்றியவளே சஞ்சல இலக்சுமி ஆவாள். அனைத்து பணங்கள், செல்வங்கள் எல்லா வற்றுக்கும் அதிபதியான இந்த சஞ்சல இலக்சுமியின் அனுக்கிரகத் தைத் தான் பக்தன் நாடமாட்டான். அவளாகவே பக்தனுக்குச் சேவை செய்ய வேண்டி வந்தாலும் கூட, அந்தப் பக்தன் அவளுக்கு ஒரு நமஸ்காரம் செலுத்தி விட்டு விலகி ஓடி விடுவான். பகவானுக்கு ஆரம்ப நிலையிலுள்ள ஒரு புது பக்தன் கூட சஞ்சல இலக்சுமியை விடவும் பிரியமானவன் என்றால் முதிர்ந்த பக்தர்களைப் பற்றிக் கூற

வேண்டியதேயில்லை. ஸ்ரீ கிருஷ்ணர் கூறுகிறார்:

*ந ததா மே பிரியத்தம*
*ஆத்ம யோனிர் ந சங்கரஹ*
*ந ச சங்கர்சணோ ந ஸ்ரிர்*
*நைவாத்மா ச யதா பவான் (ஸ்ரீமத் பாகவதம் 11.14.15)*

"என் அருமை உத்தவா! எனக்குப் பிரம்மாவோ, சிவனோ, சங்கர்ஷணரோ, செல்வங்களுக்கு அதிபதியான இலக்சுமி தேவியோ, நானோ கூட உன்னை விடவும் பிரியமானவர்கள் அல்ல."

இதில் குறிப்பிடப்பட்டிருக்கும் இலக்சுமி, சஞ்சல இலக்சுமியைக் குறிக்கும். இந்தச் சுலோகத்தை வைகுந்தத்தில் ஸ்ரீமன் நாராயணரின் பக்கத்தில் எப்போதும் இருந்து சேவை செய்து வரும் மகா இலக்சுமி தேவி கேட்டால் என்ன செய்வாள்? எனவே இந்தச் சுலோகம் மகா இலக்சுமியைக் குறிப்பதாக எடுத்துக் கொள்ளக் கூடாது. இதை பிருகுவின் மகளாகத் தோன்றிய அந்த சஞ்சல இலக்சுமியைக் குறிப்பதாகக் கொள்ளலாம். சாஸ்திரங்களில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளவைகளின் உண்மையான அர்த்தங்களை ஒரு முறையான குரு பரம்பரையின் வழியாகக் கேட்ட ஒரு வைஷ்ணவரால் மட்டும் தான் அறிய இயலும். இல்லாவிட்டால் அவர்கள் தப்பான அர்த்தங்களை எடுத்து விடுவார்கள். சிலர் இந்த இலக்சுமி ஸ்ரீமதி ராதிகாவைக் குறிப்பதாகக் கூட அர்த்தம் எடுத்து விடுவார்கள். அப்படியென்றால் இங்கே ராதிகாவை விடவும் மேலாக இன்னொரு பக்தன்(உத்தவா) உள்ளார் என்று ஆகி விடும். உத்தவாவோ ஒரு கோபியின் காலடித் தூசி தன் தலையில் படுவதற்காக ஆசைப் படுகிறார். எனவே அனைத்து இலக்சுமிகளுக்கும் மூலமான ஸ்ரீமதி ராதிகாவை விடவும் இன்னொருவர் மேலாக இருக்கிறார் என்ற தவறான அர்த்தத்தை அது கொடுத்துக் கெடுத்து விடும்! எனவே இங்கே எந்த இலக்சுமியைக் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதில் கவனம் செலுத்த வேண்டும். நாம் நமது சிந்தாந்தங்களை மிகவும் நன்றாக அறிந்திருக்க வேண்டும். அது எப்போதும் வைஷ்ணவர்களின் கூட்டத்தில் கலந்து வாழும் போது தான் நமக்குக் கிடைக்கிறது. மாறாக அங்குமிங்குமிருந்து அர்த்தங்களைக் கூட்டினால் அது அனர்த்தமாகவே ஆகி விடும்.

இந்தச் சுலோகத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் இலக்சுமி யார்? அனிமா சித்தி அளிப்பவளும், பிரம்மாவுக்குச் செல்வங்களைக் கொடுப்பவளும், எல்லாத் தேவர்களுக்கும் தேவதைகளுக்கும் ஐஸ்வர்யங்களை வழங்கும் இலக்சுமி. பாற்கடலைக் கடையும் போது தோன்றிய சஞ்சல இலக்சுமி அவள். புது பக்தர்கள் கூட அவளை விடவும் மேலானவர்கள் என்றால் முதிர்ந்த பக்தர்களைப் பற்றிக் கூற வேண்டிய அவசியமேயில்லை. பக்தர்கள், முக்தியடைந்தவர்கள்,

முக்தியடைய விரும்புபவர்கள் - இவர்கள் யாருமே செல்வத்துக்கு அதிபதியான சஞ்சல இலக்சுமியை வணங்க மாட்டார்கள். இந்தச் சுலோகம் எப்போதும் பகவானின் பாதங்களில் சேவைகள் புரியும் மகா இலக்சுமியைக் குறிக்கவில்லை. எந்த விதமான அலை பாய்தலுமின்றி எப்போதும் நிரந்தரமாகப் பகவானின் இதயத்தில் இருக்கும் மகா இலட்சுமி பகவானுக்கு மிக மிகப் பிரியமானவள்.

எந்த பக்தனும் மகா இலக்சுமியிடம் வித்தியாசமாக இருக்க மாட்டார்கள். ஆனால், அனைத்து அவதாரங்களுக்கும் மூலமான ஸ்ரீ கிருஷ்ணர், மற்றும் அவரது மிகவும் நெருங்கிய ஸ்ரீமதி ராதிகாவின் அனுக்கிரகங்களை ஒரு பக்தன் விரும்பும் போது, அவன் மகா இலக்சுமிக்கு வெறும் வணக்கங்களை மட்டும் செலுத்திக் கொள்வான். அவளது அனுக்கிரகத்துக்காக யாசிக்க மாட்டான். அவர்கள் நேரடியாக ஸ்ரீமதி ராதிகாவிடமே யாசிப்பார்கள்.

இதை நாம் ஒருவரை அவமதிப்பது போல் ஒரு போதும் எடுத்துக் கொள்ளக் கூடாது. ஒரு வைஷ்ணவரை அவமதிப்பதற்கு எங்குமே இடம் கிடையாது. மேலும் ஒரு ரசிக மற்றும் தத்துவங்களை நன்றாக அறிந்த ஒரு தத்வஞ்ச வைஷ்ணவருக்கு நாம் உயர்ந்த மரியாதைகளை அளிக்க வேண்டும். அதே சமயம் மற்ற வைஷ்ணவர் களை அவமதிக்க வேண்டும் என்று பொருளல்ல. அப்படிச் செய்தால் அது அபராதிமாகி விடும். ஆனால் அதே சமயம் ஸ்ரீ கிருஷ்ணரின் ரசிக தத்வஞ்ச வைஷ்ணவரின் பாதங்களில் அபராதம் எதுவும் விளைவித்து விடாமல் மிகக் கவனமாக இருக்க வேண்டும். நம் முழு இதயத்தினால் அவருக்குச் சேவை செய்ய வேண்டும்.

உதாரணமாக ஒரு பெரிய உத்சவம் நடக்கிறது என்று வைத்துக் கொள்வோம். அங்கே நூற்றுக்கணக்கான பக்தர்கள் கூடியுள்ளனர். அவர்களில் சிலர் உத்தம அதிகாரிகள், சிலர் மத்தியம அதிகாரிகள், சிலர் கனிஷ்த அதிகாரிகள் என்று வைத்துக் கொள்வோம். அவர்களில் ராகானுக மற்றும் ரூபானுக பக்திகளில் சிறந்தவர்கள் இருந்தால் அவர்களுக்கு மிகவும் சிறந்த வகையில் மரியாதை செலுத்த வேண்டும். ஆனால் அதைப் புத்திசாலித் தனமாகச் செய்ய வேண்டும். இல்லா விட்டால் சாதாரண மக்கள் நாம் கனிஷ்த, மத்தியம அதிகாரி களிடம் வித்தியாசமாக இருக்கிறோம் என்று எண்ணி விடுவார்கள்.

மூன்று விதமான பக்தர்களுக்கும் நாம் தகுந்தவாறு மரியாதை அளிக்க வேண்டும். ஆனால் அதைப் புத்திசாலித்தனமாக அளிக்க வேண்டும். ஸ்ரீல ரூப கோஸ்வாமி எழுதியிருப்பதைப் போல் அவர்களது நிலைகளுக்குத் தகுந்தவாறு நாம் மரியாதைகளை அளிக்க வேண்டும்.

*கிருஷ்ணேதி யஸ்ய கிரி தம் மனஸாத்ரி யேத*
*தீக் ஷாஸ்தி சேத் பிரணதிபிஸ் ச பஜந்தம் ஈஸம்*
*ஸுஸ்ரூஷ்யா பஜன விஞ்ஞம் அனன்யம் அன்ய*
*நிந்தாதி ஷுன்ய ஹ்ருதம் ஈப்ஸித சங்க லப்த்யா*
*(உபதேசாம்ருதா #5)*

உத்தம வைஷ்ணவர்களுக்கு அன்புடன் சேவை செய்ய வேண்டும். அவர் எப்போதும் நிரந்தரமான பக்தியில் ஈடுபட்டுள்ளதால், எவரையும் ஏளனம் செய்ய மாட்டார். அவர் இன்பத்திலும் துன்பத் திலும் எப்போதும் திருப்தியுடன் இருப்பார். ஸ்ரீ கிருஷ்ணருக்கு உஜ்வல ரச பாவத்துடன் எப்போதும் சேவை செய்பவர். எனவே நாம் அவரிடம் விஷேஷமான பாவத்தை வைத்துக் கொள்ள வேண்டும். அதே சமயம் நாம் எவரையும் அவமதிக்கவும் கூடாது. ஒரு பக்தனை நாம் கிண்டல் செய்து கொண்டு, இன்னொரு பக்தனிடம் முறை கேடுடன் நடந்து கொண்டு, இன்னும் ஒரு பக்தனை நாம் அவமரியாதை செய்து கொண்டும் - இப்படிப்பட்ட மனநிலையுடன் ஒருபோதும் இருக்கக் கூடாது. எல்லோருக்கும் தகுந்த மரியாதையை அளிக்க வேண்டும். ஆனால் உயர்ந்த நிலையிலுள்ள ரசிக வைஷ்ணவர்களுக்கு மிகவும் அன்புடன் சேவை புரிய வேண்டும்.

யோக மாயாவுக்கு எத்தனையோ விதமான சொரூபங்கள் உள்ளன. நாம் அவை எவற்றுக்கும் அபராதத்தை விளைவிக்கக் கூடாது. அவர்கள் அனைவருமே பகவானின் சக்தியானதால் தகுந்த மரியாதையை அளிக்க வேண்டும். ஆனால் அதே சமயம் அவர்களிடம் எந்த விதமான கொடுக்கல் வாங்கல்களையும் வைத்துக் கொள்ளக் கூடாது. வேண்டுமானால் அவர்களிடம் ஒன்றே யொன்றைக் கேட்கலாம்: "தயவு செய்து இன்பங்களைச் சுகிக்க வேண்டும் என்ற ஆசையை என்னிடமிருந்து ஒழிக்க அனுக்கிரகம் செய்ய வேண்டும்" என்று கேட்கலாம். இல்லாவிட்டால் வியாபாரம் போன்ற மனநிலை நம்மை மேன்மேலும் உலக சுகங்கங்களைச் சுவைப்பதிலேயே ஈடுபடுத்தி விடும். அது மட்டுமே நமக்கு அவர்களிடமுள்ள ஒரே பிரார்த்தனை. ஆனால் மிகவும் வழிபடத் தகுந்த தேவதைகளான கோபியர்களிடமோ, அவர்களை நாம் பின்பற்றி அனைத்து விதமான சேவைகளையும் அவர்களுக்குச் செய்ய வேண்டும்.

பகவானின் சக்தி, சில இடங்களில் "மகா விபூதி" என்றும், மற்றும் சில இடங்களில் யோக மாயா என்றும் இன்னமும் சில இடங்களில் ஆத்ம மாயா என்றும் அழைக்கப் படுகிறது. ஸ்ரீபகவத் கீதையில் (4.6) சம்பவாமி ஆத்ம மாயயா - "நான் என்னுடைய அந்தரங்க சக்தியினால் அவதாரம் எடுக்கிறேன்" என்று காண்கிறோம்.

ஆத்ம மாயா என்றால் என்ன அர்த்தம்? பகவானின் சக்தி, தன் இயற்கையான ரூபத்தில் இருப்பதை அது குறிக்கிறது. இந்த ஆத்ம மாயா எங்கேயிருந்து வருகிறது? அதன் ஆதி மூலம் எது? ஸ்ரீமதி ராதிகா! இந்தச் சக்தியின் மூலமாகத் தான் சச்சிதானந்தமாக இருக்கும் பகவானின் அற்புத லீலைகள் அனைத்தும் நடக்கிறது. இந்த யோக மாயா சக்தி நித்யமானது, சத்தியமானது, முதலும் முடிவுமில்லாத அனாதியானது, அளவற்றது. அவள் ஸ்ரீ கிருஷ்ணருடன் சேர்ந்து பிறந்தாள். அப்படியானால் அவளை எப்படி முதலும் முடிவுமற்ற அனாதி என்று கூற முடியும்? அவள், தான் பிறப்பதற்கு முன்னால் பலதேவ பிரபுவை தேவகியின் ஏழாவது குழந்தையாகத் தோன்றுமாறு செய்து, பின்னர் யசோதாவின் வயிற்றில் தானாகவேக் குழந்தையாகத் தோன்றினாள். எனவே அவள் பிறப்பதற்கு முன்பாகவே பற்பல செயல்களைச் செய்தவள். எனவே அவள் நித்தியமானவள். அவளுக்கு அதனால் சனாதனீ என்றும் ஒரு பெயர்.

இதே யோகமாயா தான் ஸ்ரீ கிருஷ்ணரின் பக்தர்கள் அடையும் பஜனானந்தத்தை அதிகரிக்கவும் வைக்கிறாள். இதே யோக மாயா தான் ஹ்லாதினி மற்றும் சம்வித் என்ற சக்திகளின் சாரத்தினால் ஒரு பக்தனைப் படிப்படியாக சிரத்தை, பாவா, பிரேமை என்ற பக்தியின் மேல் நிலைகளுக்கு உயர்த்தி கடைசியில் மகா பாவா வரைக்கும் கொண்டு வந்து சேர்த்து விடுகிறாள்! அவள் பக்தர்களை இவ்வாறு தாய் பாலூட்டி வளர்ப்பது போல் பல விதங்களிலும் வளர்க்கிறாள். பின், சாதகங்களின் மூலமாகப் பரிபூரண நிலையை அடைந்த ஆத்மாவை ஒரு கோபியின் கர்ப்பத்தில் தோன்ற வைக்கிறாள். அதே யோக மாயா தான் சாந்திபனி முனிவரின் தாயாராக, பௌர்ண மாசி என்ற பெயரில், நந்த கிராமத்தில் வசிக்கிறாள். அவள் ஒரு பக்தனுக்கு ஊக்கத்தை அளித்தோ, அல்லது தானே நேரடியாக ஈடுபட்டோ அந்தப் பக்தனின் பக்தி ரசத்தை வளர்க்கிறாள். அவளே தான் யசோதாவின் வத்சல்ய ரசத்தை வளர்ப்பவள், மாடு மேய்க்கும் கோபகச் சிறுவர்க ளுக்கு சக்ய ரசத்தை வளர்ப்பவள், தாஸ்ய ரசத்தில் உள்ளவர் களுக்கு தாஸ்ய ரசத்தையும் வளர்ப்பவள். இவ்வாறு அவள் ஒவ்வொரு ஜீவனுக்கும் பக்தி ரசத்தை அதிகரிக்க வைக்கிறாள். வித விதமான பஜனானந்தத்தின் தாய் அவள். அவளது பாதுகாப்பில் ஒருவன் இல்லையென்றால், பக்தி பாவம் வளர முடியாது.

இதே யோக மாயாதான் பகவானின் பல விதமான அவதாரங் களுக்கும் மூல காரணம். அவளே பகவானுக்கு வேண்டிய வஸ்திரங்கள், ரூபம், அணிமணிகள் மற்றும் லீலைகள் அனைத்தையுமே தயார் செய்கிறாள். ஒரு சமயம் ஸ்ரீ கிருஷ்ணர் தன் புல்லாங்குழலை ஊதிய போது கோபியர்கள் அனைவர்களும் ஆபரணங்களைத் தவறான இடங்களில் அணிந்து கொண்டு வந்தனர். மற்றும் சில கோபியர்கள் அலங்காரங்கள் எங்கே தேவையில்லையோ அங்கே அலங்காரம்

செய்திருந்தனர். இவ்வாறு அவர்கள் அனைவரும் வித்தியாசமான அலங்காரங்களுடன் வந்தார்கள். இவற்றை யெல்லாம் நிகழ வைத்தது யார்? யோக மாயா. அவர்கள் இவ்வாறு சரியான இடத்தில் சரியில்லாத அலங்காரத்தையும், சரியில்லாத இடத்தில் சரியான அலங்காரங் களையும் செய்திருந்ததால் அவர்களது அழகு கோடிக்கணக்கான அளவு மிகைப் பட்டுக் காணப்பட்டது! இதற்குக் காரணம் யோக மாயாவே தான். உதாரணமாக ஒரு கோபி தன் கால் கொலுசுகளைத் தன் கழுத்திலும், தன் கழுத்தணிகளைக் கால்களிலும் அணிந்தால் அது எப்படியிருக்கும்? இப்படி ஸ்ரீ கிருஷ்ணரிடம் அவள் செல்லும் போது ஸ்ரீ கிருஷ்ணர் என்ன கூறுவார்? "ஓ, நீ உன் அணிமணிகளை மிகவும் அழகாக அணிந்திருக்கிறாய்!" என்பார்! இப்போது கூறுங்கள்: இது எவ்வளவு மதிப்பை உண்டு பண்ணுகிறது? இதற்கெல்லாம் காரணம் யோக மாயாவே தான்.

பகவானின் இந்த சக்தி ஒரு துர்விதர்க்யா - நம்மால் புரிந்து கொள்ள முடியாதது. இதே யோக மாயையின் மூலமாகத் தான் ஸ்ரீ கிருஷ்ணர் பக்தர்களை அணைத்துக் கொள்ளும் அனைத்துச் செயல்களும் நடை பெறுகின்றன. அங்கே தான் அவர் தனது முக்ததா என்ற உணர்ச்சி வயப்பட்டு தன்னையே மறக்கும் நிலையில் மூழ்குகிறார். இதே போல் தான் யசோதாவின் முக்ததாவும் பகவானின் விதம் விதமான அற்புத லீலைகளும். பகவானையும் அவரது பக்தர்களையும் மகிழ்விப்பதற்காகவே அவள் முதலிலிருந்தே இப்படிச் செய்கிறாள். ஆனால் அவள் தன் இன்னொரு சொரூபமான மஹா மாயையினால் அசுரர்களை அடக்கியும், ஜீவன்களைப் பந்தத்தில் சிக்கவும் வைக்கிறாள்.

வசுதேவர் ஸ்ரீ கிருஷ்ணரை மதுராவிலிருந்து கொண்டு வந்து, பதிலாக யசோதாவின் குழந்தையான யோக மாயாவை யசோதாவின் கட்டிலிலிருந்து எடுத்துச் சென்றார். வசுதேவரின் கைகளில் அவள் இருக்கும் வரை யோக மாயாவாகவே இருந்தாள். ஆனால் கம்ஸனின் சிறைக்குள் நுழைந்து, பின்னர் கம்ஸன் அவளைக் கொல்ல முயன்ற போது தன் மஹா மாய லீலைகளை ஆரம்பித்தாள். யோக மாயா சக்தி மறைந்து கொண்டது. யோக மாயா பின்னால் மறைந்து கொண்டு பகவானின் லீலைகளுக்கு உதவி செய்தாள். அவள் எப்போது தன் நிழல் போன்ற சொரூபமான மஹா மாயையாக மாறினாள் என்பதை எவராலும் அறிய முடியவில்லை. அதனால் பலருக்கு யோக மாயாவும் மஹா மாயாவும் ஒன்றே என்று தோன்றும். ஆனால் அவை ஒன்றல்ல. அவள் சிறைக்குள் வந்து பின் கம்ஸன் கைகளில் தூக்கிய போது எட்டுக் கரங்கள் கொண்ட துர்காவாகத் தோன்றினாள். கம்ஸன் பீதியும் ஆச்சரியமும் கொண்டு, "ஓ! நீ நான் வணங்கும் தேவி!" என்றான். ஆனால் அவள் எப்போது தன் யோக மாயா ரூபத்திலிருந்து மஹா மாயாவாக மாறினாள், எவ்வாறு அதையும் இதையும் செய்தாள் என்பது

அனைத்தும் துர்விதர்க்யா - எவராலும் அறிய முடியாத வொன்று.

ஆனால் நமக்குத் தேவையான அளவு சிரத்தை ஏற்பட்டு, பின்னர் நாம் இவற்றைக் கேட்கவோ படிக்கவோ செய்தால் நம்மால் கொஞ்சம் அதன் உண்மைகளைப் புரிந்து கொள்ள முடியும். நாம் சாஸ்திரங்களில் கூறியிருப்பதை எந்த விதமான தர்க்கமுமின்றி ஏற்றுக் கொள்ள வேண்டும். இந்த உலகத்தில் அநேகமானவர்கள் கேட்பார்கள்: "யசோதாவிடமிருந்து வந்த ஒரே குழந்தை முதலில் யோக மாயா வாகவும், பின்னர் இங்கு வந்த பின் மஹா மாயாயாகவும் எப்படி மாற முடியும்?" என்று. இதையெல்லாம் யாரால் புரிந்து கொள்ள முடியும்? நம்மால் இதை எப்படிப் புரிந்து கொள்வது? இவற்றை, ஆன்மீக அறிவில்லாமல் உலக சம்பந்தங்களில் ஊறி அதன் மூலம் தன் அறிவைச் செலுத்தி தர்க்கம் செய்பவர்களிடம் நாம் விவரிக்கக் கூடாது. தன் இதயங்களில் சிரத்தை இல்லாதவர்களால் இதைப் புரிய இயலாது.

பகவானின் சக்தி நித்தியமானது, அனாதியானது, சத்தியமானது, அனந்தமானது, விவரிக்க முடியாதது. அதன் சொரூபத்தைச் சாதாரண மக்கள் எவராலும் அறிய இயலாது. அதை ஒரு உயர்ந்த ஆன்மீக நிலையிலுள்ள, முக்தி பெற்ற ஒரு மகாத்மா வினால் மட்டுமே சிறிது விவரிக்க முடியும். மற்றவர்களால் அதை ஒருபோதும் விவரிக்க முடியாது. நாம் இந்த உடல் அல்ல என்பது நமக்குத் தெரியும். இலட்சக் கணக்கான தடவைகள் இதை நாம் மற்றவர்களுக்கு உபதேசித்தும் இருக்கிறோம். ஆனால் பின்னர் ஏதாவது ஒரு இந்திரிய சுக விஷயத்தில் ஈடுபடும் போது அதை மறந்து விடுகிறோம். நாம் இந்த உடல் அல்ல என்ற உண்மையை ஒரு சிறு மணித்துளி நேரம் மறந்தாலே போதும், நமது குறிக்கோள் மறைந்தே போகும்! இது முக்தி பெற்ற மகாபெரும் முனிவரான நாரதருக்குக் கூட ஏற்பட்டது. இராமாயணத்தில் இராமச் சந்திரரின் அவதாரத்துக்கு நாரதர் காரணம் என்று கூறுவார்கள் (நாரதர் ஒரு சமயம் ஒரு இளவரசியை சுயம்வரத்தில் மணம் செய்ய வேண்டி ஸ்ரீ விஷ்ணுவிடம் போய் தனக்கு ஹரியின் முகம் வேண்டுமென்று கேட்க, பின்னர் தனக்குக் குரங்கு முகத்தைக் கொடுத்த விஷ்ணுவை அவர் சபித்த கதை இங்கே குறிப்பிடப்பட்டுள்ளது). ஒருவன் ஒரு நயா பைசாவுக்கு ஆசைப்பட்டாலே போதும். அது அவனை உலக சம்சாரத்தில் ஆழ்த்தி விடும். நாம் நம் பஜனையில் மிகவும் பலமாக இருக்க வேண்டும். மிகுந்த அடக்கத்துடன் நாம் பஜன சாதகத்தைச் செய்ய வேண்டும். அதற்கு இந்த யோக மாயாவின் அருள் ஜீவாத்மாவின் இதயத்துக்குக் கிடைக்க வேண்டும். அப்போது தன்னுள் பக்தி தோன்றி பின்னர் சரியாக சிரவணம், கீர்த்தனம் போன்றவைகளைச் செய்ய இயலும். இது எப்படி நடக்கிறது? ஹ்லாதினி சக்தி, சம்வித் சக்தி என்ற இந்த இரு சக்திகளின் கடாட்சங்களால் ஒரு ஜீவனின் இதயத்தில் பக்தி உண்டாகிறது. இது விசுத்த சத்வா என்று அழைக்கப் படுகிறது. இது

யோக மாயாவின் செயல். அவள் பகவானுக்கு வைகுந்தத்திலும், அதற்கு மேல் துவாரகாவிலும், அதற்கு மேல் மதுராவிலும், எல்லாவற்றுக்கும் மேலாக பிருந்தாவனத்திலும் சேவை செய்கிறாள்.

பக்தியில் வித்தியாசங்கள் உள்ளன. அதே போல் பக்தி ரசத்திலும் வித்தியாசங்கள் உள்ளன. பக்தியிலுள்ள வித்தியாசங்கள் என்ன? அவை, சாதன பக்தி, பாவ பக்தி, வைத்தி பக்தி, ராகானுக பக்தி என்று பற்பலவானவைகள். மேலும் அவைகளுக்குள் நிஷ்தா, ஆசக்தி, பாவா என்ற நிலைகள் உள்ளன. ஒரு நித்திய சித்த, அல்லது சாதன சித்த பக்தனிடம் ஸ்நேஹா, மானா, ப்ரணயா, ராகா, அனுராக பாவா, மற்றும்து இரண்டல்ல. அது ஒரு மன பாவமே. ஆனால் அதை அறுபத்து நான்கு விதங்களாகவோ, ஒன்பது வகைகளாகவோ, ஐந்தோ அல்லது மூன்று வகைகளாகவோ வெளிப் பார்வையில் பிரித்து வைத்துள்ளனர். அதே போல் பக்தி ரஸமும் ஒன்றே. அது பற்பல வைகள் அல்ல. ஆனால் ஒரு சாதகனின் குறிப்பிட்ட செயல்களால் அது வித்தியாசமானவைகள் போல் வெளியில் தெரிகிறது. சிருங்கார ரஸா என்பது மதுர்ய ரஸத்தின் ஒரு முழுத் தோற்றம். அதிலிருந்து வாத்ஸல்ய, சக்ய, மற்றும் தாஸ்ய பாவங்கள் வரிசையாகத் தோன்று கின்றன. பகவான் ஒருவரே. இரண்டல்ல. ஆனால் ஒருவனின் பக்தியின் நிலை, ஞானம் இவைகளைப் பொறுத்து பிரம்மமாகவும், பரமாத்மாவாகவும், பகவானாகவும், கிருஷ்ணர் மற்றும் எத்தனையோ விதம் விதமான உருவங்களில் தோன்றுகிறார். இருப்பது ஒரே சந்திரன். ஆனால் அதை நமது கோணப் பார்வைகளான துவிதீயா, த்ரயோதசீ, பஞ்சமி என்று இப்படிப் பார்க்கும் போது அது வித்தியாசமாகத் தெரிகிறது. ஆனால் சந்திரனோ மாறுவதில்லை. ஒரே சந்திரன் தான். ஆனால் நம் பார்வை தான் வித்தியாசம். எனவே தான் சில இரவில் அது அமாவாஸ்யையாகவும், மற்ற இரவில் பூர்ணிமாவாகவும் தோன்றுகிறது. இதேபோல் தான் பக்தர்களின் சாதகங்களைப் பொறுத்து பகவான் வித்தியாசமாகத் தோன்றுகிறார். பக்தர்களின் சாதகங்களைப் பொறுத்து பகவானின் சக்தியும் இப்படித்தான் காணப்படுகிறாள். அவையனைத்தும் அவளது விதம் விதமானத் தொகுப்புக்கள். எனவே யோக மாயாவுக்கு எத்தனையோ மந்திரங்கள் உள்ளன.

*ஶ்ரீ பௌர்ண மாஸ்யஸ் சரணாரவிந்தம்*
*வந்தே சதா பக்தி விதான் ஹேதும்*
*ஶ்ரீ கிருஷ்ண லீலாப்தி தரங்க மக்னம்*
*யஸ்ய மனஹ் சர்வ நிஸேவிதயஹ*

"நான் பகவானின் யோக மாய சக்தியான பௌர்ணமாசி தேவியின் கமலப் பாதங்களில் வந்தனம் செலுத்துகிறேன். அவள் ஶ்ரீ ராதாவின் பாதங்களிலும் ஶ்ரீ கிருஷ்ணரின் பாதங்களிலும் பிரேம பக்தி உண்டாகி

வளர வைக்கிறாள். அவளது மனம் எப்போதும் ஸ்ரீ கிருஷ்ணருடைய லீலா சமுத்திரத்தில் மூழ்கி இருக்கிறது."

*காட்யாயினி மஹா மாயே*
*மஹா யோகினை அதீஸ்வரி*
*நந்த கோப சுதம் தேவி*
*பதிம் மே குரு தே நமஹ (ஸ்ரீமத் பாகவதம்10.22.4)*

கோபியர்கள் யோக மாயையை இந்த மந்திரத்தால் தான் வழிபட்டார்கள். "ஓ, காட்யாயனி தேவி! நீ பகவானின் உத்தமமான அந்தரங்க சக்தி. எல்லா சித்திகளையும் பெற்றவள். எல்லாவற்றையும் ஆள்பவள். தயவு செய்து நந்த மகாராஜாவின் புத்திரனை எங்கள் கணவனாக ஆக்க வேண்டும். நாங்கள் உன்னை வணங்குகிறோம்" என்று.

எனவே, பகவானின் எல்லா விதமான லீலைகளையும் உண்டு பண்ணுவது யோக மாயையாகும். அவளுடைய மகிமைகளை சாதாரணமானவர்களால் விவரிக்க முடியாதென்றாலும் பக்தர்கள் அதை அறிவார்கள். அவர்களால் விவரிக்க முடியும். பகவானின் மகிமைகளை சாதாரணமானவர்களால் எவ்வாறு விவரிக்க முடியாதோ அதே போல் தான் அவரது சக்திகளையும் விவரிக்க முடியாது. ஆனால் அவைகளில் சிலவற்றை பக்தர்கள் அறிய முடிவதால் அவர்கள் அதை விவரித்துமிருக்கிறார்கள். சுக தேவ கோஸ்வாமி, வியாஸர், பாராசாரர், நாரதர், ரூப கோஸ்வாமி, சனாதன கோஸ்வாமி - இப்படி நிறைய ஆச்சாரியார்கள் அதை விவரித்துள்ளனர்.

*ஸா பராபர யோஹ் சக்தி யோஹ்*
*பரா சக்திர் நிகத்யதே*
*பிரபோஹ் ஸ்வபாவிக்கீ ஸா ஹி*
*க்யாதா ப்ரக்ருதிர் இதி அபி (பிருகத் பாகவதாம்ருதம் 2.4.178)*

"பகவானின் சக்திகளை இரண்டு விதங்களாகப் பிரிக்கலாம். ஒன்று உயர்ந்தது, இன்னொன்று தாழ்ந்தது. அவரது அந்தரங்க சக்தியான யோக மாயா உயர்ந்தவள். ஏனென்றால் அவள் பகவானின் இயற்கையான சக்தி. சில இடங்களில் அவளைப் பிரக்ருதி என்றும் அழைப்பார்கள்."

இந்த யோக மாயையையும், மாயா சக்தியையும் (மஹா மாயா) முறையே பராசக்தியென்றும் அபரா சக்தியென்றும் அழைக்கின்றனர். இவ்வாறு இரண்டு சொரூபங்களில் காண்கிறார்கள். ஆனால் உண்மையில் இருவரும் ஒன்றே. ஒன்று பரா, இன்னொன்று அதன் நிழல் - அபரா. நிழல் என்றால் என்ன அர்த்தம்? அசலிலிருந்து

வேறில்லாமலும் ஆனால் அதே சமயம் அசலைப் போல் செயல்களைச் செய்யாமலும் இருப்பதே நிழல். ஆனால் அது எந்த விதமான செயலையுமே செய்யாமலிருக்கும் ஒரு மரத்தின் நிழலைப் போலும் அல்ல. நமது நிழலும் ஒன்றும் செய்வதில்லை. ஆனால் பகவானின் நிழல் செயலற்றதல்ல. கோலோகாவில் ஸ்ரீ கிருஷ்ணரின் ரஸ லீலைகள், கிருஷ்ணரின் பிறப்பு, பக்தர்களின் சேவைகள், அவரது ஆபரணங்கள், கோபியர்களுடைய ஆபரணங்கள், மரங்கள், செடி கொடிகள் - அத்தனையும் யோக மாயா உண்டு பண்ணியவைகள். அவை அனைத்தும் நித்தியமானவை, உண்மையானவைகள். அப்படியென்றால் அபரா சக்தியின் வேலை என்ன? இந்த சக்தியே பூதவுலக இயற்கையாகி சிலவற்றைப் பொய்யாகவும் சிலவற்றை நிரந்தரமில்லாதவைகளாகவும் காட்டுகிறாள். சில உண்மையான வைகள். சில பொய்யானவைகள். நாம் முன்னால் விவரித்தது போல் இந்த உலகத்தில் நாம்  வைத்திருக்கும் அனைத்து  உறவுகளும் பொய்யானவை. ஆனால் உலகங்களில் தோன்றும் அனைத்துப் பொருட்களும் உண்மையானவை - ஆனால் அவை நிரந்தரமில்லாதவைகள்.

கடலிலிருக்கும் சிப்பிகள் உண்மையானவை, வெள்ளி உலோகமும் உண்மையானவை. அதே சமயம் அந்தச் சிப்பிகளை வெள்ளி உலோகம் என்று எண்ணுவது அசத்யம் - பொய்யானது. இந்தச் சிப்பிகள் அனைத்தும் வெள்ளியைப் போல் மின்னுகின்றன. இவை இரண்டும் உண்மையானவை. இதைப் பார்ப்பவனும் உண்மை. இந்த மூன்றும் உண்மையானவைகள். ஆனால் சிப்பியை வெள்ளியென்று நினைப்பது உண்மையல்ல. அதே போல் தான் ஒரு கயிறு, ஒரு பாம்பு, அவற்றைப் பார்ப்பவன் - இந்த மூன்றும் உண்மைகள். ஆனால் கயிற்றைப் பாம்பாகக் காண்பது உண்மையல்ல. இரவில் நாம் தனியாக நடந்து கொண்டிருக்கும் போது நாம் ஒரு கயிற்றின் மேல் மிதிக்கலாம். அது சிறிது கடினமாகத் தோன்றுவதாலும், நம் காலைச் சுற்றுவதாலும் நாம் பயந்து, "அய்யோ, பாம்பு! பாம்பு!" என்று அலறி விடுகிறோம். பின் நாம் ஒரு விளக்கினால் அதைப் பார்க்கும் போது நமது பயம் போய் விடுகிறது. நம்மை ஒரு பாம்பு கடித்து விட்டது, நாம் இனி இறந்து போவோம் என்று எண்ணினோம். ஆனால் சிறிது வெளிச்சம் வந்ததும் அந்த அறியாமை விலகி விட்டது.

நாம் அனைவரும் சந்தேகமில்லாமல் உண்மைகளே. ஆனால் "நான் இந்த உடல்" என்று நினைப்பது அறியாமை. அதே போல், "இவை அனைத்தும் எனக்குச் சொந்தம்" என்று நினைப்பதும் அறியாமையே. "என்னுடையது" என்றால் என்ன?  அதற்குப் பதிலாக, "நான் ஸ்ரீ கிருஷ்ணருக்குச் சொந்தமானவன். நான் அவரது சேவகன்" என்ற சிந்தனைகள் சரியானவை. எல்லாவற்றையும் நாம் ஸ்ரீ

கிருஷ்ணரின் சேவைக்கு மட்டுமே உபயோகப் படுத்த வேண்டும் என்று எண்ண வேண்டும். ஆனால் நாமோ "நான் அவைகளின் எஜமான்" என்று எண்ணுகிறோம். இதே எண்ணத்தின் காரணத்தால் தான் எவ்வளவோ சண்டைகளும் யுத்தங்களும் நடந்து கொண்டிருக்கின்றன. சாதுக்கள் தங்களுக்கு எதுவுமே சொந்தமல்ல என்று எண்ணுகிறார்கள். ஆனால் அவர்களுக்கும் ஏதாவது ஒரு பொருள் அவசியமாகத் தேவைப்பட்டால் உடனே அதைப் பெறுவதற்காக மற்றவர்களுடன் சண்டை பிடிக்கிறார்கள்.

எனவே மாயா சக்தி மிகவும் விசித்திரமானது. இந்த ஒரே சக்தியின் வெளிக் குணம் ஜீவாத்மாக்களை, தங்களைப் பற்றியும் சுற்றியுள்ளவைகளைப் பற்றியும் தவறாக எண்ண வைத்து, அவர்களை அறியாமையினால் கட்டிப் போட்டுள்ளது. ஆனால் இந்த ஒரே சக்தியின் உள் குணமான யோக மாயாவோ ஜீவாத்மாக்களின் உள் அறிவை ஒளிர வைக்கிறாள். பகவானைப் பற்றியும் அவர் மேல் செலுத்த வேண்டிய பக்தியைப் பற்றியும் அறிய வைக்கிறாள். நாம் மஹா மாயாவிடம் ஒருவேளை இப்படிப் பிரார்த்தனை செய்யலாம், "ஓ, மஹா மாயா, தயவு செய்து எங்களுக்குக் கருணை செய். நாங்கள் உன்னுடைய மாயையில் தற்போது கொஞ்சம் சிக்கியுள்ளோம். ஆனால் நீ எங்களுக்கு ஸ்ரீ கிருஷ்ணரின் பாதங்களில் பக்தி வருமாறு அருள் புரிய வேண்டும்" என்று. காமாக்யா தேவியென்ற இதே மஹா மாயா தான் கோப குமாரிடம் உண்மையிலேயேக் கருணை கொண்டு கோபால மந்திரத்தை அன்புடன் உபதேசித்தாள். தன் மஹா மாயாவின் சொரூபத்தைக் காட்டினாலும் கூட, அவள் யோக மாயாவின் செயலைப் புரிந்தாள். சாதாரணமாக யோக மாயா தான் பக்தர்களுக்குச் சாதகமாக அருள் புரிவது வழக்கம். ஆனால் ஒருவன் உண்மையிலேயே வேண்டும் போது மஹா மாயாவும் கூட இப்படிக் கருணை செய்யலாம். இல்லாவிட்டால் உலக ஆசையில் பந்தப் பட்ட ஜீவன்களை அவள் ஏமாற்றி விடுவாள். ஸ்ரீ ஹரி தாஸ தாக்கூராவிடம் முதலில் எந்த மாயா தேவி ஒரு விலை மாதாக வந்தாள்? மஹா மாயா! ஆனால் பின்னர் அவள் ஒரு பக்தையாக மாறியதும் அவளது செயல்கள் அனைத்தும் யோக மாயாவின் செயல்களாக மாறின. இவை எல்லாவற்றிலுமிருந்து, நாம் நமக்கு ஸ்ரீ சைதன்ய மகாபிரபு அளித்த அசிந்த்ய-பேதாபேதா என்ற சித்தாந்தத்தின் படி, இந்த இரண்டு விதமான மாயா சக்திகளின் ஒற்றுமைகளையும் வித்தியாசங்களையும் காண வேண்டும்.

ஜீவாத்மாவையும் சில சமயம் பரா சக்தி என்று அழைக்கி றார்கள். பகவத் கீதையில் ஒரு சுலோகம் வருகிறது:

*அபரேயம் இதஸ் த்வ் அன்யாம்*
*ப்ரக்ருதிம் வித்தி மே பராம்*
*ஜீவ பூத்தாம் மஹா பாஹோ*
*யயேதம் தார்யதே ஜகத் --- (பகவத் கீதை 7.5)*

"ஓ புஜ பலாக்ரம் நிறைந்த அர்ஜுனா! இவைகளைத் தவிர, என்னுடைய இன்னொரு மகத்தான சக்தியான ஜீவாத்மாக்களும் உள்ளன. அவை, கீழ்த் தரமான பூதவுலக இயற்கையின் பொருட்களை விடாமல் அனுபவிக்கின்றன."

பகவானின் அம்சமான பிரக்ருதி (இயற்கை) எத்தனையுள்ளன? ஒன்றே ஒன்று. பகவான் இந்தப் பிரக்ருதியான "ஸ்வபாவகீ" க்கு பராசக்தி என்று பொருள். ஆனால் "பிரக்ருதி" என்று கூறும் போது அது எட்டு விதமான ஜடப் பொருட்களால் உண்டாக்கப் பட்ட இந்தப் பூதவுலகங்களைச் சிருஷ்டிக்கும் தாழ்ந்த நிலையிலிருக்கும் இயற்கைச் சக்தி என்று அறிகிறோம். நாம் "மாயா" என்று சொல்லும் போது அது "ஆத்ம மாயா" என்ற உள் சக்தியையேக் குறிக்கிறது. இதைப் பொதுவாகப் பலரும் அறிய மாட்டார்கள். எனவே தான் பெரும் பாலும் இந்த உலகங்களை அவர்கள் மாயா என்று நினைக்கிறார்கள். இந்த மஹா மாயா என்ற நிழல் போன்ற சக்தியின் செயல்கள் அனைத்தும் ஒன்றிலோ பொய்யாக இருக்கும், அல்லது நிரந்தரமற்றவைகளாக இருக்கும். ஆனால் யோக மாயாவின் அனைத்துச் செயல்களும் நிஜமானவை, நிரந்தரமானவை.

இப்படி, இந்த உடல்களே தாங்கள் என்று ஜீவாத்மாக்களை எண்ண வைத்து அறியாமையில் அவர்களைச் சிக்க வைத்திருக்கும் மஹா மாயா எங்கே இருக்கிறாள்? எட்டு விதமான பூத வஸ்துக்களாலான போர்வைகளால் (புவி, நீர், தீ, வாயு, ஆகாயம், மனம், புத்தி, அகங்காரம்) உண்டான அண்ட சராசரங்கள் எங்கிலும் அவள் இருக்கிறாள். அவளது நிறம் சுத்தமான கறுப்பு. அவள் மிகவும் அழகாக அங்கெல்லாம் இருக்கிறாள். அதே இடத்தில் தான் முன்பு கோப குமாரையும் அவள் சந்தித்தாள். கையில் சில வெகுமதி பொருட்களுடன் அவள் கோப குமாரை அணுகி, "உனக்கு என்னவென்ன வேண்டும் என்று கேள். உனக்குப் பக்தி வேண்டுமா? அப்படியென்றால் நான் உனக்குப் பக்தியைக் கொடுக்கிறேன். உனக்கு உலக இன்பங்களை அனுபவிக்க ஆசையா? அப்படியானால் நான் உனக்கு உலக சுகங்கள் அத்தனையையும் கொடுக்கிறேன். நான் பகவானின் சகோதரியானதால் உனக்குப் பக்தி உள்ளிட என்ன வேண்டுமானாலும் கொடுக்கிறேன். உனக்கு என்ன வேண்டுமோ அவற்றை நான் அளிக்கிறேன்" என்று கூறினாள்.

அந்த மஹா மாயாவின் அனுக்கிரகத்தால் கோபகுமார் அங்கிருந்து வெளிப்பட்டுத் திரும்பவும் பூவுலகத்துக்குத் திரும்பினார். நாம் நம் சுய முயற்சியினால் ஒருபோதும் மாயையிலிருந்து மீள முடியாது. எவ்வளவு முயன்றாலும் நாம் மேன்மேலும் அதில் அதிகமாகத் தான் சிக்கிக் கொள்வோம். எனவே தான் நாம் எப்போதும்

வைஷ்ணவர்கள், குரு மற்றும் பகவானுடைய கருணைகளில் தஞ்சம் அடைய வேண்டும். மாயையிலிருந்து நாமே நம் சொந்த முயற்சியால் வெளிவர முயலக் கூடாது.

அடுத்து, நாரதர் கோப குமாரிடம், "இங்கே, வைகுந்தத்தில் நீ எத்தனையோ அவதாரங்களைக் காண்பாய். அவைகள் "வ்யஷ்டி" என்றும் "சமஷ்டி" என்றும் இரண்டு விதங்களான அவதாரங்களாக உள்ளன. சமஷ்டி அவதாரம் யார்? ஸ்ரீ கிருஷ்ணர். நாம் அனைவரும் வ்யஷ்டி ஜீவாத்மாக்கள். ஆனால் ஹிரண்யகர்ப பிரம்மாவோ சமஷ்டி ஜீவா. பகவானின் அவதாரங்கள் கூர்மா, வராஹா, நரசிம்மா, பரசு ராமா, வாமனா என்று இப்படி எத்தனை யெத்தனையோ உள்ளன. ஆனால் ஸ்ரீ கிருஷ்ணரை அவ்வாறு அவதாரமாக நினைக்காதீர்கள். ஸ்ரீ கிருஷ்ணர் தான் சமஷ்டி - மூல விதை, எல்லா அவதாரங்களுக்கும் மூல வேர். இந்த மூல விதையிலிருந்து தான் அத்தனை சொரூபங்களும் தோன்றியுள்ளன. நம் பூவுலகத்தில் ஒரு மாங்கொட்டையிலிருந்து மாங்கன்று தான் முளைக்கும், அதிலிருந்து வேம்போ அல்லது வாழைக் கன்றோ, கொய்யா மரமோத் தோன்றாது. ஆனால் ஸ்ரீ கிருஷ்ணர் அப்படியல்ல. அவரிடமிருந்து தான் அத்தனை விதைகளுமே உண்டாகின்றன. அப்படிப் பட்ட ஒரு அதிசயமான மகத்தான விதை தான் ஸ்ரீ கிருஷ்ணர். ஸ்ரீ கிருஷ்ணர், தன் அசிந்த்ய சக்தியின் மூலமாக அத்தனை அவதாரங்களாகவும் தோன்றுகிறார். இது ஸ்ரீ கிருஷ்ணரைத் தவிர வேறு எவராலும் முடியாது. ஸ்ரீமன் நாராயணர் கூட அவதாரம் எடுக்கலாம். ஆனால் அவர் ஸ்ரீ கிருஷ்ணர் நிகழ்த்தியது போன்ற அற்புதமான பற்பல லீலைகளை நிகழ்த்த மாட்டார். ஸ்ரீ கிருஷ்ணர் எல்லா அவதாரங்களுக்கும் மூல காரணமான அவதாரி. அவர் சுயம் பகவானாக அவதாரம் எடுக்கும் போது எண்ணற்ற அற்புதமான லீலைகளை நிகழ்த்துகிறார்.  மேலும், ஸ்ரீமன் நாராயணரிடம் இல்லாத நான்கு மதுர்ய குணங்கள் ஸ்ரீ கிருஷ்ணரிடம் அதிகமாக உள்ளன.

இவையெல்லாவற்றையும் நாரதர் கோபகுமாருக்கு விவரித்துக் கொண்டிருக்கிறார்: "நீ அப்படிப் பட்ட லீலைகளிலெல்லாம் கலர வேண்டுமென்று ஆசைப்படுகிறாய். ஆனால் நீ அவற்றை இங்கே வைகுந்தத்தில் எப்படிப் பெற முடியும்?" பின் நாரதர் கோப குமாரிடம் இரகசியமாக மிகவும் தாழ்ந்த சத்தத்தில் கூறுகிறார்: "வாமன அவதாரம், விஷ்ணுவின் அவதாரங்கள், மன்வந்தர அவதாரங்கள், சக்தியவேஷ அவதாரங்கள், லீலாவதாரங்கள், ஸ்ரீமன் நாராயணர் புரியும் அத்தனை லீலைகள் - இவையனைத்தையும் கிருஷ்ணர் எளிதாகச் செய்து விடுவார்! வேறு எவராலும் இப்படி அனைத்தையும் செய்ய முடியாது. இது தான் கிருஷ்ணரின் விஷேஷ குணமும், விஷேஷ மகிமையும்!"

பகவான் என்ற சொல்லுக்கு என்ன பொருள்? "பக" என்றால் ஐஸ்வர்யங்கள் அல்லது மகிமைகள் என்று அர்த்தம். ஆறு வகையான மகிமைகளும் முழுவதுமாகப் பெற்றுள்ளவர். "வான்" என்றால் உடையவர் என்று பொருள். இந்த உலகத்தில் எத்தனையோ மனிதர்கள் சில ஐஸ்வர்யங்களைப் பெற்றுள்ளனர். ஆனால் அனைத்துச் செல்வங்களையும் மிகவும் நிறைந்த அளவில் பெற்றுள்ளவர்கள் ஶ்ரீமன் நாராயணரும் அவரது அவதாரங்கள் மட்டுமேயாகும். ஆனால் இந்த ஐஸ்வர்யங்களும் மகிமைகளும் எங்கே அதிகமாக அமைந்துள்ளன? அது துவாரகா கிருஷ்ணரிடமும் மதுராபுரி கிருஷ்ணரிடமுமே. மேலும் அவை எங்கே பரி பூரணமாக அமைந்துள்ளன? பிரஜ நந்த நந்தனிடம் மட்டுமே. அங்கு தான் பரிபூரணமான ஐஸ்வர்யத்தையும், வீர்யத்தையும், மகிமைகளையும், அழகையும் ஞானத்தையும், வைராக்யத்தையும் நாம் காண முடியும்.

*ஐஸ்வர்யஸ்ய சம கிரகஸ்ய*
*வீர்யஸ்ய யசாசஹ ஷ்ரீயஹ*
*ஞான வைராக்ய யோஸ் சாபி*
*ஷண்ணாம் பக இதிங்கனா -- (விஷ்ணு புராணம் 6.5.74)*

இந்த ஐஸ்வர்யங்கள் அனைத்தும் ஶ்ரீமன் நாராயணரிடமும் அவரது அவதாரங்களிடமும் அமைந்துள்ளன. வாமன தேவரின் ஐஸ்வர்யம் என்ன? அவர் சிறு உருவமாகத் தோன்றினார். ஆனால் உலகத்தை அளக்கும் போது மிகப் பெரும் உருவமெடுத்துத் தன் மூன்று அடிகளால் அண்ட சராசரங்களையும் அளந்தார். இது ஐஸ்வர்யம். ஶ்ரீ இராமச் சந்திரர் தன் வானரங்களுடன் இலங்கையைத் தாக்கி இராவணனின் தலையை வெட்டினார். ஆனால் ஒவ்வொரு வெட்டிய தலைக்குப் பதில் இன்னொரு தலை தோன்றியது. ஒவ்வொரு முறை தலையை வெட்டும் போதும் இன்னொன்று முளைத்தது. கடைசியில் பத்துத் தலைகளையும் ஒரே நேரத்தில் வெட்டினால் தான் அவன் சாக முடியும் என்ற திட்டத்தால் இராவணன் கொல்லப்பட்டான். இது ஐஸ்வர்யம். இதே போல் மற்ற அனைத்து அவதாரங்களும் இப்படிப் பட்ட ஐஸ்வர்யங்களைக் கொண்டவைகள். ஆனால் ஶ்ரீ கிருஷ்ணரின் ஐஸ்வர்யங்கள் மிகவும் விஷேஷமானவைகள். அவர் சிறு குழந்தையாக இருக்கும் போதே பூத்தனாவின் மார்பகத்திலிருந்து பாலை உறிந்து அருந்தினார். அவர் எவ்வாறு இதையெல்லாம் செய்தார் என்பது யாருக்கு மேத் தெரியாது. அவளது மார்பகங்களை விடாமல் கடைசியில் அவளது உயிரேயே உறிந்து விட்டார். அப்போது அவர் நினைத்துக் கொண்டார்: "எவரொருவர் பிருந்தாவனத்துக்கு வந்தாலும் அவர்களை நான் விட மாட்டேன். அவள் பிரஜ மண்டலத்தின் எல்லைகளைத் தாண்டி உள்ளே வந்தவள். நான் அவளைத் திரும்பிப் போக வைக்க மாட்டேன்" என்று.

இது ஐஸ்வர்யம். ஸ்ரீ கிருஷ்ணரிடம் எல்லா ஐஸ்வர்யங்களும் சிகரங்களாக அமைந்துள்ளன. ஸ்ரீ ராமரிடம் கொஞ்சம் வைராக்யம் உள்ளது. அவர் தன் நாட்டை விட்டார். ஆனால் சீதா தேவியை விடவில்லை. காட்டுக்கு சீதா தேவியையும் அழைத்துக் கொண்டு தான் சென்றார். ஆனால் ஸ்ரீ கிருஷ்ணரின் வைராக்கியமோ அளவற்றது. இலட்சக் கணக்கான கோபியர்களுடன் மிகவும் அழகான சுத்தமான இடத்தில், இதமான காற்று வீச, நாயகனும் நாயகிகளும் சேர்ந்து மகிழ்ந்திருந்த வேளையில் கூட திடீரென்று அவர் மறைந்து விட்டார். அப்படிப்பட்ட வைராக்யம் அவருக்கு இருக்கிறது. தன் சொந்தக் கண்களால் ஐந்நூற்று அறுபது இலட்சம் யாதவர்கள் கம்புகளையும் தடிகளையும் தூக்கிக் கொண்டு ஒருவருக்கொருவர் சண்டை செய்து அனைவரும் இறந்து கொண்டிருப்பதை எந்த விதமான சஞ்சலமும் இல்லாமல் அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்தார்! அது மட்டுமல்ல. தன் சொந்த மகனே அதில் கொல்லப் படுகிறான். இருந்தும் கூட அவர் எந்த விதமான மகிழ்ச்சியோ கவலையோ இன்றி ஒருவரையும் கூடக் காப்பாற்றாமல், தன் காலின் மேல் காலைப் போட்டுக் கொண்டு அமைதியாக உட்கார்ந்து எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு தான் இருந்தார். ஏன்? அந்தச் சண்டைகளும் யாதவர்கள் மடிந்து வீழ்வது அனைத்தும் இந்திர ஜாலம் போன்ற வெறும் மாயா ஜாலம் தான் என்பது அவருக்கு நன்றாகத் தெரியும். எனவே ஆறு விதமான ஐஸ்வர்யங்களும் ஸ்ரீ கிருஷ்ணரிடம் சிகரங்களாக அமைந்துள்ளன.

*ஏதே சாம்ஸ கலாஹ் பும்ஸஹ*
*கிருஷ்ணஸ் து பகவான் ஸ்வயம் (ஸ்ரீமத் பாகவதம் 1.3.28)*

"இந்த அனைத்து அவதாரங்களும், ஒன்றிலோ முழுமையான அம்சங்கள், அல்லது புருஷ அவதாரங்களின் முழுமையான அம்சங்கள். ஆனால் ஸ்ரீ கிருஷ்ணரோ சுயமான பகவான்."

நாரதர் கோப குமாரரிடம் கூறுகிறார்: "சுயமான மூல பகவானான ஸ்ரீ கிருஷ்ணருடைய லீலைகள் அற்புதமானவை, அவரது அன்பு அற்புதமானது, அவரது பிரேமை அற்புதமானது, அவரது சகாக்கள் அற்புதமானவர்கள். எவரொருவர் இந்த லீலைகளைக் கேட்டு அதன் சிறிதளவு ருசியை அறிந்தாலே போதும், அவரால் பின் வைகுந்தத்தில் வசிக்கப் பிடிக்காது!"

# அத்தியாயம் - 9

கோபகுமாருக்கு வைகுந்தத்தில் அவ்வளவாகத் திருப்திப் படவில்லை. ஆனால் அந்த வைகுந்தத்தை அடைய அனைத்து ஜீவன்களும் எவ்வளவு தூரம் ஆசைப்படுகின்றன! அங்கே மிக மிக அழகான உத்தம பக்தி நிரம்பியுள்ளது. வைகுந்தத்தை அடைவது சொல்லவொண்ணாத அளவு கடினமானது. கோபகுமார் வைகுந்தத்தில் நுழைந்த போது ஸ்ரீமன் நாராயணர் தனக்குச் சாமரம் வீசும் அழகான சேவையைக் கொடுத்தார். அது மட்டுமல்ல. சில சமயங்களில் கோபால ரூபத்தை எடுத்துக் கொண்டு, மாடுகளை கோபகுமாருடன் மேய்க்கச் சென்ற லீலைகளையும் நடத்தினார். அப்படியிருந்தும் கூட கோபகுமாருக்கு வைகுந்தத்தில் மகிழ்ச்சியில்லாமல் இருந்தது.

எனக்குத் தெரிந்து பீஹாரில் வாழ்ந்த ஒருவன் தன் சிறு குழந்தைப் பருவத்திலிருந்தே பிருந்தாவனத்துக்குச் சென்று அங்கே வசிக்க வேண்டுமென்று ஆசைப்பட்டான். அவன், "நான் எப்போது பிருந்தாவனத்துக்குச் செல்வேன்? எப்போது நான் யமுனையில் குளிப்பேன்? அங்குள்ள குஞ்சாக் காடுகளில் நான் எப்போது உரண்டு புரள்வேன். அங்குள்ள ராதா குண்டத்துக்கும் சியாம குண்டத்துக்கும் நான் எப்போது செல்வேன்" என்று எப்போதும் அங்கலாய்த்துக் கொண்டேயிருப்பான். பின்னர் வெகு காலங்கள் கழித்து பிருந்தா வனத்துக்குச் செல்லும் அரிய வாய்ப்பு அவனுக்குக் கிடைத்தது. எல்லாவற்றையும் விட்டு விட்டுப் பிருந்தாவனத்தில் வந்து தங்கினான். முதலில் அவன் உணர்ச்சி வசங்களால் மிகவும் உந்தப் பட்டு, பிருந்தாவனத்தின் நான்கு திசைகளிலும் எல்லா இடங்களுக்கும் சென்று அங்குள்ள தூசிகளைத் தன் உடம்பு எங்கிலும் பூசிக் கொண்டான். ஆனால் கொஞ்ச நாட்கள் கழித்து ஆச்சரியமான விஷயம்

நடந்தது. அவனது "காய்ச்சல்" மெதுவாகக் குறைந்தது. இது ஒரு வெறிக் காய்ச்சல் தான், இல்லையா? "நான் பிருந்தாவனத்துக்குச் செல்வேன். நான் கோவர்த்தனத்துக்குச் செல்வேன். நான் ராதா குண்டத்துக்குச் செல்வேன்" என்று முதன் முதலில் அவனது காய்ச்சல் மேன்மேலும் கூடியது. எனவே அவன் எல்லாவற்றையுமே விட்டு விட்டுப் பிருந்தாவனத்துக்குச் சென்றான். அங்கே ஸ்ரீ கிருஷ்ணர் லீலைகள் புரிந்த அத்தனை புண்ணியத் தலங்களுக்கும், ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, பத்து, இருபது, இருபத்து ஐந்து - இப்படி எத்தனையோ கோயில்களுக்கு அவன் தினமும் சென்றான். ஒவ்வொரு நாளும் பரிக்கிரமம் செய்தான். சில சமயங்களில் ஒரே நாளில் இரண்டு அல்லது மூன்று பரிக்கிரமங்களைக் கூடச் செய்தான். தன் உடல் வலிமையினால் அவனால் என்னவெல்லாம் செய்ய முடிந்ததோ, அத்தனையையும் செய்தான். ஆனால் சில காலங்களுக்குப் பின் அந்தக் காய்ச்சல் இறங்கியது. அதன் பின் அவன் எந்த விதமான பரிக்கிரமமும் செய்யவில்லை. எந்தக் கோயில்களுக்கும் செல்லவில்லை. எல்லாம் நின்று விட்டன.

சிலர் பிருந்தாவனத்துக்கு வருகிறார்கள். எதுவுமே புரியாமல், "ஓ! ஒன்று இரண்டு பிறவிகளில் நான் செய்த சாதகங்களே இப்போது பிருந்தாவனத்துக்கு வரக் கூடிய பாக்கியத்தை அளித்துள்ளது" என்று கூறுகிறார்கள். ஆனால் இன்னும் சிலர் பிருந்தாவனத்துக்கு வந்து அங்கே முழுக்க முழுக்கப் பிரேம ரசத்தை உணர்கிறார்கள். சிறிது காலம் தங்கினாலும் கூட அவர்கள் அங்கே பக்தி பாவத்தில் மிதக்கிறார்கள். ஆனால் புதிதாக வரும் மற்றவர்கள், தன்னுள் பக்தி இன்னமும் வளராததால் பிருந்தாவனத்திலுள்ள தூசிகளிலும் கற்களிலும் என்ன தான் காணுவார்கள்? அங்கு பார்க்கும் அத்தனையும் அவர்களுக்கு மன வேதனையைத் தான் கொடுக்கும். அவர்களுக்குக் கிடைக்கும் பிருந்தாவன தரிசனம் இது தான்.

ஆனால் வைகுந்தத்தில் கோபகுமாரின் மனம் வேதனைப்பட்டதன் காரணம் வேறு. தன் மனத்தில் அடக்கவொண்ணா ஆசை ஒன்று இருந்தது. மிகவும் பலமான ஆன்மீகப் பிரேமை ஒருவனுக்கு ஏற்பட்டால் இப்படிப் பட்ட ஆசையைத் தான் அது உண்டு பண்ணும். ஆனால் அது எப்படி வந்தது? கோடிக்கான வருடங்கள் அவர் பக்தி சாதகங்களைச் செய்திருந்தார். பிரம்ம லோகம் மற்றும் எத்தனையோ லோகங்களுக்குத் திரும்பத் திரும்பச் சென்று வந்தவர். இப்படியாகக் கோடிக் கணக்கான வருடங்கள் சென்றிருந்தன. அவரது ஆசை ஒரே ஒரு நாளில் தோன்றியதல்ல. பிரம்மதேவர் சாதகம் செய்வது போல், கோபால மந்திரத்தால் தொடர்ந்து பஜனை செய்ததால் வந்ததததே அந்த ஆசை! நம் சம்பிரதாயத்தில் கொடுக்கப் படும் மந்திரங்களில் ஒரு மந்திரம் இது.

சமயச் சடங்குகளுடனும் பற்பல விதி முறைகளுடனும் பின் பற்றப்படும் "வைத்தி-பக்தியின்" ஒரு மிக உன்னதமான சிகரம் வைகுந்தத்தை அடைவதே. நமது எந்த சாஸ்திரங்களிலும் அதைப் பற்றிக் குறைவாகக் கூறப்படவேயில்லை. ஸ்ரீமத் பாகவதத்தில் முதலிலிருந்து ஒன்பது காண்டங்கள் வரையிலும் அதையே தான் எல்லாவற்றிலும் மேலான இலக்காகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அஜாமிலா எங்கே சென்றார்? பிரகலாத மகாராஜா எங்கே சென்றார்? வைகுந்தத்துக்கே. மேலும் துருவ மகாராஜா எங்கே சென்றார்? வைகுந்தத்தின் ஒரு விரிந்த பாகமான துருவ லோகத்துக்குச் சென்றார். எனவே, பக்தியினால் அடையப் படும் மிக உயர்ந்த இடமே வைகுந்தமாகும். அதை விடவும் மேலான இடம் கிடையாது. ஆனால் சாஸ்திரங்களில் ஒன்றிரண்டு இடங்களில் மட்டுமே குறிப்பிடப் பட்டுள்ள கோலோக பிருந்தாவனத்தைப் பற்றியும் அதன் உண்மை களைப் பற்றியும் சாதாரண மக்கள் எவருக்குமேத் தெரியாது. எவனொருவனால் சாஸ்திரங்களின் முடிவுகளைப் பிழிந்து எடுக்க முடியுமோ அவனால் மட்டுமே இதை அறிய முடியும். வேறெவராலும் முடியாது. கோலோகப் பிருந்தாவனத்தை அடைவதென்பது மிக மிக அபூர்வம். அது சாத்தியமாகாது என்றே கூறிவிடலாம். ஆனால் கோபகுமாருக்கோ அங்கே சென்று கோபாலரைப் பார்க்க வேண்டு மென்றும், எந்த விதமான விதியுமில்லாத - கடிவாளம் இல்லாத குதிரையைப் போல் - முழுச் சுதந்திரமான கிருஷ்ண பக்திக்காக அவரது இதயம் ஏங்கியது.

விதிகள் எதுவுமில்லாத முழு சுதந்திரமான கிருஷ்ண பக்தி என்றால் என்ன? ஸ்ரீமதி ராதிகாவையும் தன் குழாமிலுள்ள கோபியர்களையும் அவர்களுடைய குடும்பத்தார் வீடுகளில் அடைத்து வைத்திருந்தனர். "நீங்கள் கிருஷ்ணரைச் சந்திக்கச் சென்றால், கடுமையானத் தண்டனைகளைக் கொடுப்போம். உங்கள் சொந்தக் கணவருக்குச் சேவை செய்யுங்கள். இல்லையேல் உங்களுடைய கெட்ட குணத்தை ஊர் ஊராகச் சொல்லி அவமானத்தை வாங்கிக் கொடுத்து விடுவோம்" என்று பய முறுத்தினார்கள். உலகத்தாரின் பேச்சுகளுக்குப் பயந்தும், தர்மத்தை விட்டுத் தவறக் கூடாது என்று பயப்படும், ஒழுங்காக உலக விதிப்படி பக்தியைக் கடைப்பிடிப்பது ஒரு மிகச் சாதாரணமான பிரேமை. ஆனால் கோபியர்களோ எல்லா விதமான விதிகளையும் மீறி, தங்களுடைய கணவர்களையும் எறிந்து விட்டு கிருஷ்ணரைச் சந்திக்கச் சென்றனர். அவர்களுடைய பிரேமையை எந்த விதமான தர்மங்களும் கட்டுப் படுத்த இயலாது. மாறாக, அவ்வாறு கட்டுப் படுத்தும் போது அவர்களுடைய பிரேமை இன்னமும் அதிகரித்தது. கிருஷ்ணப் பிரேமையைச் சோதிப்பதற்காக எத்தனை எத்தனையோ தடங்கல்கள் வரும். ஆனால் கிருஷ்ணரைக் காண வேண்டும் என்ற பிரேமை, அந்தத் தடங்கல்களையும் தாண்ட வைப்பது மட்டுமின்றி, பிரேமையை இன்னமும் அதிகரிக்கவே வைக்கும். எனவே

தான் தடங்கல்கள் கொடுக்கப்பட்டன. ஆனால் கிருஷ்ணரைச் சந்திக்க வேண்டும் என்ற ஆவல் இன்னமும் அதிகரிக்கத் தான் செய்தது. அவர்கள் கடைசியில் கிருஷ்ணரைச் சந்தித்தனர். ஆனால் ஐஸ்வர்ய பக்தி பாவத்தில் இப்படிப்பட்ட பிரேமைக்கு இடமில்லை. பகவான் ஐஸ்வர்யங்களுடன் பரம இறைவனாகத் தோன்றும் போது அவர் சுதந்திரமாகப் பெண்களுடனும் பேசுவதையோ, திருமணமாகாத இளம் கன்னியர்களை நெருங்கவோ மாட்டார். உதாரணமாக ஸ்ரீ இராமச் சந்திரர் திருமணமாகாத எந்தப் பெண்ணின் முகத்தைக் கூடப் பார்க்க மாட்டார். சன்னியாசம் எடுத்த பின்னர் ஸ்ரீ சைதன்ய மகாபிரபு அவ்வாறு செய்வாரா? அவர் பெண்களின் கால் நகங்களைக் கூடப் பார்க்க மாட்டார்? அப்படியென்றால் என்னவென்ன நகைகளை அவர்கள் கழுத்திலும் கைகளிலும் அணிந்துள்ளனர் என்று பார்ப்பதைப் பற்றி நினைக்கவே முடியாது. அவ்வாறு பகவான் ஐஸ்வர்ய பாவத்துடன் தோன்றும் போது அவர் கூச்சத்துடனும், தர்மத்தை எப்போதும் காக்க வேண்டும் என்ற எண்ணத்துடனுமே இருப்பார்.

எங்கெல்லாம் இப்படிப்பட்ட மனப் பாவம் உள்ளதோ அங்கெல்லாம் பிரேமை அடக்கப் பட்டு விடுகிறது. ஆனால் இது உண்மையில் ஒருவன் வழிபடும் இறைவனின் இயற்கையான சுபாவத்தினால் அமையப் படுகிறது. மற்றவர்களால் உண்டாக்கப் படும் எந்த விதமானத் தடங்கல்களும் உண்மையான பிரேம பக்தியைத் தடுக்க இயலாது. அப்படிப்பட்டத் தடங்கல்களையேக் கோப குமாரிடமும் வைக்கப்பட்டது. வைகுந்த வாசிகள் கோபகுமாரை ஏளனம் செய்தனர். "நீர் எப்போதும் கோபால், கோபால், கிருஷ்ணா என்றே கூறுகிறீர். ஒரு சிறு மூங்கில் கம்பைப் பிடித்துக் கொண்டு கோபியர்களுடன் கிருஷ்ணர் ராஸ நடனம் செய்ததாகக் கூறுகிறீர். ஆனால் இது ஒரு மிகப் பெரிய அவமானமான செயல்! ஸ்ரீ நாராயணர் இதை ஒரு போதும் செய்ய மாட்டார்" என்று கூறி நகைத்தனர். ஆனால் உண்மையில் இந்த ஏளனம் ஒரு தடங்கலே அல்ல. அப்படியென்றால் கோபகுமார் ஏன் வைகுந்தத்தில் திருப்தியடையாமல் இருந்தார்? நாரதர் அதன் காரணத்தைக் கூறினார்: "ஸ்ரீமன் நாராயணரின் சொரூபத்தில், பகவான் நீ விரும்பும் பிரேமையை வெளிப்படுத்த மாட்டார். அவர் ஒரு போதும் அதை அளிக்க மாட்டார். இங்கே உன்னால் அவரிடம் மனம் திறந்து சுதந்திரமாகச் சிரித்துப் பழக முடியாது. எனவே உன் பிரேமைக்கு இந்த வைகுந்தம் ஒரு தடங்கலேயாகும்."

நாரதர் முதலாவது கோப குமாரை வைகுந்தத்தில் சிறிது காலம் தங்க வைத்ததின் காரணமே இந்தத் தத்துவங்களை அவர் நன்றாக அறிய வேண்டும் என்பதே. நாராயணருக்கு மொத்தம் அறுபது குணங்கள். எல்லா தேவர்களையும் விட அவருக்கு ஐந்து குணங்கள் அதிகம். அந்த ஐந்தில் முதலானது: "ஹதாரி - கதி - தாயக்" - தன்னால் கொல்லப்படும் அரக்கர்களுக்கு அவர் மிகவும் உயர்ந்த ஸ்தானத்தைக்

கொடுக்கிறார். இரண்டாவது: "ஐஸ்வர்யா" - எல்லா விதமான ஐஸ்வர்யங்களையும் சிகரம் போல் பெற்றவர். மூன்றாவது, அவர் தான் எல்லா விதமான அவதாரங்களின் மூல விதை. நான்காவது, அவர் முக்தியடைந்த ஜீவன்களைக் கூடக் கவர்ந்து இழுப்பவர். ஐந்தாவது, அவர் எப்போதுமே நிரந்தரமாக, கோடிக்கணக்கான அனைத்து பிரம்மாண்டங்களிலும் வியாபித்திருக்கிறார். எனவே நாராயணரும், பகவானாகவும் எல்லா அவதாரங்களுக்கும் விதை போன்ற "அவதாரி" யாகவும் இருக்கிறார். ஆனால் நாம் கிருஷ்ணரையும் "அவதாரி" என்று அறிகிறோம். அப்படியென்றால் இருவருக்கும் என்ன வித்தியாசம்? நாம் நாராயணர் அவதாரமாக வருவதில்லை என்று கூறும் போது அதன் அர்த்தம் என்னவென்றால், அவர் வைகுந்தத்தில் வீற்றிருக்கும் சுயமான நாராயண ரூபத்தில் இந்தப் பூவுலகங்களுக்கு வருவதில்லை என்பதே. ஹயக்ரீவா போன்ற வித விதமான அவதாரங்கள் அவரிடமிருந்து வருகின்றன. ஆனால் நாராயணராக - சங்கு, சக்கரம், கதாயுதம், தாமரை மலர் இவைகளை ஏந்தி நான்கு கரங்களுடனும் கௌஸ்துபத் துடனும் தோன்றுவதற்குப் பதிலாக அவர் வித்தியாசமான ரூபத்தில் சிலருக்கு மகனாகவும், சிலருக்குக் கணவனாகவும், சிலருக்குச் சகோதரராகவும், சிலருக்கு நண்பனாகவும் தோன்றி அந்த ஸ்தானங்களிலிருந்து விதம் விதமான லீலைகளை நிகழ்த்துகிறார். ஆனால் கிருஷ்ணர்? அவர் தன் பிருந்தாவனத்துடன், மூல சுயமான ரூபத்திலேயே தோன்றுகிறார். புல்லாங்குழல் ஊதி, தன் கோபியர்களுடன் லீலைகள் புரிகிறார். இவ்வாறு கிருஷ்ணர் தன் இருப்பிடமான பிருந்தாவனம், தன் சகாக்கள் - அனைவரையும் தன்னுடன் கொண்டு மூல உருவத்தில் வருகிறார்(அவ்வாறு வரும் போது அனைத்து விஷ்ணு ரூபங்களும் அவருடன் அடங்கி சேர்ந்து வருகின்றன).

பத்ரி நாத்தில் நர-நாராயணராகத் தோன்றியிருக்கும் நாராயணர் வைகுந்தத்தில் வைகுந்த - ஆதிபதியாக வீற்றிருக்கும் நாராயணரிடமிருந்து வேறு பட்டவர். மேலும் வைகுந்த நாராயணர் வாமன நாராயணராகத் தோன்றிய போது, அவர் வைகுந்தத்தில் வைகுந்த - ஆதிபதியாகவே வீற்றிருந்தார். ஆதி சேஷனின் மேல் படுத்திருக்கும் காரணோத சாயி விஷ்ணுவும் நாராயணரே. ஆனால் அவரது சொரூபமும் செயல்களும் வித்தியாசமானவை. வைகுந்தத்தில் இருக்கும் மூல நாராயணரின் சொரூபமும் செயல்களும் இந்தப் பூவுலகங்களுக்கு வருவதில்லை. எனவே தான், நாராயணருக்குச் சுயமான அவதாரம் கிடையாது என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் கிருஷ்ணரோ தன் சுய கிஷோர ரூபத்துடன், தன் சகாக்கள், தன் லீலைகள், தன் உறைவிடம், ராதாகுண்டம், ஷியாம குண்டம், கிரி ராஜ கோவர்த்தனம், நந்த கிராமம், பர்ஸானா, இப்படி அறுபத்து நான்கு சதுர மைல்களால் ஆன பிரஜ மண்டலத்துடன் தோன்றுகிறார். இது அவரது விஷேஷமான ஒரு குணம். ஆனால் நாராயணர் இப்படிச்

செய்வதில்லை. இது, அவதாரங்கள் அனைத்துக்கும் மூல காரண அவதாரியான கிருஷ்ணரின் ஒரு தனிச் சிறப்பான குணமாகும். அவர் கோலோகத்தில் எவ்வாறு இருக்கிறாரோ அதே போல் தான் இங்கும் தோன்றுகிறார்.

பகவானுக்குப் பற்பல சொரூபங்கள் உள்ளன. அவை அனைத்துமே ஹதாரி-கதி-தாயக். அப்படியென்றால் என்ன பொருள்? அவரால் கொல்லப்படும் அசுரர்கள் மிகவும் உயர்ந்த ஆன்மீக லோகத்தை அடைகின்றனர். இராமச் சந்திரர், நரசிம்மர், வராகர், பரசு ராமர் - இவர்கள் அனைவரும் ஹதாரி-கதி-தாயக். எந்த விதமான தேவர்களுக்கும் இல்லாத ஐந்து குணங்களை அவர்கள் முழு அளவில் பெற்றுள்ளார்கள். நாராயணர் மற்றும் அவரது அவதாரங்களில் இந்தக் குணங்கள் பூர்ணமாக அமைந்துள்ளன. ஆனால் அவை கிருஷ்ணரிடம் பூர்ணதமாக (பரி பூர்ணமாக) அமைந்துள்ளன. நாராயணரிடம் ஆரம்பித்து நரசிம்மர் வரையிலுமுள்ள அவதாரங்கள் ஒருவரை வதம் செய்யும் போது எந்த விதமான லோகத்தை அவர்கள் அடைகிறார்கள்? சுதலம், சுவர்க்கம், பிரம்ம லோகம் - இப்படிப் பற்பல இடங்களை அவர்கள் அடைகிறார்கள். சிலர் முக்தியையும் பெறுகிறார்கள்.

எந்தெந்த விதங்களில் அவர்கள் பகவானை நெருங்கு கிறார்களோ அவற்றிற்குத் தக்கவாறு பலன்களைப் பெறுகிறார்கள். உதாரணமாக இராம லீலையின் போது சர்பங்க ரிஷி என்று பிரம்ம-தத்துவத்தை வழிபடும் ஒரு பெரும் ரிஷி இருந்தார். அவர் இராமச் சந்திரரின் வருகையைப் பற்றிக் கேட்டிருந்தார். உருவற்ற பிரம்மமே ராமச் சந்திரரின் ரூபத்தில் வருகிறது என்று எண்ணிக் கொண்டு அவர் காத்திருத்தார். சில காலங்கள் அவர் காத்திருந்த பின்னர் இராமச் சந்திரர் தோன்றி சர்பங்க ரிஷிக்குத் தரிசனம் கொடுத்தார். அப்போது அந்த ரிஷி, மகிழ்ச்சியுடன் "பிரபோ, எனக்குப் பிடித்தமான லோகத்தைத் தயவு செய்து அளிக்க வேண்டும்" என்று வேண்டிக் கொண்டார். பின்னர் அவரிடமிருந்து ஒரு பிரகாசமான ஒளி வெளிப்பட்டு இராமச் சந்திரரின் உடலில் கலந்தது. சர்பங்க ரிஷி முக்தி பெற்றார். எவ்வளவு துர் அதிர்ஷ்டம் இது! இராமச் சந்திரரே நேராகத் தோன்றியிருக்கும் போது அவரிடம் வெறும் முக்தியைக் கேட்டிருக்கிறார்! எனவே இராமர் முக்தியை அளிப்பார். அது மட்டுமல்ல, எத்தனையோ வகையான அவதாரங்களால் முக்தியை அளிக்க இயலும். ஆனால் பகவானுக்கு எதிரிகளாகத் தோன்றுபவர்களுக்கு அந்த அவதாரங்கள் பிரேம பக்தியை ஒருபோதும் அளிப்பதில்லை.

உண்மையான முக்தி என்பது என்ன? ஸ்ரீமத் பாகவதத்தின் படி, "சொரூபேன வ்யவஸ்திதிஹி: " எந்த விதமான மோக் ஷம் பகவானுக்குப் பாதசேவை செய்யும் பாக்கியத்தை அளிக்கிறதோ அதுவே எல்லாவற்றிலும் மேலான மோக் ஷம். ஆனால் அந்த விதமான

மோக் ஷத்தை இந்த அவதாரங்கள் அளிப்பதில்லை. குறிப்பாக அரக்கர்களைக் கொன்று அவர்களுக்கு மோட்சத்தை அளிக்கும் அவதாரங்கள் இப்படிப்பட்டப் பாக்கியத்தைக் கொடுப்பதில்லை. ஆனால் கிருஷ்ணர் எப்படி? அவர் அரக்கர்களைக் கொன்று தன் விரலைச் சொடுக்கி எப்படிப்பட்ட மோட்சத்தை அவர் அளித்தார்? பிரேமை! நரசிம்மர் ஹிரண்யகசிப்புவைக் கொன்றார். வராகர் ஹிரண்யாக் ஷனைக் கொன்றார். ஆனால் இந்த அரக்கர்கள் எவரும் அந்தப் பிறவியிலேயே மோட்சத்தை அடையவில்லை. ஆனால் கிருஷ்ணர், தான் கொன்ற அரக்கர்கள் அனைவருக்கும் அப்போதே மோட்சம் அளித்தது மட்டுமின்றி சிலருக்குக் கிருஷ்ணப் பிரேமையை யும் கூட அளித்தார். உதாரணமாக, பூத்தனா என்ற அரக்கி கிருஷ்ணனின் தாயாக வேஷம் கொண்டு கிருஷ்ணரைக் கொல்ல வந்தாள். அவளுக்கு கிருஷ்ணர், பிரஜாவில் தன் தாயாக வரும் அரும் பாக்கியத்தை அளித்தார். பிரஜாவில் அவள் நேரடியானத் தாயாராக வரவில்லை. கோலோகத்தில் கிருஷ்ணருக்குப் பாலூட்டும் ஒரு வயதான கோபியாக ஆனாள். ஆனால் யசோதாவுக்குச் சமமானவளாக ஆகவில்லை. அவள் கோலோகத்தில் ஒரு பணிப் பெண்ணாகச் சென்றாள். இப்படிப் பட்ட பாக்கியங்களை கிருஷ்ணரைத் தவிர வேறு எந்த அவதாரங்களாலும் அளிக்க முடியாது.

பகவானால் கொல்லப்படும் அரக்கர்களுக்குப் பொதுவாக சாதாரணமான லோகங்களே அளிக்கப்படும். அப்படியென்றால் கிருஷ்ணர் அவர்களுக்கு மோட்சம் அளிக்க மாட்டார் என்று நினைக்காதீர்கள். அவர் மோட்சத்தையும் கொடுக்கிறார். ஆனால் தன் பக்தர்களுக்கோ கிருஷ்ண பிரேமையைக் கொடுக்கிறார். சித்திர கேது மகாராஜா மோட்சத்தைக் கேட்கவில்லை. அவர் கீழ் வருமாறு பிரார்த்தித்தார்:

*ந நாகப் பிருஷ்தம் ந ச பாரமேஷ்த்யம்*
*ந சார்வ பௌ/னமம் ந ரசாதிபத்யம்*
*ந யோக சித்திர் அபுனர் பவம் வா*
*சமஞ்ஜஸ த்வா விரஹய்ய காங் ஷே*

*(ஸ்ரீமத் பாகவதம் 6.11.25)*

"ஓ பகவான்! நான் துருவலோகத்துக்கோ பிரம்ம லோகத்துக்கோ ஆசைப்படவில்லை. நான் மத்திய மற்றும் பாதாள லோகங்களை எல்லாம் ஆள வேண்டும் என்றும் ஆசைப் படவில்லை. நான் எந்த விதமான யோக சித்திகளுக்கும் ஆசைப்படவில்லை. முடிவில்லாத பிறப்பு இறப்புகளில் தள்ளும் சம்சார சாகரத்திலிருந்து விடுதலை அடைய வைக்கும் மோட்சத்துக்கும் நான் ஆசைப்படவில்லை. இவையெல்லாம் என்னை உம்மிடமிருந்து பிரிக்குமானால் அவை எதுவும் எனக்கு வேண்டவே வேண்டாம்."

பிரகலாத மகாராஜாவுக்கு நரசிம்ம பகவான் மோட்சத்தைக் கொடுக்க விரும்பினார். ஆனால் பிரகலாத மகராஜாவோ அதை விரும்பவில்லை. பக்தர்கள் இப்படித் தான் மோட்சத்தை விரும்பாமல் இருப்பார்கள். ஆனால் எவராவது மோட்சத்தை விரும்பினால் அவர் அதை அவர்களுக்கு வழங்குகிறார். பகவான் தன்னிடம் பிரேமைக் காகப் பிரார்த்திக்கும் பக்தர்களுக்கு பிரேமையை அளிக்கிறார். உதாரணமாக ஜனகாபுரியிலிருந்த ராஜ குமாரிகள் அவ்வாறே கேட்டனர். அவர்கள் இராமச் சந்திரர் தங்களையும் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று விரும்பினார்கள். அவர்களுக்குப் பகவான் தகுந்த வழியைக் காட்டினார். "இப்போது என்னால் ஒரே ஒரு மனைவியை மட்டுமே திருமணம் செய்ய முடியும். எனவே நீங்கள் அனைவரும் கிருஷ்ண லீலையின் சமயம் கோபியர்களின் வயிற்றில் பிறப்பீர்கள். அப்போது உங்கள் ஆசைகள் நிவர்த்தி செய்யப் படும்" என்று கூறினார். இதே போல் தண்டகாரண்யாவிலிருந்த மகரிஷிகளும் முதலில் கோகுலத்தில் கோபியர்களின் வயிற்றில் பிறக்க வேண்டியிருந்தது. அவர்களை உடனடியாக நேராகக் கோலோகத்துக்கு அனுப்பி வைக்கவில்லை. ஏனென்றால் அவர்களுக்குக் கோபி சொரூபம் இன்னமும் வெளிப்படவில்லை. எனவே அவர்கள் முதலில் பிரஜாவில் சிறிது காலம் வாழ்ந்த பின்னர் மட்டுமே அது சாத்தியமானது.

சட்டங்களை எல்லாம் முறையாகக் கற்று வழக்கறிஞனாக ஒருவன் பட்டம் பெற்றதும் அவனால் உடனடியாக ஒரு நீதிபதியாக முடியுமா? அவன் முதலில் இன்னொரு நீதிபதியிடம் சிறிது காலம் பயிற்சி எடுத்த பின்னர் மட்டுமே அவ்வாறு ஆக முடியும். அதே போல் தான் அவர்கள் முதலில் இந்தப் பூவுலகிலுள்ள பிரஜாவில் பிறந்து அங்கே நேரடியான பயிற்சியை எடுத்துக் கொள்ள வேண்டும். உதாரணமாக எந்த விதமான சமயல்களையோ, பாத்திரங்களைக் கழுவுதல், உணவுகளைப் பரிமாறுதல் போன்ற எதையுமே தெரியாத ஒரு திருமணமான இளம் பெண் தினமும் தன் மாமியாரிடம் வசை களையேக் கேட்க வேண்டி வரும். ஆனால் அங்குள்ளவர்கள் அவளுக்கு அவையெல்லாவற்றையும் கற்றுக் கொடுப்பார்கள். அவளது மாமியார், "என் மருமகளே, இன்று எனக்கு உடம்பு சரியில்லை. எனவே இன்று நீ தான் சமையல் அனைத்தையும் செய்ய வேண்டும். மேலும் நீ பாத்திரங்களையும் கழுவி, வீட்டையும் பெருக்கிச் சுத்தம் செய். நான் இன்று ஓய்வெடுக்க வேண்டும். நீ ரொட்டியை இப்படிச் செய்...." என்று கூறுவாள். இப்படிப் புத்திசாலித்தனமாக அவர்கள் அவளுக்கு நேரடிப் பயிற்சியை அளிப்பார்கள். இதே போல் கோபியாக சேவகம் செய்ய விரும்புபவர்கள் எங்கே போய் பயிற்சி பெறுவார்கள்? கோகுலப் பிரஜாவில் பகவான் அவதரித்து லீலைகள் புரியும் போது தான் அது சாத்தியமாகும். வேறு எங்கேயும் இது சாத்தியமாகாது. நித்திய சித்த பக்தைகளான கோபியர்களிடம் நேரடியான பயிற்சியைச் சில காலம்

பெற்று எல்லாவற்றையும் அறிகிறார்கள். மாறாக, அவர்களை நேராக கோலோகாவுக்கு அனுப்பி வைத்தால் கோபி சொரூபம் இன்னமும் முழுமையாக வெளிப்பட்டிருக்காது. எனவே தான் பிரஜாவில் முதலாவது பிறப்பது மிகவும் அவசியம். தாஸ்ய பாவமோ, சக்ய பாவமோ, வத்ஸல்ய பாவமோ இல்லை மதுர்ய பாவமோ - அனைத்துக்கும் முதலாவது பிரஜாவில் பிறந்து அங்கே பயிற்சி பெற வேண்டும்.

அடுத்து நாரதர் கோப குமாருக்கு இந்தச் சுலோகத்தைக் கூறுகிறார்:

*தார தம்யம் து கல்ப்யேத*
*ஸ்வ ஸ்வ சேவானு சாரதஹ*
*தத் தத் ரஸ ஸஜாதீய*
*சுக வைச் சித்ரியா பேக் ஷயா     (பிருகத் பாகவதம் 2.4.193)*

க ிருஷ்ணர், தன் சகாக்கள் மற்றும் அவருக்குச் சேவகம் புரிபவர்கள் அனைவருமே தனியான விஷேஷ குணங்களைக் கொண்டவர்கள். ஆப்த காமா, ஆத்மாராமா என்ற நிலையில் இருப்பவர்களில் கிருஷ்ணர் மணி மகுடம் போன்றவர். அவர் சுத்தமான வெள்ளை நிறமான சங்கைப் போன்றவர். அப்படிப்பட்ட வெள்ளை யான சங்கின் மேல் ஒரு இளம் சிவப்பு நிறமான மலரொன்றை வைத்தால் அதன் தனிக் குணங்கள் அழகாகக் காட்சியளிக்கும். இப்படி எந்த நிறமான மலரும் அதில் மிக அழகாகக் காட்சியளிக்கும். கிருஷ்ணரிடம் அடைக்கலம் அடையும் சகாக்கள் ஒரு குறிப்பிட்ட தனிப் பட்ட விதத்தில் சம்பந்தப் பட்டிருப்பார்கள். அவ்வாறு அவர்கள் எந்த விதமான ரஸ பாவத்துடன் சம்பந்தம் வைக்கிறார்களோ அதே போல் அவர்களுடைய சேவைகளைக் கிருஷ்ணர் ஏற்றுக் கொள்கிறார்.

உதாரணமாக, வைகுந்தத்தில் வராஹ பகவானுக்குச் சேவை நடக்கிறது. அங்கே அவரது ஆசைகள் திருப்தி செய்யப் படுகின்றன. ஆனால் வராஹ பகவானுக்கு, பிரகிருத்தியின் எட்டாவது போர்வையில் இன்னுமொரு சொரூபம் உள்ளது. அங்கே அவர் ஒரு விஷேஷமான மிகவும் அழகான உருவத்தில் கோடிக் கணக்கான ஜீவாத்மாக்களின் சேவைகளை ஏற்றுக் கொண்டிருக்கிறார். ஸ்ரீ ராமச் சந்திரருக்கு ஒன்றோ இரண்டோ நித்திய சகாக்கள் மட்டுமா இருக்கிறார்கள்? அவருக்குக் கோடிக் கணக்கானவர்கள் உள்ளனர். சிலர் சக்கிய ரஸ பாவத்துடனும் ஆனால் அனேகமானவர்கள் தாஸ்ய ரஸ பாவத்துடனும் சேவை செய்கிறார்கள். வாமன தேவருக்கு எத்தனை சேவகர்கள் உள்ளனர்? கோடிக் கோடிக் கணக்கில். எனவே ஸ்ரீ கிருஷ்ணரே இவை எல்லோருக்குமே மூலம். மற்ற அனைத்து சொரூபங்களும் அவரது அவதாரங்கள். ஜீவாத்மாக்கள் அவரது சேவகர்கள். ஆனால் சில ஜீவாத்மாக்கள் ஸ்ரீ கிருஷ்ணரின்

அவதாரங்களுக்குச் சேவகம் செய்கிறார்கள், மற்ற ஜீவாத்மாக்கள் நேரடியாக எல்லோருக்கும் மூலமான கிருஷ்ணருக்கே சேவகம் புரிகிறார்கள். கிருஷ்ணர் ஏன் இப்படி சிலரை ஏமாற்றுகிறார்? பிரஜாவின் பக்தி ரஸம் மிக மிக அழகானது. அதிலும் மதுர்ய ரஸமோ எல்லாவற்றிலும் மிகவும் உயர்ந்தது. அப்படியானால் ஏன் அவர் மதுர்ய ரஸ பாவத்தை எல்லோருக்குமே கொடுக்கவில்லை?

அது ஒவ்வொரு ஜீவாத்மாவின் தனிப்பட்ட ருசியைப் பொறுத்தது. அவர் சில ஜீவன்களுக்கு வெறும் முக்தியை மட்டுமே கொடுக்கலாம். அந்த ஜீவன், "கிருஷ்ணர் என்னிடம் மிகவும் கருணை காட்டியிருக்கிறார். இதை விடவும் உயர்ந்தது எதுவுமே கிடையாது!" என்று எண்ணுகிறது. உதாரணமாக, ஹனுமான் பகவானுக்குத் தந்தையாக மாறி சேவகம் புரிய சம்மதிப்பாரா? நிச்சயமாக மாட்டார். அதே போல் தான், வராஹ பகவானுக்குச் சேவை செய்து கொண்டிருக்கும் ஜீவாத்மாக்களும் அவர்களது சேவைகளில் முழுவதுமாகத் திருப்தியாக உள்ளனர். இப்படி, பகவானின் எந்த அவதாரங்களுக்குச் சேவை செய்யும் ஒவ்வொரு ஜீவாத்மாவும் அவர்களுக்குப் பகவான் அளித்த பதவியே மிக மிக உயர்ந்தது என்று எண்ணுகிறது. கோப குமார் நாராயண லோகத்தில் அளவற்ற பக்தர்கள் இருப்பதைக் கண்டார். அவர்கள் அனைவரும் எப்போதும் மிகவும் ஆனந்தமாக இருந்தனர். அயோத்தியாவில் ஸ்ரீ ராமச் சந்திரர் தனது பக்தர்களிடம் மிகவும் பாசத்துடன் இருந்தார். ஆனால் கோப குமார் அயோத்தியாவுக்குச் சென்றால் அவர் அங்கே மகிழ்ச்சியாக இருப்பாரா? அவர் அயோத்தியா புரியில் பசுக்களைப் பார்ப்பாரா? ஒரு வேளை அங்கு வாழும் பிராமணர்கள் வழிபாட்டுக்காக வேண்டி பசுக்களை வைத்திருக்கலாம். ஆனால் அங்கே பிருந்தாவனத்தைப் போல் பசுக்களை மேய்க்கச் செல்வதில்லை. அங்கே எல்லாத் திக்குகளிலும் யக்ஞக்களும் சேவைகளும் முறைப்படி ஒழுங்காக நடை பெறுகின்றன. அங்கே ஒரு பசு மேய்க்கும் பாலன் சென்றால் அங்கே தோன்றும் புகை மண்டலங்களைப் பார்த்து பரிதவிக்கவே தான் செய்வான். அங்கு அவன் எந்த விதத்திலும் மகிழ்ச்சியுடன் இருக்க மாட்டான். கோப குமாரின் இதயத்தில் இருந்த இப்படிப்பட்ட உணர்ச்சிகள் அனைத்தையும் நாரதர் அமைதியுடன் அறிந்து கொண்டார்.

# அத்தியாயம் - 10

சில சமயங்களில் ஒரு சாதகனால் கூட தன்னுடைய இதயத்தைப் பற்றி அறிய முடிவதில்லை. ஒரு வியாதியஸ்தனால் தன்னுடைய வியாதி என்னவென்பதைக் கண்டு பிடிக்க முடியாதது போல், ஒரு வலிமையற்ற சாதகனால் தன்னுடைய சுய பக்தி-பாவங்களைக் கண்டு பிடிக்க முடிவதில்லை. ஆனால் ஒரு திறமை வாய்ந்த மருத்துவர், நாடித் துடிப்புக்கள் மற்றும் உடம்பிலுள்ள தோற்றங்கள் அனைத்தையையும் பார்த்து விட்டு, ஒருவனுக்குக் குறிப்பாக என்ன வியாதி உள்ளது என்று கண்டுபிடித்து விடுவார். அவர் அந்த வியாதியின் மூல காரணத்தையும் கூடக் கண்டு பிடித்து விடுவார். அது வெறும் காய்ச்சலாக இருந்தாலும் கூட, காய்ச்சலுக்கான நேரடியான மருந்தைக் கொடுப்பதற்குப் பதிலாக அந்தக் காய்ச்சலின் மூல காரணமாக இருக்கும் வியாதிக்கு மருந்தைக் கொடுப்பார். ஒரு சாதாரண மனிதனால் அப்படிப்பட்ட மருத்துவரைப் போல் நடிக்க முடியாது. முறையான தகுதியும் அனுபவமும் பெற்ற ஒரு மருத்துவரால் மட்டும் தான் சரியான மருத்துவத்தை உபயோகப் படுத்த முடியும்.

அதே போல் நமக்கு நம் பஜனையில் சில சமயம் வெறுப்பு ஏற்படலாம். அப்படிப்பட்ட துர்ப்பாக்கியம் சில சமயங்களில் வரும். அப்போது பஜனையில் உயிரையே வைத்துத் திளைத்திருக்கும் பக்தர்களால் நம் இதயங்களின் உள்ளேப் புதைந்து கிடக்கும் விஷயங்களை வெளியே கொண்டு வர முடியும். அவர்கள் நம் பல வீனங்கள், அனர்த்தங்கள் எல்லாம் என்னவென்றும் அவை எங்கிருந்து வருகின்றன என்பதையும் அறிந்து, அவற்றை எவ்வாறு நாம் மூல வேரிலிருந்து கிள்ளி எறிய வேண்டும் என்பதையும் கூட நமக்குக் கூறி உதவி புரிவார்கள். அவர்கள், "நீ ஹரி கதைகளைக் கேள். அதற்கு முன்னால் உன் குருதேவரிடம் ஆழ்ந்த நம்பிக்கை வைத்து அவருக்கு

சேவகம் செய்" என்று கூறுவார்கள். அதற்கு நாம், "நான் என்னால் முடிந்த வரையிலும் சேவை செய்கிறேன். ஆனால் என் மனம் நிலையின்றி ஓடுகிறது. நான் அதை எப்படி அடக்குவது" என்று கேட்கலாம். அதற்கு அவர்கள், "உன்னால் குருதேவரின் கிருபைய ினால் கண்டிப்பாக அதை அடக்க முடியும். நம்பிக்கையாய் இரு" என்றும் அறிவுரை வழங்குவார்கள்.

எனவே தன் சிஸ்யனால் கூட தன் சொந்த இருதயத்திலிருப்பதைக் காண முடியாதவற்றை, குருதேவர் புத்தி சாலித்தனமாக அறிந்து விடுகிறார். கோபகுமார், "இந்த வைகுண்டத்தை விடவும் உயர்ந்த இன்னொரு இடம் கிடையாது என்று எனக்குத் தெரிந்தும் கூட, ஏன் இங்கு என் இதயத்தில் திருப்தியில்லை" என்று கேட்க ஆசைப் பட்டார். ஆனால் தன் கூச்ச சுபாவத்தால் அப்படிக் கேட்க முடியவில்லை.

ஆனால் எல்லா விதமான ஆன்மீக மருத்துவர்களிலெல்லாம் மணி மகுடமான நாரதர், கோபகுமாரின் வியாதி என்னவென்பதைக் கண்டு பிடித்து விட்டார். மேலும் கோபகுமார் தன் வியாதி உண்மையில் என்னவென்று அறியாமல் கேட்கும் கேள்விகளுக்கு விதம் விதமான நிலைகளில் நாரதர் பதில்களைக் கூறலாம். அவர் சாதனா என்றும் சித்தா என்றும் விதம் விதமான ஆன்மீக நிலைகளைப் பற்றி விளக்கலாம். ஆனால் இவற்றை ஒரு அனுபவமில்லாத ஜீவன் கேட்டு, அந்த உபதேசங்களுக்குச் சரியான முக்கியத்துவத்தைக் கொடுக்கவில்லையானால் ஒன்று இரண்டு அல்ல கோடிக் கணக்கான பிறவிகள் எடுத்தும் கூட ஹரி பக்தி வருவதில்லை. எனவே கோபகுமாரின் அந்தரங்க ஆசைகளை அறிந்து, அவரது கவலையின் உண்மையான காரணங்களையும் அறிந்து, எவ்வாறு நாம் பஜனை செய்ய வேண்டும் என்பதையும் உபதேசிக்கிறார். முதலாவதாக நாம் நம் மனதை அவரது வழியில் செலுத்த வேண்டும். அவர் கோப குமாரிடம் என்னவென்ன குறைகளைக் கண்டு பிடிக்கிறாரோ அவை அனைத்தும் நம்மிடமும் உள்ளன. முதலில் நாம் அவற்றை நம் முழு முயற்சியால் கழைந்து எறிய வேண்டும். அதன் பின்னர் மட்டுமே நம்மால் பஜனையில் ஈடுபட முடியும். உண்மையான பஜனை அப்போது தான் வெளிப்படும்.

*வைகுந்த வாஸினோ ஹை யேதே*
*கேசித் வை நித்ய பார்ஷ தாஹ்*
*பரே கிருஷ்ணஸ்ய க்ருபயா*
*சாதயித் வேமம் ஆகத்தாஹ*          *(பிருகத் பாகவதாம்ருதம் )*

வைகுந்த வாசிகளில் சிலர் நித்திய சித்தர்கள், இன்னும் சிலர் சாதன சித்தர்கள். நித்திய சித்தர்கள் ஆதி முதலிலிருந்தே பகவானின்

சகாக்களாக உள்ளவர்கள். ஆனால் சாதன சித்தர்களோ, தங்களுடைய சாதகங்களாலும் பகவானின் கருணையினாலும் முக்தி நிலையை அடைந்து வைகுந்தத்துக்கு வந்தவர்கள். பக்தர்களின் சேவைகளில் பற்பல தரங்கள் உள்ளன. சிலர் எப்போதும் பகவானின் பக்கத்திலேயே இருந்து சாமரம் வீசுவது போன்ற சேவைகளைப் புரிகின்றனர். மற்றும் சிலரோ, பகவானிடமிருந்து தூரத்தில் இருந்தவாறு சேவைகளைச் செய்கின்றனர். உதாரணமாக, வஷிஷ்ட ரிஷி அயோத்தியாவிலிருந்து ஸ்ரீ இராமச் சந்திரருக்கு சேவகம் புரிகிறார். அவரது சேவை எப்போதும் இராமச் சந்திரருக்கு "மங்களம் பவது" என்று கூறிக் கொண்டிருப்பதே. மேலும் அவர் எவ்வாறு யாகங்களைச் செய்ய வேண்டும் என்பது போன்ற அறிவுரைகளையும் அவ்வப் போது அளிக்கிறார். இதே போல் ஸ்ரீ இலட்சுமணனும் வேண்டிய சேவகங்களைப் புரிகிறார். ஒரு சமயம் இராமச் சந்திரர் எங்கோ சென்றிருந்த போது இலட்சுமணன் நிஷாத ராஜா என்பவருடன் அமர்ந்து ஸ்ரீ இராமச் சந்திரரின் கல்யாண குணங்களைப் பாடி மகிழ்ந்தார். அப்போது நிஷாத ராஜா அளவில்லாத பக்தி பாவத்தினால் புழகாங்கித மடைந்து போனார். இரவும் பகலும் இலட்சுமணன் இராமச் சந்திரருக்குப் பணிவிடைகள் செய்வார். இதே போல் தான் ஹனுமானும். ஆனால் ஸ்ரீ சீதா தேவியார் இராமச் சந்திரருக்குப் பணி விடைகள் செய்யும் போது மற்ற அனைவரும் வெளியே அனுப்பப் பட்டு விடுவார்கள். இந்த விதியை எல்லோரும் அனுசரிப்பார்கள். இப்படியாக சேவகங்களில் விதம் விதமான நிலைகள் உள்ளன.

ஆனால் இந்த விதமான வித்தியாசங்களால் அங்கே எந்த விதமான அபராதங்களும் விளைவதில்லை. "இந்த சேவை தான் உயர்ந்தது, அந்த சேவை தாழ்ந்தது" என்ற பாகுபாடுகள் எதுவும் கிடையாது. வைகுந்தத்தில் எல்லா விதமான சேவகர்களுக்கும் தத்தம் குறிப்பிட்ட தன்மைகள் உண்டு. உதாரணமாக, அங்கேயும் சமயல்கள் உண்டு. ஸ்ரீ ராமச்சந்திரரின் தாயாரான கௌஸல்யா, ஸ்ரீ இலக்சுமணனின் துணைவியான ஊர்மிளா, மற்றும் சீதா தேவியார் அனைவரும் ஸ்ரீ ராமருக்குச் சமையல்கள் செய்கிறார்கள். ஆனால் அவர்களை வெறும் சமையல்காரர்கள் என்றா எண்ணுகிறார்கள்? இல்லவேயில்லை. சமையலும் ஒரு அர்ச்சனையே. எந்த சேவையையும் உயர்ந்தது என்றோ தாழ்ந்தது என்றோ எண்ணாதீர்கள். இல்லா விட்டால் அங்கே குழப்பம் தான் ஏற்படும். மற்றவர்களை வெறும் "சமையல்காரர்" தானே என்றும் தன்னை மிகவும் முக்கியமான வராகவும் கருத வைத்து அது மிகவும் குழப்பத்தை உண்டு பண்ணி விடும். அங்கே சேவகங்களில் வித்தியாசங்கள் இருந்தாலும், அவை எல்லாவற்றிலும் பிரேமை உள்ளது. ஒரு வேளை சில விதமான பஜனையில் அதிகமான பிரேமை இருக்கலாம், மற்றவைகளில் சற்று குறைந்த பிரேமை இருக்கலாம். ஆனால் நீ வைகுந்தத்தை அடைந்து விட்டால் அங்கே ஒவ்வொருவரின் சேவையும் பிரேமையுடன் மிகவும்

அற்புதமாக இருப்பதைக் காண்பாய். இந்த விஷயத்தை நாம் நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும். எனவே வைகுந்தத்தில் விதம் விதமான தனிச் சிறப்புகள் எங்கிலும் காண்ப்பட்டாலும் அவைகளில் எதுவுமே தாழ்ந்த நிலைகள் கிடையாது.

ஹனுமான், ஜாம்பவான், சுக்ரீவன், அங்கதன் மற்றும் அனைவரும் ஸ்ரீ ராமச்சந்திரரின் ராஜ அபிஸேகத்துக்கு சேர்ந்து வந்திருந்தனர். அவர்கள் ஒவ்வொருவரின் சேவைகளையும் அளவில்லாத பிரேமையுடன் பெற்றுக் கொண்டு அனைவருக்கும் ஸ்ரீ ராமர் பிரியா விடை அளித்துக் கொண்டிருந்தார். அவர் சுக்ரீவனை அழைத்து, மிகவும் அழகான மணிக் கற்களால் செய்யப்பட்ட ஒரு மாலையை கழுத்தில் அணுவித்துக் கட்டிப் பிடித்துத் தழுவியவாறு, "ஓ சுக்ரீவா! நான் உனக்கு என்றென்றும் கடமைப் பட்டுள்ளேன். நீ மட்டும் சீதா தேவியைத் தேடிச் செல்லவில்லை யென்றால் நாம் வெற்றியடைந்திருக்கவே முடியாது. எனவே நீ இந்த இராஜ்ஜியத் திலேயே தங்கி, உன்னுடைய சேவைகயின் பயன்களை அனுபவிப்பாயாக. சில சமயங்களில் நீ என்னை வந்து பார்க்கக் கூப்பிடுவேன். மற்ற சமயங்களில் நானே உன்னை வந்து பார்ப்பேன்" என்று கூறினார்.

ஸ்ரீ ராமர் இப்படி ஒவ்வொருவருக்கும் விடையனுப்பிய போது எல்லோருடைய கண்களிலும் கண்ணீர் ததும்பியது. அவர் ஒவ்வொரு வரையும் கூப்பிட்டு, அவர்களிடம் தனித் தனியாகச் சந்தித்துப் பேசி, துணி மணிகள் ஆபரணங்களெல்லாம் வெகு மதிகளாக அளித்து அனுப்பினார். ஆனால் அங்கதனோ எங்கேயோ ஒழிந்து கொண்டான். 'எங்கே ஒழிந்திருக்கிறான். ஏன் இப்படி ஒழிந்து கொள்ள வேண்டும்' என்று ராமர் யோசித்தார். ஆனால் அங்கதனோ, "என்னை அவர் கூப்பிட்டால் நான் போய்த் தான் ஆக வேண்டும். ஆனால் அவரை விட்டுப் போகப் போவதே இல்லை!" என்று எண்ணிக் கொண்டி ருந்தான்.

ஸ்ரீராமர் அனைவரையும் விடையளித்து அனுப்பி முடிந்தும் கூட அங்கதன் ஒழிந்தே தான் இருந்தான். "அங்கதன் எங்கே?" என்று கேட்டார். அங்கதனோ ஹனுமானின் பின்னால் ரகசியமாக ஒழிந்து கொண்டிருந்தான். ராமர் நிச்சயமாக ஹனுமானைக் கூப்பிட்டு அனுப்ப மாட்டார் என்று அங்கதனுக்கு நன்றாகத் தெரியும். ராமர் எல்லோரையும் கூப்பிட்டார். ஆனால் ஹனுமானை மட்டும் அவர் கூப்பிடவே இல்லை. ஏன்? சுக்ரீவனுக்கோ மனைவியும் குழந்தைகளும் இருந்தனர். எனவே அவர், "நீ அவர்களிடம் செல்" என்று உத்தர விட்டார். அங்கதனுக்குத் தாயார் இருந்தாள். ஆனால் ஹனுமானோ எல்லாவற்றையும் விட்டு விட்டு வந்தவர். உங்களுக்குப் பரிகிறதா இது? மற்றவர்கள் அனைவரும் தன் அன்பை வேறு இடங்களிலும்

வைத்திருந்தனர். அதனுடன் அவர்கள் ஸ்ரீ ராமரிடமும் பக்தியை வைத்திருந்தனர். ஆனால் ஹனுமானோ ஒரே ஒரு இடத்தில் மட்டுமே முழுமையாகப் பக்தியை வைத்திருந்தார். தன் முழுச் சேவையையும் ஸ்ரீ ராமரின் பாதங்களுக்கு மட்டுமே அர்ப்பணித்திருந்தார். தனக்கென்று ஒரு சிறு குடிசை கூட கிடையாது. மற்ற அனைவர்களுக்கும் குடும்பம், இராஜ்ஜியம், கட்டடங்கள், ஊரில் செல்வாக்கு - இப்படி அனைத்தும் இருந்தன. ஜாம்பவானுக்கு விந்தியாசால மலையில் குகை இருந்தது. எனவே ஸ்ரீ ராமர் ஜாம்பவானிடம், "நீ தயவு செய்து அங்கே போ. உன் மனைவி அங்கேயிருக்கிறாள்" என்று கூறினார். ஆனால் அவர் ஹனுமானிடமும், "நீ இனி போ" என்று கூறியிருந்தால் ஹனுமான் என்ன சொல்லியிருப்பார்? "பிரபோ, நான் எங்கே போவேன். நான் எனக்கென்று ஒரு சிறு குடிசை கூடக் கட்டவில்லை. தாங்கள் தான் எனக்குத் தாயும் தந்தையும். எல்லாமே எனக்குத் தாங்கள் தான். உங்களது பாதங்கள் தான் என்னுடைய ஒரே குடிசை. உங்களைத் தவிர எனக்கு வேறு எதுவுமே கிடையாது" என்று கூறியிருப்பார்.

எனவே ஸ்ரீ ராமச் சந்திர பகவான் ஹனுமானை ஒரு "அகிஞ்சனா" வாகக் கண்டார். மற்றவர்களை அவர் அவ்வாறு பார்க்கவில்லை. எனவே நமக்கு ஸ்ரீ கிருஷ்ணரைத் தவிர இன்னொரு வரிடம் பஜனையில் ஈடுபாடு இருந்தால், "சரி, நீ போ" என்று கூறி நம்மை நாம் எங்கிருந்து வந்தோமோ அங்கேயே அனுப்பி வைத்து விடுவார். உதாரணமாக, தன்னிடம் வந்த பிராமணப் பெண்களைத் திரும்பவும் வீடு செல்ல வைத்தார். ஏன்? அவர்களுக்கு அங்கே வீடுகள், கணவன்மார்கள், மகன்கள், மகள்கள் எல்லோரும் இருந்தனர். கோபியர்கள் சிலருக்கும் கணவன்மார்களும் மகன்களும் மகள்களும் இருந்தார்கள். ஆனால் அவர்கள் ஸ்ரீ கிருஷ்ணரைச் சந்தித்ததும் அவர்களுடைய பந்த பாசங்கள் அனைத்தும் தங்கள் இதயங்களிலிருந்து முழுவதுமாக அறுத்து எறியப்பட்டன. எனவே நாம் "அகிஞ்சனா" வாக இருக்கும் போது நமக்குத் தாய் மற்றும் எவர் மேலும் எந்த விதமான சம்பந்தங்களும் கிடையாது. எனவே நம்மை ஸ்ரீ கிருஷ்ணர் திருப்பி அனுப்ப முடியாது.

*பஜனானந்த சாம்யே அபி*
*பேதஹ் கஸ்சித் ப்ரகல்பதே*
*பாஹ்யாந்தரிண பாவேன*
*தூர பார்ஸ்வ ஸ்ததானினா --- (பிருகத் பாகவத் )*

"பகவானுக்குச் சேவை செய்வதில் வரும் ஆனந்தம் அவருடைய அனைத்து விதமான பக்தர்களுக்கும் சமமே. ஆனால் சிலர், பகவானுடன் நெருக்கமாக சேவை செய்யும் பக்தர்களின் ஆனந்தமும் அவருக்குத் தூரத்திலிருந்து சேவை செய்யும் பக்தர்களின் ஆனந்தமும் வித்தியாசமானவை என்பார்கள்."

ஒரு கனிஷ்த அதிகாரி பஜனையில் ஈடுபடும் போது, "ஓ, என்னைப் போல் எவரும் கிடையாது. நான் எனது பஜனையிலிருந்து அளவில்லாத ஆனந்தத்தைப் பெறுகிறேன். நான் மிகவும் நன்றாக யிருக்கிறேன்" என்று எண்ணுவான். அங்கே மிருதங்கத்தை வாசிக்கும் இன்னொரு பக்தனோ, "நான் இந்த மிருதங்கத்தை வாசிக்கும் போது எவ்வளவு அழகான நாதம் வருகிறது. நான் இதை நன்காக வாசிக்கிறேன்" என்று நினைப்பான். இதே போல் தான் சிங்கியைத் தட்டும் இன்னொரு பக்தனும் நினைப்பான். அங்கே பாடும் பக்தனும் இதே போல் எல்லாம் சேர்ந்து மிகவும் ஆனந்தமாக இருப்பதை உணர்வான். ஆனால் இங்கே உயர்வு தாழ்வுகளை நாம் கவனித்தால், தனித் தனியாக மிருதங்கத்தையும் சிங்கியையும் மட்டும் வாசித்தால் அது முழுமையான கீர்த்தனை அல்ல என்று அறிவோம். ஏன் நாம் சிங்கியை வாசிக்கிறோம்? இரவும் பகலும் ஒருவன் விடாமல் தங்கத்தால் மெருகேற்றிய சிங்கியையும் மிருதங்கத்தையும் மிக மிக அற்புதமாக வாசித்துக் கொண்டிருக்கலாம். அதே சமயம் இன்னொரு இடத்தில் தனிமையாக ஒருவன் மிருதங்கமோ சிங்கியோ இல்லாமல் உட்கார்ந்து கொண்டு நாமங்களை ஜெபித்துக் கொண்டிருக்கிறான்.

*குருதேவா! கிருபா பிந்து தியா கோரோ எயி தாஸே*
*த்ருனாபெகா அதி ஹீனா*
*சகல சஹனே பல தியா கோரோ*
*நிஜ மானே ஸ்ப்ருஹ ஹீனா*
*சகலே சம்மான கொரிதே சகதி*
*தேஹோ நாதா! ஜதாஜத*
*தபே தோ கைபோ ஹரி நாம சுகே*
*அபராத ஹபே ஹதா* --- *(சரணாகதி)*

"குருதேவா! தயவு செய்து உம் கருணையில் ஒரு சிறு துளியை இந்தச் சேவகனுக்கு அளிக்க வேண்டும். அது என்னை ஒரு துரும்பை விடவும் கீழாக எண்ண வைக்கும். எந்த விதமான துன்பங்களையும் தாங்கும் சக்தியை அளிக்க வேண்டும். என் பெயர், புகழ் அனைத்து ஆசைகளையும் ஒழிக்க வேண்டும். நான் எப்போது எல்லா ஜீவன் களுக்கும் முறையாக மதிப்பு அளிக்கிறேனோ, அப்போது தான் என் அபராதங்கள் அனைத்தும் நிற்கும். அதன் பின் என்னால் ஹரி நாமத்தை மிகவும் ஆனந்தமாகப் பாட முடியும்."

இவ்வாறு மிகவும் ஆழ்ந்த உணர்வுடன் அந்த பக்தன் பாடு கிறான். உடல் நடுக்கமுண்டாக, கண்களிலிருந்து கண்ணீர் தாரையாகப் பாய்கிறது. இங்கே, மிருதங்கத்தையும் சிங்கியையும் வாசிக்கும் பக்தர்களின் ஆனந்தத்துக்கும், தனியாக அமர்ந்து இவ்வாறு பக்தி உணர்ச்சியில் உருகிப் பாடும் பக்தனின் ஆனந்தத்துக்கும்

வித்தியாசம் உள்ளதா என்று நாம் பார்க்க வேண்டும். உண்மையில் வித்தியாசம் உள்ளது. தனியாக அமர்ந்து நாமங்களை ஜெபிக்கும் பக்தன் புரிவது உண்மையான கீர்த்தனை. ஆனால் மிருதங்கத்தையும் சிங்கியையும் மிகவும் அழகாக மற்ற பக்தன் வாசித்தாலும் கூட அவற்றில் இப்படிப் பட்ட பக்தி ரஸ உணர்ச்சிகள் இல்லை. அது முழுவதுமாக வேறானது. எனவே கீர்த்தனையில் பக்தி பாவ உணர்ச்சிகள் மிகவும் முக்கியமானவை. மேலும், இவ்வாறு பஜனையில் உயர்வு தாழ்வு இருப்பது போல் அர்ச்சனையிலும் ஏற்றத் தாழ்வு உள்ளது. ஒருவன் சுத்தமான பக்தியுடன் அர்ச்சனை செய்கிறான். இன்னொருவன் அப்படிப்பட்ட உணர்வில்லாமல் அர்ச்சனை செய்கிறான். இன்னொருவனோ வைஷ்ணவர்களை இழியுமாறு பேசிக் கொண்டு விக்கிரகத்துக்கு அர்ச்சனை செய்கிறான். இவையெல்லாம் ஒன்றாகுமா? இல்லவேயில்லை!

ஆன்மீக உலகத்திலும் இதே போல் பகவானுக்குச் சேவைகள் செய்வதில் பக்தர்களிடம் உயர்வு தாழ்வுகள் உள்ளன. ஒரு பக்தன் பூக்களைப் பறித்துக் கொண்டு வருகிறான். இன்னொரு பக்தன் அவற்றை மாலையாகத் தொடுக்கிறான். இன்னொரு பக்தன் நைவேத்தியங்களைச் சமையல் செய்கிறான். இன்னொரு பக்தன் அதைப் படைக்கிறான். இவ்வாறு அங்கே உயர்வு தாழ்வு உள்ளது. சிலர் பகவானுக்குப் பக்கத்தில் நின்று சேவை செய்கிறார்கள். மற்றவர்களோ தூரத்திலிருந்து சேவை புரிகிறார்கள். பகவானின் பக்கத்திலிருந்து சேவை செய்யும் பக்தன், தூரத்திலிருந்து சேவை செய்யும் பக்தனைத் தாழ்வாக நினைத்தால் அது தவறு. ஒரு பக்தன் எந்த விதமான பக்தி பாவத்துடன் சேவை செய்கிறான் என்பதே முக்கியம்.

ஸ்ரீ சைதன்ய மகாபிரபுவின் சேவகனாக கோவிந்த தாஸா, ஸ்ரீ சொரூப தாமோதரையும் ஸ்ரீ ராமானந்தரையும் வெறும் தூரத்தில் நின்று சேவகம் செய்யும் பக்தர்களாக எண்ணலாம். இவர்கள் வந்து சில நிமிடங்களோ ஒரு மணி நேரமோ சைதன்ய மகாபிரபுவுடன் பேசி அவரை அழ வைத்து விடுகின்றனர் என்று எண்ணலாம். கோவிந்த தாஸாவே சைதன்ய மகாபிரபுவின் கண்ணீரைத் துடைத்து விடுவார். ஆனால் அவர்கள் திரும்பத் திரும்ப வந்து மகாபிரபுவை மேன் மேலும் அழ வைத்து விடுவார்கள். எனவே கோவிந்த தாஸா, "இவர்கள் ஏன் திரும்பத் திரும்ப வந்து மகாபிரபுவை அழ வைக்கின்றனர்" என்று எண்ணலாம்.

கோவிந்த தாஸா மகாபிரபுவிடம், "ஓ பிரபு, தயவு செய்து அழாதீர்கள்" என்று எப்போதும் கூறுவார். ஆனால் சொரூப தாமோதர் திரும்பவும் வந்து மகாபிரபுவை அழ வைத்து விடுவார். அப்போது கோவிந்த தாஸா என்ன நினைப்பார்? எனவே, நெருங்கி சேவகம்

செய்யும் சேவகன் உயர்ந்தவன் என்று கூற முடியாது. இங்கே, மகா பிரபுவுக்குத் தூரத்திலிருந்து சேவகம் செய்தவர்கள் உயர்ந்தவர்களாக இருக்கிறார்கள். நாம் இப்படி எல்லாவற்றையும் ஆராய்ந்து உணர வேண்டும். எவ்வளவு தூரத்திலிருந்து நாம் சேவகம் புரிகிறோம் என்பது முக்கியமானதல்ல. மாறாக, நமது இதயம் எவ்வளவு பக்கத்தில் அல்லது தூரத்தில் உள்ளது என்பதே முக்கியம். அவ்வாறு நாம் இதயத்தில் அளவற்ற அன்புடன் ஸ்ரீ ஹரிக்கும், குருவுக்கும், வைஷ்ணவர்களுக்கும் புரியும் சேவை தான் மிக மிக உயர்ந்தது.

சனத் குமாரர்களான நான்கு குமாரர்களும் வைகுந்தத்தை அடைந்த போது, வாயிற்காவலர்களான ஜெயாவும் விஜயாவும் தங்கள் கம்புகளை உயர்த்தியவாறு, "நீங்கள் இங்கே நுழைய முடியாது" என்று தடுத்தார்கள். தாங்கள் இருவருமே அங்கு எஜமானர்கள் என்ற எண்ணத்துடன் அவர்கள் நான்கு குமாரர்களையும் உள்ளே விடாமல் தடுத்து விட்டனர். எவ்வளவு தூர இடத்திலிருந்து இந்த நான்கு குமாரர்களும் வந்திருக்கிறார்கள் என்பதையும், அவர்களுக்கு எப்போது பகவான் ஓய்வெடுப்பார் என்பதெல்லாம் தெரியாது என்று இந்த வாயிற் காவலர்களுக்குப் புரிய வேண்டாமா? ஆனால் அந்த நான்கு குமாரர்களுக்கோ எல்லாமே தெரியும். அனைத்தையும் தெரியும் சக்தியிருந்தும் அவர்கள் கூப்பிய கரங்களுடனும் அடக்கமுடனும் வந்திருந்தனர். ஜெயாவுக்கும் விஜயாவுக்கும், பகவானின் மேல் சனத் குமாரர்களுக்கு எவ்வளவு தூரம் பிரேம பக்தி இருந்தது என்பது தெரியவேயில்லை. இப்படி, தூரத்தில் இருந்தும் பகவானின் மேல் மிகுந்த பக்தி வைத்திருப்பதை நாம் சில சமயங்களில் மட்டுமா பார்க்கிறோம்? இல்லை. மாறாக, இது தான் பெரும் பான்மையான சமயங்களில் நடக்கிறது.

பகவான் அல்லது குருதேவரின் பக்கத்திலிருந்து சேவை செய்பவர்களால் தூரத்திலிருந்து சேவை செய்யும் பக்தர்களின் பக்தி பாவங்களை அறிய முடிவதில்லை. எனவே நம்மை நாம் உயர்வாக எண்ணுவதில் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். ஜெயாவுக்கும் விஜயாவுக்கும் நடந்த பெரும் துர்ப்பாக்கியத்தை நாம் ஞாபகத்தில் கொண்டு தற்பெருமை கொள்ளாமல் அடக்கத்துடன் நடந்து கொள்ள வேண்டும். பொதுவாக இப்படிப்பட்ட உபதேசங்களை சாதன பக்தி நிலையிலிருக்கும் ஒரு சாதகனுக்குத் தான் போதிப்பார்கள். ஆனால் இந்த நிலை ஒரு பக்தன் பூரண நிலையில் இருக்கும் போது கூட நேர வாய்ப்புள்ளது. இந்தச் சம்பவம் வைகுந்தத்தில் வைத்து நடந்ததென்றாலும் அது ஒரு சாதகனுக்குப் பாடம் கற்பிப்பதற்காக நிகழ்த்தப்பட்டதே. எந்த விதமான சூழ் நிலையிலும் கூட நாம் வைஷ்ணவர்களை அவமதிப்பதோ அவர்களைப் பற்றி அவதூறுகள் பேசுவதோ கூடாது.

ஸ்ரீ கிருஷ்ணருக்கு எத்தனை யெத்தனையோ நிரந்தரமான நெருங்கிய சகாக்கள் உள்ளனர். அவர்கள் ஒவ்வொருவருக்கும் தனித் தனியான சிறப்புக் குணங்கள் உள்ளன. மேலும் பகவானின் பற்பல அவதாரங்களுக்கும் மூல காரணங்களாக விளங்கும் அவரது சொரூபங்களும் நிறைய உள்ளன. அவர்களும் தனித் தனியாக நெருங்கிய சகாக்களையும் பக்தர்களையும் கொண்டுள்ளனர். ஆனால் ஸ்ரீ கிருஷ்ணரின் சகாக்களும் பக்தர்களும் மிகவும் சிறந்தவர்கள். அவர்கள் நரசிம்மர் மற்றும் அனைத்து அவதாரங்களின் பக்தர்களையும் விட மிகவும் மேலானவர்கள். மற்ற அவதாரங்களின் பக்தர்கள் அனைவரும் எப்போதும் கூப்பிய கரங்களுடனும் அடக்கத்துடனும் சேவை புரிவார்கள். ஆனால் கிருஷ்ண பக்தர்கள் அப்படியல்ல. அவர்கள் கிருஷ்ணரிடம் சில சமயம் சண்டை பிடித்தும், சில சமயங்களில் கோபம் கொண்டு சச்சரவு செய்தும் மிகவும் நெருக்கமாக இருப்பார்கள். அப்படிப்படட பக்தி பாவத்துடன் சேவை செய்வதால் இவர்கள் எல்லோரை விடவும் மிகவும் உயர்ந்தவர்கள்.

*வதந்தி கேசித் பகவான் ஹரி கிருஷ்ணஹ*
*சு சச் சித் ஆனந்த கனைக்க மூர்த்திஹி*
*ச யத் பரம் பிரம்ம பர து சர்வே*
*தத் பார்ஷதா பிரம்ம மயா விமுக்தாஹ்    -- (பிருகத் பாகவத்)*

சிலர் ஸ்ரீ கிருஷ்ணரும் அவரது அவதாரங்களும் தங்கள் ரஸா மற்றும் சக்திகளினால் வித்தியாசப் பட்டாலும், தத்துவத்தில் அவை அனைத்துமே ஒன்று தான் என்று கூறுவார்கள். அது சரி தான். அவர்களுடைய சகாக்களுக்குத் தனித் தனியான சிறப்புகள் உள்ளன. ஆனால் நாம் அவர்களில் சிலரைக் குறைந்தவராக எண்ண முடியுமா? ஒரு போதும் அவ்வாறு நினைக்காதீர்கள். அவர்கள் நித்திய சித்தாவாகவோ சாதன சித்த பக்தர்களாகவோ இருந்தாலும் அவர்கள் அனைவருமே பூரணமாக நிரந்தர முக்தியடைந்தவர்கள் என்று கூறப்பட்டுள்ளது. சிலர் ஸ்ரீ கிருஷ்ணரைப் பரப் பிரம்மம் என்று கூறுகிறார்கள்.

*ஈஸ்வர பரம கிருஷ்ண*
*சச்சிதானந்த விக்ரஹ*
*அனாதிர ஆதிர் கோவிந்த*
*சர்வ காரண காரணம் -- (பிரம்ம சம்ஹிதா)*

அவர்கள் கிருஷ்ணரைப் பரப் பிரம்மம் என்றும் அவரது நித்திய சகாக்களைப் பிரம்ம சொரூபம் என்றும் கூறுகிறார்கள். இவ்வாறு சாஸ்திரங்களில் சில இடங்களில் கூறப்பட்டுள்ளது. இது ஒரு வகையில் தப்பல்ல. பிரம்மானந்தம் என்றால் என்ன? ஜீவாத்மாவின் ஆனந்தம் பிரம்மானந்தம் என்று அழைக்கப் படுகிறது. எனவே ஜீவாத்மாக்கள்

பிரம்மம் என்று அழைக்கப்படுகிறது. ஆனால் இங்கே ஜீவாத்மாக்களைப் பரப்பிரம்மம் என்று அழைக்கவில்லை. பரப்பிரம்மம் கிருஷ்ணா. பிரம்மமும் பரப் பிரம்மமும் ஒன்று தான் என்று நாம் எடுக்க மாட்டோம். அவைகளைத் தனித் தனியாகவே எடுத்துக் கொள்வோம். ஜீவாத்மாக்களை நாம் "தா ஸோ அஸ்மி தாஸோ அஸ்மி" என்று தான் கொள்வோம். சாஸ்திரங்களில் "பிரம்ம ஏவம் பவதி" என்று குறிப்பிடப் பட்டுள்ளது. பகவத் கீதையில் "விஸதே தத் அனந்தரம்" என்று வருகிறது. இதே போல் தான் ஸ்ரீமத் பாகவதத்திலும் சுலோகங்களில் கூறப்பட்டுள்ளது. ஜெகன்னாத் பூரியில் சர்வ பௌம பட்டாசார்யா பிரம்ம வாதத்தைக் கடுமையாக வெறுத்தார். ஆனால் எல்லா விதமான பிரம்ம மோட்சமும் வெறுக்கத் தக்கதல்ல. பகவானின் கமலப் பாதங்களுக்குச் சேவை செய்வதையும் முக்தி என்று பொருள் கொள்ளலாம். ஆனால் சர்வ பௌமா முக்தி என்ற வார்த்தையையே இழிவாகக் கருதி வெறுத்தார். அதே போல் ஜீவாத்மாக்களைப் பிரம்மம் என்று கூறுவதையும் அறவே வெறுத்தார்.

*ப்ருஷ்டம் மயேதம் பகவான் தரா தலே*
*திஷ்தந்தி யாஹ் ஸ்ரீ ப்ரதிமா மகா பிரபோ*
*தஹ் சச்சித் ஆனந்த கனாஸ் தயா மதா*
*நீலாத்ரி நாதஹ புருஷோத்தமோ யதா*

*ஏகோ அபி பகவான் சான்ட்ர*
*சச் சித் ஆனந்த விக்கிரஹ*
*க்ருபயா தத்ர தத்ராஸ்தெ*
*த்ததட் ரூபேண லீலயா* (*பிருகத் பாகவத்*)

இந்த உலகத்தில் பகவானுக்கு ஏராளமான விக்கிரகங்கள் உள்ளன. பூரியில் ஜெகன்னாதர், பலதேவர் மற்றும் சுபத்ரா; ஸ்ரீ ரங்கத்தில் அரங்க நாதர்; இப்படிப் பற்பல இடங்களில் அவர்களை வழிபடுகிறார்கள். அங்கே பிரசாதம் சரியாக வெந்தோ வேகாமலோ இருந்தாலும் கூட அதைப் பற்றிக் கவலைப்படாமல் ஏற்றுக் கொள்வார்கள். இந்த விக்கிரகங்கள் அனைத்தும் உலக மக்களுக்குக் கருணையுடன் தரிசனம் அளிப்பதற்காக அமைக்கப்பட்டவை. எனவே கோப குமார், "பிரபோ, இந்த உலகத்தில் ஸ்ரீ ஜெகன்னாதர், ஸ்ரீ அரங்க நாதர் இப்படி நிறைய விக்கிரகங்கள் உள்ளன. அவர்களை நான் எந்தெந்த முறைகளில் வணங்கி மரியாதை அளிக்க வேண்டும்? அவை எல்லாமே சத் சித் ஆனந்த வடிவங்களா? இவர்களுக்கு நான் பஜனை செய்தால் அது பகவானுக்குப் பூஜை செய்வதற்குச் சமமா?" என்று கேட்டார்.

இந்த உலகத்தில் ஏராளமான விக்கிரகங்கள் உள்ளன. அவை அனைத்தும் சத் சித் ஆனந்தங்களே. பக்தர்களுக்குக் கருணை

செய்வதற்காகப் பகவான் எத்தனை யெத்தனையோ வடிவங்களில் தோன்றுகிறார். ஆனால் நம்மால் பகவானுக்கு நேரடியாகச் சேவை செய்ய முடிவதில்லை. நாம், இலக்சுமி தேவியார் ஸ்ரீ மன் நாராயணருக்குச் சேவோ செய்வது போலோ, அல்லது கோபியர்கள் ஸ்ரீ கிருஷ்ணருக்குச் சேவை செய்வது போலோ, அல்லது பிரகலாத மகாராஜா ஸ்ரீ நரசிம்ம பகவானுக்குச் சேவை செய்வது போலோ நேரடியாகச் சேவகம் செய்தால் என்ன ஆகும்? சிறிது நேரத்திலேயே நாம், "பிரபோ, நீங்கள் ஓய்வு எடுக்க வேண்டிய நேரம் தாண்டி விட்டது. பாதி இரவு நேரமும் நான் எந்த விதமான தூக்கமும் இல்லாமல் இருக்கிறேன். எனக்குத் தூக்கம் வருகிறது" என்று கூறுவோம். எனவே பகவான், "சரி சரி. நீ போய் தூங்கு" என்பார். பின் நாம் தூங்கச் செல்ல வேண்டும். விக்கிரகங்கள் பேசினால் என்ன ஆகும்? "என் கால்களைப் பிடித்து விடு. நீ சமைத்த நைவேத்தியம் சரியாக இல்லை. நீ இப்படிச் சமைக்க வேண்டும்" என்று விக்கிரகங்கள் தங்கள் ஆசைகளை வெளியிட்டால் நாம் வெகு சீக்கிரமே இலகுவாக சோர்ந்து போய் விடுவோம்.

நாம் நமது ஆசைக்குத் தகுந்தாற் போல் சேவை செய்ய விரும்புகிறோம். நம்மால் நமது குரு தேவருக்கே அவரது ஆசையின் படி சேவை செய்ய இயலவில்லை என்றால் பின் எவ்வாறு பகவானுக்கு நேரடியாகச் சேவை செய்ய முடியும்? பகவான் நம்மை நேரடியாகத் தன் முன்னால் அழைத்து, "நீ எனக்கு இந்தச் சேவையைச் செய்" என்று கேட்டால் நம்மால் அதைச் செய்ய முடியுமா? பகவான் நம்மிடம் எதுவும் எப்போதும் கேட்டுக் கொண்டிருந்தால் அவை அனைத்தையும் நம்மால் செய்து கொடுக்க முடியுமா? நம்மால் முடியாது. எனவே தான் விக்கிரகம் எதுவுமே பேசாமல் அமைதியாக இருக்கிறது. நாம் எந்த விதமான சேவை செய்தாலும் விக்கிரகம் அமைதியாகவே இருக்கிறது. எனவே பக்தர்களுக்குக் கருணையை வழங்குவதற்காக பகவான் இப்படி விதம் விதமான வடிவங்களில் தோன்றியுள்ளார். மாயையில் விழுந்து கிடக்கும் இந்த நிலையில் நம்மால் வேறு எந்த விதத்திலும் சேவை செய்ய முடியாது என்பதை அவர் நன்றாக அறிந்திருப்பதால் தான் விக்கிரகமாக நமக்கு தோன்றி, பேசாமல் நாம் அளிக்கும் வழிபாடுகளை ஏற்றுக் கொள்கிறார். இந்தக் காரணத்துக்காகத் தான் அவர் இந்த விக்கிரகங்களாகத் தோன்றியுள்ளார்.

ஜீவாத்மாக்களுக்கு விதம் விதமான ருசிகள் உள்ளன. ஜீவாத்மாக்கள் தத்தம் ருசிகளுக்குத் தகுந்தவாறு புரியும் சேவகங்களை ஏற்றுக் கொள்வதற்காக வித்தியாசமான உருவங்களை பகவான் எடுத்துள்ளார். சிலர் தாஸ்ய பாவத்துடனும், சிலர் சக்கிய பாவத்துடனும், மற்றும் சிலர் வத்ஸல்ய பாவத்துடனும் சேவை செய்கிறார்கள். ஸ்ரீ கிருஷ்ணர் ஏன் லட்டு கோபாலாகத் தோன்றுகிறார்? காரணம் எத்தனையோ பேர் அவரைத் தத்தம்

மைந்தனாகக் கொண்டு வழிபடலாம். ஒரு பெண் நன்றாக வயதாகி, தன் குழந்தைகள் அனைவரும் வளர்ந்து பெரியவர்களாக ஆகிய பின்னரும் கூட, பெற்றோர் என்ற ஸ்தானத்திலிருந்து சேவை செய்ய வேண்டும் என்ற ஆசை உள்ளது. பெண்கள் குறிப்பாகத் தங்கள் கணவர்களை விடவும் குழந்தைகளைத் தான் அதிகமாகக் கவனிப்பார்கள். அதனால் சில சமயங்களில் தங்கள் கணவர்களையே மறந்து விடுவார்கள். அது மட்டுமல்லாமல், கணவர்களையும் கூட குழந்தைகளுக்கு சேவை செய்ய ஏவி விடுவார்கள். ஒரு மனைவி தன் கணவனிடம், "என்னுடன் வந்து கொஞ்சம் குழந்தைகளுக்கு உதவி செய்யுங்கள். இந்த குழந்தையை கொஞ்சம் பிடித்துக் கொள்ளுங்கள். அந்தப் பாலை இங்கே கொண்டு வாருங்கள். குழந்தைக்கு உடம்பு சரியில்லை. மருத்துவரிடம் எடுத்துச் செல்லுங்கள். குழந்தையைப் பள்ளிக் கூடத்தில் கொண்டு விட்டு விட்டு வாருங்கள்" என்றெல்லாம் கூறுவாள். குழந்தைகளுக்குச் சேவை புரிவது வத்ஸல்ய பாவா. எனவே அவர்களுக்கு கிருஷ்ணர் லட்டு கோபாலாகத் தோன்றுகிறார்.

இதே போல் மற்றவர்களுக்கும் அவர் வித்தியாசமான உருவங்களில் தோன்றுகிறார். ஆனால் எல்லா விக்கிரகங்களுமே நிரந்தரமான வைகள். தன் பக்தர்களிடமிருந்து சேவைகளைப் பெறுவதற்காக கிருஷ்ணர் விதம் விதமான விக்கிரகங்களாகத் தோன்றுகிறார். விக்கிரகங்களாகத் தோன்றும் போது அவர் பேசுவதில்லை. அவர் பேசினால் நம்மால் சேவை செய்ய இயலாது. நடு இரவில் குளிர் உண்டாகி, அவர் நம்மிடம் இரண்டோ மூன்றோ மணி ஆகியிருக்கும் அதிகாலை வேளையில் சேவை எதுவும் கேட்டால் சேவகனோ நன்றாகத் தூங்கிக் கொண்டு இருப்பான். அப்போது இப்படி அவர் தன் ஆசைகளை வெளிப்படுத்தினால் என்ன ஆகும்? எனவே அவர் எதுவுமே பேசாமல் நமது சேவைகளை ஏற்றுக் கொண்டிருக்கிறார்.

ஆனால் அதே சமயம், 'விக்கிரகங்களுக்கு எதுவுமே தெரியாது; எனவே தான் அவை எதுவுமே பேசாமல் இருக்கின்றன' என்று எண்ணினால் அது அபராதமாகி விடும்! விக்கிரகம் பேசவோ நகரவோ செய்யாமலிருந்தாலும் எல்லாவற்றையும் அவர் பார்க்கிறார். நாம் எதை எப்படிச் செய்கிறோம் என்பதை உண்மையாக அறிவார். அவற்றின் பிரதி பலனையும் நாம் தான் ஏற்றும் ஆக வேண்டும். எனவே தாக்கூர்ஜியின் முன்னால் நாம் கால்களை நீட்டவோ, அளவின்றிப் பேசவோ, மற்றவர்களிடம் கோபப்படுவதோ, மற்றவர்களின் மேல் தேவையின்றி அன்பு காட்டுவதோ கூடாது. தாக்கூர்ஜியின் முன்னால் வேறு எவருக்கும் வணக்கங்களைச் செலுத்துவதோ, சத்தமாகப் பேசுவதோ கூடாது. இவற்றில் நாம் மிக மிக ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். பூஜை அறையில் வைத்துச் சண்டை பிடுப்பதோ, தர்க்கங்கள் அல்லது குறைகள் கூறுவதோ, அசுத்தமான மனத்துடன்

பூஜாரி பூஜை செய்வதோ - இவையெல்லாம் அபராதங்களை விளைவிக்கும். ஆனால் தாக்கூர்ஜியோ அமைதியாக இருக்கிறார். நாமோ அவர் எதையுமே பார்க்கவில்லை என்று நினைக்கிறோம். ஆனால் தாக்கூர்ஜி மிகவும் கருணையுள்ளவர். சில சமயங்களில் தன் பக்தர்களின் குறைகளை மறந்து விடுகிறார்.

ஒருவன் மற்ற விதங்களான சாதகங்களை விட்டு விட்டு விக்கிரக மூர்த்திக்கு அர்ச்சனை செய்து வழிபாடு நடத்தினால் அது அவனுக்கு மிகவும் நன்மை பயக்கும். ஆனால் கோப குமார், பூஜை வழிபாடுகளுக்கெல்லாம் மூல அதிபதியான நாரதரிடம், "பிரபோ, சாஸ்திரங்களில் சில இடங்களில், விக்கிரகங்களுக்கு அர்ச்சனை செய்யும் சிலர், பக்தர்களை அவமதிப்பதைப் பற்றியும் எழுதப்பட்டுள்ளதே" என்று கேட்டார்.

*அர்ச்சாயாம் ஏவ ஹரயே*
*பூஜாம் யாஹ் ச்ரத்தயே ஹதே*
*ந தத் - பக் தேஷு சான் யே ஷு*
*ஸ பக்தஹ் ப்ராக்ருதஹ் ஸ்மிருத்தஹ.... (ஸ்ரீமத் பாகவதம் )*

"ஒரு பக்தன்  விக்கிரக வடிவமான பகவானுக்குக் கோயிலில் மிகவும் மரியாதையுடனும் நம்பிக்கையுடனும் வழிபட்டாலும் அவன் பக்தர்களை அவமதித்தால் அவனை லௌகிய பக்தன் என்றே அறிய வேண்டும். அவன் எல்லா பக்தர்களிலும் கீழ்த்தரமானவன்."

*யோ மாம் ஸர்வேஷு பூத்தேஷு*
*ஸந்தம் ஆத்மானம் ஈஸ்வரம்*
*ஹித் வார்ச்சம் பஜதே மௌத்யாத்*
*பஸ்மனி ஏவ ஜுஹோதி ஸஹ ... (ஸ்ரீமத் பாகவதம்)*

"ஒருவன் கோயிலில் விக்கிரக வழிபாடு செய்து வந்தாலும், பகவானின் வடிவமான பரமாத்மா அனைத்து ஜீவாத்மாக்களின் இதயங்களிலும் வீற்றிருக்கிறார் என்பதை அறியாமலிருந்தால் அவன் முட்டாள். அவனை, நெய்யை வீணாக்கப் குப்பையில் விட்டு ஆகமம் செய்யும் ஒருவனைப் போல் கருத வேண்டும்.

ஒவ்வொரு ஜீவாத்மாவின் இதயத்திலும் ஸ்ரீ கிருஷ்ணர் வீற்றிருக்கிறார். பகவான் இல்லாத ஜீவாத்மா கிடையவே கிடையாது. ஆனால் நாரத முனிவர் தானே எழுதிய பஞ்ச ரத்ரா என்ற பக்தி சூத்திரம் மற்றும் பற்பல சாஸ்திரங்களில், விக்கிரகங்களைக் கோயில்களில் வழிபடுபவர்கள் சிலர் மற்ற ஜீவன்களை அவமதித்தும், வைஷ்ணவர்களை நிந்தித்தும் பூஜைகளை நடத்துவதைப் பற்றி எழுதப் பட்டுள்ளது. அவர்கள் மிக மிகக் கண்டிப்பானவர்கள். உதாரணமாக

ஒரு மாம்பழத்தைத் தவறுதலாக வேண்டாத இடத்தில் வைத்திருந் தாலோ, மற்றவர்கள் எவரும் அதைக் கண்டு அதை ருசிக்க வேண்டும் என்ற ஆசை கொண்டாலோ அதைப் பூஜைக்கு உபயோகப் படுத்தக் கூடாதென்று உடனே தூர எறிந்து விடுவார்கள். அர்ச்சனைக்கு நைவேத்தியம் சமைக்கும் போது முகத்தில் துணியால் கட்டிக் கொள்வார்கள். மாவு பிசையும் போது எதுவுமே பேச மாட்டார்கள். இவ்வாறு எல்லா விதிமுறைகளையும் தவறாமல் கடைப் பிடிக்கிறார்கள். ஆனால் பக்தர்களை அவர்கள் அவமதிக்கிறார்கள். பக்தர்களை மேல் ஜாதி கீழ் ஜாதி என்று பிரிக்கிறார்கள். இப்படிப் பட்டவர்கள் விக்கிரகங்களுக்குப் படைப்பதைத் தான் நெய்யை குப்பையில் இடுவதற்கு ஒப்பிடப் பட்டுள்ளது. ஸ்ரீமத் பாகவதத்தில் மேலும் வருகிறது:

*அஹம் உச்சாவச்சிர் த்ரவ்யை*
*கிரியயோத் பன்னயானகே*
*நைவ துஸ்யே அர்ச்சித்தோ அர்ச்சாயாம்*
*பூத கிராமாவமானினஹ ... (ஸ்ரீமத் பாகவதம்)*

கபிலதேவர் கூறுகிறார், "ஓ குற்றமற்ற அன்னையே, ஒருவன் என் விக்கிரகத்தை முறை தவறாமல் விதம் விதமான பொருட்களுடன் செவ்வனே வழிப்பட்டாலும் கூட, அனைத்து ஜீவ ராசிகளிலும் நான் உறைந்திருக்கிறேன் என்பதை அவன் அறியாதவனாக இருந்தால் அவனது வழிபாட்டில் நான் திருப்திப் படுவதில்லை."

அனைத்து ஜீவாத்மாக்களும் பகவானின் இருப்பிடம். இங்கே குறிப்பாகப் பக்தர்களுக்காகப் பேசப்பட்டுள்ளது. பகவானுக்கு முழுக்கவும் பஜனை செய்யும் எவனும் மற்ற ஜீவாத்மாக்களை ஒருபோதும் அவமதிக்கக் கூடாது. நாம் மற்றவர்களை யெல்லாம் நிந்தனை செய்து கொண்டு அதே சமயம் அர்ச்சனையையும் மிக அழகாகச் செய்கிறோம். நாம் வைஷ்ணவர்களுக்குச் செலுத்த வேண்டிய அத்தனை மரியாதைகளையும் அளித்தாலும் கூட பகவான் திருப்திப் படுவதில்லை. ஏனென்றால் நாம் "எல்லா" ஜீவன்களுக்கும் மரியாதை அளிக்காததால் அதில் இன்னமும் அபராதம் இருக்கத் தான் செய்கிறது. பிரத்திமா-மந்த-புத்தினாம்: அற்ப புத்தியுள்ளவர்கள் இப்படிப்பட்ட அர்ச்சன பூஜையை செய்கிறார்கள்.

*அர்ச்யே விஷ்ணவ் சிலா-தீர் குரு ஷு*
*நரமத்திர் வைஷ்ணவே ஜாதி புத்தி*
*விஷ்ணோர்வ வைஷ்ணவானாம் கலிமல*
*மதனே பாத தீர்த்த அம்பு புத்திஹி*

சிலர் பகவான் விக்கிரகத்திலும் இருக்கிறார் என்று

நம்புகிறார்கள். ஆம், அனைத்து வஸ்துக்களிலும் பகவான் உள்ளார். சிலவற்றில் உயர்ந்த அளவிலும் சிலவற்றில் குறைந்த அளவிலும் உள்ளார். ஆனால் விக்கிரக சிலை 'சாக்சாத் பகவான்' என்பதை அவர்கள் நம்புவதில்லை. கலியின் உக்கிரத்தைத் தூரத்தில் துரத்தும் பகவானின் சரணாம்ருதத்தைச் சாதாரணமான நீர் என்றும் அவர்கள் எண்ணுகிறார்கள். அது மட்டுமல்லாமல், அர்ச்சனையின் ஒரே நோக்கமான விக்கிரகங்களை, சிலவற்றை இரண்டந்தரப் பளிங்குக் கற்களால் செய்யப் பட்டதாகவும், மற்றும் சிலவற்றை முதல் தரப் பளிங்குக் கற்களால் செய்யப்பட்டதாகவும் கூட கூறுகின்றனர். "ஓ, கோவர்த்தனில் இருக்கும் விக்கிரகம் மிகவும் அழகாக உள்ளது. ஆனால் பிருந்தாவனத்திலுள்ள கோயில்களில் இருக்கும் விக்கிரகங்கள் பார்க்க அவ்வளவு அழகாக இல்லை. இங்கே கிருஷ்ணரின் மூக்கு கொஞ்சம் நேராக உள்ளது. கண்கள் கொஞ்சம் அகலமாக உள்ளன. இது மிகவும் நன்றாக உள்ளது" என்று எண்ணுவார்கள். இப்படி நினைக்கும் ஜனங்களிடமிருந்து பகவான் ஒருபோதும் பூஜையை ஏற்றுக் கொள்வதில்லை.

மற்றும் அவர்கள், வைஷ்ணவர்களின் காலடித் தூசியைச் சாதாரணமானதாக நினைக்கின்றனர். அவர்களுடைய கால்களைக் கழுவிய நீரையும் சாதாரணமான நீர் என்றே நினைக்கின்றனர். புண்ணியத் தலங்களிலும் அங்கேயுள்ளப் புண்ணிய தீர்த்தங்களிலும் நிறைந்த நம்பிக்கை இருந்தாலும் வைஷ்ணவர்களின் சரணாம்ருதாவில் அவர்களுக்கு அந்த அளவு நம்பிக்கை இருப்பதில்லை. தோலையும் இரத்தத்தையும் கொண்டு அழிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் உடம்பில் அவர்கள் நம்பிக்கையை வைத்துள்ளனர். ஒவ்வொரு விதமான உடம்பின் உள்ளும் ஆத்மா உள்ளது. ஆனால் அந்த ஆத்மா பகவானின் ஒரு அம்சம் என்பதை அறியாமல் இருக்கிறார்கள். இந்த ஆத்மா ஒரு பூத உடலினுள் கட்டுண்டு கிடக்கிறது என்பது முக்கியமல்ல. ஆத்மாவின் இயற்கையான சொரூபம் பகவானின் சேவகன்! எனவே ஒவ்வொரு ஆத்மாவுக்கும் மரியாதை அளிக்க வேண்டும். மரியாதைகள் தகுதியைப் பொறுத்து விதம் விதமான வகைகளில் அளிக்கப் படுகின்றன.

எனவே நாம் யாருக்கு எந்த விதமான மரியாதைகளை அளிக்க வேண்டும் என்றும் அறிந்திருக்க வேண்டும். அவ்வாறு தகுந்தவாறு மரியாதையை ஒருவன் அளிக்க வில்லை யென்றால் என்ன ஆகும்? "ஸ ஏவ கோ- கரஹ" (ஸ்ரீமத் பாகவதம் 10.84.13) . கோ என்றால் மிருகம். கரஹ என்றால் கழுதை. இங்கே "கோ" என்றால் பசு என்று அர்த்தம் எடுக்கக் கூடாது. பசு புனிதமானது. இங்கே அர்த்தம் என்னவென்றால் அவன் விலங்கை விடவும் உயர்ந்தவனல்ல என்றும், கழுதையை விடவும் முட்டாள் என்றும் கூறப்பட்டுள்ளது.

எனவே கோபகுமார் நாரத முனிவரிடம், "பிரபோ, ஏன் இப்படி சாஸ்திரங்கிளில் எழுதப்பட்டுள்ளன? தயவு செய்து இதை எனக்கு விளக்க வேண்டும். விக்கிரகங்களை வழிபாடு செய்பவர்கள் சிலரை இவ்வாறு கீழ்த்தரமாகக் குறிக்கப் பட்டுள்ளது. ஆனால் அர்ச்சனை செய்பவர்கள் மிகவும் அதிர்ஷ்டமானவர்கள் என்றும் தாங்கள் கூறினீர்கள்" என்று கேட்டார்.

இதை ஒரு சாதாரணமான மனிதன் சரியாகப் பொருத்தம் செய்து அறிய முடியாது. கேவலம் ஒரு ஆரம்ப நிலையிலிருக்கும் மத்தியம அதிகாரியால் கூட இதை இணக்கமாகப் பொருத்தி அறிய முடியாது. சாஸ்திரங்களை மிகவும் நன்றாக அறிந்து, குருதேவரின் கருணையைப் பெற்ற ஒரு நடு அல்லது உயர்ந்த நிலையிலிருக்கும் மத்தியம அதிகாரியால் மட்டுமே இதை உண்மையில் உணர முடியும். இதை, ஆகம பூஜை முறைகளுக்கெல்லாம் மூல அதிபதியானவரும், பூஜை முறைகளையெல்லாம் உபதேசிப்பவரும், ஒரு உயர்ந்த குருவாகவும் விளங்கும் நாரத முனிவரைத் தவிர வேறு யார் தான் இந்தத் தத்துவத்தை அதிகமாக அறிந்திருக்க முடியும்?

# அத்தியாயம் - 11

அர்ச்சன பூஜையைப் பற்றிக் கோபகுமார் கேட்டதில் நாரத முனிவர் பேரானந்தம் அடைந்து உடனே கோபகுமாரைத் தழுவி அணைத்துக் கொண்டார். ஏன் அவர் கட்டிப் பிடித்து அணைத்தார்? இந்த விஷயத்தில் நமக்கும் சில சந்தேகங்கள் உள்ளன. உங்களிடம் ஒருவர், "ஓ, இந்த விக்கிரகம் உண்மையான பளிங்குக் கல்லினால் செய்ததா அல்லது போலியான பளிங்கா?" என்று கேட்டால் நீங்கள் அந்த நபரிடம் மகிழ்வு கொண்டு தழுவி அணைப்பீர்களா? மாறாக, "இந்த மனிதனைப் பார்ப்பதே பெரிய பாவம்" என்று எண்ணுவீர்கள். ஆனால் வைகுந்தத்தில் அப்படிப்பட்ட சந்தேகங்களுக்கு இடமே கிடையாது. அங்கே இப்படிப்பட்ட சர்ச்சைகளே வராது என்பதால் கோபகுமார் இப்படி ஒரு சொந்த வினாவைக் கேட்க வேண்டியதே யில்லை. ஆனால் பக்தி சாதகங்களின் விதிகளைக் கடைப்பிடித்துச் செல்லும் நமக்காகவே அவர் இந்த வினாவைக் கேட்டார். அவருக்கு உண்மையில் சந்தேகம் எதுவுமில்லை. ஆனால் நம்மிடம் சந்தேகம் உள்ளது. எனவே அவர் நமது நன்மைக்காகவே இதைக் கேட்டார். கோபகுமார் இப்படி ஒரு வினாவை மற்றவர்களுக்காகக் கேட்டதை நாரதர் உணர்ந்ததால் தான் அவர் மிகவும் மகிழ்ச்சி கொண்டு கோபகுமாரைத் தழுவிக் கொண்டு, பின் மெதுவாகப் பதிலை அளிக்க ஆரம்பித்தார்.

நாரதர் கூறினார், "விக்கிரகம் நேரடியாக சாட்சாத் பகவானே தான். அரங்கநாதர் விக்கிரகம், பந்தர் பூரிலுள்ள விட்டலின் விக்கிரகம், வெங்கடேஸ்வரரின் விக்கிரகம், பூரியிலுள்ள ஜகன்னாதர், மாயாபூரிலுள்ள விக்கிரகங்கள், பிருந்தாவனத்திலிருக்கும் ஸ்ரீ

விக்கிரகங்களான கோவிந்தா, கோபி நாதா மற்றும் மதன மோகன் - இப்படி அனைத்தும் நேரடியாக பகவானே தான். சில சமயங்களில் இந்த விக்கிரகங்கள், "என் மூக்கின் ஒரு பக்கத்தில் ஒரு சிறு துவாரம் உள்ளது. அதில் எனக்கு ஒரு ஆபரணத்தைப் போடு. நீ எனக்கு நைவேத்தியம் ஊட்டிய பின் என்னைக் கொஞ்சம் வெளியேத் தூக்கிக் கொண்டு செல். நான் எங்குமே போக முடியாமல் இருக்கிறேன்" என்றெல்லாம் கேட்கும். ஆனால் அந்த பக்தனோ, "விக்கிரகம் பேசவோ நகரவோ செய்யாது. அப்படியென்றால் ஏன் இப்படிப் பேசுகிறது? விக்கிரகத்தினால் பேச முடியுமானால் பின் ஏன் அதனால் நகர முடியாது? எனவே நான் கவலைப்படவேத் தேவையில்லை" என்று நினைப்பான். இப்படிப் பட்ட லீலைகளை விக்கிரகங்கள் நிஜமாகவேச் செய்துள்ளன. சில சமயங்களில் அது ஆபரணங்கள் வேண்டுமென்று கேட்கும். மற்றும் சில சமயங்களில் அவை இரவில் பக்தர்களின் கனவில் வந்து அவர்களுடன் பேசும். ஜகன்னாத் பூரியில் சில சமயங்களில் கீத கோவிந்த கீர்த்தனைகள் நடக்கும் போது, தன் துணிகளையும் கிழித்துக் கொண்டு விக்கிரகங்கள் ஓடி வெளியில் வந்து கீர்த்தனையில் சேர்ந்து கொள்ளும். இவையெல்லாம் சாதாரணமான விஷயங்களா? எனவே ஒருவன் விக்கிரகங்களைப் பற்றி வெறும் சாதாரணமான ஜனங்கள் அறிந்து கொண்டிருப்பதை எல்லாம் விட்டெறிய வேண்டும். விக்கிரகங்கள் நேரடியாக பகவானே தான்!

"மற்றும், "இந்த விக்கிரகம் பழையது" அல்லது "இந்த விக்கிரகம் புதியது", அல்லது "இதை நாங்களாகவே உண்டு பண்ணினோம்" என்று சொல்வதில் எவ்வளவு உண்மையுள்ளது? கோவர்த்தனத்திலிருந்து கிரிராஜாவைக் கொண்டு வந்தோ அல்லது சாலக் கிரமச் சிலையை வேறு எங்கேயிமிருந்து கொண்டு வந்தோ பகவானை நாம் அந்த வடிவத்தில் வழிபடலாம். அல்லது நாம் நம் வீட்டிலேயே உலோகங்களால் மூர்த்தியை உண்டு பண்ணி, அந்த மூர்த்தியை வழிபடும் போது இதயத்தில் மிகுந்த ஆனந்தம் உண்டாகிறது. இவ்வாறு ஒருவன் விக்கிரக வழிபாட்டை மிகவும் நம்பிக்கையுடன் செய்து அதன் பின் வர்ணாஸ்ரம தர்மத்தை விட்டால் கூட எந்தக் கெடுதலும் இல்லை. நாம் வெறும் சாதாரண மக்கள் விக்கிரக வழிபாட்டைப் பற்றி நினைப்பது போல் ஒரு போதும் நினைக்கக் கூடாது. ஏனென்றால் விக்கிரம் பகவானே தான்.

பாங்கி-பிஹாரி என்ற (பிருந்தாவனத்திலிருக்கும்) விக்கிரகத்தை எவருமே உண்டு பண்ணவில்லை. தானாகவே உண்டாகிய விக்கிரகம் அது. மற்றவைகள் பக்தர்களால் உண்டு பண்ணப் பட்டவை. ஶ்ரீல சனாதன கோஸ்வாமி மதன மோகன விக்கிரகத்தை உண்டு பண்ணினார், ஶ்ரீல ரூப கோஸ்வாமி கோவிந்தாஜியையும் தாமோதரரையும் உண்டு பண்ணினார், ஶ்ரீ மது பண்டிதர் என்பவர் கோபிநாத்தை உண்டு பண்ணினார். இவ்வாறு சில

விக்கிரகங்கள் தானாகவும் மற்றவை மகாபெரும் பக்தர்களாலும் உண்டாக்கப் பட்டவை. இதைப் பற்றிய விஷயத்தில் எந்த ஒரு சந்தேகமும் இல்லை. ஆனால் மிகவும் சிரத்தையுடன் நீயும் எங்கிருந்தும் விக்கிரகத்தைக் கொண்டு வந்து அதை முறையான மந்திரங்களாலும் அபிஷேகங்களாலும் ஸ்தாபனம் செய்து வழிபட்டால் உனக்கும் மிக உயர்ந்த பக்தி உண்டாகும். இந்த முறையில் எந்த விதமானக் குற்றமும் கிடையாது.

*ந பதித்யாதி தோஷஹ ஸ்யாத்*
*குண ஏவ மகான் மதஹ*
*சேவோத்தமா மதா பக்திஹி*
*பலம் யா பரமம் மஹத் --- (பிருகத் பாகவத் 2.4.209)*

பூஜை வழிபாட்டில் ஒரு பெரும் மகிமை உள்ளது. இந்த சேவையின் மூலம் ஒருவன் உச்ச நிலையான பக்தியை அடைய முடியும். ஒருவன் பாகவத - பக்தியைப் பெற வேண்டி உண்மையிலேயே மிகவும் சிரத்தையின் காரணமாக தன் விதிக்கப் பட்ட வர்ணாஸ்ரம தர்மத்தையும் கூட விட்டு விட்டுப் பூஜையில் ஈடுபட்டு, பின்னர் இந்தப் பிறவியில் அந்தப் பஜனையும் பக்தியும் நின்று விட்டாலும் கூட அவனுக்கு என்ன நஷ்டம்? பதிலாக அவன் தன் வர்ணாஸ்ரம தர்மங்களை வாழ்நாள் முழுவதுமாகக் கடைப் பிடித்தாலும், பகவானுக்கு பஜனை எதுவுமே செய்யாமலிருந்தால் அவன் என்ன இலாபத்தைப் பெறுகிறான்? வாழ்நாள் முழுவதும் அவன் வர்ணாஸ்ரம தர்மங்களான தாய் தந்தையைப் பேணுதல், குடும்பத்துக்கும் குருவுக்கும் சேவை செய்தல், தான தர்மங்கள் தக்ஷிணைகள் கொடுத்தல், புனித தீர்த்தங்களில் குளித்தல் இப்படி எல்லாவற்றையும் செவ்வனே செய்தாலும் கூட, அவன் பஜனையில் ஈடுபடவில்லையென்றால் என்ன இலாபம்? ஹரிச்சந்திர மகாராஜா, மிகப் பெரும் மகான்களான விஸ்வமித்திர முனிவரின் சேர்க்கையால் மிக உயர்ந்த பக்தனாகி வாழ்க்கையைப் பிரஜோனமாக்கினான். பதிலாக அவன் தனது வர்ணாஸ்ரம தர்மங்களை மட்டும் கடைப் பிடித்திருந்தால் அதன் மூலமாக எந்த விதமான இலாபமும் கிடைத்திருக்காது.

ஒருவன், தகுந்த பக்குவ நிலைக்கு வருவதற்கு முன்பாகவே பிரம்மச்சார்யத்தில் இறங்கிக் கடைசியில் வெற்றியடையவில்லாமல் போனாலும் கூட அவனுக்கு எந்த விதமான நஷ்டமும் கிடையாது. ஏன்? தன் அடுத்த பிறவியில் இப்போது எங்கே விட்டிருந்தானோ அதிலிருந்து ஆரம்பித்து மேன் மேலாக வெற்றியை நோக்கிச் செல்வான். இது, நாம் பள்ளிக் கூடத்தில் ஒரு நிலையை முடித்த பின் இன்னொரு பள்ளிக்குச் சென்று மேலாக இன்னமும் படிப்பதைப் போன்றது.

எவனொருவன் பகவானுக்குப் பூஜை செய்து பஜனைகள் புரிந்து, ஹரி நாமங்களை ஜெபிக்கிறானோ அவனது வர்ணாஸ்ரமும் பூதவுலக தொடர்புகளும் துண்டிக்கப் படுகின்றன. இதை கிரியாலோப - அல்லது கர்மங்களற்ற நிலை என்று அழைக்கின்றனர். சாதாரணமாக ஒருவன் தன்னுடைய உலகக் கடமைகளைச் செய்யாமல் போனால் இலட்சக் கணக்கான மகா ரிஷிகளைக் கொண்டு மதச் சடங்குகள் பண்ணினால் மட்டுமே அந்தக் குற்றங்களுக்குப் பரிகாரம் கிடைக்கும். ஆனால் பஜனை வழிபாட்டில் நுழைந்த ஒரு பக்தன் இப்படிப் பட்டப் பரிகாரங்கள் எதையுமே செய்யத் தேவையில்லை. இதை நாம் மிகவும் முக்கியமாகப் புரிந்து கொள்ள வேண்டும்: ஒருவன் தன் சுய நலத்தின் காரணமாக தன் உலகக் கடமைகளை விட்டு விட்டால் அவனுக்கு ஐந்து விதமான கடன்கள் வந்து விடுகின்றன - தேவர்களுக்குக் கடன், ரிஷிகளுக்குக் கடன், முன்னோர்களுக்குக் கடன், குடும்பத்துக்குக் கடன், மற்ற அனைத்து ஜீவ ராசிகளுக்கும் கடன் - இப்படி அனைத்தும் வந்து விடுகின்றன.

ஒரு மகனுக்கு எந்த விதமான கடமைகள் உள்ளன? அவன் எவ்வாறு தன் முன்னோர்களின் கடனைத் தீர்க்கிறான்? தன் தந்தை அவனை எவ்வாறு வளர்த்து இந்த உலகத்தில் வாழ்வதற்குத் தகுதியையும் அளித்தாரோ அதே போல் தானும் திருமணம் செய்து, குழந்தைகளையும் பெற்று அவர்களையும் இந்த உலகத்தில் வாழ்வதற்கு வேண்டிய அத்தனையையும் செய்த பின்னரே அவனது முன்னோருக்கு உள்ள கடன் அடைக்கப் படுகிறது. எனவே அவன் திருமணம் செய்யாவிட்டால் இந்தக் கடன் அடை படாது. இனி ஒரு மகள் எவ்வாறு தன் கடன்களை அடைக்கிறாள்? தன் தாயார் எவ்வாறு சேவைகள் செய்தாளோ அதே போல் சேவை செய்வதன் மூலம் கடன் அடைக்கப் படுகிறது. தன் தாயார் தன்னை வளர்த்து, தன் கணவனுக்கும் சேவை செய்து குழந்தைகளையும் பெற்று அவர்களை வயது வரும் வரை வளர்த்து விடுவது போல் அவளும் செய்தால் கடன் தீர்க்கப் பட்டு விடுகிறது. இதே போல் தான் தேவர்கள் மற்றும் அனைவருக்குமுள்ள கடன்களும். ஒருவனது மனைவி, "போங்கள், போய் பஜனை செய்யுங்கள்" என்று சொல்லாதவரை ஒருவன் வீட்டைத் துறந்து பகவானுக்குப் பஜனை செய்ய முடியாது.

இருந்தாலும் கூட, ஸ்ரீ சைதன்ய மகாபிரபு இந்த சாஸ்திர விதிகள் அனைத்தையும் புறக்கணித்து விட்டு வீட்டைத் துறந்தார். தன் வயதான தாயாருக்கு எந்த விதமான வசதிகளையும் செய்யாமலேயே எல்லாக் கடமைகளையும் விட்டு எறிந்து விட்டு துறவறம் புரிந்தார். அவர் எல்லா விதமான சாஸ்திர விதிகளையும் எதற்காகத் துறந்தார்? கோவிந்தாவுக்குச் சேவை செய்வதற்காக அவர் அவ்வாறு செய்தார். எனவே ஒருவன் இவ்வாறு எல்லாவற்றையும் விட்டு விடும் போது அது "கிரியா லோபா" என்று அழைக்கப் படுகிறது.

சாஸ்திர விதிகளின் படி ஒருவன் முதலில் பிரம்மச்சாரியாகவும், பின்னர் கிரகஸ்தாவாகவும் அதன் பின் வனப்பிரஸ்தாவாகவும் அதன் பின் கடைசியில் சன்னியாசியாகவும் ஆக வேண்டும். ஆனால் சிலர் பிரம்மச்சார்ய நிலையிலிருந்து நேராக சன்னியாசத்துக்குச் சென்று விடுவதால் அவர்களுக்கு முந்தையோர்களின் கடன் தன் மேல் வந்து விழுகிறது. ஆனால் அவர்கள் ஸ்ரீ முகுந்தாவுக்குப் பஜனை செய்வதற்காக இவ்வாறு செய்ததால் எந்த விதமான பரிகாரமும் செய்ய வேண்டியதில்லை. ஆனால் பாகவத் பஜனை அல்லாத வேறு எந்த விதமான காரணத்துக்காகவும் இப்படிச் செய்தால், நீளமான தாடிகளை வைத்துக் கொண்டுத் தலைகளில் கொண்டைகளையும் முடித்துக் கொண்டு வெறும் பாலை மட்டுமே உண்டு வாழும் முப்பது இலட்சம் பிராமணர்களைக் கொண்டு பரிகாரங்கள் செய்ய வேண்டும். பகலிலும் இரவிலும் அவர்கள் தொடர்ந்து "ஓம் ஸ்வாஹா, ஓம் ஸ்வாஹா" என்று தொடர்ந்து கூறிக் கொண்டேயிருக்க வேண்டும். இப்படிப்பட்டப் பரிகாரங்களை அவர்கள் சரியாகச் செய்யவில்லையென்றால் பகவான் அவர்களைத் தண்டித்து விடுவார். ஆனால் அதே சமயம், தன் உலகக் கடமைகள் அனைத்தையும் எறிந்து விட்டுப் பகவானுக்கு பஜனை செய்யும் பக்தர்கள் எந்த விதமான பரிகாரங்களையும் செய்யத் தேவையில்லை.

பக்தியில் மொத்தம் 64 வகைகள் உள்ளன. இதில் ஒருவன் ஒரே ஒரு வகையான பக்தியை மட்டும் சரியாகக் கடைப் பிடித்து அதில் முழ்கினாலே போதும். அவன் எந்த விதமான பரிகாரங்களையும் செய்ய வேண்டியதில்லை. ஆனால் ஒரு விஷயத்தில் மட்டும் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்: பகவானுக்குப் பூஜை செய்வதில் மூழ்கியிருந்தாலும், அல்லது ஹரி நாமங்களை ஆழ்ந்து ஜெபித்துக் கொண்டிருந்தாலும், ஒரு உத்தம வைஷ்ணவ பக்தருக்கு மட்டும் எந்த விதமான அபராதத்தையும் ஒரு போதும் விளைவித்து விடக் கூடாது. இந்த விஷயத்தில் நாம் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். வேறு எந்த விதமான அபராதத்தையும் கிருஷ்ணர் பொறுத்துக் கொள்வார். ஆனால் இதை மட்டும் அவர் ஒருபோதும் பொறுத்துக் கொள்ள மாட்டார்.

*தாவத் கர்மாணி குர்வீத*
*ந நிர் வித்யேத யாவதா*
*மத் கதா ஸ்ரவணாதௌ வா*
*ஸ்ரத்தா யாவன் ன ஜாயதே --- (பிருகத் பாகவத் 11.20.9)*

ஒருவன் தனக்குத் துறக்கும் பக்குவம் வரும் வரை மட்டுமே கர்மயோகத்தைக் கடைப் பிடிக்க வேண்டும். அவன் அந்தப் பக்குவத்துக்கு வரும் போது உலகப் பற்றுக்கள் அனைத்துமே துயரங்கள் தான் என்று புரியும். அப்போது அவன், "நான் ஒரு ஆத்ம

தத்துவம்" என்று உணர்வதால் கர்ம யோக வழிகளைக் கடைப்பிடிக்க வேண்டியதில்லை. அவன் பின் ஞான மார்க்கத்தைக் கடைப் பிடிக்கலாம். அதன் பின்னர் சிரவணம், கீர்த்தனம், ஸ்மரணம், பாத சேவனம் மற்றும் பிற முறைகளால் பக்தி உண்டாகிறது. அப்போதும் அவன் கர்ம யோகத்தைக் கடைப் பிடிக்க வேண்டிய அவசியம் கிடையாது.

உதாரணமாக இரவீந்திர நாத தாக்கூர் பள்ளியிலோ கல்லூரியிலோ படித்ததில்லை. வீட்டில் இருந்து படித்தவர். முதலில் அவருக்குத் தன் பெற்றோர்கள் படிப்பித்தார்கள். அதன் பின்னர் ஒரு ஆசிரியர் வந்து வீட்டில் கற்பித்தார். தன் முந்தைய ஜென்மங்களில் சேர்ந்திருந்த அறிவால் சீக்கிரமாகவே மிகவும் மேலான நிலையை அடைந்தார். பள்ளிப் படிப்பு தேவையேயில்லாமல் போனது. அதே போல் தான் ஸ்ரீ கிருஷ்ணரின் நாமங்களை ஜெபிப்பதிலும் கேட்பதிலும் இதயங்களைக் கொடுத்த  பக்தர்கள் கர்ம யோகத்தைப் பின்பற்ற வேண்டிய அவசியமில்லை. அவர்கள் ஒரு வேளை ஏதாவது கர்ம செயல்களைச் செய்தாலும் அதை மற்றவர்களின் நன்மைக்காகவே தான் செய்வார்கள். தனக்காகச் செய்ய மாட்டார்கள். எங்கெல்லாம் பக்தியின் மேல் நம்பிக்கை உள்ளதோ அங்கெல்லாம் கர்மங்கள் தேவையில்லை. கர்ம யோகத்தைப் பின் பற்ற மனுஸ்மிருதி, அர்த்த சம்ஹிதா, யக்ஞவாக்கியரின் நூல்கள் இப்படி நிறைய சாஸ்திரங்கள் உள்ளன. மேலும் பற்பல சமுதாயங்களில் இதில் விதம் விதமான பழக்க வழக்கங்களும் உள்ளன. இவை அனைத்தும் பஜனை வழிபாட்டில் ஈடுபட்டுள்ளவர்களுக்குத் தேவையற்றவை. அந்தச் சாதகன் இவற்றைப் பின்பற்றினாலும் பின்பற்றாமலிருந்தாலும் எல்லாம் ஒன்று தான்.

சிலர் பகவத் கீதையில் வரும் "சர்வ தர்மான் பரித்யஜ்ய மாம் ஏகம் சரணம் வ்ரஜ" என்ற சுலோகத்துக்கு, "எல்லா விதமான உலக சம்பந்தங்களையும் விட்டு விட்டுக் கர்மயோகத்தைக் கடைப் பிடித்து என் அடைக்கலத்தில் வந்து விடு" என்று பொருள் எடுப்பார்கள். ஆனால் நம் கோஸ்வாமிகள் என்ன கூறுகிறார்கள்? உலக சம்பந்தங்களையும் "கர்மங்களையும்" விட்டு விடு என்று உபதேசிக்கிறார்கள். இப்படி நம் எல்லா ஆச்சாரியார்களும் செய்தது போல் எத்தனையோ பக்தர்களும் செய்துள்ளார்கள். பகவானிடம் சரணாகதி அடைந்த ஜீவனாக ஸ்ரீ ரகுநாத தாஸ கோஸ்வாமி வீட்டை விட்டுத் துறவறம் சென்றார். அவர் ஏதாவது கர்ம சாதகங்களில் ஈடுபட்டாரா? பக்தி ரஸத்தைப் பற்றி அறியாத அறிவிலிகள் மட்டுமே கர்ம யோகத்தைக் கடைப் பிடிப்பார்கள். பக்தியின் இயற்கையான உண்மைகளை அறிந்த எவருமே கர்ம யோகத்தைப் பின் பற்றவே மாட்டார்கள். சில சமயம் பகவான் சில கர்மங்களைச் செய்கிறார். அவை இந்த உலகத்தின் நலனுக்காகச் செய்யப் படுபவை. இதே போல் தான் முனிவர்களும் பக்தர்களும் செய்கிறார்கள். அவை உலக

நலன்களுக்காக மட்டுமாகச் செய்யப் படுபவை.

*யத் யத் ஆச்சரதி ஸ்ரேஷ்தஸ்*
*தத் தத் ஏவேதரோ ஜனஹ*
*ச யத் ப்ரமாணம் குருத்தே*
*லோகஸ் தத் அனுவர்த்ததே --- (பகவத் கீதை 3.21)*

"சாதாரண மக்கள், உத்தம புருஷர்கள் செய்வதைப் போல் செய்ய முயல்கின்றனர். உத்தம புருஷர்கள் உண்டாக்கிய விதி முறைகளை ஒவ்வொருவரும் பின்பற்றுகின்றனர்."

கர்ம யோகம் என்றால் என்ன? நாம் நம் சுய மகிழ்ச்சிக்காகச் செய்யும் எந்தக் காரியமும் முடிவில் துன்பத்தையே அளிக்கிறது. உதாரணமாக ஒருவன், "நான் விக்கிரகத்துக்கு இந்த அர்ச்சனையைச் செய்கிறேன். அதனால் எல்லோரும் என்னைப் புகழ்வார்கள். அதனால் நான் மேன்மேலும் செல்வங்களைப் பெறுவேன்" என்று எண்ணி பூஜை செய்கிறான் என்று வைத்துக் கொள்வோம். இந்தப் பூஜை வெறும் கர்ம யோகமே. பகவானுக்கு பகவானின் மகிழ்ச்சிக்காகப் புரிவது தான் சுத்தமான பக்தி. மோட்சம் அடைவதற்காகப் புரிபவை ஞான யோகம். "பகவான் இதனால் மகிழ்ச்சி அடைவார்" என்ற எண்ணத்துடன் செய்யும் பூஜையை அவர் எப்போதும் ஏற்றுக் கொள்வார்.

மாறாக, " பகவான் என் சேவையினால் மகிழ்ந்து எனக்கு மனைவி, கணவன், மகன், மகள், செல்வம் அனைத்தையும் வழங்குவார்" என்ற எண்ணத்துடன் செய்யும் பூஜை கர்ம யோகத்தைச் சார்ந்தது. ஆனால் ஒருவேளை சிறு குற்றங்கள் இருந்தாலும் கூட பகவானின் மகிழ்ச்சியை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு செய்யும் பூஜையே உண்மையான பூஜை. அதை பகவான் மகிழ்வோடு ஏற்றுக் கொள்வார்.

அடுத்து நாரதர் இந்தச் சுலோகத்தைக் கூறுகிறார்:

*சித்திஹி ஸ்யாத் பகவத் த்ருஷ்ட்யா*
*த்ருண சம்மானனாத் அபி*
*சக்ருத் உச்சரணான் நாமா*
*பாஸஸ்ய ஸ்ரவணாத் ததா --- (பிருகத் பாகவத் 2.4.210)*

ஒருவன் பாகவத்-பக்தியுடன் (பகவான் எங்கும் நிறைந்திருக்கிறார் என்ற உணர்வுடன்) ஒரு சிறு துரும்புக்கும் கூட வந்தனம் செலுத்தினாலோ, அல்லது அந்தத் துரும்புக்கு மிகவும் பக்தி உணர்வுடன் எதையும் படைத்து மிகுந்த மரியாதை கொடுத்தாலும், அந்தச் செயல் அவனுக்கு வேண்டியவற்றையெல்லாம் அளித்துப்

பரிபூரணமான நிலையையும் கொடுக்கும். அஜமிலா, தன் மகனின் பெயரை(நாராயணா) நினைத்ததால் தனக்குத் தெரியாமலேயே ஆன்மீக உலகத்தை அடைந்தார். ஆமாம், தனக்குத் தெரியாமலே தான். நாம் நம் குடும்பத்திலுள்ள எவருக்காவது ராதா தாஸி என்றோ, கிருஷ்ண தாஸா என்றோ, மதன மோகனன் என்றோ பெயரிட்டிருந்தால் என்ன ஆகும்? அவர்களை நாம் (சுத்த நாமத்துடன் அழைக்காமல்) நாம ஆபாஷாவுடன் அழைத்தால் கூட மிகப் பெரும் பயன் கிடைக்கும். இவ்வாறு ஒருவன் பாகவத்-புத்தியுடன் ஒரு துரும்புக்குக் கூட மரியாதை அளிக்கலாம் என்று கூறுகிறார். ஏன்? காரணம் இந்த உலகத்தில் பகவானுக்குச் சம்பந்தமில்லாத எந்த ஒரு பொருளுமே கிடையாது. அப்படி ஏதாவது உள்ளதா? இல்லவேயில்லை. அனைத்து வஸ்துக்களுமே பகவான் வீற்றிருக்கும் இடங்கள்.

நாம் ஒரு கழுதையிலும் கூட பகவான் இருக்கிறார் என்று எண்ணினால், அந்த எண்ணத்தின் காரணமாக அடுத்தப் பிறவியில் ஒரு கழுதையாகப் பிறப்போமா? இல்லை. அது அப்படியல்ல. எங்கோ ஒரு இடத்தில் ஒரு கழுதையின் நெற்றியில் திலக மிட்டு அதன் கழுத்தில் துளஸி மாலையையும் அணிவித்து அதை வணங்காத ஜனங்களுக்கு பக்தி வரவே வராது என்று எழுதப் பட்டிருந்தது. சிலர் அந்தக் கழுதைக்கு வந்தனம் செலுத்தினர். ஆம், ஒருவன் இவ்வாறு எங்கும் பகவான் வீற்றிருக்கிறார் என்று உணர்வதில் தவறேயில்லை. ஆனால் அந்தக் கழுதையை ஒருவன் பகவான் என்று நினைத்தால் அது கலப்படமான புத்தி! பிரகலாத மகாராஜா எல்லாவற்றிற்கும் வந்தனம் செலுத்தினார். பறவைகள், மிருகங்கள், பூச்சிகள், துரும்பு இப்படி அனைத்துக்கும். ஏன்? பகவானில்லாமல் அவை எதுவுமே இருக்க முடியாது என்று அறிந்திருந்ததால் தான். ஆனால் அவர் அந்தப் பொருட்கள் எல்லாமே பகவான் தான் என்று நினைக்கவில்லை.

உதாரணமாக நாம் ஒரு மயில் பீலி ஒன்று புழுதியில் விழுந்து அது மற்றவர்களால் மிதிக்கப் படுவதைப் பார்க்கிறோம் என்று வைத்துக் கொள்வோம். அப்போது நாம் உடனே என்ன செய்வோம்? உடனே அதை எடுத்து நீரினால் சுத்தப் படுத்தி, நம் தலையில் அதைத் தொட்டு வழிபட்டு ஒரு சுத்தமான இடத்தில் வைப்போம். ஏன்? "இது கிருஷ்ணர்" என்ற காரணத்தினாலா? இல்லை. அது கிருஷ்ணருக்கு மிகவும் பிடித்தமானது, அதை அவர் தன் தலையில் அணிந்திருக்கிறார் என்ற காரணத்தினால். இதுவே பாகவத்-புத்தி என்பது. இவ்வாறு இப்படிப்பட்ட உணர்வுகளுடன் ஒருவன் ஒரு துரும்புக்குக் கூட வந்தனமும் மரியாதையும் அளித்தால் அவனுக்கு பாகவத்-புத்தி கிடைக்க மிகவும் உதவியாயிருக்கும். அப்படியானால் நாம் நேரடியாகப் பகவானின் விக்கிரகத்துக்கே வந்தனம் செலுத்தினால் எவ்வளவு பெரும் பலன் கிடைக்கும் என்பதை நினைத்துப் பாருங்கள்!

நகர முடியாத ஜீவாத்மாக்கள், மற்றும் அனைத்து வஸ்துக்களும் கூட பகவானின் சக்தியின் பரிணாமங்களேயாகும். எனவே, பிரகலாத மகாராஜா செய்ததைப் போல் அவைகளுக்கெல்லாம் வந்தனம் செய்வதில் தவறேயில்லை. எல்லாம் பகவானின் அம்சங்களே. இதை நாம் சரியாக அறிந்திருக்க வேண்டும். நாம் ஒரு துரும்பையோ மற்றப் பொருட்களையோ பாகவத்-புத்தியுடன் பார்க்கும் போதே பூரண நிலையை அடைகிறோம் என்றால் பகவான் ஸ்ரீ விக்கிரகத்தை நேரடியாக நினைக்கும் போது எப்படிப் பட்ட உயர்ந்த பலன்கள் நமக்குக் கிடைக்கும்? எனவே நாம் கோயிலில் விக்கிரகங்களை வழிபடுவது, அல்லது நம் வீடுகளில் விக்கிரகங்களை அக்கினி ஹோமங்களுடனும் அபிஷேகங்களுடனும் வேத மந்திரங்களுடனும் ஸ்தாபித்து அவற்றை வழிபடுவது போன்ற செயல்களை எப்படி நாம் சரியல்ல என்று கூற முடியும்? இதில் எந்த விதமான குற்றமும் கிடையாது. எனவே தான் விக்கிரக மூர்த்தி பூஜை முறைகளைப் பற்றி சாஸ்திரங்களில் எழுதப்பட்டுள்ளன. இனி, சில குறிப்பிட்ட பூஜை முறைகளின் குறைகளைப் பற்றி ஏன் சாஸ்திரங்களில் எழுதப் பட்டுள்ளன என்பதை நாரதர் விளக்குகிறார்.

*கடாபி கிருஷ்ண பிரத்திமார் சனவதாம்*
*ந சம்பவேத் கிருஷ்ண ப ரேஷ்வ் அனாதர*
*கதேத சேத் கர்ஹி அபி தத் விஷக்திதோ*
*கிர்ணதி நாகஸ் தத் அமீ ஸ்தவந்தி அத*
*--(பிருகத் பாகவத் 2.4.212)*

ஒருவன் உண்மையிலேயே ஒரு பக்தனாக இருந்தால் - கேவலம், தத்துவங்களைச் சரியாக அறியாத கனிஷ்த அதிகாரியாக இருந்தாலும் கூட ஆனால் விக்கிரக பூஜையில் ஈடுபட்டிருந்தால் - அவன் எந்த ஒரு வைஷ்ணவரையும் அவமதிக்க மாட்டான், ஒரு பக்தன் பூலோக பந்தங்களில் ஈடுபட்டிருந்தாலும் கூட அவன் ஒரு பக்தனே. இல்லையா? அவன் ஒரு போதும் வைஷ்ணவர்களை அவமதிக்க மாட்டான். மாறாக, அவன் ஒரு வைஷ்ணவரைப் பார்த்ததும் வந்தனம் செலுத்தி, "தயவு செய்து நம் தாக்கூர்ஜியைத் தரிசனம் செய்யுங்கள். அவரது பிரசாதத்தை எடுத்துக் கொள்ளுங்கள்" என்று கூறுவார். வேறு எதுவும் அவர் செய்ய மாட்டார். ஆனால் ஒருவன் ஒரு வைஷ்ணவரை அவமதித்தால் அவன் ஒரு கனிஷ்த அதிகாரி நிலையில் கூட இல்லை என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். இங்கே, ஒரு பக்தன் உண்மையிலேயே விக்கிரக அர்ச்சனை செய்து கொண்டிருந்தால் அவனால் எந்த ஒரு வைஷ்ணவரையும் அவமதிக்க முடியாது என்று நாரதர் கூறுகிறார். ஒரு புதிய பக்தனோ, அல்லது கனிஷ்த அதிகாரி நிலையிலுள்ள பக்தன் கூட அப்படிச் செய்ய மாட்டான்.

அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை ஒரு சமயம் வந்தது. ஒரு பக்தன் தன் ஆசனத்தில் அமர்ந்து அர்ச்சன வழிபாடு செய்ய ஆரம்பிக்கும் போது ஒரு உயர்ந்த நிலையிலிருந்த ஒரு வைஷ்ணவர் அங்கே வந்தார். ஆனால் பூஜாரியான பக்தனால் உடனடியாக எழுந்து மரியாதை செலுத்த இயலவில்லை. அப்படிப்பட்ட சூழ்நிலைகளில் வைஷ்ணவர்கள் மிகவும் கருணையுள்ளவர்கள். அவர்கள், "இல்லையில்லை, நீ உன் பூஜை சேவையைச் செய்" என்று தான் கூறுவார்கள். அந்தப் பூஜாரி பூஜையில் முழுவதுமாக ஆழ்ந்து ஈடுபட்டிருந்ததால் வந்த வைஷ்ணவரைக் காணவில்லை. இந்த சூழ்நிலைகளில் வைஷ்ணவர்கள் இன்னமும் அதிகமாகக் கருணையுள்ளவர்கள். எந்த விதமான குறையையும் அவர்கள் இங்கே காண்பதில்லை. மாறாக அந்த வைஷ்ணவர் அதை ஒரு குறையாக எடுத்துக் கொண்டால் அவர் உண்மையில் ஒரு வைஷ்ணவரே அல்ல. ஆனால் இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் அபராதங்கள் நிகழ்வதற்கு வாய்ப்பு உள்ளது. பலதேவ பிரபு(பலராமர்) ஒரு சமயம் ரோமஹர்ஷனின் சபையில் நுழைந்த போது ரோமஹர்ஷன் எழுந்து பலதேவ பிரபுவுக்கு எந்த விதமான மரியாதையையும் கொடுக்காமல் உட்கார்ந்திருந்தான். அவன் எந்த விதமான சேவையிலும் அப்போது மூழ்கியிருக்கவுமில்லை. "நான் தான் எல்லோராலும் வழிபடப் படுபவன்" என்ற அகங்காரத்துடன் உட்கார்ந்திருந்தான். எனவே தான் அவன் பலதேவ பிரபுவுக்கு மரியாதை அளிக்கவில்லை. இதைக் கண்ட பலதேவர் அவனை வதம் செய்தார்.

எனவே ஒரு பக்தன் தன் பூஜையிலோ வழிபாட்டிலோ முழுவதுமாக மூழ்கியிருக்கும் போது, ஒரு வைஷ்ணவர் வந்ததை அறியாமல் ஆழமாக மூழ்கியிருந்தால் தன்னை உபசரிக்கவில்லையேயென்று அந்த வைஷ்ணவர் ஒருபோதும் நினைக்க மாட்டார். மாறாக அதை அந்த பக்தனின் உயர்ந்த குணமாக எண்ணி மகிழ்வார். அவர்கள் அதை ஒரு குறையாகவேக் கருத மாட்டார்கள். ஆனால் ஒருவன் ஒரு வைஷ்ணவர் வந்திருக்கிறார் என்பதை அறிந்தும், அவர் முக்கியமானவரல்ல என்ற எண்ணத்துடன் அவரை அலட்சியப் படுத்தினால் அது ஒரு அபராதமாகி விடும். அப்போது அவன் வழிபடும் விக்கிரகமும் பூஜையை ஏற்றுக் கொள்வதில்லை.

நாம் ஒரு பெரிய விழாவுக்காக இலட்சக் கணக்கான ரூபாயைச் செலவளித்து ஒரு மாதம் முழுவதும் அதற்காக வேண்டிய அனைத்தையும் சரி பண்ணுவதில் சுறுசுறுப்புடன் ஈடுபடுகிறோம். அங்கே வரும் ஆயிரக்கணக்கான ஜனங்களுக்குப் பிரசாதம் வழங்குவதற்காக மும்முரமான வேலைகளில் இறங்கி வேண்டியவற்றை எல்லாம் தயார் செய்கிறோம். வேண்டிய மின்சார விளக்குகளையும் அலங்காரங்களையும் செய்கிறோம். ஆனால் இவை அனைத்துச்

செயல்களும் நமது புகழின் மேலான ஆசையின் காரணமாகச் செய்யப் பட்டால் அந்தப் பூஜையில் எந்த விதமான பிரயோஜனமும் இல்லை. அதை விக்கிரகம் ஏற்றுக் கொள்வதில்லை. இந்தப் பெரிய பூஜையை நடத்துவதால் நமக்கு இந்த உலகத்தில் புகழ் மிகவும் பெருகும் என்ற எண்ணத்துடன் நடத்தும் பூஜையைத் தாக்கூர்ஜி ஒருபோதும் ஏற்றுக் கொள்வதில்லை.

ஆனால் ஒருவன் ஒரு சிறு பூஜையை மிகவும் எளிமையாக, ஆனால் உண்மையிலேயே அதை ஸ்ரீ கிருஷ்ணரின் மகிழ்ச்சிக்கு மட்டுமாகச் செய்யும் போது அதை அவர் ஏற்றுக் கொள்கிறார். ஆனால் சுத்தமற்ற மனதுடன் ஒருவன் பூஜை செய்யும் போது அவர் அதை ஏற்றுக் கொள்வதில்லை. எனவே நாம் பூஜை செய்யும் போது நம் இதயங்களில் சரியான பக்தி பாவம் இருக்க வேண்டும். இதே போல் தான் நாம் அவரது புனித நாமங்களை ஜெபிக்கும் போதும் இருக்க வேண்டும். நாம் ஒருவரை, "ஏ, நீ இங்கே வா!" என்று அழைப்பதைப் போல் ஸ்ரீ கிருஷ்ணரையும் அழைத்தால் அதை அவர் கேட்பாரா? அவரை நாம் சரியான பக்தி பாவம் எதுவுமின்றிக் கூப்பிடும் போது அவர் அதைக் கேட்கவே மாட்டார். ஆனால் நாம் அவரை, "தயவு செய்து இந்த நைவேத்தியத்தை நீங்கள் புசிக்க வேண்டும்" என்று பக்தியுடன் அழைத்தால் அவர் கண்டிப்பாக வருவார். மாறாக, நாம் பூஜை தாமதமாகிறது என்ற காரணத்துடன், மிகவும் அவசரத்துடன், "ஓம் கிருஷ்ணாய நமஹ" என்றுக் கூப்பிட்டால் அவர் வருவாரா? இதயத்தில் பக்தி பாவ உணர்ச்சியுடன் நாம் படைக்கும் போது மட்டுமே அவர் அதை ஏற்றுக் கொள்கிறார். இல்லையேல் அவருக்குப் பசியும் வருவதில்லை, நம் பூஜையையும் ஏற்றுக் கொள்வதில்லை. நாம் பக்தியின் எந்த ஒரு அங்கத்தைப் பின்பற்றினாலும், இதை மிகச் சரியாக அறிந்திருக்க வேண்டும். மிகவும் சிரத்தையுடன் நைவேத்தியங்களைத் தயார் செய்கிறோம். ஆனால் நாம் சரியான பக்தி பாவத்துடன் அவரை மகிழ்விப்பதற்காக அவற்றைப் படைக்கவில்லை யென்றால் அதைத் தாக்கூர்ஜி ஏற்றுக் கொள்வதில்லை. ஏனென்றால் அது அவருக்குத் தேவையில்லை. பகவானுக்குப் பிரேமையில் மட்டும் தான் பசி உண்டாகும்! இவையெல்லாவற்றையும் நாம் அறிந்து, ஹரி நாம கீர்த்தனம், சிரவணம், ஸ்மரணம், வந்தனம் இப்படி அனைத்திலும் பிரேமையுடன் ஈடுபட வேண்டும். அப்படியானால் பகவான் கண்டிப்பாக நாம் படைப்பதை ஏற்றுக் கொள்வார்.

நீ மிகவும் திறமை வாய்ந்த வாத்தியக்காரர்களுடன் இனிமையான ராகத்தில் ஒரு கீர்த்தனையைப் பாடலாம். அதன் தாளம், சுருதி அனைத்தும் அவர்கள் அறிந்து சரியாக வாசித்து எல்லா ஜனங்களையும் அது ஆழமாக ஈர்க்கலாம். ஆனால் அதைக் கிருஷ்ணரின் மகிழ்ச்சிக்காக மட்டுமின்றி பாடினால் அந்தக் கீர்த்தனையின் ஒரே பலன் அங்குள்ள ஜனங்களை மகிழ்ச்சிப்

படுத்துவதே. பகவானின் மகிழ்ச்சிக்காக அதைப் பாடவில்லை யென்றால் அங்கே உட்கார்ந்திருப்பவர்களுக்கும், பாடுபவர்களுக்கும், வாத்தியங்களை வாசிப்பவர்களுக்கும் எந்த விதமான பிரயோஜனமும் இல்லை. இது ஒரு எளிதான தத்துவமல்ல. ஒருவன் தனது அனைத்துச் செயல்களையும் பகவானைத் திருப்திப் படுத்தும் ஒரே காரணத்துக் காகச் செய்யும் போது மட்டுமே அது சுத்த பக்தி என்று அழைக்கப் படுகிறது.

நாம் இப்போது கலியுகத்தில் மேன்மேலும் புகும் போது இவை எந்த அளவு மோசமாக உள்ளன என்பதைப் பார்க்கலாம். சிலர் கோயில் விக்கிரகத்துக்குச் சொந்தமான சொத்துக்களைத் திருடுகிறார்கள். அவர்கள், "நான் முக்கியமானவன்" என்றும், "நான் தான் எஜமான்" என்றும் எண்ணிக் கொண்டே பூஜையை நடத்துகின்றனர். இந்தக் காரணங்களால் பின்னர் அவர்கள் சண்டை சச்சரவுகளில் ஈடுபட்டுச் சில சமயங்களில் இரத்தம் சிந்தி கொலைகள் கூட நடக்கின்றன. அவர்கள் தகுதியுள்ள ஒருவரிடம் அந்த சேவையை ஒப்படைப்ப தில்லை. அவர்களின் இதயங்களில் மற்றவர்களிடம் குதர்க்கம் பண்ண வைக்கும் கெட்ட குணம் உள்ளது. மேலும் அவர்களிடம் மிகுந்த அளவு செல்வங்களும், புகழும், நிறைய சிஸ்யர்களும் இருப்பதாலும் தங்கள் பெருமைகள் அதிகரிப்பதாலலும் மற்ற பக்தர்களை எப்போதும் இழிவாக நடத்துகின்றனர். இப்படிப்பட்டவர்களுக்கு பூஜையினால் உண்டாகும் பலன்களான, பகவானின் மேல் பக்தி, பகவானின் தரிசனம், மற்றும் உத்தமமான வைகுந்தத்தை அடைதல் இவை எதுவுமே கிடைக்காது என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன.

நாரத முனிவர் ஒரு சமயம் பகவானிடம், "பிரபோ, பக்தர்களை மிகுந்த அளவான ஜனங்கள் மதிக்காமலிருப்பதை நான் காண்கிறேன். ஏன் இப்படி? அவர்கள் பக்தர்களை மதிக்க வேண்டும்" என்று கேட்டார்.

அதற்குப் பகவான், "பக்தர்களென்ன, அவர்கள் என்னையே மதிப்பதில்லை!" என்று பதிலளித்தார். மேலும் இதை நேரடி நிரூபணமாகக் காட்டுவதற்காக வேண்டி, "நான் ஒன்றை உனக்குக் காட்டுகிறேன். நாளை ஒரு பெரிய பந்தாரா(சாதுக்களுக்கு இலவச உணவு அளிக்கும் விழா) நடக்கவிருக்கிறது. அந்த விழாவுக்கு நானே நேரடியாகச் செல்லவிருக்கிறேன். நீ அங்கே எனக்கு எப்படிப்பட்ட மரியாதை அளிக்கிறார்கள் என்று நேரிலேயே பார்த்துத் தெரிந்து கொள்" என்று கூறினார்.

பந்தாராவுக்குப் பகவானே நேரடியாகச் சென்றார். அது ஒரு பெரிய விழா. அழைக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் முன்னமே சீட்டுக்கள் அனுப்பப்பட்டிருந்தன. சீட்டுக்களுடன் வந்திருந்த

முக்கியமானவர்கள் அனைவரும் உள்ளே சென்றனர். அப்போது அங்கே ஒரு வயது முதிர்ந்த கறுப்பு நிறமான ஒரு சாதுவும் நுழைய முயன்றார். அவர் பல நாட்களாகச் சாப்பிடாததால் வயிறு முதுகைத் தொடுவது போன்று ஒட்டி, மிகவும் மெலிந்த தோற்றத்தில் பசியாறுவதற்காகப் பிச்சைக்காக வந்திருந்தார். "ஐயா, நான் நான்கு நாட்களாக எதுவுமே சாப்பிடவில்லை. தயவு செய்து என்னையும் உள்ளே விட வேண்டும்" என்று கெஞ்சிக் கேட்டார். உள்ளே நுழைவதற்கு மெதுவாக முயன்றார். ஆனால் வாயிற்காவலனோ, "உன்னிடம் சீட்டு உள்ளதா? இல்லை?" என்று கேட்டுத் தடுத்து நிறுத்தினான்.

கடைசியில் வேறு வழியின்றி அந்த பிச்சைக்காரன் வாயிற்காவலனைத் தள்ளிக் கொண்டு உள்ளே புகுந்தார். வாயிற் காவலன் கோபம் கொண்டு அவனது எஜமானிடம் புகார் செய்தான். ஆனால் அந்த வயதான மனிதர் எதையுமேக் கண்டு கொள்ளாமல் உள்ளே சென்றார். சாப்பிட இலையொன்றைக் கையில் எடுத்துக் கொண்டு பின்னால் கடைசி வரிசையில் உட்கார்ந்தார். அப்போது அங்குள்ள எஜமான் முதியவரை நோக்கி வந்து, "எங்கே உன் சீட்டு? இதை ஏன் நீ மதிக்க மாட்டேன் என்கிறாய்? இவனைப் பிடித்து வெளியே தள்ளுங்கள்" என்று கத்தினான்.

அந்த பிச்சைக்காரன் நகராததால், நான்கு அல்லது ஐந்து பேர்கள் வந்து அவரைப் பலவந்தத்துடன் இழுத்து வாசலின் வெளியே எறிந்து விட்டுக் கதவையும் பூட்டிக் கொண்டார்கள். இதையெல்லாம் நாரதர் பார்த்துக் கொண்டேயிருந்தார். "பிரபு! நான் இப்போது நேரிலேயேக் காண்கிறேன். நீங்கள் சிரமத்துடன் உள்ளே புகுந்து, சாப்பிடுவதற்காக இலையையும் எடுத்துக் கொண்டு பின் வரிசையில் உட்கார்ந்த பின்னரும், சண்டை செய்து வெளியே தள்ளி விட்டார்களே!" என்று வியந்து போனார்.

நாம் இவ்வாறு ஒருவரை இழிவாக நடத்தக் கூடாது. இதில் நீங்கள் கவனமாக இருக்க வேண்டும். எவரொருவர் உங்களிடம் வந்தாலும் கண்டிப்பாக ஏதாவது கொடுக்க வேண்டும். வருவது பகவானாகவும் கூட இருக்கலாம்! அவர் ஒரு மாயாவாதியின் ரூபத்திலும் கூட வரலாம். அவருக்கு ஏதாவது கொடுத்து மரியாதை அளிக்க வேண்டும். இல்லாவிட்டால் அது ஒரு குரோதமாகி விடும். ஒரு சாது நம்மிடம் வந்தால் அவருக்கு மரியாதை அளிக்க வேண்டும். எல்லோரின் இதயங்களிலும் பகவான் வீற்றிருக்கிறார் என்பதை உணர்ந்து அனைவருக்கும் மரியாதை செலுத்தி இனிமையான வார்த்தைகளைப் பேச வேண்டும். பாகவத்-பக்தி மிகவும் அழகான தத்துவத்தை அடிப்படையாக் கொண்டு அமைக்கப் பட்டுள்ளது. நாம் இவற்றுக்கு மதிப்பளிக்கவில்லையானால் அது ஒரு குற்றமாக நம்மிடம்

வந்து விடும். நாம் விக்கிரகத்துக்குச் சரியான பக்தி பாவத்துடன் சேவை செய்து, அனைவருக்கும் மதிப்பையும் அளிக்க வேண்டும். கோபகுமார் பிரயாக்-குக்குச் சென்ற போது அங்கே விதம் விதமான யாகங்கள் நடந்து கொண்டிருந்ததைப் பார்த்தார். அங்கே எல்லா ஜனங்களுக்கும், கேவலம் காகங்கள், குரங்குகளுக்கும் கூடப் பிரசாதம் வழங்கப்பட்டன.

நாரதர் இங்கே "அவிதுஷ" என்ற வார்த்தையை உபயோகித்திருக்கிறார். "விதுஷ" என்றால் தத்துவ ஞானி என்று பொருள். "அவிதுஷ" என்றால் ஒன்றும் தெரியாத முட்டாள் என்று அர்த்தம். ஒரு முட்டாளிடமிருந்து பகவான் பூஜையை ஏற்றுக் கொள்வதில்லை. ஆனால் ஒருவனுக்கு அறிவில்லாமலிருந்தும் கூட ஆனால் பகவானிடம் நம்பிக்கையிருந்தால் அவனிடமிருந்து பூஜையை ஏற்றுக் கொள்கிறார். இங்கே விதுஷ, அவிதுஷ என்பதற்கு வேதங்களைப் படித்தவனோ படிக்காதவனோ என்று பொருளல்ல. ஒருவன் வேதங்களையும் மற்ற சாஸ்திரங்களையும் படித்திருந்தாலும் கூட முட்டாளாக இருக்கலாம். பகவத் கீதை, பாகவதம், இராமாயணம் மற்றும் புராணங்கள் அனைத்தையும் நன்றாகப் படித்திருந்தும் கூட ஒருவன் விக்கிரகங்களில் நம்பிக்கை எதுவுமில்லாமிலிருக்கலாம். அப்படியிருந்தால் அவன் முட்டாள்கள் கூட்டத்தில் தான் இருக்கிறான் என்று அர்த்தம்.

ஒரு நாள் ஒரு பக்தன் நமது கோயிலுக்கு (மதா) வந்து விக்கிரகங்களுக்கு முன்னால் அமர்ந்து கொண்டு விக்கிரகங்களை அரைமணி நேரமாகக் கூர்ந்து விடாமல் பார்த்துக் கொண்டிருந்தார். அதை நாங்கள் பார்த்ததும் அவருக்கு எவ்வளவு பெரிய அளவில் பக்தி பாவம் இருக்கிறது என்று ஆச்சரியப் பட்டுப் போனோம். விக்கிரகங்களை நீண்ட நேரம் கூர்மையாகப் பார்த்த பின்னர் அவர் பக்கத்திலிருந்த ஒருவரைக் கூப்பிட்டு, "இந்த மூர்த்தி எங்கேயிருந்து வந்தது? இதில் ஒரு குறையுள்ளது" என்று கூறினார். இது அவிதுஷ. இந்த மனிதன் நம் சம்பிரதாயத்தில் குறைந்தது நாற்பது அல்லது ஐம்பது வருடங்கள் இருந்திருந்தாலும் கூட அவர் அவிதுஷ - வாக இருக்கிறார்.

அவிதுஷ- வாக இருக்கும் எவரும் வைஷ்ணவர்களுக்கோ மற்றவர்களுக்கோ மரியாதை எதுவும் அளிக்க மாட்டார்கள். இப்படிப் பட்டவர்களிடமிருந்து பகவான் ஒரு போதும் பூஜையை ஏற்றுக் கொள்ளவே மாட்டார். ஆனால் அதே சமயம் ஒருவன் அறிவில்லாமலிருந்தும் ஆனால் இதயத்தில் களங்கமின்றியிருந்தால் அவனது பூஜையைப் பகவான் ஏற்றுக் கொள்கிறார். ஏனென்றால் இவனிடம் அபராதமில்லை. அர்ச்சனை வழிபாட்டில் முதலாவது வருவது என்ன? நைவேத்தியங்களைப் படைத்தல். அடுத்தது? நெய் விளக்கு. அதன் பின்னர்? வெள்ளையான சங்கினில் ஸ்நான நீர். அதன்

பின்னர் துணிகளும் சரணாம்ருதாவும் சாமரமும் வருகின்றன. ஆனால் ஒரு பக்தன் இந்த வரிசையைப் பின்பற்றாமல் பூஜை செய்தால் அதை விக்கிரகம் மறுக்கவா செய்கிறது? அந்தப் பூஜையைப் பகவான் ஏற்றுத்தான் கொள்கிறார். ஆனால் ஒருவன் பதினாறு வகையான நைவேத்தியங்களைப் படைத்தும் நம்பிக்கை எதுவுமின்றி பூஜை செய்யும் போது என்ன ஆகிறது? ஜனங்கள் வந்து காணிக்கைகளாகப் பணங்களைக் கொடுக்கிறார்கள். அவற்றைப் பூஜாரியும் வாங்கிக் கொண்டு இந்த வாரம் நாம் முப்பது ரூபாய் சம்பாதித்தோம், அடுத்த வாரமும் நமக்கு முப்பது ரூபாய் கிடைக்கும் என்ற நினைவில் பூஜை செய்தால் அவர்கள் அபராதங்களையே விளைவிக்கிறார்கள்.

அப்படிப்பட்டவர்களிடமிருந்து பகவான் ஒருபோதும் பூஜையை ஏற்பதில்லை. ஆனால் அறிவில்லாமலிருந்தும் களங்கமற்ற இதயம் கொண்ட ஒருவன் செலுத்தும் பூஜையை அவர் ஏற்றுக் கொள்கிறார். அவன் கொஞ்சம் சுய நல ஆசைகள் உள்ள "சகாம" குணத்துடன் இருந்தாலும் கூட அவர் பூஜையை ஏற்றுக் கொள்கிறார். ஒரு "சகாம" குண மனிதன் நம்பிக்கையுடன் பகவானை வழிபடும் போது, நீண்ட காலத்துக்குப் பின்னர் பகவானே அவனுக்குப் பக்தியை அளித்து விடுகிறார். ஏனென்றால் அவன் எந்த விதமான அபராதத்தையோ, மற்றவர்களைப் பற்றி அவதூறுகள் பேசுவதையோ, பிற ஜீவன்களுக்குத் துன்பங்கள் கொடுப்பதையோ - இப்படி எந்த விதமான கெட்ட செயல்களையும் செய்வதில்லை. எனவே பகவான் மிகவும் பெரிய கருணையை வழங்குகிறார். ஆனால் ஒருவன் மற்றவர்களிடம் மோசமாக நடந்து கொண்டால் அவனுக்கு இலட்சக் கணக்கானப் பிறப்புக்களிலும் கூட பக்தி கிடைப்பதில்லை.

ஒருவன் தனக்கு இயற்கையாக முடிந்தவரை எல்லாவற்றையும் பகவானின் சேவைக்காகவே உபயோகப்படுத்த வேண்டும். அப்போது பகவான் திருப்தியடைகிறார், குருதேவர் திருப்தியடைகிறார், எல்லா வைஷ்ணவர்களும் திருப்தியடைகிறார்கள். எல்லாமே சரியாக ஆகி விடுகிறது! நாம் எதையும் நமது மகிழ்ச்சிக்காகச் செய்யாமல் குருதேவரின் மகிழ்ச்சிக்காக மட்டுமே அனைத்தையும் செய்ய வேண்டும் என்பதை நன்றாக ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். அப்போது தான் எல்லாம் சரியாக ஆகின்றன.

இந்த விஷயம் மிகவும் முக்கியமானது - குறிப்பாக ஒரு சாதகன் இதைக் கண்டிப்பாகக் கேட்க வேண்டும். நாம் பக்தி ரஸத்தைப் பற்றியும் லீலைகளைப் பற்றியுமான இனிய கதைகளைக் கேட்பதற்கு மிகவும் ஆர்வமாக இருக்கலாம். ஆனால் இப்படிப்பட்ட விஷயங்களைக் கேட்க ஆவலில்லாமலிருக்கலாம். இவை சாதகத்தின் ஆணிவேர் என்பதை நன்கு அறிந்து கொள்ள வேண்டும். ஏனென்றால் நாம் அபராதங்களை விளைவிக்கும் போது பக்தியின் வழியிலிருந்து

விலகி விடுகிறோம். அப்படியானால் நம் வாழ்க்கை பயனற்றுப் போய் விடும். ஆனால் பதிலாக நமது இதயங்களை பகவானின் விக்கிரகத்திற்கும், வைஷ்ணவர்களுக்கும், குருதேவருக்கும் சரியான வழியில் சேவை செய்வதற்காகத் தயார் செய்தால் நமது சாதனா மிகுந்த வெற்றியடையும்.

# அத்தியாயம் - 12

நாம் எப்போது ஹரி கதைகளைக் கேட்டாலும் அவற்றை நம் முழு இதயத்தையும் கொடுத்துக் கேட்க வேண்டும். அது மட்டுமல்ல, அவற்றை எப்போதும் நம் இதயத்தில் பத்திரமாக வைத்தும் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் நம் காது அவற்றைக் கேட்டாலும் அது இதயத்திடம் கூறாது. அப்படி நாம் ஒருபோதும் இருக்கக் கூடாது. நம் காதுகளுக்குள் செல்லும் ஹரி கதைகள் நம் இதயத்திற்குள் புகுந்து அவை நம் நடப்பிலும் எப்போதும் ஞாபகத்துக்கு வர வேண்டும். அப்போது தான் நாம் கேட்டதின் பலன் கிடைக்கும். நம்மால் ஹரி கதைகளைச் சரியாகக் கேட்க முடியாமலிருந்தாலோ அல்லது அவற்றை நம் இதயங்களில் வைக்க முடியாமலோ இருந்தால், அவைகளைக் கேட்பதால் உண்டாகும் ஆன்மீகப் பேராசைகள் நாம் எத்தனைப் பிறவிகள் எடுத்தாலும் வருவதில்லை.

ஸ்ரீ பக்தி சிந்தாந்த சரஸ்வதி பிரபுபாதா இந்த உலகம் முழுவதும் குறைகளால் நிரம்பப் பட்டுள்ளது என்று கூறினார். நம் உடல் குறை பாடுகளைக் கொண்டது. இப்படி அனைத்துமேக் குறை பாடுகள் உள்ளதாகத் தான் அமைந்துள்ளன. ஆனால் நாம் இந்த உலகத்தில் எத்தனையோ கஷ்டங்களுடன் தற்போது வாழ்ந்தாலும், இதில் எத்தனையோ குறைகளிருந்தாலும் நம் குறிக்கோள் ஒருபோதும் இந்தக் குறைகளைத் தீர்ப்பதில் இருக்கக் கூடாது. அதற்கு ஒருபோதும் நாம் முயற்சி செய்யக் கூடாது. இந்தக் குறைகள் இப்போது மட்டுமல்ல, கோடிக்கணக்கான வருடங்களுக்குப் பின்னும் கூட கண்டிப்பாக இருக்கவே செய்யும். மனிதப் பிறவியின் உண்மையான காரணத்தை நாம் இந்தப் பிறவியிலேயே உணர வேண்டும். நம் வாழ்க்கையின்

குறிக்கோள் என்ன? நாம் அதற்கு என்ன செய்ய வேண்டும்? இந்த மனிதப் பிறவி மிகவும் அரிதானது. இந்த மனிதப் பிறவியினால் மட்டும் தான் நாம் பகவானைச் சந்திக்க முடியும். எனவே நாம் கண்டிப்பாக இந்தப் பிறவியிலேயே அதைப் பெற முயற்சி செய்ய வேண்டும். நாம் நாற்பது வயது ஆவதற்கு முன்பாகவே இந்தக் குறிக்கோளை உறுதிப் படுத்திக் கொள்ள வேண்டும். காரணம் நமக்கு நாற்பது வயது ஆன பின்னர் வாழ்வில் புதிதாக எதையும் செய்வதற்கு ஆவலும் பலமும் குன்றிப் போய் விடுகிறது. நாம் சில சமயங்களில் நம் மனதை ஏதாவது புது விஷயங்களில் ஈடுபடுத்துவதற்குப் பிரயாசைப் படுவோம். ஆனால் அந்த ஆவலும் உறுதியும் காலப் போக்கில் குறைந்து, பின்னர் நின்று போய் விடுகிறது. திரும்ப அது வருவதில்லை. வெகு சிலர் தங்கள் நாற்பது வயதுக்குப் பின்னர் வாழ்க்கையில் புதிய திருப்பத்தை உண்டு பண்ணியிருந்தாலும் பொதுவாக இது எல்லோருக்கும் சாத்தியப் படுவதில்லை. அவர்கள் தங்கள் பழக்க வழக்கங்களைத் தான் பின்பற்றுவார்கள். எனவே நீங்கள் இப்போது எந்த நிலையிலிருந் தாலும் இந்தச் சிறு வயதிலிருந்தே வாழ்க்கையின் உண்மையான குறிக்கோளுக்கேற்ற பாதைகளைப் பின்பற்றத் தொடங்கி விட வேண்டும். அதன் பலன்கள் உடனடியாகவோ வெகு காலம் கழித்தோ வந்து சேரும். அது ஒரு தனி விஷயம். ஆனால் உனது தற்போதைய வயது மிகவும் முக்கியமானது. எனவே ஒருவன் நாற்பது வயது ஆவதற்கு முன்பாகவே மனிதப் பிறவியின் குறிக்கோளில் செல்லுவதற்காக உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும். இல்லாவிடில், பின்னர் ஐம்பது வயதாகும். அப்போது இவையெல்லாம் மிகவும் தாமதமாகி விடும். அப்போது ஒருவேளை நாம் என்ன செய்ய வேண்டும் என்பதைக் கேட்கலாம். ஆனால் அதில் உறுதியாக நின்று செய்வதற்கான வலிமை இருப்பதில்லை.

கோபகுமாரின் பெயரில் வரும் "குமார்" என்றால் என்ன பொருள்? அவர் மிகவும் சிறு பிராயத்திலேயே தன் குருவைச் சந்தித்தார். அதன் பின் இலட்சக் கணக்கான வருடங்களுக்குப் பின்னர் பகவான் கருணையைப் பெறும் போது கூட அவர் குமாரனாகத் தான் இருந்தார். தன் குருவைச் சந்தித்த நாளிலிருந்தே அவர் சித்தாந்தங்களை அறியும் பாக்கியத்தைப் பெற்று அவற்றில் உறுதியாக இருந்தார். தன் கோபால மந்திரத்தை ஜெபிப்பதை ஒருபோதும் விடவில்லை. எங்கே சென்றாலும் அந்த உறுதியான பாதையை ஒருபோதும் மாற்றியதே யில்லை. நாம் இந்த உதாரணத்தைப் பின்பற்ற வேண்டும். அவ்வாறு நாம் சரியான பாதையில் உறுதியாக இருந்தால் ஸ்ரீ கிருஷ்ணரே நம் குருதேவராகவோ, அல்லது ஒரு வைஷ்ணவ ரூபத்திலோ, ஒரு சிக் ஷ குருவாகவோ, மற்ற ரூபங்களிலோ வந்து நம் சாதகங்கங்களுக்கு வேண்டிய உதவியை அளிப்பார். நாரத முனிவரை கோபகுமாரிடம் அனுப்பியது யார்? அவர் வைகுந்தத்தில் நாரத முனிவரைச் சந்தித்தார். இதே போல் ஒவ்வொருவரின் இதயத்திலும் அந்தர்மியாக வீற்றிருக்கும்

பகவான் வாழ்க்கையின் குறிக்கோளை அடைவதற்காக உதவி செய்கிறார். ஒருவர் பகவானை அடைவது எப்படியென்பதை உபதேசித்தால் அவரிடம் குருவின் அடையாளம் உள்ளது என்று அர்த்தம். இதே காரணத்திற்காகத் தான் நாரத முனிவர் உலகங்கள் எங்கிலும் சுற்றித் திரிகிறார். அப்படிப் பட்ட ஒருவரை நீங்கள் சந்திக்கும் போது, அவர் வழியாகப் பகவான் உதவியை வழங்குகிறார்.

ஜகத் குருவான பகவான் ஒரு தந்தையைப் போன்றவர். அதே போல் தீக் ஷ குருவும் ஒரு தந்தையைப் போல் தான். ஆனால் ஒரு தந்தை தன் மகளிடம் அவள் தன் கணவனுக்கு எவ்வாறு சேவை செய்ய வேண்டும் என்பதைப் பற்றிக் கூற மாட்டார். அவள் தன் கணவனிடம் தனியாக இருக்கும் போது எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதை அவர் சொல்லிக் கொடுக்க மாட்டார். அதை அவளது தாயார் கூடச் சொல்லிக் கொடுக்க மாட்டாள். அப்படியென்றால் இதை யெல்லாம் சொல்லிக் கொடுப்பது யார்? அவளது நெருங்கிய தோழி தான் இதையெல்லாம் சொல்லிக் கொடுப்பாள்.

இதே உதாரணம் தான் ஸ்ரீ கிருஷ்ண சந்திரருக்கும் நடந்தது. ஸ்ரீ நந்த பாபா தன் சொந்தத் தந்தையாகயிருந்தாலும், கூடவே ஒன்றாக வாழ்ந்த நந்த பாபாவின் இளைய சகோதரனான சுனந்தாவிடம் தான் கிருஷ்ணர் மிக நெருங்கிய சினேகம் வைத்திருந்தார். சாஸ்திரங்களிலெல்லாம் ஸ்ரீ கிருஷ்ணர் சுனந்தாவிடம் தான் அதிகமான நெருக்கம் வைத்திருந்தார் என்று எழுதப்பட்டுள்ளது. சுனந்தா, கிருஷ்ணரை விட கொஞ்சம் தான் வயது அதிகமாக இருந்தாலும், அவர் நந்த மகாராஜாவின் கடைசிச் சகோதரன். எனவே கிருஷ்ணருக்கு சுனந்தாவும் நந்த பாபாவும் நெருங்கியவர்கள். சுனந்தாவும் கிருஷ்ணரும் எதைப் பற்றியும் சண்டை பிடிப்பதற்கோ வாக்கு வாதம் செய்வதற்கோ தயங்க மாட்டார்கள். ஆனால் கிருஷ்ணர், தன் தந்தையை எதற்காகவாவது சம்மதிக்க வைக்க வேண்டுமானால் நேரடியாக சுனந்தாவிடம் தான் போவார். சுனந்தா எப்படியாவது நந்த பாபாவைச் சம்மதிக்க வைத்து விடுவார். சுனந்தாவும் கிருஷ்ணரிடம் மிகவும் நெருக்கமான அன்பு வைத்திருந்தார்.

ஒரு தந்தையைப் போல் பகவானும் கொஞ்சமாகத் தான் அறிவுரைகளை அளிப்பார். ஆனால் அறிவுரைகளை வழங்குவது நிச்சயம். தன் இன்னொரு ரூபம் மூலமாகவோ, அல்லது அவருக்குப் பிரியமான இன்னொருவரை அனுப்பியோ, வேண்டிய அறிவுரைகளை வழங்கி விடுவார். ஒரு சிக் ஷ குருவின் ரூபத்தில் எல்லாவற்றையும் உபதேசிக்கிறார். கோபகுமாரின் சிக் ஷ குருவான ஜெயந்தா உபதேசிக்காதவைகளைக் கூட சிக் ஷ குருவான நாரத முனிவர் கோபகுமாருக்கு உபதேசித்தார். ஸ்ரீ சைதன்ய சரிதாம்ருதா மற்றும் முக்கியமான சாஸ்திரங்களில் தீக் ஷ குருவின் மகிமைகளைப் பற்றி

எந்த அளவு விவரிக்கப் பட்டுள்ளதோ அதே அளவுக்கு சிக் ஷ குருவின் மகிமைகளைப் பற்றியும் விவரிக்கப் பட்டுள்ளது.

கிருஷ்ணரின் பிரிய பக்தர்கள் தங்களது பிரேமையினால் விப்ரலம்ப-பாவா என்ற பிரிவுணர்வு கொண்ட கவலையில் தான் எப்போதும் இருப்பார்கள். இந்த மிகவும் விஷேஷமான ஒரு பக்தி நிலையை ஒரு பிரேம பக்தன் மட்டுமே அறிவான். மற்றவர்களால் அதை அறிந்து கொள்ளவும் முடியாது. அப்படியே அவர்கள், நேரில் கண்டால் கூட, அவர்கள் பயந்து போவதற்குத் தான் வாய்ப்பு உள்ளது. ஒரு சமயம், ஜெகன்னாத் பூரியில் ஸ்ரீ சைதன்ய மகாபிரபு அங்குள்ள சமுத்திரத்தை யமுனா நதி என்று எண்ணிக் கொண்டு அதனுள் குதித்து விட்டார். ஒரு மீனவன் படகில் சென்று மீன் பிடிப்பதற்காகக் கடலில் விரித்த வலையில் அவரது உடல் சிக்கிக் கொண்டது. அவரது உடலோ பற்பல நாட்களாக எதுவுமே உண்ணாதவரின் உடலைப் போல் பலவீனமானதாகவும் எளிதில் உடைந்து விடுவதைப் போலவும் காணப் பட்டது. அந்த மீனவன் வலையைப் பின்னர் இழுக்கும் போது, அது மிகவும் கனமானதாக இருந்ததால், "ஓ, நான் இன்று மிகவும் பெரிய மீனைப் பிடித்திருக்கிறேன்" என்று மிகவும் மகிழ்ச்சி யடைந்தான். வலையை இழுத்துத் தன் படகில் போட்டுக் கொண்டுக் கரையை அடைந்தான். அப்போது தான் அவன் வலையினுள் உற்றுப் பார்த்தான். மனித உடலைக் கண்டதும் பயத்தினால் அலறினான். "என்னே இது! ஒரு இறந்த உடலா என் வலையில் சிக்கியது!" என்று அங்கலாய்த்தான். ஸ்ரீ சைதன்ய மகாபிரபுவின் உடலைத் தொட்டுப் பார்த்தான். அவ்வளவு தான்! அந்த மீனவன் மேல் பிரேமை புகுந்தது. ஆனால் அது என்னவென்று அறியாததால் ஏதோ பேய் பிசாசு தன்னைப் பிடித்துக் கொண்டது என்று எண்ணினான். நெஞ்சில் பெரும் பயம் பிடித்தது! அந்த இடத்தை விட்டு, வலையையும் எறிந்து விட்டு வெகு வேகமாக ஓட ஆரம்பித்தான்.

அப்போது சமீபத்தில் ஸ்ரீ சொரூப தாமோதரர், ஸ்ரீ ராய ராமானந்தர், ஸ்ரீ நித்யானந்த பிரபு, ஸ்ரீ அத்வைத ஆச்சாரியார் மற்றும் அனைத்துப் பக்தர்களும் ஸ்ரீ சைதன்ய மகா பிரபுவைத் தேடி வந்து கொண்டிருந்தனர். பித்துப் பிடித்தவனைப் போல் சிரித்தும், ஆடியும், பாடியும், "ஹரி! ஹரி!" என்று அழுகையுடன் கூவிக் கொண்டும் ஓடிக் கொண்டிருந்த மீனவனைக் கண்டனர்.

"என்ன நடந்தது?" என்று சொரூப தாமோதரர் அந்த மீனவனிடம் கேட்டார்.

"ஓ! என்னை ஒரு பேய் பிடித்துக் கொண்டு விட்டது!" என்று மீனவன் பதிலளித்தான்.

அந்த மீனவனின் நிலையை சொரூப தாமோதர் உடனேயே அறிந்து கொண்டார். "இந்தப் பேயை எப்படித் துரத்துவது என்று எனக்குத் தெரியும். அதற்கு வேண்டிய மந்திரம் என்னிடம் உள்ளது" என்று கூறியவாறு மீனவனைச் சில முறை கன்னத்தில் அறைந்தவாறு ஒரு மந்திரத்தை உச்சரித்தார். மெதுவாக அந்த மீனவன் தன் சுய நிலைக்கு வந்தான். பின் சொரூப தாமோதர், "என் நண்பனே, அந்தப் பேயை எங்கே பார்த்தாய் என்று சொல்ல முடியுமா?" என்று கேட்டார்.

இன்னமும் பயத்திலிருந்த மீனவன், "நான் தூரத்திலிருந்து தான் அதைக் காட்டுவேன். அதன் பக்கத்தில் நான் போகவே மாட்டேன்" என்றான்.

"சரி, காட்டு" என்றார் சொரூப தாமோதர்.

சிறிது தூரம் நடந்த பின் தூரத்தில் நின்று கொண்டு அந்த மீனவன் காட்டினான். ஒரு குழந்தை, பிறப்பதற்கு முன்னால் எவ்வாறு பந்து போல் சுருண்டு தாயின் வயிற்றிற்குள் படுத்திருக்குமோ அவ்வாறு சைதன்ய மகாபிரபு வலையினுள் சுற்றியிருந்தார். அவரது உடம்பில் உள்ள மூட்டுக்கள் அத்தனையும் பிரிந்து முழு உடம்பும் இளகி நீண்டு காணப்பட்டது. சொரூப தாமோதர் மீனவனிடம், "சரி ... நீ இனி போகலாம். இந்தப் பேய் இனி உன்னை ஒருபோதும் தொந்தரவு செய்யாது" என்று கூறி அவனை அனுப்பினார். கூடியிருந்த பக்தர்கள் அனைவரும் மகாபிரபுவை வலையிலிருந்து வெளியே எடுத்துக் கடற்கரை மணலில்  கிடத்தி, உடலை நன்றாகக் கழுவினார்கள். அவரைச் சுற்றி நின்று கீர்த்தனைகளைப் பாட ஆரம்பித்தனர். பின்னர் ஸ்ரீ சைதன்ய மகாபிரபு மெதுவாகத் தன் சுய உணர்வுக்குத் திரும்பினார்.

இங்கே, மகாபிரபுவின் நிலையைக் கண்ட மீனவன் அவரை ஏதோ பேய் பிடித்திருக்கிறது என்று நினைத்தான். இதே போல் ஒரு சாதாரண மனிதன் இப்படிப் பட்ட மிகவும் உச்ச நிலையிலுள்ள பக்தியைப் பார்த்தால் அவன் உண்மையிலேயே தனக்குப் பக்தி வேண்டுமென்று நினைப்பானா? ஆனால் இதை பிரேம பக்தர்கள் நன்றாக அறிவார்கள். அவர்கள், "ஓ! இப்படிப்பட்ட சமாதி நிலையில் நான் எப்போது கிருஷ்ணரைப் பார்ப்பேன்? இந்த மாதிரியான சந்தர்ப்பம் எனக்கு எப்போது கிடைக்கும்?" என்று ஏங்குவார்கள்!

கிருஷ்ணரை அடைவதற்காக ஒரு உண்மையான பக்தனோ, அவரைப் பிரிந்திருப்பதால் உண்டாகும் அளவில்லாத கவலையில் தான் எப்போதும் காணப்படுவான்.  அந்தக் கவலை எவ்வளவு தூரம் இருக்கும்? இந்த உலகத்திலுள்ள கவலையைக் கோடிக்கணக்கில் பெருக்கினால் எப்படியிருக்கும்? அவ்வளவு தூரம் கவலையாக இருக்கும். இப்படித் தான் ஒரு பக்தனின் உணர்வும் இருக்க வேண்டும்.

அவனால் ஒருபோதும் வார்த்தைகளால் அதை வர்ணிக்கவே முடியாது. பகவானால் கூட இதை விவரிக்க முடியாது. இந்த நிலையிலிருக்கும் எவராலும் அதை வார்த்தைகளால் கூறவே முடியாது. பிரேம பக்தனின் நிலையையும் அடையாளங்களையும் எந்த சாஸ்திரத்திலும் இது வரையில் முழுவதுமாக விவரிக்கப்பட்டதேயில்லை. ஸ்ரீமத் பாகவதத்தில், கோபியர்கள் எவ்வாறு பைத்தியம் பிடித்தவர்கள் போலும் குடி வெறியில் இருப்பவர்களைப் போலும் உணர்வில்லாமல் பேசிக் கொண்டனர் என்பதைப் பற்றியும் மிகவும் சொற்பமாக எழுதப் பட்டுள்ளது. அதைப் பற்றி விரிவாக எழுதப் படவில்லை. ஏனென்றால் அதை எவராலும் விவரிக்க இயலாது. ஆனால் நாம் ஒன்றேயொன்றை நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும்: ஸ்ரீமதி ராதிகா மற்றும் கோபியர்கள் ஸ்ரீ கிருஷ்ணரைப் பிரிந்த போது ஏற்பட்ட துயரம் ஒரு பேரானந்தத்தின் தோற்றமே என்பதை அறிய வேண்டும். அந்தத் துயரம் மகா பெரும் ஆனந்தத்தின் உச்ச நிலையாகும்.

உதாரணமாக, மிகவும் உஷ்ணமான சமயங்களில் மழையினால் ஒரு சில துள்ளிகள் விழும் போது அது நமக்கு மிகவும் ஆனந்தமாக இருக்கிறது. கார்த்திகை மாதம் ஆரம்பித்து இதமாகக் குளிர ஆரம்பிக்கும் போது அது நமக்கு மிகவும் நன்றாக இருக்கிறது. எனவே இதமான குளிர் நமக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. ஆனால் மிகவும் குளிராகி, இரவெல்லாம் பனிக் கட்டிகள் பிடிக்கும் அளவுக்குக் குளிரும் போது அது நமக்கு நன்றாகயில்லை. இங்கே உஷ்ணமும் குளிரும் நேர் எதிரானவைகளாக இருந்தாலும், நாம் ஒரு பனிக் கட்டியைக் கையில் வைத்துப் பிடித்திருந்தால் அது நம் கையில் எரியும் உணர்வை ஏற்படுத்துகிறது. குளிரின் ஒரு அற்றத்தின் தோற்றமே எரியும் தன்மை.

இதே போல், பக்தி உலகத்தில் ஒரு பக்தனுக்குக் கிருஷ்ணப் பிரேமை மிகவும் பெருகி அவை கட்டியாகும் போது, அவன் விப்ரலம்பா என்ற நிலையை அடைகிறான். அப்போது அது அளவில்லாத கவலையைக் கொடுப்பது போல் தோன்றும். ஆனால் அது உண்மையில் கவலை இல்லை. அது ஆனந்தத்தின் சிகரம்! நம்மால் இதை விளக்க முடிவதில்லை. அப்போது எந்த விதமான அடையாளங்கள் உண்டாகும் என்பதையும் எவராலும் விவரிக்க இயலாது. கம்பீராவில் ஸ்ரீ சைதன்ய மகாபிரபு அடைபட்டிருந்த போது, அவர் சுவரில் தன் முகத்தைத் தேய்க்கும் போது ஸ்ரீமதி ராதாராணியின் எந்த விதமான பக்தி பாவம் அவரிடம் இருந்தது? ஸ்ரீமதி ராதிகாவால் உணரப்பட்ட அதே பக்தி பாவம் ஸ்ரீ சைதன்ய மகாபிரபுவால் உணரப் பட்டதைப் பற்றி எங்கே விவரிக்கப் பட்டுள்ளது? எங்குமேயில்லை. எனவே இதை ஸ்வஸம்வேத்ய தஸா என்று அழைக்கிறார்கள். அதாவது இதை ஒருவர் நேரடியாக மட்டுமே உணர்ந்து அறிய முடியும். எவராலும் இதை விவரிக்க முடியாது. நாம் கிருஷ்ணரைச் சந்திப்பதால் உண்டாகும் பேரானந்தமான அளவில்லா இன்ப உணர்ச்சியை நம்மால்

எவருக்கும் விவரிக்க முடியாது.

எனவே நாரதர் கோபகுமாரிடம், "என் அன்பு நண்பனே, ஸ்ரீ கிருஷ்ணரைச் சந்திக்க வேண்டும் என்ற பேராசை உனது மந்திரத் தினால் உன்னிடம் எழுந்துள்ளது. இது ஸ்வஸம்வேத்ய தஸா. உன்னைக் கவலைக்குள் ஆக்கியிருக்கும் இந்த விஷயத்தை என்னால் முழுவதுமாக உனக்குப் புரியும்படி விளக்க முடியாதென்றாலும் நான் சொற்பமாக விளக்க முயல்கிறேன். பிரேமையின் இயற்கை அப்படிப்பட்டது. உனது உள் சொரூபத்தின் ஆசையான பிரேமையை இங்கே நீ திருப்திப்படுத்த முடியாது. உன் சொரூபம் சக்கிய பாவத்தைச் சேர்ந்தது. அதற்கும் மேலாக "விஸ்ரம்ப - சக்கிய பாவா"வும் உள்ளது. இந்த விஸ்ரம்ப-சக்கிய பாவாவை சித்த லோகத்திலிருந்து சதாசிவ லோகம் மற்றும் மேலான வைகுந்தம், அயோத்தியா, மதுரா அல்லது துவாரகா அங்கு எங்கேயுமேக் காண முடியாது. இந்த இடங்களில் உன்னால் கிட்ட முடியாது. அது பிரஜாவில் மட்டும் தான் காணப் படுகிறது" என்று கூறினார்.

இப்படிக் கூறிய பின், நாரதர் அங்கே சுற்றிலும் நோட்டமிட்டார். அப்போது இலட்சுமி தேவியோ, ஸ்ரீமன் நாராயணரின் நித்திய சேவகர்களோ எவரும் பக்கத்தில் இல்லை. எனவே இந்த உரையாடலை வேறு எவரும் கேட்கவில்லை என்பதை உறுதிப் படுத்திக் கொண்டார். ஒரு குறிப்பிட்ட பக்தி பாவத்திலிருக்கும் ஒருவரிடம் அதை விடவும் உயர்ந்த இன்னொரு பக்தி பாவத்தைப் பற்றிக் கூறினால், "ஓ, இவர் பகவானைப் பற்றித் தவறாகக் கூறுகிறார்" என்று தான் எண்ணுவார். எனவே தான் எல்லோரும் இப்படிப்பட்ட விஷயங்களை அறிவது சரியல்ல. அதனால் தான் நாரதர் சுற்றிலும் பார்த்து அங்கே ஸ்ரீ இலக்சுமி தேவியின் சேவகர்களோ, நெருங்கியவர்களோ, கருடன் மற்றும் எவராவது பக்கத்தில் உள்ளார்களா என்று நோட்டமிட்டார். எவருமில்லை என்பதை அறிந்து கொண்டு மேலும் தொடர்ந்து பேச ஆரம்பித்தார். "உன்னுள் அளவற்ற பக்தி உள்ளது. உன்னால் சொர்க்க போகங்களையோ, முக்தியையோ மிகவும் எளிதாக அடைய முடியும். உனக்கு வைகுந்தத்திலிருக்கும் பிரேமையையும் மிக எளிதாக அடைய முடியும். ஆனால் ஸ்ரீ ராதாவிடமும் ஸ்ரீ கிருஷ்ணரிடமும் நீ பக்தியை நாடுகிறாய். இது மிகவும் கடினமானது மட்டுமல்ல, மிகவும் அரிதானது. குறிப்பிட்ட சாதகங்களைச் செய்து சொர்க்க லோகங்கள், முக்தி மட்டுமின்றி வைகுந்தத்தைக் கூட ஒருவன் அடைய முடியும். ஞான யோகத்தை ஒருவன் கடைப் பிடித்து எளிதாக முக்தியை அடைய முடியும். கர்ம யோகத்தைக் கடைப்பிடித்து ஒருவன் எளிதாகச் சுவர்க்க லோகங்களை அடைய முடியும். ஆனால் கோடிக் கணக்கான முயற்சிகள் செய்தாலும் கூட ஒருவனால் பக்தியை அடைய முடியாது. உனது சொந்த முயற்சியினால் அதை ஒரு போதும் அடையவே முடியாது.

அப்படியென்றால் அதை எப்படிப் பெறுவது? ஸ்ரீ ராதாவிடமும் ஸ்ரீ கிருஷ்ணரிடமும் முழுவதுமாக ஒருவன் சரணடைந்து அவர்களின் கருணைக்காக யாசித்தால் மட்டும் ஒருவேளை அது கிடைக்கலாம். நமது முயற்சியோ ஒன்றே ஒன்று தான்: நாம் பிரார்த்திக்கலாம். நமது பிரார்த்தனை என்ன? முழுவதுமாக நம் ஆத்மாவையே அவர்களிடம் சமர்ப்பிக்க வேண்டும். இது தான் நம் ஒரே பிரார்த்தனை. பிரேமையை நம் சொந்த முயற்சிகளால் அடைய முயலலாமா? அது கண்டிப்பாக முடியாத ஒரு காரியம். நீ ஆசைப்படுவது மிக மிக அபூர்வமானது. அதை அடைய முடியும், ஆனால் மிக மிகக் கடினமானது."

*கதாசித் ஏவ கஸ்மைசித்*
*தத்-ஏகார்த்த-ஸ்ப்ருகாவதே*
*தம் தத்யாத் பகவான் பக்திம்*
*லோக பாக்யாய தீமதே ---(பிருகத் பாகவத் 2.4.233)*

ஒருவன் பிரஜப் பிரேமையின் மீது ஆசைப்பட்டால், தன்னுள் அதன் மேல் உண்மையான பேராசை எழும்பி வந்தால் மட்டுமே அது கிடைக்கப் படும். இந்தப் பேராசை வரவில்லையென்றால் ஒரு போதும் அது கிடைப்பதில்லை. ஒருவன் ஒரு பொருளின் மீது மிகவும் அதிகமாக ஆசைப்படும் போது அவன் லஞ்சம் கொடுத்தோ அல்லது களவு செய்தோ, ஏமாற்றியோ, சண்டை செய்தோ கூட அதை எப்படியும் பெறுவதற்கு முயலுவான். இப்படிப் பட்ட பேராசையே பிரேம பக்திக்கு மூல காரணமாகும். அப்படிப்பட்ட தெய்வீகமான பேராசை, பகவானோ அல்லது அவரது ரசிக பிரேம பக்தர்களோ நம்மிடம் கருணை கொண்டால் மட்டுமே அது உண்டாகும். எவரிடம் விஷேஷமான ஆவல் இருக்கிறதோ அவருக்கு மட்டுமே கிருஷ்ணர் எல்லாவற்றிலும் மேலான பொக்கிஷங்களை வழங்குவார். தகுதியில்லாதவர்களுக்கு அவர் அதை வழங்க மாட்டார்.

இந்தத் தெய்வீகப் பேராசை எப்படியெல்லாம் வடிவங்கள் எடுக்கின்றன? "நான், சுபால் கிருஷ்ணருக்குச் சேவை செய்ததைப் போல் செய்ய வேண்டும், அல்லது மதுமங்கல், ஸ்ரீதாமா மற்றுமுள்ள கோபர்களைப் போல் சேவை செய்ய வேண்டும்" என்று எண்ண வைக்கிறது. ஸ்ரீ தாமா கிருஷ்ணருக்குச் சேவை செய்வதற்கும் சுபால் சேவை செய்வதற்கும் ஏதாவது வித்தியாசங்கள் உள்ளதா? மிகப் பெரிய வித்தியாசங்கள் இருக்கலாம்! ஸ்ரீ தாமுக்கு சுபாலை விடவும் அதிகமாகக் கிருஷ்ணரிடம் நெருக்கம் இருக்கலாம். ஆனால் இங்கே ஒரு வித்தியாசத்தை நாம் கவனிக்க வேண்டும்: ஸ்ரீ தாமா ஸ்ரீமதி ராதிகாவின் தம்பி. எனவே ஸ்ரீ தாமாவிடம் கிருஷ்ணர் மனந்திறந்தபடி நட்பு வைக்க முடியாது. ஏனென்றால் ஸ்ரீமதி ராதா ராணிக்குத் தெரியக் கூடாது என்று மறைத்து வைத்திருக்கும் இரகசியங்களும் ஸ்ரீதாமா வழியாகப் போய் விடும் சந்தர்ப்பம் உள்ளது. ஆனால் சுபாலிடம்

கிருஷ்ணர் எந்த விதமான விஷயங்களையும் சங்கோஜமில்லாமல் இதயத்தைத் திறந்து சுதந்திரமாகப் பேசலாம். கிருஷ்ணருக்கும் சுபாலுக்குமிடையில் எந்த தூரமும் கிடையாது. இப்படி, கோபர்களுக்கிடையிலும் சில வித்தியாசங்கள் உள்ளன. கோபகுமார் சுபாலைப் போல் ஆக வேண்டும் என்று பேராசைப் படுகிறார். தான் சுபாலைப் போல் எப்போதும் கிருஷ்ணரின் அருகில் இருந்து பசுக்களை மேய்க்கச் செல்ல வேண்டும் என்று ஆசைப் படுகிறார்.

உதாரணமாக, கிருஷ்ணர் சிந்தாமணிகளை விநியோகம் செய்கிறார் என்று வைத்துக் கொள்வோம். அவர் யாருக்கெல்லாம் அவற்றை விநியோகம் செய்வார்? எவரெல்லாம் அதைப் பெறுவதற்குத் தகுதி பெற்றவர்களோ அவர்களுக்கு மட்டுமே விநியோகம் செய்வார். ஆனால் அதைப் பெறத் தகுதியற்றவர் ஒருவர் வந்தால் அவருக்கு என்ன வழங்குவார்? சிந்தாமணிக்குப் பதிலாக ஒரு போலியான ஆனால் சிந்தாமணியை விடவும் பளபளக்கும் ஒரு கல்லைத் தான் கொடுப்பார். எவரிடம் மிகவும் அளவற்ற விஷேஷமான ஆசை இருக்கிறதோ அவருக்கு மட்டுமே உயர்ந்தவற்றவைகளை அளிப்பார். எனவே தான் அவர் நாரத முனிவரைக் கோபகுமாரிடம் அனுப்பி, "போய் பேராசையை இன்னமும் அதிகரிக்க வை" என்று கட்டளையிட்டார். ஆனால் வெறுமனே சிறு காலம் மட்டும் இப்படிப் பேராசை இருந்தால் அது போதாது. அந்தப் பேராசை ஒரு படரும் கொடியைப் போன்றது. அதற்கு நீ தண்ணீர் விட்டுப் பாதுகாப்பு அளிக்க வேண்டும். அப்படியானால் அது மேலாக வளர்ந்து பிருந்தாவனம் வரைக்கும் சென்று விடும்!

கிருஷ்ணர் ஒருவனிடம் எவ்வாறு பேராசையை வளர்க்கிறார்? ஒரு தடவை நாரத முனிவர் மந்திரத்தை ஜெபித்துக் கொண்டிருந்தார். தொடர்ந்து இடைவிடாமல் அவர் ஜெபித்ததால் சொரூப சித்தியை அடைந்தார். நான்கு கரங்களுடன் மிகவும் அழகான உருவம் ஒன்று தன் முன்னால் தோன்றி, பின்னர் அது உடனே மறைந்து விட்டது. இதனால் அவருக்கு இப்போது எவ்வளவு தூரம் பேராசை கூடியது? அவர் கதறிக் கதறி அழ ஆரம்பித்தார். பின்னர் ஆகாயத்தில் அசரீரியாக, "ஒரே பிறவியில் இது கிடைக்காது. இந்த உடல் மூலமாக என்னிடம் நேரடித் தொடர்பு வைக்க முடியாது. இப்போது நீ சொரூப-சித்தியில் தான் இருப்பாய். உடல் உருவம் மாறாது. பின்னர் உன் அடுத்த பிறவியில் இந்த உருவத்தை விட்டு விட்டு வஸ்து-சித்தியை அடைந்து என்னிடம் நிரந்தரமாக வந்து சேர்ந்து விடுவாய்" என்று கூறியது.

எனவே முதலில் சிக் ஷ குரு, பின் சிக் ஷ குரு, அதன் பின்னர் பகவானே குருவாக வந்து நம் பேராசையை அதிகப் படுத்துகிறார். இது வரையிலும் கோபகுமாரின் பேராசை அவரை வைகுந்தம் வரைக்கும் கொண்டு சென்றுள்ளது. ஆனால் இப்போது பேராசையை இன்னமும்

அதிகரிக்க வைப்பதற்காக நாரத முனிவர் வந்துள்ளார். இவ்வாறு பேராசையைக் கூட்டிக் கூட்டி கடைசியாகக் கிருஷ்ணர் எல்லாவற்றுக்கும் மேலான பொக்கிஷத்தையேக் கொடுத்து விடுவார். ஆனால் அது உண்மையில் எவருக்கு முழுமையாகப் பேராசை உள்ளதோ அவருக்கு மட்டுமே கொடுக்கப் படுகிறது.

ஒரு வடுமாங்காய் எவ்வாறு படிப்படியாக மாம்பழமாக ஆகிறதோ அதே போல் தான் பிரேம பக்தியும் படிப்படியாகப் பக்குவப் படுகிறது. சில மாம்பழங்கள் மிகவும் இனிப்பாகவும் மணமுள்ளவை களாகவும் நன்றாக உள்ளன. அவற்றை நாம் சிறிது ருசி பார்த்தாலே போதும். பின்னர் அதை முழுவதும் சாப்பிடும் வரை நிறுத்தவே மாட்டோம். திரும்பத் திரும்ப அந்த மாம்பழத்தை வாயில் போட்டுச் சுவைத்துக் கொண்டேயிருப்போம். அதில் கடைசி சொட்டு ரசம் இருக்கும் வரையிலும் அதை எறியவே மாட்டோம்.

இப்படிப் பட்ட முழுக்க முழுக்கப் பிரேமையை அதன் பழுத்த நிலையில் இருப்பதை எங்கேக் காண்போம்? பிரஜ வாசிகளிடம் நாம் சம்பந்தம் கொண்டால் மட்டும் இதை நாம் காணலாம்! எனவே கிருஷ்ணரின் நித்திய-சித்த சகாக்களுடன் நெருக்கம் வைத்திருந்தால் இதை நாம் அவர்களிடம் பரிபூரணமாகக் காணலாம். வேறு எவரிடமும் காண முடியாது. கோபகுமாரின் ஆசை வைகுந்தத்தில் இருந்த போது அது முழுமையடையவில்லை. அது இன்னமும் பழுக்காமலேயேத் தான் இருந்தது. பழுக்கவில்லை என்றால் என்ன அர்த்தம்? சில சமயங்களில் மாங்காயும் மஞ்சள் நிறத்துடன் இருக்கும். ஆனால் உள்ளேக் கடினமாகவும் ரசம் எதுவுமில்லாமலுமிருக்கும். அதைப் பிழிந்தால் எந்த ரசமும் வருவதில்லை.

எனவே, ஒருவரின் பிரேம பக்தி முழுவதுமாகப் பழுக்கும் போது எவராலும் அந்தத் தத்துவத்தை விவரிக்கவே முடியாது என்று நாரதர் கூறுகிறார். ஏன்? ஸ்ரீமதி ராதிகாவினால் கூட அதை விவரிக்க முடியாது. உண்மையிலேயே ஒரே ஒருவர் இதைப் பற்றி விவரிக்க இயலுமென்றால் அது ஸ்ரீமதி ராதிகாவாகத் தான் இருக்க முடியும்.

ஸ்ரீமதி ராதிகா எப்போதும் முழுவதுமாக இந்த ரஸ பாவத்தில் மூழ்கியிருந்தாலும் கூட அதை ஸ்ரீமதி ராதா ராணியினால் விவரிக்க முடியாது. ஆனால் தூரத்திலிருக்கும் மற்றவர்களால் மிகச் சிறிதளவில் இதை விவரிக்க முடியும். ஒருவன் பக்தி ரசத்தினுள் மூழ்கியிருக்கும் போது அவனால் எப்படி அதைப் பற்றிப் பேச முடியும்? அவனால் எதையுமே பேச முடியாது. ஸ்ரீ சைதன்ய மகாபிரபுவின் பிரேம பாவங்களை விவரிக்கும் எந்த ஒரு சாஸ்திரத்திலும் கிடையாது. மகாபிரபுவும் கூட பிரேமையைப் பற்றிப் பேசியதாக நாம் காண முடியாது. ஒரு சில இடங்களில் சொரூப தாமோதர் தன் கவிதை

களிலும், ரூப கோஸ்வாமி சிறிதளவிலும் இதைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளனர். அவற்றை ரூப கோஸ்வாமியிடமும் ரகுநாத கோஸ்வாமியிடமுமிருந்துக் கேட்டு, கிருஷ்ண தாஸ கவிராஜ கோஸ்வாமி கொஞ்சம் எழுதியுள்ளார். ஆனால் அவரால் முழுவதுமாக விவரிக்க முடியவில்லை.

எனவே, நாரதர் கூறுகிறார்: "பிரேமையைப் பற்றி நான் என்ன கூறுவேன்? அதன் சில அடையாளங்களை மட்டும் தான் நம்மால் பேச முடியும். ஆனால் அதைக் கேட்கும் ஜனங்களில் பெரும் பான்மையோரும் தப்பாகவேப் புரிந்து கொள்கிறார்கள். நாம் சில சமயம், "ஐயோ! ராதிகா கிருஷ்ணரின் பிரிவினால் துடி துடித்துச் சாவும் நிலையில் இருக்கிறாள். வேதனையில் கதறி அழுகிறாள். பாவம் இந்த ஏழைப் பெண் உணர்வின்றியேப் போய் விட்டாள். வெகு நேரமாக எந்த விதமான உணர்ச்சியும் இல்லாமல் இருந்தாள். கண்களிலிருந்து பாய்ந்த கண்ணீரில் அவளது ஆடைகளெல்லாம் நனைந்து விட்டன. கிருஷ்ணரின் பாதங்கள் படிந்திருந்த புழுதி மண்ணை எடுத்துத் தன் புடவை மற்றும் அனைத்து ஆடைகளிலும் தேய்த்தாள். கிருஷ்ண ருக்காக அவள் அழுத கண்ணீராலும், கிருஷ்ணரின் பாத தூசிகளாலும் ராதிகாவின் ஆடைகள் அனைத்தும் அழுக்காகின. ஆனால் அவற்றை அவள் மாற்ற மறுத்தாள். கிருஷ்ணருக்காக அழுத கண்ணீராலும் கிருஷ்ணரின் பாதத் தூசிகளாலும் அழுக்கடைந்த ஆடைகளைத் தவிர வேறெந்த ஆடைகளையும் உடுக்கவே மாட்டேன் என்ற உறுதியாக இருக்கிறாள்" என்று கவலையுடன் கூறுவதைக் கேட்போம். ஆனால் இதைக் கேட்கும் பெரும் பாலான ஜனங்கள், "ஐயோ! இது என்னே பெரிய வேதனை!" என்று தான் நினைப்பார்கள்.

உத்தவா கிருஷ்ணர் கொடுத்த தூதுச் செய்திகளைக் கொண்டு பிருந்தாவனத்திற்கு வந்த போது பிரஜ வாசிகளின் நிலையைக் கண்டு மிகவும் ஆச்சரியப் பட்டார். "என்னே இது! நாம் பிரஜ வாசிகளுக்குக் கிருஷ்ணரிடம் மிகவும் ஆழ்ந்த அன்பு உண்டு என்று கேள்விப் பட்டிருக்கிறோம். ஆனால் அவர்கள் அனைவரும் இந்த அளவுக்கு வேதனையில் வெகு நாட்களாக இருந்திருக்கிறார்களே! தாயார் யசோதா இங்கே இறந்து கொண்டிருக்கிறார்கள்!" ஆனால் ராதிகாவோ, நந்த பாபாவோ அல்லது மாதா யசோதாவோ பிருந்தா வனத்தை விட்டு வேறெங்கும் செல்வார்களா? எந்த ஒரு கோபியாவது பிருந்தாவனத்தை விட்டு விட்டுப் போவதுண்டா? இல்லவேயில்லை. உத்தவாவினால் முழுவதுமாகப் புரிய முடியாத ஒரு ஆனந்தத்தை அவர்கள் உணர்கிறார்கள். எனவே ஸ்ரீமதி ராதிகாவின் வீட்டைத் தூற்றுத் துடைக்கும் ஒரு வேலைக்காரி கூட உத்தவாவை விட உயர்ந்த நிலையில் உள்ளவள். அந்த மாதிரியான உச்சமான பிரேம பாவங்களை உத்தவாவினால் அடைய முடியாது. அனைத்துக் கோபியர்களும் அழுகிறார்கள். அவர்களுக்கு வேலைக்காரிகள் ஆறுதல் கூறுகிறார்கள். இப்படிப்பட்ட வேதனையிலும் அவர்கள் பிருந்தாவனத்தை விட்டு

வேறெங்கும் செல்ல மாட்டேன் என்கிறார்கள். பின்னர், உத்தவா பிருந்தாவனத்தை விட்டுச் செல்லும் போது கூட கோபியர்களின் உயர்ந்த பாவத்தை முழுவதுமாக அறிய முடியாமல் தான் இருந்தார்.

பிரேமையின் முதிர்ந்த நிலையில் காணப்படும் அடையாளங் களைப் பற்றி எவராலும் பேச இயலாது. அப்படியென்றால் அதைப் பற்றி எவ்வாறு சாஸ்திரங்களில் எழுத முடியும்? அப்படித் தான் ஒருவேளை எழுத முடிந்தாலும் கூட அதன் விளைவு என்ன ஆகும்? ஸ்ரீமத் பாகவதத்தில் ஸ்ரீ ராதாவும், ஸ்ரீ கிருஷ்ணரும் சந்தித்ததைப் பற்றி மிக மிகச் சொற்பமாகத் தான் எழுதப் பட்டுள்ளது. ஆனால் இதைப் படிக்கும் ஜனங்கள் பாகவதத்தில் ஆராயப் பட முடியாத சில தீய செயல்களைப் பற்றி எழுதப் பட்டுள்ளது என்று கூறுகிறார்கள். இப்படி நிறைய பேர்கள் கூறியுள்ளனர்.

இப்படிப் பட்ட ஜனங்களால் ஸ்ரீமத் பாகவதத்தை எப்படிப் புரிந்து கொள்ள முடியும்? மிகவும் சிறிதளவாக விவரிக்கும் போதே அவர்கள் பாகவதத்தை ஒரு தீய பொருளாகக் கருதுகின்றனர். அப்படியென்றால் அதிகமாக விவரித்திருந்தால் என்ன ஆகும்? ஆனால் ஸ்ரீமத் பாகவதம் இல்லையானால் பக்தர்களால் தங்கள் உயிர்களை உடல்களில் வைத்திருக்க முடியாது. ஏனென்றால் ஸ்ரீமத் பாகவதம் அவ்வளவு தூரம் முக்கியமானது, நெருக்கமானது. நீங்கள் ஒரு இஞ்சித் துண்டை ஒரு குரங்கிடம் கொடுத்தால் அது என்ன செய்யும்? ஒரு முறைப் பார்த்து விட்டு, பின் அதைத் தூரத்தில் எறிந்து விடும். ஜீரணத்துக்கும் உடல் நலத்திற்கும் இஞ்சி மிகவும் நல்லது என்பது குரங்குகளுக்கு எப்படித் தெரியும்? எனவே உயர்ந்த நிலையான பக்தி பாவங்களைப் பற்றி அறிவிலிகளுக்கு விவரிக்கக் கூடாது. இவற்றைப் பற்றி ருக்மிணி தேவிக்கோ சத்யபாமா தேவிக்கோக் கூடச் சொல்லப் படவில்லை. அப்படியானால் எப்படி நாம் மற்றவர்களுக்குக் கூற முடியும்?

ஆனால் இங்கே இன்னமும் ஒரு முக்கியமான விஷயம் உள்ளது. பிரேம பாவத்தை நேரில் தானே உணர்ந்த ஒரு "ஸ்வஸம் வேத்ய தஸா" நிலையிலிருக்கும் ஒரு ரசிக பக்தர் கூட இதைப் பற்றி விவரிக்க மாட்டார் என்றாலும், மற்றவர்களிடம் அந்தப் பிரேமை தோன்றும் போது அதை அடையாளம் கண்டு கொள்வார். ஸ்ரீ சைதன்ய மகாபிரபுவின் பிரேம நிலையை, சொரூப தாமோதராவைத் தவிர வேறெவராலும் அறிய இயலவில்லை. ஆனால் அவர் அறிந்திருந்தும் அதைப் பற்றிப் பேசவேயில்லை. ஸ்ரீ சைதன்ய மகாபிரபு ஸ்ரீ ஜகன்னாதரின் ரதத்தின் முன்னால் தழுதழுக்கும் குரலில் கீழ்க் கண்டவாறு பாடினார்.

*யஹ் கௌமார-ஹரஹ ஸ ஏவ ஹி வரஸ் தே ஏவ சைத்ர க் ஷபாஸ்*
*தே கன்மீலித மாலதி சுரபயஹ் ப்ரௌத்தாஹ் கடம்பானிலாஹ்*
*ஸா சைவாஸ்மி ததாபி தத்ர சுரத வியாபார லீலா விதௌ*
*ரேவா ரோதஸி வேதஸீ தரு தலே சேதஹ ஸமுத்கந்ததே*
*--- (பத்யாவளீ 382)*

"இளம் பருவத்தில் என் நெஞ்சைக் கவர்ந்து திருடிய அதே காதலன் தான் இப்போதும் இங்கே என் நாயகன். அதே சித்திரை மாத நில வொளி நிறைந்த இரவுகள் தான் இந்த இரவுகளும். மாலதி மலர்களை வருடி, அவற்றின் நறு மணங்களைச் சுமந்து கொண்டு, கடம்ப வனத்தில் வீசிய அதே இதமான காற்றே தான் இதுவும். நானும் அதே காதலி தான். ஆனால் இங்கே என் இதயம் திருப்தியாக இல்லை. நான் அந்த ரேவா நதிக்கரையில் வேதஸீ மரத்தின் அடியில் என் நாயகனுடன் திரும்பவும் செல்ல ஆசைப்படுகிறேன்."

ஸ்ரீ சைதன்ய மகாபிரபு இந்தச் சுலோகத்தைக் கூறிய போது சொரூப தாமோதர் உடனே அதன் பொருளை அறிந்து கொண்டார். ரூப கோஸ்வாமியும் அதன் பொருளை அறிந்து கொண்டிருந்தார் என்பது பின்னர் வெளிப்பட்டது. அவர் ஒரு பனை ஓலைச் சீட்டில் கீழ்வரும் சுலோகத்தை எழுதித் தன் குடிசையின் உள் கூரையில் செருகி வைத்திருந்தார்.

*ப்ரியஹ் ஸோ யம் கிருஷ்ணஹ ஸஹசரி குருக்சேத்ர மிலிதஸ்*
*ததாஹம் ஸா ராதாதத் இதம் உபயோஹ் ஸங்கம-சுக்கம்*
*ததாபி அந்தஹ்-கேலன் மதுர முரளீ பஞ்சம ஜுஷே*
*மனோ மே காலிந்தீ-புலின-விபிநாய ஸ்ப்ருஹயதி ---- (பத்யாவளி 383)*

"என் பிரிய நண்பனே, நான் இங்கே குருக்சேத்ராவில் என் காதலனான ஸ்ரீ கிருஷ்ணரைத் திரும்பவும் சந்தித்தேன். அதே ராதா தான் நான். நாம் இங்கே ஒருவருக்கொருவர் சந்திப்பதில் அளவில்லாத ஆனந்தம் அடைகிறோம். இருந்தாலும் நாம் யமுனை நதித் தீரத்திலுள்ள வனங்களின் மரங்களுக்கடியில் திரும்பவும் செல்ல வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். அங்கே ஐந்தாவது உச்ச ஸ்தாயியில் மதுரமான முரளியில் தாங்கள் பாடும் கானத்தை நான் திரும்பவும் கேட்க வேண்டும்."

சைதன்ய மகாபிரபுவும் சொரூப தாமோதராவும் தாங்கள் இருவர் மட்டுமே இந்தப் பிரேம நிலையை உணர்ந்ததாக நினைத்திருந்தனர். ஆனால் இந்தப் பனை ஓலைச் சீட்டில் ரூப கோஸ்வாமி எழுதியிருந்ததைக் கண்ட பின்னர், ரூப கோஸ்வாமியும் இதைப் புரிந்திருக்கிறார் என்று அறிந்தனர். இது தான் "ஸ்வஸம்வேத்ய தஸா"!

எனவே நாரத முனிவர் கோபகுமாரிடம், "நீ பிரஜாவில் நிரந்தரமாக வாழ்பவர். இந்த வைகுந்தத்தில் வாழ்பவர் அல்ல! இப்போது அந்த மாம்பழம் பழுத்து விட்டது. கொஞ்சம் நறுமணமும் கூட அதிலிருந்து வர ஆரம்பித்து விட்டது. இன்னும் சில நாட்களில் அது நன்றாகவேப் பழுத்து விடும். அதை சுவைப்பவர் இது நன்றாகப் பழுத்திருப்பதையும் அதிலிருந்து நறுமணம் வருவதையும், இப்போது உள்ளே ரசம் உண்டாகியிருப்பதையும் கண்டு ஆவலுடன் புசித்து மகிழ்வார். அந்த வேளை இப்போது வந்து விட்டது. ஆம், நீ பிரஜாவுக்குச் சென்று அங்கே உன் ஆசைகள் அனைத்தும் பூர்த்தியாகும் சமயம் மிகச் சமீபத்திலேயே வந்து விட்டது!" என்று கூறினார்.

--- நிறைந்தது ---